
# குருநகர் புனித யாகப்பர் ஆலயம்
# 150 வது ஆண்டு நிறைவு விழா மலர்
## 1861 - 2011






குருநகர் புனித யாகப்பர் ஆலயம்
150 வது ஆண்டு நிறைவு விழா மலர்
1861 - 2011

# புனித யாகப்பர் ஆலயம்

குருநகர் – யாழ்ப்பாணம்


**பிரதம ஆலோசகர்**
அருள்கலாநிதி ஞா. பிலேந்திரன்

**ஒத்துழைப்பும் பரிசீலனையும்**
அருள்பணி றோ. நேசராஜா
அருள்பணி ஆ. ஜஸ்ரின்
அருள்பணி ஜெ. எல்மோ அருள்நேசன்

**மலர்க்குழு**
கு. இராயப்பு
யே. இக்னேசியஸ் (பிரபா)
ப. பிரியாந்தன்
வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன்
மி. முத்துக்குமார்
சோ. சுமலதா
செ. அ. லின்டா
அனற் மிராண்டா

**அட்டை வடிவமைப்பு**
அ. ஜுட்சன்

**கணினி அச்சுக்கோர்ப்பு, பக்க அமைப்பு, இதழ் வடிவமைப்பு**
ஜெயந்த் சென்ரர்
28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

**அச்சகம்**
யே. எஸ். பிரின்டர்ஸ்
பண்டத்தரிப்பு

**வெளியீடு**
புனித யாகப்பர் ஆலய அருட்பணிச்சபை
குருநகர், யாழ்ப்பாணம்.




# 150 வது ஆண்டு நிறைவு விழா மலர்

1861 - 2011

# நுழைமுகம்

## ஆன்மீகம் மற்றும் ஆலயம்





**வரலாற்றில் பதிவான புனித யாகப்பர்**
*(புனித யாகப்பரின் வரலாறு)*
- கு. இராயப்பு
பக்கம் - 11




**புனித யாகப்பர் ஆலயத்தில் பணியாற்றிய அருள்பணியாளர்கள் பொதுநிலையினர்**
பக்கம் - 20



**ஸ்பானியா - கொம்பஸ்தெல்லா புனித யாகப்பர் ஆலய பிரமாண்ட தூபம்**
- செல்வி ப. கரோலின் சங்கீதா
பக்கம் - 30




**புனித யாகப்பர் ஆலயப் பங்கில் பூத்த ஆன்மீக மலர்கள்**
பக்கம் - 32



**பணிக்காலத்தில் புனித யாகபபர் ஆலயம்**
- அருள்பணி ம. இ. பயஸ்
பக்கம் - 35




**புனித யாகப்பர் ஆலய பக்திச் சபைகளும் பணிகளும்**
பக்கம் - 37





**யூபிலி ஆண்டுக்கான ஆரம்பச் செயற்திட்டங்கள்**
- செல்வி சோ. சுமலதா
பக்கம் - 46



அழிப்பு
*(புனித யாகப்பர் ஆலயத் தகர்ப்பு பற்றிய சிறுகதை)*
- கலையார்வன்
பக்கம் - 61




குருநகர் மக்கள் மனங்களில்
அன்னை மரியாள்
- செல்வி. மி. பிறின்சியா
பக்கம் - 86



அன்றையவை இன்றைய
நினைவுகளில்...
- ச. யஸ்ரின்
பக்கம் - 93


## மக்கள் மற்றும் சமூகம்



குருநகர் மாணவாகள் கற்றலில
எதிர்நோக்கும இடர்கள்
- திருமதி அ. அஞ்சலாமேசி
பக்கம் - 48




குருநகர்வாழ் புலம்பெயர் அமைப்புகளின்
சமூகம் சார்ந்த பணிகள்
பக்கம் - 52



நீண்ட வரலாற்றைக்கொண்ட
குருநகர் மக்கள
- ஜேர்மன் குருநகர் விளையாட்டுக் கழகம்
பக்கம் - 60



குருநகர் பிரதேச மீன்பிடிக் கைத்தொழிலும்
மக்களின் சமூக பொருளாதார நிலையும்
- இ. செபஸ்ரியாம்பிள்ளை
பக்கம் - 78



குருநகர் மக்களின் வாழ்வோடு
இணைந்த விழாக்கள்
- கி. யோசவ் மென்சன் (ஒஸ்லோ - நோர்வே)
பக்கம் - 88




**25 ஆண்டுகள் முன்னோக்கி...**

*(குருநகர் மக்களின் உதிரத்தை உறையவைத்த நிகழ்வு)*

பக்கம் - 96





**குருநகரும் இளையோரும்**

- ப. பிரியாந்தன்

பக்கம் - 99

**குருநகரின் பொருளாதார வளர்ச்சி**

**- ஒரு நோக்கு**

- கொ. ஜெகன் (ஜெகசுதர்)

பக்கம் - 108









**குருநகரும் புனித யாகப்பர் ஆலய இளையோர் ஒன்றியம்**

- செயலாளர்

பக்கம் - 113


அழிவுற்றுப்போகும் நிலையிலுள்ள பண்டைய ஒப்பாரி இலக்கியத்தை
அழியாது காக்கும் பணியிலான மீள்பதிப்பு


**அன்னை அழுங்கல் ஒப்பாரி**

*(குருநகரில் பாடப்பட்ட ஒப்பாரி இலக்கியம்)*

- அந்திரேஸ்பிள்ளை

பக்கம் - 114




**குறுந் தகவல்கள்**


| | |
|---|---|
| இயேசுவில் மீண்டும் எழுவோம் | - பக் - 19 |
| புதுமைமாதா ஆலயம் | - பக் - 34 |
| குருநகர் மேஸ்திரிகள் | - பக் - 36 |
| பங்குப் பணிமனையிலிருந்து ஒரு குரல் | - பக். - 44 |
| துணிவான பெண்கள் உருவாக வேண்டும் | - பக். - 51 |
| பேரழிவினைச் சந்தித்த மக்களின் அபயமாக... | - பக். - 51 |
| 'வெள்ளோட்டம்' இறுவட்டு | - பக். - 84 |


**கவிதைகள் / பாடல்கள்**


| | |
|---|---|
| சித்திரத் தேரினில்... | பக். 28 |
| எம் பங்கு ஏற்முடன் எழுந்திடவே | பக். 29 |
| எ. ஜோய் கவிதைகள் | பக். 45 |
| உம்மிடத்தில் சரணடைந்தோம் யாகப்பா | பக். 50 |
| காவலரே கடைக்கண் பாருமையா | பக். 76 |
| முப்பொன்விழா சிறப்புறவேண்டும் | பக். 98 |

## மலர்க்குழுவின் சார்பாக...

விழாக்களின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், கடந்தகால நிகழ்வுகளையும் மக்களுக்கு தெளிவாக விளங்கவைக்கும் சாதனமாக விழாமலர் வெளியிடும் மரபு பல்லாண்டு காலமாக நம்மிடையே நிலவி வந்துள்ளது. அந்த வகையில் எமது புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், அவசியமானவற்றையும், அறியவேண்டியவற்றையும் மக்களுக்கு எடுத்துச்சொல்ல வெளியிடப்படு பவையாக '150 வது ஆண்டு நிறைவு விழா மலரும்', '150 வது ஆண்டு விழா இணைப்பு இதழும்' அமைகின்றன. இவ்வாறு இரண்டு நூல்கள் இணைந்ததாகத் தரப்பட்டுள்ளமை ஒரு முன்னுதாரணமும் பயனுள்ளதுமாகும்.

மலர்க் குழுவினராகிய எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணி பெரிது. பங்குக்குருவானவரின் எண்ணத்தை, அருள்கலாநிதி ஞா. பிலேந்திரன் அடிகளாரிடமிருந்து உள்வாங்கப்பட்ட ஆலோசனைகளை நிறைவாக நிறைவேற்ற நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. அறுவடைதான் சொற்பம். உயர்கல்வி கற்றவர்கள், பல துறைகளிலும் தொழில் செய்பவர்கள், ஆசிரியர்களாக, குருக்களாக பணியாற்றுபவர்கள் எனக் கணிசமானோர் இவ்வூரில் வாழுகின்றபோதும் சிலரைத் தவிர ஏனையவர்களிடமிருந்து எதிர்பார்த்தவை கிடைக்கவில்லை. இணையத்தளம், ஞாயிறு திருப்பலியில் அறிவித்தல் விடப்பட்டும், நேரில் எடுத்துக்கூறியும் கிடைத்தபலன் குறைவுதான்.

எழுதுவதற்கென எம்மால் முன்வைக்கப்பட்டவை குருநகர் மக்கள், சமூகம், ஆன்மீகம், ஆலயம் சார்ந்த விடயங்களே. இவற்றை கரிசனையுள்ள, சம்பந்தப்பட்ட நாம் எழுதாமல் வேறு எவரிடமேனும் எதிர்பார்க்க முடியுமா? என்ற கேள்வி எம்மவர்க்கு எழாமல்போனமை வேதனைக்குரியது. குறைகூறுவதிலுள்ள ஆர்வம் தேவையானவற்றை எழுதவேண்டுமென்பதில் இல்லை. இதில் மாற்றம்வேண்டும். உபதேசம் செய்வதை விடுத்து எழுதுவதற்கு முன் வந்தால், ஒவ்வொருவரிடமுமுள்ள மாறுபட்ட சிந்தனைகள் வெளிக் கொண்டுவரப்படும். அப்போதுதான், 'எமது சமூகம் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதென' முன்வைக்கப்படும் கருத்துக்கள் உடைத்தெறிந்து மக்களுக்கு விழிப்புணர்வை, மாற்றத்தை ஏற்படுத்திட முடியும்.

உங்கள் கைகளில் தவழும் நிறைவு விழா மலரையும், இணைப்பு இதழையும் உரிய முறையில் ஒப்பேற றப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தபோதிலும் இயன்றதை, இயன்றவரை செய்து முடித்துள்ளோம். தேடல்களின் விளைவாக தடயங்கள் பல பொதிந்த ஆவணமாகத் திகழவேண்டும் என்ற ஆர்வத்தின் வெளிப்பாடே இவ்விதழ்கள். இதன் காரணமாகவே வாழ்த்துக்கள் ஆசிச்செய்திகளென பக்கங்களை நிரப்பாமல், மண்ணின் மணம் வீசிட உருவாக்க முனைந்தோம். எமது எதிர்பார்ப்பில்; ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டவர்களிடமிருந்து 'போரின் பாதிப்புகளிலிருந்து மீண்டெழுந்த குருநகர் மக்கள்', 'குருநகரில் சிறப்புற்றுத் திகழும் விளையாட்டுத் துறை', 'குருநகரின் கலாசார விழுமியங்கள்', 'குருநகரின் சிறப்பான உணவு வகைகளும் விருந்தோம்பல் தன்மையும்' போன்ற ஆக்கங்கள் அச்சாகும்வரை கிடைக்கப்பெறாமை, இதழ் மற்றும் மலரின் மணத்திலும், தரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் எழாமலில்லை. கிடைக்கப்பெறறவற்றை ஒட்டவைத்து முழுமையான இதழாகவும், மலராகவும் உருவாக்கி அவை உங்கள் கரங்களில் கையளிக்கப்பட்டுள்ளன. இவை உங்களுக்கு ஓரளவேனும் மனநிறைவைத் தரலாம் என நம்புகின்றோம். எதிர்பார்த்த ஆக்கங்கள் கிடையாமை, எழுதுவதற்கு மக்களிடம் காணப்பட்ட ஊக்கமின்மை, எழுத முன்வந்தவர்களும் இறுதிநேரமவரை இழுத்தடித்தமை போன்ற காரணிகளால் ஓரிருவரின் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை உள்வாங்கவேண்டிய தேவையும், மீள்பிரசுரம் செய்யவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இது சிலவேளை விமர்சனத்தைத் தோற்றுவிக்கலாம். இதழ்களை நிறைவுசெய்ய இதைத்தவிர வேறு வழி இருப்பதாக தெரியவில்லை. இதனை வாசகர்கள் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.


இவையிரண்டும் விரிந்து மணம்வீச ஆலோசனை, பரிசீலனை, ஒத்துழைப்புகளை வழங்கிய அருள்பணி யாளர்களையும், ஆசியுரை வழங்கிய யாழ். ஆயர் மற்றும் குருமுதல்வரையும், முன்னோக்கிச் செயற்படுவதற் கேதுவான கருத்துக்களை வழங்கிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இ. இராயேஸ்கண்ணா அவர் களையும், இவை வெளிவரக் காரணமாய் இருந்த புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருள்பணி ஆர்.சீ.எக்ஸ் நேசராஜா மற்றும் ஆலய அருட்பணிச சபையினரையும், ஆக்கங்கள் மூலம் இதழ்களைப் பூரணப்படுத்திய உள்ளூர் - வெளிநாடுகளில் வதியும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களையும், பிரதிகளை ஒப்புநோக்க உதவிய எஸ்.என்.யே. மரியாம்பிள்ளை மற்றும் றோ. க. கில்பேட் அவர்களையும், மேலதிக ஒத்துழைப்பை வழங்கிய எ. சுகுமார் (லண்டன்) அவர்களையும், கணினிசார் சேவைகள் - வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம் செய்த நிறுவனத்தினர்களையும் மலர்க்குழுவின் சார்பாக நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

உவகையுடன்

**கு. இராயப்பு**

(மலர்க்குழு பொறுப்பாளர்)






புனித யாகப்பர் ஆலயத்தின் உள் தோற்றம்



# எமது ஆயர்



மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்

# எமது பங்குத்தந்தை



ஆர். சி. எக்ஸ் நேசராஜா



# யாழ். ஆயரின் ஆசிகள்

தூய யாகப்பர் 150ஆவது வருட யூபிலி விழாவை முன்னிட்டு ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

தமிழர்களின் தலைநகரமாகிய யாழ் நகரில்கூட கோபுரங்களுடன் தலை நிமிர்ந்து யாவரினும் கவனத்தை ஈர்த்து நிற்கும் பிரமாண்டமான ஆலயமாகிய தூய யாகப்பர் ஆலயமானது தனது 150ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுகினறது. மாலை வேளையில் பண்ணை வழியாக யாழ் வரும் மக்களுக்கு சூரிய ஒளியில் பொன்னிறமாய் காட்சியளிப்பதுதான் தூய யாகப்பர் ஆலயமாகும்.

1861 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மக்களுடைய பெரும் கூட்டு முயற்சியினால் இவ் ஆலயம் முடிவுற்றது. பல வரலாற்று நிகழ்வுகள் மத்தியிலே இவ் ஆலயமானது இன்னும் புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. கடந்த ஈழப்போரில் பாரிய குண்டு வீச்சுக்களையும் தாங்கி, இடிபாடுகள் மத்தியில் பலர் மரணத்தை காவு கொண்ட நிகழ்வுகள் மத்தியிலும், தளர்ந்து போகாமல் மீண்டும் புதுப்பிக்கபெற்று இன்று தனது 150ஆவது யூபிலியை மகிழ்ச்சியுடன், ஆன்மீக எழிச்சியுடன் கொண்டாடுகின்றது.

இவ் யூபிலிக்கு மக்களை ஆயத்தப்படுத்த பங்குத்தந்தை நேசராஜா அடிகள் சென்ற வருடம் ஆடி மாதத்தில் இருந்து பல திட்டங்களை தீட்டினார். மக்கள் மத்தியிலே புதுவாழ்வுக்கான மனம் திரும்புதலிலும், ஆன்மீகத்தை கட்டி எழுப்பவதிலும் கவனம் செலுத்தப்பட்டு மிக சிறப்புடன் இவ் யூபிலி கொண்டாடப்படுகின்றது. இம் முயற்சிகளுடன் நானும் இணைந்து ஆலய யூபிலி விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தருணத்தில் தூய யாகப்பரின் பரிந்துரையால் அனைத்து மக்களும் எல்லா ஆசிகளும், வளங்களும் பெற்று வாழ ஆசித்து செபிக்கின்றேன்.

**மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்
23.06.2011



## குருமுதல்வரின் ஆசிகள்

யாழ் மறை மாவட்டத்திலே செறிவான கத்தோலிக்க மக்கள் வாழும் முதன்மையான பங்குகளில் ஒன்றான குருநகர் பங்கின் புனித யாகப்பர் ஆலயமானது, தனது நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவது மகிழ்ச்சியினைத் தருகின்றது. போர்களும் வன்முறைகளும் பலமுறை தனது கொடூரங்களை இங்கே அரங்கேற்றியும் விசுவாசத்திலே பிறழ்வு காணாமல் எதையும் ஏற்கும் உள்ளத்துடன் இறைவனின் திருவுளத்துக்குக் கீழ்ப்படிந்த இப்பங்கு மக்களின் உள்ளத்தினை ஆன்மீகத்திலே உறுதிப்படுத்தியது, இவ் ஆலயம் என்றால் அது மிகையாகாது.

1861 இல் வண. லெயோ மொறுவா அடிகளாரால் அத்திவாரம் இடப்பட்டதில் இருந்து இன்றுவரை இவ் ஆலயத் திருச்சபையானது எத்தனையோ அருட்பணியாளர் களினால் நிறை உண்மையின் தேடலினை நோக்கி செம்மைப்படுத்தப்பட்டதானது என்றும் நினைவு கூரத்தக்கது. இவர்களின் பணியையும், தியாகத்தினையும் நன்றியுடன் நாம் நினைவு கூருகின்றோம்.

ஐம்பது அண்டுகளுக்கு மேலாக நான் இந்தப் பங்கை நன்கு அறிவேன். இவ்வாலயத்துக்கு அருகாமையிலிருந்து நான் வளர்ந்தபடியால் இதன் வளர்ச்சி யையும், இதற்கேற்பட்ட இழப்புகளையும் அவற்றையெல்லாம், புனித யாகப்பரின் துணையோடு மேற்கொண்டு அருள் வாழ்வினை நடத்தியதை நன்கு உணர்வேன். இதையிட்டு பங்குத் தந்தையர்களையும் பங்கு மக்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

இவ்வாறு எத்தனையோ சிறப்புக்களைத் தன்னகத்தே தாங்கும் இவ் வாலயத்தின் யூபிலி விழாவிலே என் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்பதிலே மகிழ் வடைகின்றேன். நாம் வாழும் இந்நவீன காலத்தின் சவால்களுக்கு முகங்கொடுத்து விசுவாச உயிரோட்டமுள்ள ஆரோக்கியமான பங்குத் திருச்சபையினைக் கட்டி யெழுப்ப என் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன். புனித யாகப்பரின் துணையும் பரிந்துரையும் என்றென்றும் உங்களுக்கு இருக்கச் செபிக்கிறேன்.

**அருள்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**

குரு முதல்வர்
யாழ். மறை மாவட்டம்.

## பங்குத்தந்தையின் இதயத்திலிருந்து...



இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன். அதாவது 25.07.1861 இல் அருள் பணி லெயே மொறுவா அடிகளாரால் அத்திபாரம் இடப்பட்டு, யாழ் திருச்சபையின் பல்வேறு அருள்தந்தையர்களால், அவர்களது கடின உழைப்புக்களால் மெருகூட் டப்பட்டு, வெள்ளிவிழா, பொன்விழா, நூற்றாண்டுவிழா, இன்னும் 125வது ஆண்டுவிழா எனப் பல்வேறு பெருமெடுப்பிலான விழாக்களைக் கண்டு, இன்று 150 ஆவது ஜுபிலி விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்றது எமது குருநகர் தூய யாகப்பர் ஆலயம். தொடக்கத்தில் 39 குடும்பங்களை மட்டுமே கொண்டிருந்த எமது கத்தோ லிக்கக் குழுமம், இன்று 2000 குடும்பங்கள்வரை 'கடுகு விதை போல' வளர்ச்சி பெற்றிருப்பது பெருமைக்குரியது என்றுதான் சொல்லவேண்டும்.

ஆலய கட்டுமானப் பணிகளும், அழகுமிகு வேலைப்பாடுகளும், முகிலைத் தொட்டுவிடத் துடிக்கும் கோபுர அமைப்பும், கைதேர்ந்த சிறப்பு கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு சிற்பங்களும் எமக்குரிய தனித்துவத்தை பாரம் பரியமாகச் சொல்லிக்கொண்டே வருவதை மறுப்பதற்கில்லை.

மேலைநாட்டு மறைப்பரப்பாளர்களின் வருகை அருகத் தொடங்கிய வேளை யிலே, 27.12.1932 இல் எமது கிராமத்தின் இளைஞர் இருவர் தங்களை இறைப் பணிக்காக அர்ப்பணித்து, அருள்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும், அதனைத் தொடர்ந்து இன்றுவரை திருச்சபையின் திராட்சைத் தோட்டத்திலே பயன்தரும் பணியாளர்களாக முன்நின்றுழைக்கத் தங்களை அர்ப்பணம் செய்து கொண்ட 17 அருள்பணியாளர்களையும் 12 அருள்சகோதரிகளையும் ஈன்றெடுத்த இந்த மண் பாராட்டுதற்குரியதே.

ஆயினும் கடந்த நூற்று ஐம்பது ஆண்டுகளாக எமது இன்பங்களிலும், துன்பங்களிலும், உழைப்புக்களிலும், களைப்புக்களிலும், வெற்றிகளிலும், தோல்வி களிலும், போர்களிலும், இடப்பெயர்வுகளிலும் எம்மோடிருந்து எம்மைக் காத்து வழிநடத்திய எமது பங்கின் பாதுகாவலர் இன்று எமக்கு ஒரு காட்சிப் பொருளா னவரா? அல்லது சாட்சியம் தருபவரா என்பது, இன்றைய ஜுபிலி ஆண்டிலே எமது நெஞ்சுக்குநேர் நிற்கும் கேள்வி!

எமது விசுவாசப் பயணத்தின் வளர்ச்சிகளிலும், தளர்ச்சிகளிலும் விடை காண முடியாத வேளைகளிலும் எம்மோடு பயணித்த இறைத்தந்தையின் கருணை யினை ஒருதடவை மீட்டிப் பார்க்கும் நேரமிது!

ஜுபிலி ஆண்டைத் தொடக்கி வைத்த எமது யாழ் ஆயர் தலைமையில் நாம் அனைவரும் ஒன்றுகூடி 'எங்கள் குடும்பங்கள் மீண்டும் புதிதாய் எழுந்திட' திடசங்கர்ப்பம் பூண்ட நாங்கள், தொடக்கத் திருச்சபையில் நிலவிய (தி.ப.4:32-35) பண்புகளை எமதாக்கிக் கொள்வோம். குடும்பங்களைச் சீரழித்துச் செல்லும் அனைத்து இடர்ப்பாடுகளில் இருந்தும் விடுபடுவோம்! வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளங்களை எங்களில் மலரச் செய்து, மீண்டும் புதிதாய் முளைத்தெழ அனைவரையும் வேண்டி நிற்கின்றேன்.

இறை ஆசியுடன்

**அருள்பணி ஆர். சீ. எக்ஸ். நேசராஜா**

பங்குத்தந்தை, தலைவர் அருட்பணிச்சபை



## அருட்பணிச்சபை செயலாளரிடமிருந்து...

பாரம்பரியங்களும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க எமது குருநகர் புனித யாகப்பர் ஆலய 150 ஆவது ஆண்டு நிறைவில், அருட்பணிச்சபையின் செயலாளர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன். யாழ். மறை மாவட்டத்தின் இதயம் எமது புனித யாகப்பர் ஆலய பங்கு என்றால் அது மிகையாகாது. தமிழர்களின் பாரம்பரிய கலையம்சங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டு முறைகள், மீன்பிடித்தொழில் துறைகள் அனைத்திலும் எமது குருநகர் பங்கு எப்போதுமே ஒரு சிறப்பான இடம் பெறுகிறது. புகழ் பூத்த அருள்பணியாளர்கள், அறிஞர்கள், புலவர்கள், அண்ணாவிமார்கள் எம் மண்ணிலே தோன்றி கிறிஸ்தவ தமிழ் உலகிற்கு அரும்பெரும் சேவையாற்றியுள்ளார் கள். இவைமட்டுமல்லாது, போரின் தாண்டவங்களினாலே அடிக்கடி குருதியினால் குளிப்பாட்டப்பட்ட மண்ணாக எம் குருநகர் மண் விளங்கி வந்தமை எவரும் மக்கமுடியாது. இந்நிலைகளிலெல்லாம் குருநகர் மக்கள் தமக்கென்று பற்றிப்பிடித்தது விசுவாசம் மட்டுமே.

இதனோடு, இவ்வாலயத்தின் சிறப்பின் மற்றொரு பரிமாணம், இவ்வாலயம் முழு வதுமாக குருநகர் மக்களினால் கட்டிமுடிக்கப்பட்டதாகும். ஆலயத்தின் சிற்ப வேலைகள், கலைநயம் ததும்பும் மரவேலைப்பாடுகள், கட்டட நிர்மாணங்கள் என அனைத்தும் இவ்வாலய உருவாக்கப்படும்போது பங்கு மக்களாலேயே செய்யப்பட்டன. இத்தகையதொரு புகழ்பூத்த ஆலயத்தில் 45 ஆண்டுகளாக சேவையாற்ற இறைவன் என்னை அழைத்தமைக் காகவும், அளித்த சந்தர்ப்பத்திற்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

பல சிறப்புக்களை தன்னகத்தேகொண்ட இவ்வாலயம் தனது 150 ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவது பெருமைக்குரியதே. அருட்பணியினராகிய நாம் நல்ல முறையில் அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவதற்குப் பல முயற்சிகள் எடுத்துவருகின்றோம். அதன் ஓர் அங்கமாகவே இம்மலர் வெளிவருகின்றது. எமது பங்கின் அரியபெரிய வரலாற்றுச் சான்றுகளை உள்ளடக்கி சிறப்பாக வெளிவரும் இம் மலரை வாழ்த்தி நிற்கின்றேன்.

**கி. கிறிஸ்தோப்பர்**
செயலாளர், அருட்பணிச்சபை.

### புனித யாகப்பர் ஆலயம் அருட்பணிச்சபை அங்கத்தவர்கள் 2010 – 2012

திரு. கி. கிறிஸ்தோப்பர் (செயலர்)
திரு. அ. இராசநாயகம் (பொருளர்)
திருமதி யோ. வரோணிக்கா
திரு. ப. பிரியாந்தன்
திரு. கி. சுமலன்
திரு. மி. முத்துக்குமார்
திரு. க. கொ. யூட்
திரு. விஜயகாந்த்
செல்வன் பெ. தீபக்
திரு. ம. கிங்சிலி
திரு. றூபஸ்
திருமதி ச. சாந்தமலர்
திருமதி அ. நேசராணி
திரு. ம. யோக்கிம்பிள்ளை
திரு. பி. பத்மதாஸன்
செல்வி அ. ரஜனி யசிந்தா
திரு. பி. குமாரகுலசிங்கம்
திரு. மு. எமில்ராஜ்
திரு. பி. றெக்ஸ்
திரு. சே. சுவைனஸ்
செல்வன் யூ. கஜேந்திரன்
செல்வி ப. ரம்மியா
செல்வன் இ. குணசேகர்
திரு. ப. ஸ்ரன்ஸ்லோஸ்
திரு. அ. கிளாபொடாசியஸ்
திரு. கு. இராயப்பு
திரு. ஜெ. கிறிஸ்ரெபல்
திருமதி யூஜின் யூலியஸ்



புனித யாகப்பர் ஆலய அருட்பணிச்சபை

# வரலாற்றில் பதிவான புனித யாகப்பர்

- கு. இராயப்பு

## அறிமுகம்

யாழ்ப்பாணத்தில் 'கரையூர்' என்ற காரணப்பெயரால் அழைக்கப்பட்ட குருநகரில் 25.07.1861 இல் வண. லெயோ மொறுவா அடிகளாரால் அத்திபாரக்கல் நாட்டப்பட்டு, ஊர் மக்களின் சொந்த முயற்சியால் கட்டப்பட்டு பிரமாண்டமாய் தலைநிமிர்ந்து நிற்கும் 'புனித யாகப்பர்' ஆலயமானது ஆன்மீகத்தை முன்னெடுத்து ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றிகாணும் அருள்மையமாகத் திகழ்கின்றது.

வேதாகமத்தில் 'யாக்கோபு' என்றும், குருநகர் மக்களால் 'சந்தியோகுமையோர்', 'யாகப்பர்', 'யக்கோ', 'படையாளி' என உளமுருக அழைக்கப்படும் இயேசுவின் ஒன்று பெற்ற அறிவையும், ஞானத்தையும் அவர் சரியாகப் பயன்படுத்தித் தன்னை மிகத் தெளிவாக நிரூபித்துக் காட்டியுள்ளார்.

இறை வார்த்தைமீது அவர் கொண்டிருந்த தாகத்தினால் இறை வார்த்தையை அறிவிப்பதற்கு கடல் கடந்து சென்றார். ஆபத்துக்களின் மத்தியிலும் இறை வார்த்தையை சிறப்புடன் போதிக்க விரும்பினார். "உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்." (திப 1:8) என்கிற இயேசுவின் கட்டளையை சிரமேற்கொண்டு அவருக்குச் சாட்சியம் பகர்வதற்காக, அக்காலத்தில் உலகின் கடையெல்லை என்று மக்களால் கருதப்பட்ட ஸ்பெயின் (*Spain*) நாட்டுக்குச் சென்று அங்கே இயேசுவுக்கு சாட்சியம் பகர்ந்தார்.


கொம்பஸ்தெலா (ஸ்பானியா)


குருநகர் (இலங்கை)

விட்ட சகோதரனான புனித யாகப்பரைத் (பெரிய யாகப்பர்) தங்கள் ஆலயப் பாதுகாவலராகக் கொண்ட குருநகர் மக்கள் பேறுபெற்றவர்கள். அவரது வாழ்வும், பணியும் தனித்துவம்கொண்ட முன்மாதிரிகையாகும். அவற்றை மீள்பார்வை செய்கின்றபோது இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

யாகப்பர் இயேசுவின்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். இயேசுவுக்காக எதையும் செய்யத் துணிவதற்கும், இயேசுவை எதிர்ப்பவர்களை அழித்துவிடலாமோ என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றுவதற்கும் மூலகாரணம் இயேசுவின்மீது அவர் கொண்டிருந்த அன்பும், பாசமும்தான். அத்துடன், இயேசுவிடமிருந்து

இத்தகைய தனித்துவத்தைக்கொண்ட புனிதரின் திருவிழா, ஸ்பானியா நாட்டில் 'கொம்பஸ்தெலா' நகரில் அவருடல் நல்லடக்கம் செய்யப்பட்ட தினத்தின் (கி.பி. 44 ஆம் ஆண்டு ஜுலை 25) நினைவாக, ஆண்டுதோறும் ஆடி மாதம் 25 ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு புனிதரின் பெருமையைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் ஆலயத்தின் முப்பொன்விழாவைக் (150 வது யூபிலி) கொண்டாடும் பக்தர்களும், மற்றையோரும் புனிதரது வரலாற்றையும், புனிதர் பதிகொண்ட குருநகர் மண்ணில் நிகழ்ந்த அற்புதங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் அவை சுருக்கித் தரப்பட்டுள்ளன.

## யாகப்பரின் இளமைப்பருவம்


'கலிலேயாக் கடல்' என்றும் 'கலிலேயா ஏரி' என்றும் அழைக்கப்பட்ட 'கெனசரேத்து ஏரி' யானது 'திபேரியக் கடல்' என்றும் அழைக்கப் பட்டது. இந்த ஏரிக்கு அருகிலுள்ள 'பெத்சாய்தா' என்னும் ஊரில் வசித்துவந்த யூத குருவான 'செபதேயு' என்பவருக்கும், கன்னி மரியாளின் (இயேசுவின் தாயார்) சகோதரியான 'சலோமி'க் கும் மகனாகப் பிறந்தவர் யாகப்பர் (யாக்கோபு). யோவான் இவரின் இளைய சகோதரர். இவர்களின் தந்தையான செபதேயுவின் குடும்பம், பேதுரு சீமோனின் குடும்பத்துடன் பங்காளியாக இணைந்து கலிலேயா கடலில் மீன்பிடித் தொழி லைச் செய்துவந்தன. செபதேயு குடும்பம் கூலியாள்கள் வைத்துத் தொழில் செய்யக்கூடிய அளவுக்கு வசதி படைத்ததாய் இருந்தது.

செபதேயு பொருளாதார வசதியுடன் இருந்துள்ளதால் இவரது குடும்பம் சமுதாயத் திலும் நன்மதிப்புப் பெற்றிருந்தது. அவரது புதல்வர்கள் பொருளாதார வசதியுள்ள குடும்பங் களிலுள்ள குழந்தைகளைப்போல தேவையான கல்வியைக் கற்றிருந்தார்களேதவிர யூத போதகர் கள் நடத்திய கல்விக்கூடத்தில் படித்திருக்க வில்லை. அதேவேளை, கலிலேயக் கடற்கரை நகரங்களில் அமைந்திருந்த ஊர்களிலுள்ள ஏனைய மக்களைப்போல் இவர்களும் கிரேக்க மொழியையும், கிரேக்க இலக்கியத்தையும் நன்கு கற்றுத் தேர்ந்ததுடன் கிரேக்க கலாசாரத்தை நன்கு அறிந்தும் வைத்திருந்தனர். உரிய வயது வந்ததும் யோவானும், யாகப்பரும் அவர்களின் தந்தை செபதேயுவுடனும், பேதுரு சீமோனின் குடும்பத்தினரோடும் சேர்ந்து மீன்பிடித் தொழிலை செய்யத் தொடங்கி குடும்ப வருவா யைப் பெருக்கினர்.

ஒருநாள் கடலிலே மீன்பிடித்து வந்த இவர்கள், கடற்கரையில் தண்ணீரில் நின்றவாறு வள்ளத்தில் இருந்த வலைகளை இழுத்து சீரமைக் கும், பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பணிவாழ்வில் முதன்முறை யாக அடியெடுத்து வைத்தி ருந்த இயேசு அங்குவந்தார். இவர்களைப் பார்த்து "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என அழைத்தார். அழைப்புக்குச் செவிமடுத்த யாகப்பரும் யோவானும், இயேசுவிடம் ஒரு அற்புதமும் காணாமலே அவரின் அழைப்பை ஏற்று அந்தக் கணமே தாய், தந்தை, சுற்றத்தார், உடன் தொழிலாளர்கள், தொழில் உபகரணங் களை விட்டுவிட்டு இறைபணியாற்ற இயேசு வைப் பின்தொடர்ந்தனர். யாகப்பரும் அருளப் பரும் உறவு வழியாக இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர்கள். இவர்கள் இறை அரசின் விருட்சத்திற்காக குடும்பமாகத் தொழிற்பட இணைந்துள்ளார்கள் என்றே எண்ணலாம்.

## இயேசுவின் திருத்தூதர்

தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஒட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் தமது சீடர்களிலி ருந்து பன்னிருவரை இயேசு, திருத்தூதர்களாகத் தெரிவுசெய்தார். யாகப்பரையும், யோவானையும் திருத்தூதராகத் தெரிவுசெய்த இயேசு இவர்களிரு வரிலும் கலிலேயருக்கு இயல்பாகவே உள்ள வேகமும், கோபமும் அதிகமாக இருப்பதுகண்டு 'இடியைப் போன்றோர்' என்று பொருள் கொண்ட 'பொவனேர்க்கேசு' என்று பெயரிட் டார். இவர்கள் வேகத்தை, கோபத்தை காட்டுப வர்கள் மட்டுமல்ல சமயப்பற்று, மனவுறுதி, தைரியம், கடும் உழைப்பு, நாட்டுப்பற்று ஆகிய வற்றையும் வளர்த்துக்கொண்டவர்கள் என்றும் சொல்லலாம்.




திருத்தூதர்களின் கூட்டத்தில் யாகப்ப ருக்கு உயர்ந்த இடம் வழங்கப்பட்டதை யாரும் மறுக்க முடியாது. திருத்தூதர்களின் பெயர்ப் பட்டியல்கள் யாவற்றிலும் முதல் நான்கு இடங்களில் யாகப்பர் இருப்பதைக் காண லாம். இதன் காரணமாக இயேசுவின் சிறிய தாயாரான சலோமி இயேசுவை அணுகி "நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவ ருள் ஒருவன் உமது அரிய ணையின் வலப்புறமும் இன் னொருவர் இடப்புறமும் அமரச்செய்யும்" என வேண்டி னார். அதற்கு இயேசு, "என் வலப்புறத்திலும் இடப்புறத் திலும் அமரும்படி அருளு வதோ என் செயலல்ல; மாறாக அவ்விடங்களை என்

தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்" என்றார். இயேசு கூறிய பதிலை உள்வாங்கிக்கொண்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்த யாகப்பர் பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் திருத்தூதர்களுள் முதல் வேதசாட்சியாகும் பேற்றைப் பெற்றார்.

**விவிலியத்தில்...**

பேதுரு சீமோன், யோவான் ஆகியோருடன் சேர்ந்து இயேசுவின் முக்கிய திருத்தூதர்களில் யாகப்பரும் ஒருவராகத் திகழ்ந்துள்ளார். இம்மூவரும் இயேசுவின் மண்ணுலகப் பணிக்காலத்தில் பின்வரும் முக்கிய நிகழ்வுகளின்போது இயேசுவுடன் கூடவே இருந்துள்ளார்கள் என்பதை வேதாகமத்தில் அறியக்கூடியதாக இருக்கின்றது. அவைகளாவன;

* சீமோனின் மாமியார் காய்ச்சலால் துன்புற்ற வேளையில் இயேசு அவரைத் தொட்டுக் குணமளித்தபோது.
* யாயிரின் இறந்துபோன பன்னிரண்டு வயது நிரம்பிய மகளை இயேசு உயிர்ப்பித்தபோது.
* தாபோர் மலையில் இயேசு தோற்றம் மாறிய (உருமாற்றம்) காட்சியின்போது.
* இயேசுவுடனான இறுதி இராவுணவின் போது.
* கெத்ஸமனித் தோட்டத்தில் இயேசு இரத்த வியர்வை சிந்தி பிதாவைநோக்கி செபித்தபோது.

இன்னுமாக இயேசுவின் போதனைகளிலும், அற்புத நிகழ்வுகளிலும், வெளிப்படுத்தல்களின் போதும் உடனிருந்துள்ள யோவானும், யாகப்பரும் இயேசுவின்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பை வெவ்வேறு கட்டங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

* இயேசுவின் பெயரால் ஒருவர் பேய் ஓட்டுவதைக் கண்டபோது கோபங் கொண்டு அவரை விரட்ட முயற்சித்தமை.
* இயேசுவைத் தங்களின் ஊருக்குள் அனுமதிக்காமல், அவமானப்படுத்திய சமாரியர்களை உடனடியாக அக்கினியால் அழித்துவிடவேண்டுமென இயேசுவிடம் விண்ணப்பித்தமை.
* ஆபத்துக்களின் மத்தியிலும் அவற்றைப் பொருட்படுத்தாது இறையரசைப் பரப்ப முயன்றமை.
* இயேசுவின் கட்டளையை ஏற்று அவருக்குச் சாட்சியம் பகர்வதற்காக, உலகின் (அக்கால) கடையெல்லையான ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றமை.
* "நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?" (என்னோடு சேர்ந்து பிறருக்காக உங்களை அழித்துக்கொள்ளத் தயாரா?) என்று இயேசு கேட்டபோது, எவ்வித தயக்கமும் காட்டாமல் "இயலும்" என்ற பதிலளித்தமை.
* இயேசுவுக்காகத் தம் உயிரைத் துறக்கத் துணிந்தமை.

போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்விதமாக இயேசுவின் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்த திருத்தூதர்கள், இயேசு இறந்தது முதல் பயம் காரணமாக மறைந்த வாழ்வையே மேற்கொண்டனர். இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் திருத்தூதர்களின் பயம்தீர அவர்கள் முன் தோன்றி, தேற்றி, அவர்களோடு உணவு அருந்தியுமுள்ளார். இதன் போது யாகப்பரும் கூடவே இருந்துள்ளார்.

இயேசு கொலை செய்யப்பட்டு, உயிர்தெழுந்த நாற்பதாம் நாள் தமது திருத்தூதர்கள் முன் இறுதியாகத் தோன்றினார். அப்போது யாகப்பரும் அங்கே இருந்துள்ளார். இயேசு அவர்களுடன் உரையாடிவிட்டு அவர்கள் முன்னிலையிலேயே விண்ணேற்றம் அடைந்தார். பின்னர், அவர் கூறியபடியே திருத்தூதர்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டனர். தூய ஆவியால் வீறுகொண்டு எழுந்த திருத்தூதர்கள் இறை போதனையில் திருப்பத்தை, உலகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கினர்.

**இயேசு மரித்த பின்னர்**

தூய ஆவியின் வரத்தினால் திருத்தூதர்கள் வேத போதனையை உலகின் பல நாடுகளுக்கும் சென்று போதிக்கத் தீர்மானித்தனர். அதன் அடிப்படையில் அவர்கள் உலகெங்கும் சென்று துணிவுடன் யேசுவின் அரசைப் பரப்பத் தொடங்கினர். அவ்வாறு செயற்பட்டபோது தூய ஆவியின் வரத்தினால் திருத்தூதர்கள் பேசிய

வற்றைக் கேட்ட வெவ்வேறு மொழியைப் பேசும் பல இன மக்களும், அவற்றை தத்தமது மொழியில் கேட்டுணரும் அற்புதம் ஏற்படலாயிற்று. இது இறையரசை பல நாடுகளிலும் பரப்ப முற்பட்ட திருத்தூதர்களுக்கு பெரிதும் துணை புரிந்தது.

யாகப்பர் யூதேயாவிலும், சமாரியாவிலும் நற்செய்தியை அறிவித்தார். அதன்பின் கடல் கடந்து ஸ்பானியா தேசம் சென்றார். அங்கு இயேசுவின் போதனைகளைப் போதித்து தமக்கென ஒன்பது சீடர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களில் இரண்டு சீடர்களிடம் அங்கு நற்செய்தி அறிவிக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு மீதமுள்ள ஏழு சீடர்களுடன் அவர் யூதேயாவுக்குத் திரும்பி அங்கு தமது நற்செய்திப் பணியைத் தொடர்ந்தார். இவரின் போதனையால் கணக்கற்றோர் யேசுவின் திருமறையில் இணைந்துகொண்டனர்.

உலகின் பல நாடுகளுக்கும் இறையரசைப் பரப்பச் சென்ற யாகப்பர் இறைமகன் யேசுவின் அருளைக்கொண்டு அற்புதங்கள் பலவற்றைச் செய்தார். நோயாளரைக் குணப்படுத்தினார். துன்புற்றவர்களைத் தேற்றினார். சென்ற இடமெல்லாம் இயேசு பணித்ததைச் செய்ய அயராது உழைத்தார். யூதேயாவிலும், சமாரியாவிலும் யேசுவைவிட வேறு இரட்சகர் இல்லையென இடித்துரைத்து, அவரது போதனைகளைப் போதித்து கணக்கற்றோரை யேசுவின் திருமறையில் இணைத்துக் கொண்டார்.

### தேவதாயார் துணை

யாகப்பர் தாம் ஆற்றும் பணிகளுக்கு ஆறுதலும் உதவியும் தேவைப்படும் போதெல்லாம் தேவதாயை நினைப்பார். அவ்வேளைகளில் தேவதாய் அவருக்குக் காட்சி கொடுத்து, ஆறுதல் கூறித் தேற்றுவார். இவ்வித மாக 'எபேஸ்' பட்டணத்தில் தேவதாய் அவருக்குக் காட்சி கொடுத்தபோது அவரின் அருள்வரத்தைப் பெற்றார். அவ்வேளை தாம் 'ஜெருசலேமில் மரணிக்கவிருப்பதை'யும் முன்னறிவித்தலாக அறிந்துகொண்ட



யாகப்பர், 'தமது மரண வேளையில் தமதருகே நின்று ஆறுதலளிக்குமாறு' விடுத்த கோரிக்கையை தேவதாய் ஏற்றுக் கொண்டார். அதன்படிஇவரது மரணவேளையில் தேவதாய் தாம் உறுதியளித்தபடியே ஆறுதலுக் காகக் காட்சி கொடுத்தார் என்று ஒரு பரம்பரியம் உண்டு.

"கி.பி. 44 ஆம் ஆண்டு யூதேயாவில், யூத வேதபாரகரான பரிசேயரோடு தர்க்கித்து அவர்களை நாணச்செய்து மறைப் புரட்சி செய்ததனால் பொறாமை கொண்ட பரிசேயக் கூட்டத்தினர், 'ஹெர்மோஜீனஸ்' என்னும் மந்திரவாதியின் உதவியை நாடி, அவரது உதவியாளர் 'பிலேத்தூஸ்' என்பவனை யாகப்பரிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் 'ஹெர்மோஜீனசு' மனம்மாறி, நற்செய்தியை நம்பினார். அதைப் பார்த்து யூதர்கள் கடுஞ் சினங்கொண்டு, யாகப்பரிடம் வந்து அவரைப் பழித்துப் பேசினர். அவரது நற்செய்தி போதனையை நிறுத்துமாறு கூறினர். ஆனால் யாகப்பர் எதற்கும் அசைந்து கொடுக்கவோ, பணிந்து போகவோவில்லை. அவரின் போதனைகள் தொடர்ந்தன. இதனால் திரளான மக்கள் மனம் மாறுவது கண்டு பொறுமையிழந்த, அந்த ஆண்டின் தலைமைக் குருவாக இருந்த 'அபியத்தார்' மக்களைக் கிளர்ச்சிசெய்யத் தூண்டிவிட்டு, பெரிய கயிறு ஒன்றை யாகப்பரின் கழுத்தில் கட்டி, இழுத்துச் சென்று ஏரோது மன்னனின் பேரனும், அரிஸ்தோபுலுஸின் மகனுமாகிய '1ஆம் அக்ரிப்பா ஏரோது' என்னும் குறுநில மன்னன் முன் நிறுத்தினார்கள். பலதரப்பட்ட குற்றச்சாட்டுக் களை முன்வைத்தனர்.

'1ஆம் அக்ரிப்பா ஏரோது' தனது ஆட்சியை நிலைநிறுத்த எதையும் செய்யத் துணிந்தவர். இதனால் இவர் யூதர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தி, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறத் துடித்துக் கொண்டிருந்தார். மோசேயின் சட்டங்களையும், யூத மரபுகளையும் அதிகமாக விரும்பி ஏற்றார். யூதர்களைத் திருப்திப்படுத்த எண்ணி கிறிஸ்தவர்களை அதிகமாக வதைத்தார். யாகப்பரைத் தண்டிப்பதற்கு இவரது குறிக்கோள்

யூதர்களுக்கு பேருதவியாக இருந்தது. யூதர்களைத் தன்வசப்படுத்தும் பொருட்டு அவர்களால் இழுத்து வரப்பட்ட யாகப்பரிடம் விசாரணை எதுவுமின்றி தலையைத் துண்டிக்குமாறு கட்டளை பிறப்பித்தார் 1ஆம் அக்ரிப்பா ஏரோது. பாஸ்குவிழாக் கொண்டாட்டத்தின் போது இம்மன்னனால், திருச்சபைக்கு ஏராளமான துன்பங்களைக் கொடுத்த ஆண்டாக கி. பி. 44 ஆம் ஆண்டு அமைகிறது. அதில் ஒன்றாகவே யாகப்பரின் கொலையும் பதிவாகிறது.

யாகப்பருக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் முன்னர், அவர்மேல் குற்றம் சுமத்தி அவருக்கு மரண தண்டனைக்கு ஏற்பாடு செய்த 'அபியத்தார்' என்பவர், யாகப்பரின் அருமையான நடவடிக்கையையும், இயேசுவுக்கு அவர் சான்று பகர்ந்த விதத்தையும் பார்த்து, அதிசயத்தில் மூழ்கிப்போனவராய் கிறிஸ்தவ நெறியை ஏற்றுக்கொண்டார். இது யூதருக்கும், மன்னருக்கும் கோபத்தை அதிகரிக்கச்செய்தது. இதனால் யாகப்பருடன் சேர்த்து 'அபியத்தார்' தலையும் ஒரே நாளில், ஒரே இடத்தில் துண்டிப்பதற்கு ஏற்பாடு செய்தனர்." [1]

கி.பி. 44 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 இல் (25.03.44) யாகப்பரின் தலை துண்டிக்கப்பட்டது. இவ்வாறு சதித்திட்டத்தின் மூலம் கொலை செய்யப்பட்ட யாகப்பர், திருத்தூதர்களில் முதலாவது மறைசாட்சியாகத் தம் இன்னுயிரைக் கையளித்த பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

### யாகப்பரின் மரணத்தின் பின்

யாகப்பர் யூதேயா நாட்டில் கொலை செய்யப்பட்டதும் அவரது சீடர்கள் யூதர்களுக்கு அஞ்சி, இரவோடு இரவாக அவரது உடலை ஒரு படகில் ஏற்றினர். வானதூதர்கள், சுக்கான் இல்லாத அந்தப் படகை யாருடைய உதவியுமின்றி, ஐபீரியாவிலுள்ள (ஸ்பானிய - போர்த்துக்கல் - பிரான்சின் சிறு பகுதி உள்ளடக்கிய குடா) 'ஐரியா ஃபிளாவியா' என்கிற இடத்திற்கு எடுத்துச் சென்றனர். அங்கே ஒரு பெரிய பாறை அவரது உடலை முற்றிலும் மறைத்துக்கொண்டது. பின் அங்கிருந்து அவரது உடல் ஸ்பானியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு மக்களின் பெரும் வரவேற்பின் மத்தியில் சகல மரியாதையுடனும் 'சந்தியாகோ தெ கொம்பஸ்தெலா' என்ற நகரில் கி.பி. 44 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 இல் (25.07.44) நல்லடக்கம் செய்யப்பட்டது. ஊரோமைக் கத்தோலிக்க உலகத்தில் 'சந்தியாகோ தெ கொம்பஸ்தெலா' என்கின்ற நகரம் எருசலேம், உரோமை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.

'ஸ்பெயின் நாட்டின் பாதுகாவலர்' என்றழைக்கப்படும் புனிதர் யாகப்பரை அடக்கம் செய்த இடத்தில், அமைக்கப்பட்டிருந்த சிற்றாலயம் மத்திய நூற்றாண்டு காலப்பகுதியில் பிரமாண்டமான ஆலயமாக கட்டப்பட்டது. எட்டாம் நூற்றாண்டு முதல் ஆலயத்தின் நிலத்தடியின் கீழ் கட்டப்பட்ட குகையினுள் அவரது திருப்பண்டங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத் திருப்பண்டங்கள் பற்றி பலர் சந்தேகங்களை எழுப்பினர். அதற்கு திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் 1884 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாளன்று வெளியிட்ட 'ஒம்னிப்பொத்தன்ஸ் தேயூஸ்' (*Omnipotens Deus*) என்னும் சுற்றுமடலில் கொம்பஸ்தெலாவில் வைக்கப்பட்டுள்ள யாகப்பரின் திருப்பண்டங்கள் யாவும் உண்மையானவையே என்று குறிப்பிட்டுள்ளார். பிரான்ஸ் நாட்டில் 'தூலுஸ்' என்னும் நகரத்திலுள்ள ஓர் ஆலயத்திலும் இத் திருப்பண்டங்களின் பகுதி பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

உலக வரலாற்றில் கி.பி. 844 ஆம் ஆண்டு 'ஐபீரியா' குடாவில் (ஸ்பானிய - போர்த்துகல் குடா) நடைபெற்ற மண்மீட்புப்போர் முதன்மை பெறுகிறது. 300 ஆண்டுகளாக 'ஐபீரியா' குடாவில் நிலைகொண்டு, கத்தோலிக்க ஸ்பானிய அரசனை பெண் திறைக்காய் வருத்திவந்த துருக்கர் படைகளை விரட்ட, இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப 'கிளாவிஜோ' என்கிற இடத்துக்கு அருகே நடைபெற்றது அந்தப் போர்.

கத்தோலிக்க ஸ்பானிய அரசால் ஜெயிக்க முடியாத போராக மாறிக்கொண்டுவந்தது. இஸ்லாமிய துருக்கிய படைகள் பெருந்திரளாக முன்னேறி வந்துகொண்டிருந்தன. ஸ்பானிய படைகள் செய்வதறியாது தடுமாறி, பின்வாங்கத் தொடங்கின. இந்தவேளை ஸ்பானிய மன்னரும், படைகளும், மக்களும் புனித யாகப்பரின் துணையை வேண்டி நின்றனர். தம்மைக் காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் வேண்டுதலை ஏற்ற புனித யாகப்பர், வெண்புரவி மீதமர்ந்து வெற்றிக் கொடி பிடித்து '*San Diaago*' - சந் தியோகு (பரிசுத்த தேவனே) என்று குரலெழுப்பி கிறிஸ்தவர்களின் சார்பில் போராடி பல்லாயிரம் எதிரிகளை அழித்து அந்த யுத்தத்தில் வெற்றியீட்டிக் கொடுத்த புதுமை

இன்றும் பலராலும் நினைவு கூரப்படுகின்றது. இந்த வரலாற்றை, 'சந்தியோகுமையோர் படை வெட்டு' என்ற பெயரில் 1856 இல் புலவர் சந்தியோகு (கரையூர்) அவர்கள் தென்மோடிக் கூத்தாகப் பாடியுள்ளார். இன்றுவரை பாடப் பட்டுவரும் இந்தக் கூத்து பலநூறு மேடையேற் றங்களைக் கண்டுள்ளது.


நற்செய்தி நூல்களில் புனித யாகப்பரை, 'யாக்கோபு' என்று குறித்துக் காணப்பட்டுள்ள போதும் 'சந்தியோகு' (சந்தியோகுமையோர்) என்ற பெயர் காணப்படவில்லை. மேலும், 1647 ஆம் ஆண்டு தெல்லிப்பளை பேதுரு புலவரால் எழுதப்பட்ட 'சந்தியோகுமையோர் அம்மானை' யில் பின்வருமாறு காணப்படுகிறது.

"... முன்னமவர் வங்கிஷத்தில் முந்துதிரு நாமம்
என்னவியாக்கோபென் றிட்டார்களப்பொழுதே
தப்பாத விந்நாமந் தான் **சந்தியோகு**வென
இப்புவி யெங்குமியல் பாய் வழங்கியதே ..."

இவற்றைக்கொண்டு நோக்கும்போது, கி.பி.844 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்கள் தாம் இழந்த மண்ணை மீட்க - இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப 'ஐபீரியா' குடாவில் நடைபெற்ற போரில் பங்கேற்று வெற்றியீட்டிக்கொடுத்த புனித யாகப்பரால், அந்த யுத்தத்தில் பயன்படுத் தப்பட்ட 'சந் தியோகு' என்ற சொல்லே அவ ருக்கு அப்பெயர் வரக் காரணமாய் இருந் துள்ளது என்றே கருதமுடியும்.

இவ்வாறு பல சிறப்புக்களும், இறை பக்தியும், இயேசுவின்மீது அளவற்ற அன்பும், துணிச்சலும் கொண்ட புனிதரின் பெயரில் குருந கரில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக் குரியதே. இம்மக்களிடமும் இத்தகைய குணங் கள் இழையோடியிருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

புனித யாகப்பரி னது வரலாற்றின் பின்ன ணியில், அவர்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக் கையின் அடிப்படையில், தாம் கோவில் கொண்ட இடங்களில் தம்மை அண் டிவரும் அடியார்களுக்கு அநேக அற்புதங்களைச் செய்துள்ளதாக பரவ லாக பேசப்படுகிறது. அவற்றில் ஒன்றாக குருந கரும் விளங்குகின்றது.



புனித யாகப்பரின் திருப்பண்டங்களுள்ள பெட்டகம்
(கொம்பஸ்தெலா -ஸ்பானியா)

## குருநகர் மண்ணில் நிகழ்ந்த அற்புதங்கள்

குருநகர் வாழ் மக்கள் சந்தியோகுமை யோர்மீது கொண்ட அளவற்ற நம்பிக்கை, அவர்களைப் பொறுத்தவரை வீண்போகவில்லை. 'சந்தியோகுமையோரின் புதுமையினால் தாம் பெறுமதிமிக்க நன்மைகளைப் பெற்றுள்ளதா கவும், பெரும் இடர்களிலிருந்து பாதுகாக்கப் பட்டுள்ளதாகவும்' பலரும் பலமுறை வெளிப் படையாகத் தெரிவித்துள்ளார்கள். ஒவ்வொரு வரும் பெற்ற தனிப்பட்ட நன்மைகளைவிட பலரு மறிந்த பொது நிகழ்வுகளும், புதுமைகள் பற்றிய கர்ணபரம்பரை விடயங்களும் உள்ளன. அவற் றில் சில பின்வருமாறு;

- "ஆலயம் அமைக்க மரங்களைத் தேடி முல்லைத்தீவு காட்டில் திசை தெரியாது அலைகையில் அற்புதமாக வழிகாட்டப் பட்டு, பெருந்தொகையான மரங்களைக் கொண்டுவந்தபோதும் இன்னல், இடுக் கண் இன்றி காப்பாற்றப்பட்ட நிகழ்ச்சி 1864 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது" [2] இந்த நிகழ்வை தமது தந்தை, பேரன் போன்ற வர்களின் கூற்றென மக்கள் பலரிடம் கேட்டறியக் கூடியதாக இருந்தது. 'உரிய மரங்களைத் தேடி காட்டில் அலைந்து திரிந்த தமக்கு நடந்தது அற்புதம் எனவும், அனைத்து மரங்களும் சிரம மின்றி வத்தையில் கொண்டுவரப்பட் டதாகவும்' அவர்கள் கூறியதாகத் தெரி வித்துள்ளனர்.
- 'ஆலயப் பங்குக் குருவுக்கு புனித சந்தியோகுமையோர் கனவில் தோன்றி, தனது வாள் பாங்ஷால் வீதி - சென் பற்றிக்ஸ் வீதிச் சந்தியிலுள்ள புளி மரத் தில் தொங்கிக்கிடக் கின்றதெனவும், அதனை எடுத்து வரும்படி கூறியதாகவும், பங்குக் குரு அதிகாலை குறிப் பிட்ட இடத்திற்குச் சென்று வாளை எடுத்து வந்ததாகவும்' பரம்பரை யாகப் பேசப்படுவதை அறியக் கூடியதாக இருக் கின்றது.
- 'சென் ஜேம்ஸ் வீதியில் மேற்குப் பக்கமாக

வசித்து வந்த ஒரு குடும்பத்தினர் ஒரு நாள் நள்ளிரவு கடந்த பின்னர் வேகமாகச் செல்லும் குதிரையின் குளம்பொலி கேட்டு பயத்தினால் உறக்கமின்றி இருந்துள்ளதுடன், அதிகாலை தமது வளவில் சிறிய வாள் ஒன்று கிடப்பது கண்டு அதிர்ச்சியடைந்தனர். அது புனித யாகப்பர் கையிலுள்ள வாள் என்பதையும், இரவு கேட்ட குதிரைக் குளம்பொலி புனித யாகப்பருடையது என்பதையும் உணர்ந்து அதனைப் பக்தியுடன் எடுத்துச்சென்று குருவானவர் கையில் ஒப்படைத்துள்ளனர்.' இதனை அக்குடும்பத்தின் பூட்டப்பிள்ளையான திரு. ச. தங்கராஜா என்பவர் தமது தாய்வழி கதையென உறுதிபடக் கூறுகின்றார்.

* "1934 இல் ஆலயத்திற்கான புதிய முகப்புக் கட்டுமானத்திற்காக வெட்டப் பட்ட ஆழமான அத்திபாரக் குழிக்குள் ச. சவிரியான் என்பவர் மண்சரிவினால் புதையுண்டு நீண்ட நேரத்தின் பின்னர் வெளித்தெரிந்த விரலின் அடையாளத் தைக்கொண்டு தோண்டியெடுக்கப் பட்டதால் உயிர் மீண்டார்." [3] இதனை சம்பந்தப்பட்டவரே தமது மரணத்தின் முன்னர் கூறியுள்ளார்.

* '1938 இல் கொள்ளைநோய் குருநகரைப் பிடித்தபோது புனித யாகப்பரின் சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு ஊரைச் சுற்றி வந்தமையால் அந்த நோயிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட் டனர்.' இந்நிகழ்வு குருநகர் மக்களி டையே வாய்வழிக் கதையாக பேசப் படுதை அறியக்கூயதாக இருக்கின்றது.

* 1940 இல் கடற்கரை வீதியிலுள்ள 81 ஆம் இலக்க வீட்டில், மரணப்படுக்கையில் கிடந்த தனது சிறிய தாயாருக்குத் துணையாக விழித்திருந்த அருளானந்தம் செபமாலை என்பவர், "நள்ளிரவு நேரம் வீதியில் குதிரையின் குளம்பொலியும், சவுக்கால் அடிக்கும் ஓசையும் பல தடவைகள் கேட்டதாகவும், அந்தப் பகுதியில் மின்மினிப் பூச்சியையொத்த ஒளி பலவற்றை கண்டதாகவும்" தெரி வித்திருந்தார். இவர் 1956 இல் இறந்த போதும் இவரது மகள் சிசிலியா இதனைப் பலதடவைகள் சட்டுரையாளரி டம் கூறியுள்ளார்.

* 1943 இல் பவுர்ணமி தினமன்று இரவு 9 மணியளவில், நிலவின் வெளிச்சத்தில், புனித யாகப்பர் ஆலயத்தின் 4வது கதவு ஓரமாக வெளி விறாந்தையில், திரு. ஞா. பிரான்சீஸ் என்பவர் செபித்துக்கொண்டி ருந்த வேளையில் 'ஆலயத்தின் உள்ளே ஒருவர் நடந்துசெல்லும் சப்பாத்து சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்ததா கவும், அந்தச் சத்தங்கள் தான் இருக்கும் இடத்தை நோக்கி வருவது போன்ற உணர்வினைத் தந்த கணநேரத்தில் தனக்கு முன்னாலிருந்த கதவில் உதைந் தது போன்று உரத்த சத்தத்தையும், கதவு அசைந்ததையும் கண்டு பயந்து ஓடிவிட்ட தாகவும்' அவரே நேரில் சாட்சி பகர்ந் துள்ளார். 'பூட்டியிருந்த ஆலயத்தில் எவரும் உள்ளே இல்லாதபோது கேட்ட சப்பாத்துச் சத்தம் புனித யாகப்பரு டையது என்றும், தனக்கு ஏற்பட இருந்த ஆபத்தைத் தடுக்கவே அவ்வாறு நிகழ்ந்துள்ளதாகத் தாம் நம்புவதாகவும்' உறுதிபடக் கூறுகிறார்.

* 1943 - 1968 காலப்பகுதியில் ஆலயப் பணியாளனாகக் கடமையாற்றி 1974 இல் மரணமடைந்த அவுறான் சந்தியோகு (மகோனா) என்பவர், 'புனித யாகப்பர் ஆலயத்தில் யாருமற்ற நள்ளிரவு வேளை களில் பலிபீடத்தில் பிரகாசமான ஒளி யின் மத்தியில் அற்புதத் திருப்பலி நிறை வேற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், குதி ரையின் குளம்பொலியையும், பூட்டிய ஆலயக்கதவு திறந்து மூடும் ஓசையை யும், பூசை மணியொலியையும் பல தடவைகள் தாம் கேட்டதாகவும்' சாட்சி பகர்ந்துள்ளார். [4]

* 1959 ஆம் ஆண்டு சென் ஜேம்ஸ் மேற்கு வீதியில் வசித்த நாராயணன் தங்கபபன் என்னும் இந்து மதத்தவர் தாம் 'வீட்டின் வெளி விறாந்தையில் படுத்துக்கிடந்த போது. இரவு இரண்டு மணியளவில் குதிரையின் குளம்பொலியையும், சவுக் கொலியையும் அந்த வீதியில் கேட்டதாக அயல் வீட்டுக்காரரான வி.ஜே.கொன்ஸ் ரன்ரைன் என்பவரிடம் அப்போது கூறியிருந்தார்.' இதனை அவர் நேரில்

உறுதிப்படுத்தியுள்ளார்.

* 1962 இல் புனித யாகப்பர் ஆலயப் பணிமனையுடன் இணைந்தவாறு, வடக்குப் பக்கமாக கட்டப்பட்டிருந்த திரு இருதயசபையின் நூல்நிலையக் கட்டடத்தில் இரவில் படுத்துவந்த திரு. ஞா. பிரான்சீஸ் என்பவர், 'நள்ளிரவு நேரம் ஆலயத்தில் பூசை எழுந்தேற்ற மணி ஒலி கேட்டு எழுந்து கதவைத் திறந்து பார்த்தபோது ஆலயத்தினுள்ளேயிருந்து பிரகாசமான ஒளிக் கதிர்கள் வெளித் தெரிந்ததாகவும், மணி ஒலி நின்றதும் ஒளிக் கதிர்கள் நின்றுவிட்டதாகவும்' அவரே நேரில் சாட்சி பகர்ந்துள்ளார். இந்த மணிச் சத்தத்தை ஆலயத்திற்கு அண்மையில் உள்ள வீட்டில் வசித்து வந்த வின்சன் என்பவரும் கேட்டதாக கூறியுள்ளார்.


* 1963 இல் 'அண்டவாய்வு'வினால் பாதிக்கப்பட்ட இந்து மதத்தவரான ஒருவர் ஆலயத்தின் முன்பக்க விறாந்தையில் (பாங்ஷால் வீதிப் பக்கம்) தங்கியிருப்பதை வழமையாகக் கொண்டிருந்தார். அண்டவாயு நோய் காரணமாக அவரது விதை ஒரு முளம் வரையில் பெருத்திருந்தது. 'ஒருநாள் அவர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தபோது ஒருவர் வந்து தனது வயிற்றில் ஏறி மிதிப்பதாகக் கனவு கண்டுள்ளார். விழித்துப் பார்த்த போது பெருத்திருந்த விதை வழமையான நிலையில் காணப்பட்டமை கண்டு அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.' அவரது கூற்றை அவரை நன்று அறிந்திருந்த பலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதனை திரு. ஞா. பிரான்சீஸ் என்பவரும், அப்போது சிறுமியாக இருந்த திருமதி இராசேஸ்வரன் என்பவரும் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

* 05.07.1968 இல் ஆலயத்தின் பீடப் பகுதிக்கும், 'சற்பிரசாத கிறாதி'க்கும் இடைப்பட்ட கூரையின் உட்புறம் 'வளைவு சீற்' அடிக்கப்பட்டபோது, இ. நைல்ஸ் என்னும் வாலிபன் 32 அடி உயரத்திலிருந்து சீமெந்து நிலத்தில் விழுந்து காயமெதுவுமின்றி உயிர் தப்பினார். இதனை உடன் வேலை செய்துகொண்டிருந்தவர்களும், நேரடியாகக் கண்டவர்களும் வெளிக் கொண்டு வந்திருந்தனர்.

* 28.09.1974 முதல் வாந்திபேதி குருநகரைத் தாக்கி குறுகிய நாளில் அடுத்தடுத்து நிகழ்ந்த 40 இற்கும் மேற்பட்ட குழந்தைகளின் மரணங்களாலும், பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்த தீராத நோயினாலும் துயருற்ற மக்கள் தம்மைக் காப்பாற்றும்படி புனித யாகப்பரிடம் வேண்டுதல் செய்ததுடன் 26.10.1974 சனிக்கிழமை 'குதிரையில் அமர்ந்திருக்கும் வாளேந்திய புனித யாகப்பர்' சுரூபத்தை ஆடம்பரமின்றி, வெகு பக்தியுடன் ஊரை சுற்றி பவனியாக எடுத்து வந்தனர். அன்றுடன் இந்நோயினால் வேறு மரணங்கள் இடம்பெற வில்லை. 'இசையாஸ் யோசப்' என்னும் பெரையுடைய ஒன்றரை வயதுச் சிறுவனே 26.10.1974 அன்று இறுதியாக மரணமடைந்தவராவார். இதனைப் பலரும் பெரு நிகழ்வாகப் பேசிக்கொள்வதுடன் கட்டுரையாளரும் நேரடியாக அறிந்துள்ளார்.

* 12.11.1993 இரவு அதாவது ஆலயம் விமானக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காவதற்கு முதல்நாள் ஆலயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குதிரையின் குளம்பொலி கேட்டதாகப் பரவலாக மக்கள் பேசிக்கொள்வதை கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

* 25.07.2000 இல் தொடர் இடப்பெயர்வுகளால் துன்புற்றிருந்த மக்கள் 2000 ஆண்டின் இடப்பெயர்வின்போது நெருக்கடிகள், பயத்தின் மத்தியிலும் தாம் தங்கியிருந்த ஊர்களிலிருந்து வருகை தந்து புனித யாகப்பர் ஆலயத் திருவிழா நவநாட்களில் பங்குகொண்டு இருளாவதற்கு முன்னர் திரும்பிச் சென்றுவந்தனர். திருவிழா நாளன்று 'இனிமேல் இடம் பெயர்வுகள் ஏற்படக்கூடாது' என்ற உருக்கமான வேண்டுதலுடன் வழமையாக ஊர்வலமாக எடுத்து வரப்படும் 'புனித யாகப்பர்' சுரூபத்து டன் சேர்த்து 'குதிரையில் அமர்ந்திருக் கும் வாளேந்திய புனித யாகப்பர்' சுரூபமும் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. அன்றிலிருந்து


இயேசுவில் மீண்டும் எழுவோம்
புதுப்பித்தல் - 2011
சிறப்புப் பதிவுகள்

தாம் இடம் பெயர்ந்து செல்லவில்லை யென மக்கள் பெருமிதம் கொள்வதை அறியக்கூடிய தாக இருக்கின்றது.

இவ்வாறு கொள்ளை நோய்கள், மரண ஓலங்கள், துன்பங்கள், ஆபத்துகள், இடர்களை விலக்கித் தனது மக்களைக் காப்பாற்றிய புனித யாகப்பரிடம் என்றும் நாம் நம்பிக்கையுடன் சென்றால் நமது வேண்டுதல்களை இறை தந்தை யின் கருணையினால் சுகப்படுத்தி வாழ் வளிப் பார் என்பது நமது நம்பிக்கையாக இருக்கட்டும்.■

**அடிக்குறிப்புகள்**

1. விவிலிய விருந்து - நவம்பர் 2010 - பக். 7,8,9
2. புனித யாகப்பர் ஆலயம் 125வது ஆண்டு நினைவு மலர் - 1986 - பக். 4
3. மேற் குறித்த நூல் - 1986 - பக். 4
4. மேற் குறித்த நூல் - 1986 - பக். 69

**தகவல்கள்**


1. பரிசுத்த வேதாகமம்
2. விவிலிய விருந்து - நவம்பர் 2010
3. நல்லூர் பரி. யாக்கோபு ஆலய 175 ஆவது ஆண்டுவிழா நினைவுமலர் - 2003
4. புனித யாகப்பர் ஆலயம் 125 ஆவது ஆண்டு நினைவு மலர் - 1986
5. தெல்லிப்பளை பேதுரு புலவர் - சந்தியோகு மையோர் அம்மானை - 1222
6. கலையார்வன் - ஆன்மீகத்தில் குருநகர் மக்கள் - 2008
7. நேரடிச் சந்திப்புகள்


# இயேசுவில் மீண்டும் எழுவோம்

## புதுப்பித்தல் - ௨0௧௧

கிறீஸ்துவின் உடலே திருச்சபை. ஒவ்வொருவரும் கிறீஸ்துவின் தனித்தனி உறுப்புக்கள். இந்நிலையிலே யாழ். மறை மாவட்டத்தின் இதயமாக விளங்கக்கூடிய குருநகர்ப் பங்கின் புனித யாகப்பர் ஆலய 150 ஆவது ஆண்டு நிறைவானது ஓர் ஆன்மீக நன்றி விழாவாகும். இவ்விழாவினை அர்த்தமான முறையிலே கொண்டாட வேண்டுமென்றால் கிறீஸ்துவுக்குள்ளே எமது வாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டும். நாம் இன்று போருக்குப் பின்னாக ஒரு காலப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். போரின் தாக்கங்களும் காயங்களும் முற்றாக இன்னும் குணமடையவில்லை. வன்முறை கலாசாரத்திற்குப் பழக்கப்பட்ட ஓர் இளைஞர் சமூகமே எமது சமூகத்தின் முக்கிய ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. இதனோடு கலாசாரச் சிதறல்கள் வெளி மாவட்ட / வெளிநாட்டு வர்த்தக முதலீடுகள் போன்ற பல்வேறு காரணிகள் எமது யாழ் மண்ணிலே செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கின்றது. இத்தகைய ஒரு பின்புலத்திலே, எமது விசுவாச ஒழுக்க வாழ்வினிலே பாரியதொரு நெருக்கடியினை எதிர்நோக்குகின்றோம். இந்நிலையிலே எமது கிறீஸ்தவ வாழ்வானது பாரிய சவாலினை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக, கிறீஸ்தவ சமூகத்தினதும் எதிர்கால தலைமுறையினரது உயிர்நாடியாக விளங்கக்கூடிய குடும்பங்களை இத்தகைய காரணிகளும், சவால்களும் வன்மையாகத் தாக்குவதன் காரணமாக அது தன்னிலையிலே இருந்து பிறழ்வுபட்டுப் போவதற்கான அறிகுறிகள் கணிசமான அளவில் தென்படுகின்றன.

எனவே கிறீஸ்துவிலே எம் வாழ்வினை மீளவும் கட்டி எழுப்புவதன் ஊடாகவே நாம் இத்தகைய சவால்களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் எம்மையும் எம் குடும்பங்களையும் எம் பங்கையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இத்தகைய சிந்தனைகளை உள்வாங்கியதன் வெளிப்பாடே 'இயேசுவில் மீண்டும் எழுவோம்' என்ற தலைப்பிலே முன்னெடுக்கப்பட்ட எண்பது நாள்களைக்கொண்ட புதுப்பித்தல் செயற்திட்டமாகும். அமலமரித் தியாகிகள் வவுனியா குழும மறையுரைஞர்களின் நெறிப்படுத்தலிலே கருத்தமர்வுகள், ஆராதனைகள் இல்லத் தரிசிப்புக்கள், பேரணிகள், வலயத் திருப்பலிகள் என இப்புதுப்பித்தல் வியாபித்து நின்று அனைத்துப் பங்கு மக்களையும் தன்னுள் உள் வாங்கி புதுப்பித்தலுக்கான விதையினை மக்களின் மனங்களிலே தூவியது. 'உண்மையை உள்ள படியே...' என்ற தலைப்பினிலே சந்திதோறும் வலயமாக விழிப்பூட்டல் நிகழ்வுகள் மக்களின் பூட்டப்பட்ட கதவுகளிலே பலமான ஓசைகளை திறப்பிற்காக எழுப்பின. போடப்பட்ட திட்டங்கள் நேரசூசிகள் யாவும் நல்லபடியே நிறைவேறின. கனிகளுக்காக காத்திருக்கின்றோம். இது எம்மைப் புதுப்பிக்கத் தரப்பட்ட காலமாகும். புதுப்பிக்கப்பட்டால் நாம் இயேசுவில் வாழ்வோம். புதுப்பிக்கப்படாவிட்டால்...



# புனித யாகப்பர் ஆலயத்தில் பணியாற்றிய அருள்பணியாளர்கள் பொதுநிலையினர்

ஆலயத்தின் வளர்ச்சிக்கும், சிறப்பிற்கும் அங்கு பணியாற்றிய பங்குத்தந்தையர்களின் பங்கு கணிசமானதாகும். ஒவ்வொரு நிகழ்விலும் அவர்களது முயற்சி இரண்டறக் கலந்துள்ளது. பணியாற்றிய ஒவ்வொரு பங்குக் குருவும், உதவிப் பங்குக் குருவும் ஆன்மீகத்திற்கு வழிகாட்டி, சமூக நலனின் அக்கறைசெலுத்தி, ஆலய வளர்ச்சிப் பணிகளில் ஏதோ ஒரு வகையில் தத்தமது மேலான பங்களிப்புகளைச் செலுத்தியுள்ளார்கள். அந்தவகையில், ஆலயம் தனிப் பங்காக இயங்கத் தொடங்கிய பின்னர் அங்கு பணியாற்றிய பங்குத தந்தையர்களையும், உதவிப் பங்குத் தந்தையர் களையும், அதற்கு முன்னர் சிற்றாலயமாக இருந்த இடர்மிகு கால கட்டத்தில் மறைபணி ஆற்றிய குருக்களையும் நாம நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

புனித யாகப்பர் ஆலயம் சிற்றாலயமாக இருந்தபோது பணியாற்றிய குருக்களின் முழுமையான விபரங்கள் அறியப்படவில்லையாயினும் அங்கு குறிப்பிட்ட காலங்கள் பணியாற்றி 01.11.1783 இல் மறைந்த பிரசங்கியான வண. பிதா ஜோஸ் றெபேய்றோ அவர்களின் உடல் அடக்கம் செய்யப் பட்டதன் சான்றாக ஆலயத்தின் நடுவில் காணப்படும் 'கல்வெட்டு' ஒன்றே ஆதாரமாக உள்ளது. இதனால், ஆலயம் தனிப் பங்காக இயங்கத் தொடங்கிய பின்னர் அங்கு பணியாற்றிய பங்குக்குருக்கள் பற்றிய தகவல்கள் மட்டும் இங்கே தரப்பட்டுள்ளன.

**பங்குத் தந்தையர்கள்**

| | | |
|---|---|---|
| அருள்பணி லே கான் (O.M.I) | 17.07.1892 | - 15.05.1895 |
| அருள்பணி கோத்தியர் (O.M.I) | 16.05.1895 | - 15.11.1895 |
| அருள்பணி ஈ வொலான்டர் (O.M.I) | 16.11.1895 | - 15.01.1896 |
| அருள்பணி ஒயேன் வில்லியம் (O.M.I) | 16.01.1896 | - 15.02.1896 |
| அருள்பணி சி (B )போ (O.M.I) | 16.02.1896 | - 15.03.1896 |
| அருள்பணி யோண் அலோசியஸ் (O.M.I) | 16.03.1896 | - 16.10.1908 |
| அருள்பணி பி. ஏ. மருலீன் (O.M.I) | 30.10.1908 | - 08.06.1927 |
| அருள்பணி டெலான் (O.M.I) | 15.01.1927 | - 26.07.1929 |
| அருள்பணி பி. எம். பிரான்சீஸ் (O.M.I) | 27.07.1929 | - 15.12.1946 |
| அருள்பணி வ. பிலிப் (O.M.I) | 16.10.1946 | - 09.01.1947 |

| | | |
|---|---|---|
| அருள்பணி எச். லெக்குத்தூர் (O.M.I) | 10.01.1947 | - 19.09.1949 |
| அருள்பணி ஏ. லெபோன்ஸ் (O.M.I) | 20.09.1949- | - 16.04.1950 |
| அருள்பணி ஏ. உத்தீன் (O.M.I) | 17.04.1950 | - 14.01.1951 |
| அருள்பணி எமில் பொமிக்கோ (O.M.I) | 15.01.1951 | - 17.04.1960 |
| அருள்பணி எஸ். ஏ. மைக்கல்சாமி (O.M.I) | 18.04.1960 | - 15.03.1961 |
| அருள்பணி எ. சார்வே (O.M.I) | 03.07.1961 | - 14.06.1966 |
| அருள்பணி பெனற் கொன்ஸ்ரன்ரைன் | 15.06.1966 | - 29.03.1970 |
| அருள்பணி நீ. மரிய சேவியர் | 30.03.1970 | - 09.06.1971 |
| அருள்பணி இ. இராஜரெட்ணம் | 10.06.1971 | - 31.01.1973 |
| அருள்பணி ம. இம்மானுவேல் பயஸ் | 01.02.1973 | - 09.09.1976 |
| அருள்பணி எஸ்.யே. பிரான்சிஸ் (O.M.I) | 10.09.1976 | - 29.05.1977 |
| அருள்பணி கே. பி. சந்தியாப்பிள்ளை | 30.05.1977 | - 19.04.1981 |
| அருள்பணி ஜேம்ஸ் பத்திநாதர் | 20.04.1981 | - 30.10.1981 |
| அருள்பணி எஸ். வி. பி. மங்களராஜா | 01.11.1981 | - 09.08.1982 |
| அருள்பணி பீற்றர் துரைரட்ணம் | 10.08.1982 | - 25.08.1987 |
| அருள்பணி பி. எம். இம்மனுவல் | 26.08.1987 | - 09.08.1993 |
| அருள்பணி ஆர். எம். ஜி. நேசநாயகம் | 10.08.1993 | - 19.09.1997 |
| அருள்பணி ப.பி.பொனிபஸ் | 20.09.1997 | - 01.08.2001 |
| அருள்பணி அ. பி. ஜெயசேகரம் | 02.08.2001 | - 26.07.2004 |
| அருள்பணி ஆர். எச்.சகாயநாயகம் | 15.10.2004 | - 29.10.2008 |
| அருள்பணி ஆர். சி. எக்ஸ். நேசராஜா | 30.10.2008 | - |

**உதவிப் பங்குத் தந்தையர்கள்**

| | |
|---|---|
| அருள்பணி பி. ஏ. மருசலின் (O.M.I) | 1892 - |
| அருள்பணி யோ. ப. பூலேன் (O.M.I) | 1892 - |
| அருள்பணி யோ. அல்போண்சஸ் (O.M.I) | 1904 - 1906 |
| அருள்பணி பி. ஏ. மருசலின் (O.M.I) | 1906 - 1908 |
| அருள்பணி கே. செபஸ்ரியன் | 1909 - 1919 |
| அருள்பணி பி. எம். பிரான்சிஸ் (O.M.I) | 1919 - |
| அருள்பணி றொட்றிக்கோ (O.M.I) | 1927 - 1928 |
| அருள்பணி ஜே. புறோகான் (O.M.I) | 1929 - 1937 |
| அருள்பணி எமில் பொமிக்கோ (O.M.I) | 1937 - 1945 |
| அருள்பணி ஜே. டிவிற் (O.M.I) | 1947 - 1948 |
| அருள்பணி ஜோ. ஸ்ரனிஸ்லோஸ் (O.M.I) | 1949 - 1950 |
| அருள்பணி ஏ. சார்வே (O.M.I) | 1949 -1950 |
| அருள்பணி ஏ. மூயே (O.M.I) | 1950 - |
| அருள்பணி எஸ். கோமஸ் | 1966 - 1975 |
| அருள்பணி சி. கமிலஸ் ஜயமான | 1968 - 1969 |
| அருள்பணி ஆர். எம். ஜி. நேசநாயகம் | 1969 - |
| அருள்பணி மல்கம் செலர் | 1975 - 1976 |
| அருள்பணி எஸ். வி. பி. மங்களராஜா | 1976 - 1977 |
| அருள்பணி பி. அலோசியஸ் | 1978 - 1979 |
| அருள்பணி சி. நோபட் | 1979 - 1980 |
| அருள்பணி ஏ. சின்னராசா | 1981 - 1982 |
| அருள்பணி எஸ். ஜெயபாலன் குருஸ் | 1982 - 1983 |
| அருள்பணி யே. கமிலஸ் நிமலன் | 1983 - 1984 |
| அருள்பணி இ. செபஸ்ரியன் | 1984 - 1985 |
| அருள்பணி ஆர். ஸ்ரலின் | 1986 - 1986 |

| | |
|---|---|
| அருள்பணி பி. ஜே. ஜெபரட்ணம் | 1986 - 1987 |
| அருள்பணி ஏ செலஸ்ரின் மஸ்கிறிஞ்ஞ (O.M.I) | 1991 - 1992 |
| அருள்பணி எஸ். ஜே. ஜெயசசந்திரன் | 1994 - 1995 |
| அருள்பணி யூட் அமலதாஸ் | 1997 - 1998 |
| அருள்பணி எஸ். ஜோ ஸ்ரனிஸ்ரன் | 2000 - 2000 |
| அருள்பணி எஸ். ஏ. அருட்செல்வன் | 2001 - 2003 |
| அருள்பணி ஏ. அன்ரனி அமலராஜன் | 2003 - 2004 |
| அருள்பணி சி. ஜஸ்ரின் | 2004 - 2005 |
| அருள்பணி எம். எல். தயாகரன் | 2005 - 2007 |
| அருள்பணி என். லெஸ்லி அன்ரனி | 2007 - 2008 |
| அருள்பணி இ. எட்வின்நாதன் | 2008 - 2010 |
| அருள்பணி ஏ. மைக் மயூரன் | 2010 - 2011 |
| அருள்பணி ஆ. ஜஸ்ரின் | 2011 - 2011 |
| அருள்பணி ஜெ. எல்மோ அருள்நேசன் | 2011 - |

## குறிப்பிடத்தக்க அருள்பணியாளர்கள்

புனித யாகப்பர் ஆலயத்தில் பங்குத் தந்தை, உதவிப் பங்குத் தந்தையர்களாகப் பணி யாற்றியவர்கள் தமது பணிககாலத்தில் பலதரப்பட்ட சேவைகளை ஆலயத்திற்கும், ஆலயத்தைச் சார்ந்த மக்களுக்கும் செய்துள்ளபோதும், சிறப்பாக பணியாற்றியுள்ளபோதும் சிலர் மட்டும் தமது சேவைகளினால் மக்களின் மனங்களை ஆக்கிர மித்து அவர்களால் என்றும் நினைவுகூரப்படுகி றார்கள். அந்தவகையில் புனித யாகப்பர் ஆலயப் பங்கின் ஆரம்பம் முதல் அங்கு பணியாற்றிய ஐரோப் பிய மற்றும் சுதேச குருக்களும் தமது பணிக்காலத் தில் செய்த சேவைகளினால் மக்கள் மனங்களில் இடம்பிடித்திருந்துள்ளார்கள். ஆயி னும், அவர்கள் எல்லோரினது தகவல்களும் கிடைத்தில.

புனித யாகப்பர் ஆலயத்தில் வழிமீசாமாகப் பணியாற்றியவர்களில், 01.11.1783 இல் மரண மடைந்த பிரசங்கியான வண. ஜோஸ் றெபேய்ரோ அடிகளாரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டதற் கான கலவெட்டு ஆலயத்தின் நடுவில் பொறிக்கப் பட்டுள்ளமையும், அவருக்கு 110 வருடங்கள் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இரங்கல திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டமையும், அவர் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டதே காரணம்.

அவ்வாறே வழிமீசாமாக பணியாற்றிய வரும், தற்போதைய ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை பொறுப்புடன் மேற்கொண்டவரும், 1896 இல் மரணமடைந்தவருமான வண. லெயோ மொறுவா அடிகளார் விளங்குகிறார். 1898 இல் தூரிகைகொண்டு வரையப்பட்ட அவரது உருவப் படம் ஆலயத்தின் உட்பக்கம் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டமை மக்களின் நன்றி மறவாமை யும், விருப்பமுமே காரணம்.

இவைபோன்ற தகவல்களைப் பெற்றுக் கொள்வது சிரமமாக இருப்பதால், கிடைக்கப் பெற்றவர்களது தகவல்கள் மட்டுமே இங்கே தரப்பட்டுள்ளன.

## அருள்பணி எம். பிரான்சீஸ் (O.M.I)

27.07.1929 - 15.12.1946 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி எம். பிரான்சீஸ் அடிகளார், புனித யாகப்பர் பங்கில் தொடர்ச்சியாக 17 வருடங்கள் பணியாற்றிய பெருமையைப் பெறுகின்றார். இவர் தமது பணிக் காலத்தில் குருநகர் மக்களின் அத்தியாவசியத் தேவையை உணர்ந்து செயற்பட்டார். எவ்வாறெனில், கரையூரில் ஏற்பட்ட இடப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, 1914 முதல் சிறைக் கைதிகள் மூலம் மணல்கொணடு மேவப்பட்ட குருநகரின் தெற்குப் பக்கக் கடல் பகுதியில், குருநகர் வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி அதற்காக முன்னின்று உழைதது நிறைவேற்றி வைத்தார். அவர் மரணிக்கும் வரை (29.12.1949) குருநகர் மக்களுக்காகவே உடனிருந்து சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது சேவையை நினைவுகூரும் முகமாக 03.06.1971 இல சென் ஜேம்ஸ் வீதி - கடற்கரை விதிச் சந்தியில், குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் அன்னாரின் உருவச்சிலை நிறுவப்பட்டது.

## அருள்பணி எமில் பொமிக்கோ (O.M.I)

15.01.1951 - 17.04.1960 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி எமில் பொமிக்கோ அடிகளார் மக்கள்பால் கருணையும், கரிசனையும் கொண்டவராக விளங்கினார். இத

னால் மக்கள் இவர்மீது அளப்பரிய அன்பு செலுத்தி வந்தனர். வீதியில் குருவானவரைச் சந்திக்க நேர்ந்தால் முழங்கால் மடித்தே வணக்கம் செலுத்துவர்.

சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை யாழ். ஆயர் அவர்களால் 1953 இல் கட்டி முடிக்கப்பட்டதும் அதைத் திறந்துவைத்து 700 மாணவர்கள் வரை கல்வி பயில ஊக்குவித்ததுடன் அதன் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். தினமும் ஆண்கள் பாடசாலையையும், பெண்கள் பாடசாலையையும் தரிசித்து தேவைகளைக் கேட்டறிந்து அதை நிறைவேற்றி வைப்பதை தமது பிரதான கடமையாகக் கொண்டிருந்தார். 01.12.1960 இல் இரு பாடசாலைகளையும் அரசாங்கம் சுவீகரித்தபோது விரக்தியுற்ற அவர் உடனடியாகவே விடுமுறை பெற்று தமது தாய் நாடான 'போலந்'திற்குச் சென்றார்.

அடிகளார் விடுமுறை முடித்து திரும்பி வந்த பின்னர் குருநகர் பங்கில் பணியாற்ற அனுமதியாமல் வேறு பங்கிற்கு மாற்றம் செய்யப்பட்டதால் வேதனையும், விரக்தியும் அடைந்த மக்கள், 15.03.1961 இல் ஆலயத்தை பூட்டிவைத்து மூன்று மாதங்களுக்கு மேலாக வழிபாட்டுக்கு தடை செய்தனர். ஆலயம் பூட்டப்பட்டவேளை வண. பிதா எஸ். ஏ. மைக்கல்சாமி அடிகளார் பணியாற்றினார்.

03.07.1961 இல் பங்குத் தந்தையாக நியமனம் பெற்ற வண. பிதா எ. சார்வே அடிகளாரின் குறிப்பேட்டில் "நான் வரும்போது என்னை வரவேற்க எவரும் இருக்கவில்லை" என எழுதியுள்ளார். அவ்வளவுக்கு பொமிக்கோ அடிகளார்மீது அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள் இம்மக்கள்.

## அருள்பணி எ. சார்வே (O.M.I)

03.07.1961 – 14.06.1966 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி எ. சார்வே அடிகளார், வண. பிதா எமில் பொமிக்கோ அடிகளாரின் இடமாற்றத்தால் வேதனை யடைந்திருந்த மக்களைத் தேற்றிக் கவர்ந்தெடுப்பதில் வெற்றிகண்டார். மீண்டுமொருமுறை இந்தநிலை உருவாகாத வகையில் மக்களை ஒருநிலைப்படுத்தினார். இவரது பணிக் காலத்தில் ஆலயத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டமும், அருள்திரு. யோ. எ. ஜெயசீலன் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

18.01.1913 இல் அத்திபாரக் கல் நாட்டப்பட்டு, அத்திபாரம் போடப்பட்டுக் கட்டப்படாமலிருந்த மணிக்கூட்டுக் கோபுரத்திற்கான முதலாம் கட்ட வேலையைச் செய்துமுடித்தார். தனக்குச் சரியெனப்பட்டதை செய்துமுடிப்பதில் சற்றேனும் தளராத அடிகளார், ஆன்மீக வலுவூட்டலுக்கான மகா ஞானஒடுக்கத்தைச் சிறப்புடன் நடத்தி முடித்தார். ஞானவொடுக்கத்தின்போது சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலிருந்து புனித யாகப்பர் ஆலயம் வரை வீதி வழியே நடந்த நெடிய சிலுவைப் பாதையில சிலுவையை தமது தோழில் சுமந்தவாறு இறுதிவரை நடந்த நிகழ்வை பலர் இன்றும் நினைவு கூருவர்.

பிரான்ஸ் நாட்டினரான இவர் ஆரம்பத்தில் கொச்சைத் தமிழில் பேசியபோதும் பக்தி முயற்சிகளில் சிறப்புடன் பணியாற்றினார். காலப் போக்கில் மறையுரையைத் தமிழில் ஆற்றக்கூடிய திறமையையும் வளர்த்துக்கொண்டார்.

## அருள்பணி பெனற் கொன்ஸ்ரன்ரைன்

15.06.1966 – 29.03.1970 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகளாரின் பணிக்காலம் ஒரு பொற்காலமாக நோக்கப்படுகிறது. மாமூல் நிலையிலிருந்து விடுபடத்தக்க வகையில் ஆலயச் செயற்பாடுகளில் இளைஞர்களின் சேவையை உள்வாங்கிக் கொண்டார். சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை ஆசிரியர், மாணவர்களை ஆலய வேலைகளுக்காக ஒய்வுநேரங்களில் பயன்படுத்திக் கொண்டார். இதன் மூலமாக அவரால் பல முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடிந்தது. ஆலயத்தின் உள்ளே காணப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளுக்கு முதற்தடவையாக இலகு வர்ணந்தீட்டி துலங்கச் செய்து ஆலயத்திற்கு அழகூட்டினார். நற்கருணைப் பக்தியை பங்கில் வேரூன்றச்செய்யும் நோக்கோடு இரவு பூராவும் நற்கருணை எழுந்தேற்றம் செய்து வைத்து வழிபாட்டு நேரங்களைப் பட்டியலிட்டு பக்திச் சபைகளையும், திரளான மக்களையும் நற்கருணை வழிபாட்டில் விருப்புடன் பங்குகொள்ள வழிசெய்தார்.

'புனித யூதாததேயு' சுரூபம் ஒன்றைத் தருவித்து, புனிதரின் பக்தியை வளர்ப்பதில் பெரும் வெற்றி கண்டார். 'பாடகர் குழாமை' சீர்செய்து ஆலயத் திருநாட்களைப் பக்திபூர்வமாக்கினார். தென்னிந்திய இசைப் பக்கவாத்தியங்கள் பலவற்றுடன் திருவிழாத் திருப்பலி, திருமணத் திருப்பலிப் பாடல்களை ஒலிக்கச் செய்தார். யாழ்ப்பாணத்திலே ஆலயங்களில் முதன்முறையாக தென்னிந்திய இசைப் பக்கவாத்தியங்களுடன் பாடல்கள் இசைக்கச்செய்த பெருமை இவரையே சாரும்.

புனித யாகப்பரின் திருச்சுரூவப் பவனியை புதியதோர் தேர் அமைப்பில் வடிவமைத்து பவனிவர

வழிவகுத்தார். புனித யாகப்பர் திருவிழாவை மக்கள் மயப்படுத்தி வீதி அலங்காரம், பட்டாஸ் வெடிகள், திருவிழா கால ஒலிபெருக்கி பாவனை போன்ற வற்றை ஊக்கப்படுத்தினார். ஆலயம் சிறப்புற்றதும், சிறப்புடன் தொடர வழிவகுத்ததும், இளைஞர்களை ஆலயச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட வழிகாட்டியதும் இவரென்றே சொல்லலாம். அத்துடன் இளைஞர்களின் கலைச் செயற்பாடு களுக்குப் பேரூக்கம் அளித்து, நிதியுதவி செய்தமை யும் குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சியால் 1968 இல் 'உலகின் ஒளி' என்னும் மலர் வெளியிடப் பட்டது.

## அருள்பணி நீ. மரியசேவியர் (சவிரிமுத்து)

30.03.1970 - 09.06.1971 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி நீ. மரியசேவியர் (சவிரிமுத்து) அடிகளாரின் பணிக் காலம் குறுகிய காலமாயினும், குருநகர் மக்கள் மத்தியில் சமுதாயப்பற்றைத் தட்டியெழுப்பி சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட பல இளைஞர்களை ஊக்குவித்தார். அடுக்குமொழி நடையில் பேசும் இவரது மேடைப் பேச்சுக்கோ, பிரசங்கத்திற்கோ ஈர்க்கப்படாதவர் இல்லையென்றே சொல்லலாம். அவ்வளவு பேச்சுவன்மை கொண்டவராகத் திகழ்ந்தார்.

இளைஞர்கள் மத்தியில் மதிப்பு அதிகம் பெற்றவராக விளங்கிய இவர், ஏற்கெனவே உச்ச நிலையிலிருந்த நாடகக் கலையை மெருகூட்டவும், புதிய நாடக மன்றங்களை உருவாக்கவும், பொதுமக்களின் சேவைக்காக சமூகசேவை அமைப்புகளை உருவாக்கவும் வழிவகுத்தார். இவரது அயராத உழைப்பின் சான்றாக 'குருநகர் கலையரங்கம்' தலைநிமிர்ந்து நிற்கின்றது.

## அருள்பணி இராஜரெட்ணம்

10.06.1971 - 31.01.1973 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி இராஜரெட்ணம் அடிகளார், 'சேகுவேரா' கிளர்ச்சி யின் தொடரான இடர்மிகு கால கட்டத்திலேயே பணியைத் தொடர்ந்தார். மார்கழி 1971 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது மக்கள் மத்தியில் அன்பும் சமாதானமும் நிலைபெற பாடுபட்டார். குருநகர் மக்களின் நியாயபூர்வமான கருத்துக்களை சம்பந்தப் பட்டவர்களுக்கு எடுத்துச்செல்லத் தயங்கிய வரல்லர். இது சார்பாக ஒரு பிரமுகரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு "எனது பங்கு குருநகர் என்றபடியால் குருநகர் மக்கள் என் மக்கள். அதனால் என் மக்களின் கருத்துக்கள் என்னில் பிரதிபலிப்பதில் ஆச்சரியமில்லை. எதுவானாலும் அவர்களின் முதல்தேர்வு நான்தான். அவர்கள் வேறு யாரிடம் போவார்கள்" என்று கூறியபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன. அந்தளவுக்கு மக்களில் அன்பு வைத்திருந்தார். அந்த அன்பை பங்கில் 'மரியாள் பக்தியை' வளரச்செய்வதில் காட்டிய அக்கறை மூலமும் உணர்த்தி நின்றார்.

## அருள்பணி ம. இம்மானுவேல் பயஸ்

01.02.1973 - 09.09.1976 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ம. இ. பயஸ் அடிகளார், திருஇருதய சபையினர் மூலமாக, திருஇருதய சுரூபமும், வேதாகமும் வீடுவீடாக எடுத்துச்சென்று வழிபாடு செலுத்த ஏற்பாடு செய் தார். மக்கள் தம் வீடுகளை அலங்கரித்து, செபித்து விசுவாசத்தை உறுதிபடுத்தினர். ஞாயிறுதோறும் மாலையில் வீடுகளை ஆசீர்வதிப்பதை வழமையா கக் கொண்டிருந்தார்.

மருதமடு அன்னையின் திருச்சுரூபம் புனித யாகப்பர் ஆலயத்தில் வரவேற்கப்பட்டதும், அருள்திரு இராசசிங்கம் (அ.ம.தி.) மற்றும், அருள் திரு பயஸ் இருதயதாஸ் ஆகியோர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும், கடலில் மின்னொளி யில் சிலுவைப்பாதை காட்சிப்படுத்தப்பட்டதும், வாந்திபேதியால் 40 இற்கு மேற்பட்ட குழந்தைகள் மரணமடைந்போது குதிரையில் இருக்கும் வாளேந்திய புனித யாகப்பர் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டதும் இவரது பணிக்காலத்திலேயாகும்.

## அருள்பணி ஜேம்ஸ் பத்திநாதர்

20.04.1981 - 30.10.1981 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் பணிக்காலம் மிகக் குறுகிய காலமாயினும் அவர் காலத்திலேயே, 1861 இல் திட்டமிடப்பட்டு அத்திவாரமிடப்பட்ட ஆலயத் தின் அனைத்துக் கட்டுமானப்பணிகளும் முடிவுற்று, அழகியதொரு ஆலயமாக முழுமைபெற்றது எனலாம்.

நீண்ட காலமாக முற்றுப்பெறாமலிருந்த மணிக் கோபுரங்கள் இரண்டையும், அதனுடன் இணைந்த முன் மண்டபத்தையும் கட்டி முடித்தார். ஆலய வளவின் வடமேற்கு மூலையிலிருந்த காணியைக் கொள்வனவுசெய்து ஆலய வளவுடன் இணைத்தமை இவரது தூரநோக்குடனான செயற் பாடாகும்.

## அருள்பணி பீற்றர் துரைரட்ணம்

10.08.1982 - 25.08.1987 காலப்பகுதியில்

பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி பீற்றர் துரைரட்ணம் அடிகளார், ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவை சிறப்புற நடத்தி முடித்தார். குருநகரையே உலுக்கிய முப்பத்தியொரு தொழிலாளர்களின் படுகொலையின்போது இவர் ஆற்றிய பணி மகத்தானது. கொல்லப்பட்டவர்களின் மரண ஊர்வலத்தின்போது ஆலயத்தில் ஏற்பாடுசெய்த பொதுவழிபாடு, கலந்துகொண்ட அனைவரையும் கலங்கச்செய்தது.

## அருள்பணி பி. எம். இம்மனுவல்

26.08.1987 - 09.08.1993 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி பி. எம். இம்மனுவல் அடிகள் ஆன்மீகப் பணிகளுடன் சமூகப்பணியையும் ஆற்றிவந்தார் தற்போது நிறைவான வளர்ச்சியுடனும்,. அற்பணிப்புடனும் செயற்பட்டுவரும் 'புனித வின்சென் டி போல், பெண்கள் பந்தியை' உருவாக்கியவர் இவரே. ஆன்மீக செயலூக்கங்களில் கூடிய கவனம் செலுத்தி வந்தார்.

மரணவீடுகளுக்கு பக்திச் சபைப் பெண்கள் வழிபாட்டிற்கென செல்லுதல், இறுதி ஊர்வலமன்று வீட்டில் வழிபாடு செலுத்திவிட்டு ஆலயம் வரை ஊர்வலத்துடன் சென்று பொது வழிபாட்டில் கலந்துகொள்ளுதல் போன்ற நடைமுறைகள் இவராலேயே அறிமுகம் செய்யப்பட்டன யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட பங்குகளிற்கான மறை ஆசிரியர்களுக்குரிய மறைக்கல்வி கற்கைநெறியில் இணைந்துகொள்ள பலரை ஊக்குவித்து அவர்கள் மூலம் பங்கில் மறைக்கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

தவணைமுறை அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்களை வழஙகி குருநகா மக்களின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய இவர், கலையை வளர்க்கும் நோக்கில் 1988 இல் 'புனித யாகப்பர் கலைமன்றத்தை' உருவாக்கி அதன்மூலம் பல நாட்டுக்கூத்துக்களையும், நாடகங்களையும், 'பாசப்பலி' என்னும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியையும், புனித யாகப்பர் ஆலய சமய சமூக மகளிர் மன்றத்தை உருவாக்கி அதன்மூலம் வடமோடி கூத்து மற்றும் நாடகங்களும் மேடையேற்ற வழிவகுத்தார். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை 'உயிர்த்த இயேசு'வின் திருச்சுரூபப் பவனியை நாதஸ்வரத்துடன் நடத்தி சிறப்புறச் செய்தார்.

வித்துவான் த. பாக்கியநாதன் அவர்களின் துணையுடன் 'நடன நல்லிசைக் கலாமன்றம்' இவராலேயே தோற்றுவிக்கப்பட்டது. இது அனைத்து வசதிகளுடனும் சிறப்புடன் இயங்கியதாக பலர் நினைவுகூருவர். வரலாறு காணாத இடப்பெயர்வுடன் வாத்தியக்கருவிகள் சேதமடைந்தும், தொலைந்தும் போனமையால் தொடர்ந்து இயங்க முடியாமல் முடக்கப்பட்டது. சிறுவர் காப்பகத்தை நிறுவி பெற்றோரை இழந்த சிறார்களைப் பராமரிக்கும் பணியில் முன்னின்று உழைத்தமை வரவேற்கத்தக்க முயற்சியாகும்.

புனித யாகப்பர் ஆலய மண்டபத்தை அமைத்ததுடன், ஆலய கிணறுக்கு அருகாமையில் நீர்த்தாங்கி அமைத்து மேற்கொள்ளப்பட்ட நீர் விநியோகத்தால் மக்களின் குடிநீர் தேவை பெருமளவு சீர்செய்யப்பட்டது. கல்விகற்ற இளையோருக்கு 'பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தில்' இலவசமாக தொழிறபயிற்சிபெற ஏற்பாடு செயதுகொடுத்தார்.

## அருள்பணி ஆர். எம். ஜி. நேசநாயகம்

10.08.1993 - 19.091997 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார், 'யோசவ்வாஸ்' இளைஞர் மன்றத்தை குருநகர்ப் பங்கில் உருவாக்கினார். ஆலயத் திருவிழாவில் 9ஆம நாள் வழிபாட்டை (வேஸ்பர்) இளைஞர் மன்றத்தினரிடமும், மகளிர் மன்றத்தினரிடமும் ஒப்படைத்து தமிழர்களின் கலாசாரத்துடன் இணைந்ததாக நடைபெற வழிவகுத்துக் கொடுத்தார். நாட்டில் நிலவிய அமைதியற்ற சூழல் காரணமாக நடைமுறையிலிருந்த இராணுவ கெடிபிடிகளுக்கு மத்தியில் மக்களுக்கு ஆற்றிய மேலான சேவைகளும், ஆலயம் விமானக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான சம்பவத்தில் அவர் எடுத்துக்கொண்ட துரித முயற்சிகளும் மறக்கக்கூடியவைகளல்ல.

## அருள்பணி ப. பி. பொனிபஸ்

20.09.1997 - 01.08.2001 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ப. பி. பொனிபஸ் அடிகளார், ஆன்மீக செயலூக்கத்தில் முனைப்புடன ஈடுபட்ட ஒருவராவர். தான எடுத்த முடிவை நிறைவேற்றிவைப்பதில் குறியாக இருந்த அவர் அதற்காக எதிர்கொண்ட சவால்கள் பல. ஆயினும் ஆன்மீக செயற்பாடுகளில் பலநிலையிலும் முன்னேற்றத்தையே ஏற்படுத்தியிருந்தார்.

ஆலயத்தில் ஞானக் கடமைகள் நிறைவேற்றும்போது பெற்றோர் கூடவே இருக்கவேண்டுமென்பதில் உறுதியாய் நின்று தழும்பல் நிலையிலிருந்த மக்களை முழுமையாய் மாற்றியமைத்தார். திருவிழாக் காலத்தில் ஊரில் களியாட்டங்களை

நிறுத்தி அனைவரையும் வழிபாட்டில் கலந்து கொள்ளச் செய்வதில் வெற்றிகண்டார். பிள்ளைகளுக்கு மறைக்கல்வியைப் பயிற்றுவிற்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டதுடன் அவர்களை வேறு பங்குகளிற்கு சுற்றுலாவாக அழைத்துச்சென்று மறைக்கல்வி கற்பதில் ஆவலையும், ஆன்மீக பற்றுறுதியையும் ஏற்படுத்தி நின்றார். குண்டுவீச்சால் தகர்ந்து கிடந்த ஆலயத்தை புனரமைக்கும் பணியை பல சிரமங்களின் மத்தியில் முன்னெடுத்துச் சென்றார்.

நாட்டில் அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி பெருகிவிட்ட, சமூகத்தின் சீரழிவை உண்டுபண்ணிய வடி சாராய விற்பனையை தடுத்து நிறுத்த அரும்பாடுபட்டார். பாடசாலை மாணவர்களுக்கான இரவுப் பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தி மாணவர்கள் ஒழுங்காக சமூகமளிக்கவுஞ் செய்தார். இரவுப் பாடசாலை தொடங்கும் நேரத்திற்குச் சற்று முன்னர் கையில் தடி ஏந்தியபடி துவிச்சக்கரவண்டியில் தினமும் இவர் வீதி வலம் வருதைக் காணலாம். அந்தளவுக்கு அக்கறையுடன் செயற்பட்டார்.

## அருள்பணி அ. பி. ஜெயசேகரம்

02.08.2001 – 26.07.2004 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள் கலாநிதி அ. பி. ஜெயசேகரம் அடிகள் ஐரோப்பிய நாடுகளில் நீண்ட காலங்கள் பணியாற்றியதால் தாம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் பணியை மேற்கொள்ள முனைந்தபோதும் அதில் பூரண வெற்றி பெற்றதாக அறிய முடியவில்லை. ஆயினும் பங்குடன் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதிலும், பதிவுகளை முறையாகப் பேணுவதிலும் எடுத்த முயற்சிகள் பலனையளித்தன.

23.10.1993 இல் நிகழ்ந்த விமானக் குண்டு தாக்குதலால் சேதமுற்ற ஆலயத்தை புனரமைக்கும் பணியை அருள்திரு. பி. பொணிபஸ் அடிகளார் தொடர்ந்தபோதும் இவரது பணிக்காலத்திலேயே முடிவுபெற்று பழைய பொலிவைப் பெற்றது. ஆலயத்தின் முக்கிய நிகழ்வுகளைக் குறிக்கும் திகதிகளை ஆலயச் சுவரின் மேற்பகுதியில் பொறிப்பித்த முயற்சி பாராட்டத்தக்கது. அத்திகதிகள் சுட்டும் விபரங்களை எழுதிப் பார்வைக்கு வைத்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

சாட்டி சமாதான பாதயாத்திரைக்கு வித்திட்டவரும் இவர்தான். வியாகுல மாதாவின் பக்தியை வலுவாக்கும் பொருட்டு 'வியாகுலமாதா கெபி' புனரமைக்கப்பட்டதும் இவரது பணிக் காலத்திலேயாகும். விமானக் குண்டு வீச்சால் ஆலயம் தகர்க்கப்பட்ட 10 ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாக நினைவுச் சின்னமும், நினைவுக் கல்லும் நாட்டப்பட்டது. அதில் 'இறந்தவர்களுக்கு வணக்கம், இருப்பவர்களுக்கு எச்சரிக்கை' என்ற வாசகம் இவரால் பொறிக்கப்பட்டதாகும்.

## அருள்பணி ஆர். எச். சகாயநாயகம்

15.10.2004 – 29.10.2008 காலப்பகுதியில் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ஆர். எச். சகாயநாயகம் அடிகளார், 'பொதுநிலையினர் முன்வரும் பட்சத்தில் ஆன்மீகச் செயற்பாடுகளை சிறப்புடன் மேற்கொள்ள முடியும்' என்ற எதிர்பார்ப்பைக் கொண்டவர். அதனை நிறைவேற்ற கடுமையாக உழைத்தார். பல முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றில் ஒன்றாக 2006, பங்குனி 01 முதல் சித்திரை 08 வரை நடைபெற்ற 'மகாஞானவொடுக்கம்' திகழ்கின்றது. குறித்த இலக்கை எட்டும் வகையில் முப்பதுக்கு மேற்பட்ட அ.ம.தி.சபைக் குருக்கள் பங்குகொண்ட மகா ஞானவொடுக்கமாக அது இருந்தது. ஞானவொடுக்க காலத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக ஆலய வளவில் 'பச்சைமரப் பாடுகள்' எனும் பெயரில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி 'குருநகர் ஜோசப்வாஸ் இளைஞர் மன்றத்தால்' மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குருநகர் பரிசுத்த புதுமைமாதா ஆலயத்தைக் கட்டி முடிப்பதிலும், குருநகரில் மது ஒழிப்பை ஏற்படுத்துவதிலும் அவர் காட்டிய ஆர்வமும், இளையோருக்கான தொழில் பயிற்சியை ஏற்பாடு செய்வதில் எடுத்துக்கொண்ட முயற்சியும் பாரட்டப்பட வேண்டியவை. குருநகர் சுற்றாடலில் மது விற்பனை நிலையங்களை இல்லாதொழித்த பெருமை இவரையே சாரும்.

## அருள்பணி ஜே. புறோகான் (O.M.I)
(உதவிப் பங்குத்தந்தை)

ஐப்பசி 1929 தொடக்கம் பங்குனி 1937 வரை உதவிப் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருள்பணி ஜே. புறோகான் அடிகளாரின் பணிக்காலமும் சிறப்பான காலமென்றே சொல்லவேண்டும். ஆன்மீக வலுவூட்டலுக்கான காத்திரமான பங்கை வகித்தவர் இவர். இவரது நீண்ட பணிக்காலத்திலே தான் ஆன்மீக வலுவூட்டலுக்கான சபைகள் பல உருவாக்கப்பட்டன. அந்தச் சபைகள் இன்றுவரை சிறப்புடனேயே சேவையாற்றி வருகின்றன. ஆலயத்திற்கென மேலதிகமாக அயலிலிருந்தவர்களின் நிலத்தை கொள்வனவுசெய்து ஆலய வளவினை விஸ்தரித்து எலலைச் சுவர்களைக் கட்டிமுடித்தார்.

இவரது விடாமுயற்சியினாலேயே ஆலய முகப்பு வேலை விரைவாகக் கட்டிமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பொதுநிலையினர்**

### ஆலய மூப்பர்:

ஆலயத்தில் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றுகிறவரை 'மூப்பர்' என அழைப்பர். இவர்கள் கட்டளைக் குருவானவருக்கு நம்பிக்கைக் குரியவராகவும், கோவில் சார்ந்த சேவைகள், வேலைகளை நெறிப்படுத்துபவராகவும், ஊரவர்கள் மற்றும் பிறரினது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவராகவும் இருப்பார். இவரது கூற்றைச் செவிமடுப்பதற்கும், முடிவை ஏற்றுக்கொள்வதற்கும் மக்கள் தயாராகவே இருந்தனர். அவ்வாறு சிறப்புடன் பணியாற்றியவர்களும், அவர்களது பணிக்காலமும் பின்வருமாறு;

திரு. க. மரியாம்பிள்ளை (முத்துத்தம்பி)
17.07.1892 - 27.07.1907
திரு. ம. எமலியூஸ் இராசேந்திரம்
01.01.1908 - 17.11.1948

இருவரும் இறக்கும்வரையும் மூப்பராய் பணியாற்றியுள்ளனர். குடும்ப வழியாக பணியாற்றிய இவர்களுக்குப் பின்னர், குடும்பத்தில் நிகழ்ந்த அசம்பாவிதம் காரணமாக ஏனையோர் பணியாற்ற முன்வராத காரணத்தினால் வேறு எவரும் மூப்பராக நியமிக்கப்படவில்லை.

### ஆலயப் பணியாளர் (Sacristan):

பங்குக் குருவுடன் இணைந்து ஆலயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், சில பொறுப் புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நியமிக்கப் படுபவரே ஆலயப் பணியாளராகும். மக்கள் தொகை அதிகமாக உள்ள புனித யாகப்பர் ஆலயத்தில் இவர்களது பணி அவசியமானதாகும். இங்கு ஆலயப் பணியாளராக பணியாற்றவர்கள் பற்றிய நிறைவான தகவல்கள் கிடைக்காத போதும், அறிந்தவரையிலான பெயர் விபரம் பின்வருமாறு;

திரு. சூசைப்பிள்ளை
திரு. மனவற்பிள்ளை
திரு. அவுறான் சந்தியோகு
திரு. யாக்கோபு சிங்கராயர்
திரு. யோண் கொல்மன்
திரு. சந்தியாப்பிள்ளை யஸ்ரின்
திரு. சின்னப்பு லெபோன்சியஸ்
திரு. ஆசீர்வாதம் றோமான்
திரு செபமாலை சிறில் (தற்போது)

இவர்கள் தமது பணியை செவ்வனே நிறைவேற்றியபோதும் சிலர் மக்களால் நினைவு கூரப்படுகிறார்கள். அவர்களில் ஒருவராக 'இலட்சி யத் தொண்டன்' எனப் புகழாரம் சூட்டப் பெற்ற, 'அவுறான் சந்தியோகு' அவர்கள் விளங்குகிறார். 25 வருடங்கள் (1944 - 1968) ஆலயப் பணியாளனாக பணியாற்றியுள்ளார். 'மகோனா' என்று பலராலும் அழைக்கப்படும் இவரது குரல், புனித யாகப்பர் ஆலயத்தில் ஒலிக்கும்போது அங்கே பக்தி மேலோங்கி நிற்கும். அழகுற, அழுத்தம் திருத்தமாக உச்சரிக்கப்படும் செபங்கள் பக்தர்களைப் பரவச மூட்டி மெய்சிலிர்க்க வைத்ததைப் பலர் உணர்ந்துள் ளனர். மூப்பர் என்ற நாமம் வழங்கப்படாதிருப்பினும் அப்பணியையும் விருப்புடன் மேற்கொண்டார். பக்திமானாக விளங்கிய இவரது சேவைக்காலத்தில் புனித யாகப்பர் ஆலயத்தில் பல அற்புதங்களைக் கண்டதாக இறக்கும் முன்னரே சாட்சி பகர்ந் துள்ளார்.

அடுத்து 1981 - 1987 வரை பணியாற்றிய ஆசீர்வாதம் றோமான் விளங்குகிறார். நேரந் தவறாத வர் எனப் பாராட்டப்பட்ட இவர், புனித வாரத்தில் நடைபெறும் 'கிறிஸ்து மரணிக்கும்' காட்சிப்படுத் தலில் இவரால் படிக்கப்படும் வியாகுல பிரசங்கம் மக்கள் மனதைத் தொடும்படியாக அமைந்திருந்தது.

### ஆலயத் தொண்டர்

ஆலயம் சார்ந்த ஆக்கபூர்வமான பணிகளில் வற்புறுத்தலின்றி தாமாக முன்வந்து தமது கடமையாகச் செய்வதற்கு ஆர்வமுள்ளவர் களில் ஒருவராக, 'மாணாக்கன்' என அழைக்கப் படும் 'செபஸ்ரி சந்தியோகு' அவர்கள் விளங்குகிறார். இவர் புனித யாகப்பர் ஆலயத்தில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ளார். ஆலயம் சார்ந்த பல வேலைகள், சேவைகளில் இவரது ஆளுமையும் அக்கறையும் கணிசமாக இருந்தது. ஆலயத்தில் 'உடக்குப்பாஸ்' காண்பிக்கப்பட்டபோதும், தொடர்ச் சியாக ஆண்டுதோறும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று காண்பிக்கப்படும் 'இயேசுவை அறைந்து இறக்கும் காட்சி'யிலும் இவர் முக்கிய பங்காற்றியுள் ளார். சிலுவையில் அறையப்படும் இயேசுவுக்குப் பொருத்தப்படும் கண்கள் இவரது பொறுப்பிலேயே இருந்தது. கண்கள் பொருத்துவதை தமது பணியாக செய்துவந்தார். எதிலும் துணிந்து இறங்கக்கூடிய இவரது குரல் என்றும் மேலோங்கியே இருக்கும்.

### இசை வழங்குநர்

இசை வழியாக இறைவனைப் புகழ்ந்து பாடுதல் ஆலய வழிபாட்டுடன் இணைக்கப்பட்ட

தொன்றாகும். வழிபாட்டுப் பாடல்களைப் பாடுவதற்கு உந்துசக்தியாக உரிய இசையை வெளிப்படுத்தி, பாடகரின் குரலுடன் ஒத்திசைந்து செல்வதற்கும், வழிபாட்டில் இருப்பவர்களை ஒன்றிக்கச் செய்வதற்கும் 'கிண்ணறப்பெட்டி'யென அழைக்கப்பட்ட பெரிய 'ஹார்மோனியத்தின்' (பியானோ என்றும் அழைக்கப்பட்டது) மூலம் இசை வழங்கும் முறை புனித யாகப்பர் ஆலயத்தில் நடைமுறையிலிருந்துள்ளது. 1965 வரை 'இலத்தீன்' மொழியில் மட்டுமே வழிபாடுகள் நடைபெற்றன. பாடல்களும் அம்மொழியிலேயே பாடப்பட்டன. ஆலய வழிபாட்டில் ஹார்மோனியம் சேர்த்துக்கொள்ளப்பட்ட காலம் அறியமுடியாதுவிட்டாலும் 1931 ஆம் ஆண்டுக்கு முன்னர் 'திரு. தூசையா' என்னும் சிங்கள இனத்தைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளரே ஹார்மோனியததை பயன்படுத்தி இசையை வழங்கியுள்ளார். அவரைத் தொடர்ந்து 1931 முதல 1970 ஆம் ஆண்டு வரை 'திரு. சந்தியோகு மைக்கேல்' என்பவர் ஹார்மோனிய இசையை வழங்கிவந்துள்ளார். இலத்தீன் மொழியிலும், பின்னர் தமிழ் மொழியிலும் நாற்பது வருடங்கள் தொடர்ச்சியாக இந்த சேவையைச் செய்துவந்த பெருமை இவரையே சாரும். இவரது பத்து விரல்களும் ஹார்மோனியச் சுரக் கட்டைகளில் விளையாடும். இவரது இசைப்புத் தன்மையால் வெளிப்படும் இசை, ஒலிபெருக்கி பயன்பாட்டுக்கு வரும் முன்னர் ஆலயத்தையே அதிரவைத்தது. வழிபாடுகளைச் சிறக்கச் செய்தது.

மேற்குறித்தவர்களைவிட வேறு பலரும் ஆலயத்தில், குருநகர் மக்களின் மத்தியில் அரும்பணியாற்றியிருப்பார்கள். அவர்கள் பற்றிய நிறைவான தகவல்கள் கிடைக்கப்பெறாமையால் அவர்கள் மறக்கப்பட்டவர்களாகவே மாறிவிட்டார்கள். இருப்பினும் இவ்வேளை அவர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்கள் ஆற்றிய பணிக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுதல் எமது தலையாய கடமையாகும் ■

## சித்திரத் தேரினில்...

சித்திரத் தேரினில் ஊர்வலம் வாறார்
உத்தமர் யேசுவின் ஊழியர் யாகப்பர்
உத்தமர் யேசுவின் ஊழியர் யாகப்பர்

**சரணங்கள்**

கொஞ்சும் கடலலை சங்கீத மிசைக்க
நெஞ்சில் சுமந்தவர் நகரத்து வீதியில்
பஞ்சம் படை கொள்ளை நோய்களை
அஞ்சிடச் செய்ததைக் கண்டவர் மத்தியில்

(சித்திரத் ...)

ஒலித்திடும் மணிகள் ஒளிர்ந்திடு மொளியினில்
அலர்ந்த மலர்போல மலர்ந்த முகத்தினர்
தொலைந்த நிமமதி மறந்த நிலையினில்
குலையாத நம்பிக்கை கொண்டவர் நடுவே

(சித்திரத் ...)

செயலோடு கூடிய இறை நம்பிக்கையை
நிஜமான தத்துவம் என்றே உரைத்தவர்
ஜெயம்பெற வெண்புரவி மீதி லமந்தவர்
தயைவேண்டி திரண்ட மக்களின் முன்பாக

(சித்திரத் ...)

படையாளி எனப்பெயர் சூடப் பெற்றவர்
கொடையாகச் செய்வதில் வாஞ்சை கொண்டவர்
தடையின்றி வாழ்வைத் தொடரவே அருளென
புடைசூழ ஒலித்திடும் குரல்களின் ஊடாக

(சித்திரத் ...)




# எம் பங்கு தன்னுடன் எழுந்திடவே...

சத்திய மறையை எம் குருநகர்க் கிராமத்திற்குத்
தந்திட்ட தயவிற்காய் த் தந்தையே நன்றி!
மெத்தவும் பாடுபட்டு, மெய் வருத்தம் பாராது,
மேன்மையுறும் ஆலயம் சமைத்த முன்னோர்
அத்தனை பேருக்கும் எங்கள் அன்பு நன்றி
ஆலயத்தில் பணியாற்றி, அருளினை பெற்று தந்த,
சொத்தாம், குருக்கள், துறவியர், தொண்டர்களுக்கு
சோதியாம் இறையின் ஆசீரும், எம் நன்றிகளும்.
கத்தோலிக்க விசுவாசம், கருகவிடாது காத்த,
அருளாளர் யோசவாஸ் முனீந்திரருக்கு நன்றி!
பத்துத் தர பதினைந்து ஆண்டுகள் நிலைத்து நிற்கப்
பாதுகாப்பு தந்த எம் புனிதருக்கு நன்றி!

நன்றி கூறும் இத்தினத்தில் நாம் எல்லோரும்
நல்லதொரு தீர்மானம் தான் எடுப்போம்.
என்றும் இம் மகிழ்வு மாறாதிருக்க, எம்முடனே
இறைவன் நாளும் குடிகொண்டிருக்க,
வன்முறை தவிர்ப்போம், வசைமொழி ஒழிப்போம்
வாழ்வுக் கொவ்வாக் களியாட்டம் களைவோம்.
அன்பு, அடக்கம், பக்தி, பரிவு, பகிர்வு,
ஆயரை மதித்தல், ஆன்றோரைப் போற்றுதல்,
என்னும் பண்புகள் பூண்டு, எம் குடும்பங்கள் எழுந்திட
எல்லோரும் ஒற்றுமையாய், ஏற்றமுடன் வாழ்ந்து,
மன்னு புகழ் ஓங்க, மனித மாண்பு பேணி, எம் பங்கு
மதிப்புடன் உயர்ந்திட மக்களெல்லாம் உழைப்போம்!

- ஆர். ஏ. நாயகி





# ஸ்பானியா – கொம்பஸ்தெல்லா
# புனித யாகப்பர் ஆலய
# பிரமாண்ட தூபம்


– கரோலின் சங்கீதா பசில் ஜேம்ஸ்
நோர்வே

சூரியன் அஸ்தமிக்காத நாடு என எல்லோராலும் வரவிலக்கணப்படுத்தப்படும் நோர்வே நாட்டில் வசிக்கும் நான், எமது குருநகர் பங்கில் புனித யாகப்பர் ஆலய 150 ஆவது ஆண்டு மலரினூடாக இஸ்பானியா (*Spain*) நாட்டில் அமைந்துள்ள புனித சந்தியோகுமையோர் ஆலய வரலாற்று தகவல்களையும், சிறப்பம்சங்களையும் உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்வதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். இச சந்தர்ப்பத்தை எனக்கு அருளிய உங்கள் அனைவருக்கும் முதற் கண் எனது நன்றியையும் வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன்.

எனது தந்தையார் குருநகர் புனித யாகப்பர் பங்கின் வழிமரபினராக இருந்த காரணத்தாலும், அவர் புனித யாகப்பர்மேல் கொண்டிருந்த அளவுகடந்த நமபிக்கை காரணமாகவும். ஈழத்தில நிலவிய போர்ச் சூழலால் நான் எனது குடும்பத்தாருடன் புனித யாகப்பரின் ஆலயத்தையோ, அவரின் திருநாட்களில் பங்கு பற்றும் சந்தர்ப்பமோ கிடைக்க தவறிய காரணத்தினாலும் நாங்கள் ஸ்பானியா நாட்டிலுள்ள புனித சந்தியோகுமையார் ஆலயத்திற்கு சென்றிருந்தோம்.

அவ்வாலயம் பழமை மாறாத புதுப் பொலிவுடன் விளங்கியது அங்கு பல யாத்திரிகர்களும் சுற்றுலாப் பயணிகளும் நிறைந்து காணபபட்டனர். நாங்கள் கோடை காலத்தில் சென்றிருநததால் ஆலயத்தை முற்றாகச் சுற்றி பார்க்க எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாலயம் இஸ்பானியாவின் வடமேற்குப் பகுதியிலுளள கலீசியா (*Galicia*) என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் இருந்த ஐந்து முக்கிய மேற்றாசனப் பிரிவுகளில் இவ்வாலயம் ஆசனக்கோயிலாக 1120 இல் இருந்த திருத்தந்தையினால் உருவாக்கப்பட்டது.

இடியின் மக்கள் என அழைக்கப்பட்டவர்களில் ஒருவரும், எம குருநகர்ப் பாதுகாவலருமாகிய புனித யாகப்பரின் திருச்சடலம் அங்கு அடக்கம் செய்யப்பட்டு, அவரின் நினைவாக இப் பேராலயம் உருவாக்கபபட்டுள்ளது ஆலயத்தின் கட்டட வேலை 1075 இல் *Castile* என்னும் இடததில் ஆட்சியிலிருந்த மன்னன் *Alfonso VI (1040-1109)* காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆயர் *Diego Pelaez* கண்காணிப்பில் பிரான்சிலுள்ள *St. Sernin Toulouse* மடாலய அமைப்பை ஒத்த விதமாக ஆலய முகப்பமைப்பு அமைக்கப்பட்டது. கூடுதலான அளவு இவவாலயம் கருங்கற்களால் கட்டப்பட்டது. கட்டட நிர்மாண வேலைகள் இடையிடையே பல தடவைகள் தடைப்பட்ட போதிலும் *Liber Sancti Jacobi (Codex Calixtinus)* என்னும் வரலாற்று நூலில், புனித யாகப்பர் ஆலய கடைசிச் கல் 1122 இல் வைக்கப்பட்டதாகக்


கொம்பஸ்தெலா ஆலயம் (ஸ்பானியா)

குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 1128 இல் *Alfonso IX of Leon* என்னும் மன்னன் முன்னிலையிலே ஆலயம் அபிஷேகப்படுத்தப்பட்டது.

மேற் கூறப்பட்ட வரலாற்று நூலில் பல கலையம்சங்களை உள்ளடக்கிய புனித யாகப்பர் ஆலயத்தின் வரைபடம், கட்டடக் கலைஞர் *Bernard the elder* என்பவரால் வரையப்பட்டதாகும். அவரின் உதவியாளராக *Robertus Galperinus* இருந்ததாகவும் கூறப்படுகிறது. கோயிலின் கூடுதலான வேலைகளை *Bernard the younger* முடித்துக் கொடுத்ததாகவும், *Galperinus* ஒன்று சேர்ந்து உருவாக்கியதாகவும், அவர் அத்துடன் 1122 இல் கோயிலின் வடக்குத் திசையாகவுள்ள உட்பிரவேசப் பகுதியில் ஒரு சிறு நீர்த்தடாகத்தை ஞாபகார்த்தமாக உருவாக்கியதாகவும் அந்நூல் சான்று பகர்கின்றது.

1075 இல் இருந்தே சிற்றாசனக் கோயிலாக விளங்கிய இவ்வாலயம், 1495 இல் இருந்த திருத்தந்தை *Urban II* அவர்களால் மேற்றிராசனமாக்கப்பட்டது. மேலும் 1495 இல் ஆலயத்துடன் கூடிய ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, விஸ்தீரமாக்கப்பட்டு ஒரு யாத்திரை ஸ்தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ்வாலயம் 97 மீற்றர் நீளமும் 22 மீற்றர் உயரமும் உடைய ஒரு பழைய பாரம்பரிய தேவாலயம். இவ்வாலயத்தின் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பம்சம் அங்கு அமைக்கப்பட்டுள்ள தூபமாகும். ஆலயத்தின் தூபிமாடத்தில் *(dome)* கப்பி மூலம் பொருத்தப்பட்டுள்ள பெரிய *thurible* (தூபம்). இதைப் பார்வையிடுவதற்காகவே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் யாத்திரர்கள், சுற்றுலாப் பயணிகள் அங்கு குழுமும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்தூபம் பொற்கொல்லன் *Jose Losada* வினால் 1851ல் அமைக்கப்பட்டது. 80 கிலோ நிறையும் 1,60 மீ. உயரமும் கொண்ட இத் தூபமே உலகிலுள்ள மிகப் பெரிய தூபமாகும். வழக்கமாக இத்தூபம் ஆலயத்தை சேர்ந்த ஒரு பொது நூலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். முக்கிய ஆலய நாட்களிலும், திருநாட்களிலும், புனித யாகப்பர் திருநாள் ஞாயிற்றுக் கிழமையில் வந்தால் அன்று யாத்திரர்கள் கலந்துகொள்ளும் எல்லாத் திருப்பலிகளிலும், இத்தூபத்தில் 40 கிலோ மரக்கறியும், சாம்பிராணியும் நிரப்பப பட்டு இத்தூபம் காட்டப்படும்.

சிவப்பு அங்கி அணிந்த எட்டு தூபப் பணியாளர்கள் கப்பியில் பொருத்தப்பட்ட இத் தூபத்தை, கயிற்றின் மூலம் இழுத்து பீடத்தின் முன் ஊஞ்சல் போன்று ஆடும் நிலைக்கு கொண்டுவருவார்கள். அவர்களால் அத்தூபம் 60 கி.மீ/மணி வேகத்தில் காட்டப்படும். தூபத்திலிருந்து தடித்த வெண்புகையுடன் சாம்பிராணி மணம் ஆலயத்தை நிறைக்கும். இத் தூபம் காட்டும் பாரம்பரிய வழக்கம் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து பல நாட்களாக கால்நடைப் பயணமாக நடர்து வந்து, தம் யாகப்பர் ஆலயத்தில் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் தூய்மையின்மையால் அவர்களின் உடலிருந்து கிளம்பும் துர்நாற்றத்தை மறைப்பதற்கான காரணமாகவே நடைபெறுவதாக ஒரு கதை வழக்கிலுள்ளது. ■




கொம்பஸ்தெலா புனித யாகப்பர் ஆலயம் அமைந்துள்ள கலீசியா நகரத்தின் தோற்றம் - ஸ்பானியா



# புனித யாகப்பர் ஆலயப் பங்கில் பூத்த ஆன்மீக மலர்கள்

## திருநிலைப்படுத்தப்பட்ட அருள்பணியாளர்கள்

கத்தோலிக்க மதம் இங்கு தோற்றம் கண்டது முதல் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வெள்ளை இனத்தவர்களே அருள் சகோதரர்களாகவும், அருள் சகோதரிகளாகவும இறைபணியாற்றியுள்ளார்கள். இவர்களது பணியை சுதேசிகள் ஆற்றவேண்டுமென்ற கொள்கை வலுப்பெறத் தொடங்கியபோது ஆர்வமுள்ள பலர் குருமடத்தில் இணைந்து கல்விகற்று குருக்களாகினார்கள். அந்தவகையில் குருநகர் சந்தியோகுமையோர் ஆலயம் தனிப் பங்காக இயங்கத் தொடங்கியதன் பின்னர் குருத்துவத்தின் வழியாக இயேசுவின் பணியைச் செய்ய பலர் திருநிலைப் படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் முதல் இருவரின் திருநிலைப்படுத்தல் நிகழ்வு அதி வந். ஜே. ஏ. கியோமர் ஆண்டகையால் சந்தியோகுமை யோர் ஆலயத்தில் நிகழ்த்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பங்கில் திருநிலைப்படுத்தப்பட்ட அருள் சகோதரர்களும், திருநிலைப்படுத்தப்பட்ட திகதிகளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| *அருள்பணி அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம (O.M.I.)* | *27.12.1932* |
| *அருள் கலாநிதி ஏபிரகாம் யோக்கிம் அன்ரனைனஸ் (O.M.I.)* | *27.12.1932* |
| *அருள்பணி லூயி யோசேப் (O.M.I.)* | *06.08.1941* |
| *அருள்பணி பி. ஜேக்கப் ஸ்ரனிஸ்லோஸ் M.A. (O.M.I.)* | *15.01.1945* |
| *அருள்பணி அ. கில்லேறியன் வேதநாயகம் (O.M.I.)* | *10.08.1957* |
| *அருள் கலாநிதி யோசேப் எமில் ஜெயசீலன்* | *21.12.1963* |
| *அருள்பணி அல்பன் இராஜசிங்கம் (O.M.I.)* | *24.07.1974* |
| *அருள்பணி நீக்கிலாஸ் பயஸ் இருதயதாஸ்* | *10.04.1975* |
| *அருள்பணி மரியநாயகம் அமிர்தகுமார்* | *28.07.1983* |
| *அருள்பணி சேவியர் பேனாட் றெக்னோ* | *04.08.1984* |
| *அருள்பணி எஸ். இயூஜின் பிரான்சீஸ்* | *19.06.1989* |
| *அருள்பணி மரியாம்பிள்ளை யேசுரெட்டினம்* | *30.07.1991* |
| *அருள்பணி கிறகரி கில்லறி* | *28.06.1992* |
| *அருள்பணி சேவியர் வின்ஸ்ரன் ஜேம்ஸ்* | *21.06.1997* |
| *அருள்பணி ஸ்ரனி அன்ரனி* | *18.08.1984* |
| *அருள்பணி தார்சீசியஸ் நிரூபன் நிஷானந்* | *23.04.2005* |

| | |
|---|---|
| அருள்பணி கியோமார் பீலிக்ஸ் கனிசியஸ் றாஜ் | 28.06.2007 |
| அருள்பணி யேசுதாசன் றொபட் (செ. தா.) | 30.12.2010 |

## அர்ப்பணிப்பு செய்த அருள் சகோதரிகள்

கடவுளுக்கும், திருச்சபைக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொள்பவர்கள் அருள் சகோதரிகள். இவர்கள் தாம் சார்ந்த சபையினூடாக அருள்பணியுடன் கல்வி கற்பித்தல், மருத்துவ சேவை, சமூகப் பணிகளையும் செய்து வருகிறார்கள். அந்தவகையில் குருநகர் சந்தியோகுமையோர் ஆலயம் தனிப் பங்காக இயங்கத் தொடங்கியதன் பின்னர் நித்தியவாக்குக் கொடுத்த அருள் சகோதரிகளும், அர்ப்பணித்த திகதிகளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| அருள் சகோதரி மேரி லொயோலா கபிரியேல்பிள்ளை (தி.கு) | 18.12.1935 |
| அருள் சகோதரி சென்யோன்ஸ் நீக்கிலாஸ் (தி.கு) | 18.12.1935 |
| அருள் சகோதரி விக்ரோறியா மருசலீன் (தி.கு) | 18.12.1954 |
| அருள் சகோதரி மேரி பிறிஸ்கா சவிரிமுத்து (தி.கு) | 18.11.1955 |
| அருள் சகோதரி ஹெட்விச் அமிர்தநாதர் கில்லேறியன் (தி.கு) | 10.08.1957 |
| அருள் சகோதரி மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை (தி.கு) | 18.12.1963 |
| அருள் சகோதரி மேரி சேவியர் (தி.சி) | 31.01.1975 |
| அருள் சகோதரி மேரி இலேன் பாக்கியநாதர் (அ.கா) | 26.01.1981 |
| அருள் சகோதரி ஜெயா நீக்கிலாஸ் பயஸ் (தி.கு) | 13.09.1984 |
| அருள் சகோதரி கெனற் சேவியர் (தி.சி) | 02.02.1985 |
| அருள் சகோதரி மேரி மக்டலின் ஜோசவ் (தி.கு) | 19.11.1997 |
| அருள் சகோதரி யூடிற்றா யூலியஸ் (தி.சி) | 17.08.2010 |

குறித்த பங்கிலிருந்து இறைபணியாளர்களாக திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள் அப்பங்கில் பணியாற்றும் நடைமுறை இல்லையென்பதால் அவர்கள் தாம் பிறந்து வளர்ந்த பங்கிற்கு, பங்கின் மக்களுக்கு தமது நிறைவான சேவைகளைச் செய்யமுடிவதில்லை. இருப்பினும் சிலர் வேறு பங்குகளில் கடமையாற்றியபோதும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தம்மாலியன்ற ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளார்கள். இந்த வரிசையில் குருநகர் மக்களுடன் நேரடியாகவோ அன்றேல் பின்புலமாகவோ இணைந்து பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்த குருக்கள் சிலரும் உள்ளனர். அவர்கள் பின்வருமாறு:

### அருள்கலாநிதி A.J.B. அன்ரனைனஸ் *(O.M.I.)*

யாழ். மேற்றிராசனத்திலிருந்து முதன்முதலாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட குருத்துவ மாணவனான இவர், இலங்கைப் பிரதமர் திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சியின்போது மீன்பிடி ஆலோசகர் சபையில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். ஐரோப்பிய, அமெரிக்க பல்கலைக்கழகங்களில் சமூகவியல் சம்பந்தமாக விரிவுரைகளை நிகழ்த்தச் சென்று பிறந்த மண்ணுக்குப் பெருமையைச் சேர்த்துள்ளார்.

தமது பதவி மற்றும் அறிமுகத்தைப் பயன்படுத்தி தான் பிறந்த மண்ணின் முன்னேற்றத்துக்காக தூரப் பார்வையுடன் பல திட்டங்களை வகுத்தார். அவற்றில் ஒன்றாக 'குருநகர் வீடமைப்புத் திட்ட' முன்மொழிவு விளங்குகிறது. 'நெய்தல் மாநில அபிவிருத்திச் சங்கம்' என்ற பெயரில் அர்ப்பணிப்பு மிகுந்த அமைப்பு ஒன்றை உருவாககி அதன்மூலம் 'குருநகர் பாலர் பகல் விடுதி'யை கட்டிமுடித்தார். இவ்விடுதி 14.09.1958 இல் மாநகரசபை முதல்வர் திரு. அ. த. துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. மேலும், மாதர் அபிவிருத்தி நிலையம், வத்தைச் சங்கம் போன்றவை அடிகளாரின் சிந்தனையில் பிறந்தவைகளே.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளராவார். இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நான்கு புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

### அருள்பணி லூயி யோசேப் *(O.M.I.)*

இவர் 1942 இல் மேற்றிராசனக் கோவிலில் உதவிக் குருவாக பணியாற்றியபோது, குருநகர் கார்மேல் ஆலயத்தில் உறங்குநிலையிலிருந்த உத்தரியமாதா கூட்டத்தை 'கார்மேல்மாதா சபை'

யாக மாற்றி அதனைப் புனரமைப்புச் செய்து அதனூடாக கார்மேல் மண்டபத்தில் இரவுப பாடசாலையை உருவாக்கி குருநகர் மக்களின் கல்வி வளர பெரிதும் பாடுபட்டார். குருநகரின் கல்விமான்கள் பலருக்கு இவரால் ஏற்படுத்தப்பட்ட இரவுப் பாடசாலையே கைகொடுத்து ஊக்குவித்தது எனலாம்.

### அருள்பணி பி. ஜேக்கப் ஸ்ரனிஸ்லோஸ் (ஸ்ரனி) *(O.M.I.)*

குருநகரின் பொருளாதாரத்தை பலர் வியக்கும் வகையில மாற்றிய பெருமை ஸ்ரனி அடிகளாரையே சாரும். எந்தவொரு ஆலயத்திலும் குருவாக பணியாற்றாமல் ஆசிரியராகவும் பல கல்லூரிகளில் அதிபராகவும கடமையாற்றியுள்ளார் வெளிநாடுகளில் பட்டப் படிப்புகளை மேற்கொண்ட இவர் கலவித் துறையிலிருந்து விலகி 973 ஆம ஆண்டு முதல் குருநகரின் முன்னேற்றத்திற்காக முன்னின்றுழைக்கத் தொடங்கினார்.

இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படும் இழுவை வலைத் (Trawler Net) தொழிலைத் துணிந்து குருநகரில் (இலங்கையிலும்) முதன் முதல் அறிமுகப்படுத்தினார் இந்த இழுவை வலையால் ஆண்டு முழுவதும் இறால் பெறக கூடியதாகவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த தால் அரசுக்கு அந்நிய செலவாணி கிடைக்கக் கூடியதாகவும் இருந்தது. இறால் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் குருநகரில் கொள்வனவு நிலையங் களை ஏற்படுத்தவேண்டிய அவசியத்துககு உள்ளா னதால் குருநகர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளும், தொழில்களும் அதிகரித்தன.

மூன்றரைத் தொன் இயந்திர மீன்பிடிப் படகுக்கான இயந்திரங்களுக்கு அரசு மானியம் வழங்க மறுத்தபோது, குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தினூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தனது சொல்வாக்கு மற்றும் அறிமுக செல்வாக்குகளால் போராடி ஐம்பது வீதமான மானியத்தைப் பெற்று குருநகரில் தொழில் வளம் பெருகச் செய்தார். இவற்றால் குருநகர் செல்வம் கொழிக்கும் நகராக மாற்றம் பெற்றது.


குருநகருக்கென ஒரு மைதானத்தைப் பெற்றெடுப்பதில் அவர் ஆற்றிய பங்கையும், கைமாறிப்போகவிருந்த குருநகர் தொடர்மாடி வீடுகளைக் காப்பாற்றியதில் அவர் எடுத்துக் கொண்ட ஆக்கபூர்வமான முயற்சிகளையும் எவரும் மறக்கமுடியாது. இவரால் ஆங்கிலத்தில் எழுதப் பட்ட புத்தகம் ஒன்று வெளிந்துள்ளது.

### அருள் கலாநிதி யோசேப் எமில் ஜெயசீலன்

'உலகில் நிலைதத்திருக்கும் துனப துயரங களுக்கெல்லாம் சிலுவை ஒளியில் தீர்வுகாண முடியும்' என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட இவர், தனக்கென ஒரு ஆச்சிரமத்தை (வளனார் ஆச்சிரமம்) அமைத்து அதிலிருந்து இறைபணி யாற்றுகின்றார். மக்கள் திரளாக அவரைச் சந்தித்து இறையாசி மற்றும், ஆசீர் பெற்றுச் செல்கிறார்கள் குருநகர் மக்கள் பக்தியிலும், ஒழுக்கத்திலும், உடல் நலத்துடனும் வாழவேண்டுமென்பது இவரது பேரவா அதற்கான போதனைகளையும், சந்திப்பு களையும் மேற்கொண்டு தன்னாலான ஆன்மீகத் தொண்டாற்றி வருகின்றார் இவரால் வெளியிடப படும் 'தேவதாயின் குரல்' என்னும் மாதாந்த பிரசுரம் பலராலும் விரும்பிப் படிக்கப் படுகின்றது.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளராவார். இவ ரால் எழுதப்பட்ட கத்தோலிக்க மதம் சார்ந்த பத்து புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அத்துடன் யாழ். பல்கலைக்கழகம் மற்றும் பெரிய குருமடத்தில் விரிவுரையாளராகப பணியாற்றுகிறார். ■

## புதுமைமாதா ஆலயம்




பல புராதன சிறப்புக்களைக் கொண்டதும், 28.08.1887 இல் கட்டிமுடிக்கப்பட்டதும், புனித யாகப்பர் பங்குடன் இணைந்துள்ளதுமான குருநகர் புதுமைமாதா ஆலயம், அழகிய இரண்டு தூபிமாடங்களுடனான மணிக் கோபுரங் களை உள்ளடக்கியதாக ஆரம்பத்தில் அமைந்தி ருந்தது. 1964 இல் ஆலயத்தின் கிழக்குப்பக்க மணிக்கோபுரம் நொருங்கி வீழ்ந்த பின்னர். மேற்குப் பக்க மணிக்கோபுரமும அகற்றப்பட்டு புதிய வடிவமைப்பில் இரண்டு மணிக்கோபுரங் களும், முன் மண்டபமும் அமைக்கப்பட்டன. அதன் பின்னரான முகப்பின் தோற்றம்.



அருள் பணி
அ. ஞானப்பிரகாசம்



அருள் கலாநிதி
ஏ.யோ. அன்ரனைனஸ்



அருள் பணி
லூயி யோசேப்



அருள் கலாநிதி
பி. ஜே. ஸ்ரனிஸ்லோஸ்



அருள் பணி
அ. கி. வேதநாயகம்




அருள் கலாநிதி
யோ. எ. ஜெயசீலன்



அருள் பணி
அல்பன் இராஜசிங்கம்



அருள் பணி
நீ. ப. இருதயதாஸ்




அருள் பணி
ம. அமிர்தகுமார்

புனித யாகப்பர் ஆலயப் பங்கில் உதித்த அருள்பணியாளர்கள்



அருள் பணி
சே. பேணாட் றெக்னோ



அருள் பணி
எஸ். இயூஜின் பிரான்சீஸ்



அருள் பணி
ம. யேசுரெட்டினம்



அருள் பணி
கிறகரி கில்லறி



அருள் பணி
சே. வின்ஸ்ரன் ஜேம்ஸ்



அருள் பணி
ஸ்ரனி அன்ரனி



அருள் பணி
அ. நிரூபன் நிஷானந்



அருள் பணி
கி. பீ. கனிசியஸ் றாஜ்



அருள் பணி
யேசுதாசன் றொபேட்

புனித யாகப்பர் ஆலயப் பங்கில் உதித்த அருள்பணியாளர்கள்



அருட்சகோதரி
மேரி லொயலா கபிரியேல்.



அருட்சகோதரி
சென் யோண்ஸ் நீக்கிலாஸ்



அருட்சகோதரி
விக்ரோறியா மருசலீன்



அருட்சகோதரி
ச. மேரி பிறிஸ்கா



அருட்சகோதரி
மேரி சேவியர்



அருட்சகோதரி
ஜெயா நீக்கிலாஸ் பயஸ்



அருட்சகோதரி
ஜெனற் சேவியர்



அருட்சகோதரி
மேரி மக்டலின் ஜோசவ்



அருட்சகோதரி
யூடிற்றா யூலியஸ்

புனித யாகப்பர் ஆலயப் பங்கில் உதித்த அருட்சகோதரிகள் (சிலர்)



# பணிக்காலத்தில் குருநகர் புனித யாகப்பர் ஆலயம்

அருள்பணி ம. இம்மானுவேல் பயஸ்
முன்னாள் பங்குத்தந்தை

குருநகர் பங்குத் தந்தைக்கு இரு பிரபல்யமான ஆலயங்கள் இருந்தன. பேதுரு சிற்றாலயம் இருந்தது. கடற்கரையில் வாழும் மக்கள் வேளாங்கன்னி மாதா நினைவாலயம் ஒன்றும் உருவாக்கினர். பங்கு மக்களின் ஆலயங்களாக புனித யாகப்பர் ஆலயமும், புதுமைமாதா ஆலயங்களும் உள்ளன.

இரு பாடசாலைகள் இயங்கின அவை அரசுடமையாக்கப்பட்டன. புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் பாலர் பாடசாலை இயங்கியது. சந்தியோகுமையோர் என்று அழைக்கப்பட்ட ஆலயத்தின் முகப்புப்புறம் பிரதான வீதியை நோக்கியுள்ளது. அதன் முன் கோபுரங்கள் கட்டி முடிக்கப்படவில்லை. முன்கோபுரங்கள் இரண்டையும் முழுமையாக உயர்த்தி மணியையும் மூன்றாம் மாடி வரையும் ஏற்றி ஆலய முன் மண்டபத்திற்கு அடிக்கல்லும் நாட்டுவதற்குப் பங்கு மக்கள் தாராள மனதுடன் கைகொடுத்து உதவினர்.

1974 ஆம் ஆண்டு ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் உத்தரவுடன் சிறப்பு நற்கருணைப் பணியாளர்களாக அருட் சகோதரிகளும், பொதுநிலையினரான மறையாசிரியர்களும் பணியாற்றியது இப் பங்கிலேயே தொடங்கியது.

'பாஸ்' என்று அழைக்கப்பட்ட இயேசுவின் பாடுகள் சுரூபங்களின் (உடக்கு, பொம்மைகள்)காட்சிகளோடு இங்கு சிறப்பாக இடம் பெறுவது நிறுத்தப்பட்டபின் இயேசு மரணிக்கும் காட்சியும், மரியாயின் மடியில் வைக்கப்படும் காட்சிகளும் தொடர்ந்து நிகழ்வது குறிபிடத்தக்கது. இதற்கென்று கல்லறை சொரூபம் பாதுகாக்கப்படுகின்றது. சில வருடங்களில் மக்கள் மத்தியில் சிலுவைப் பாதையின் பொழுது, சிலுவை தாங்கும் இயேசுவின் காட்சியும் இடம் பெறும். தவக்காலத்தில் கடலில் மின் ஒளி சிலுவைப்பாதைக் காட்சிகளை கரையிலிருந்து மக்கள் தியானித்தனர்.

31.05.1974ம் ஆண்டு மருதமடு அன்னையின் திருச் சொரூபம் புனித யாகப்பர் ஆலயத்திற்கு வரவேற்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்களால் இரவு, பகலாக வணக்கம் செலுத்தப்பட்டது. 24.07.1974 இல் அருள்தந்தை இராசசிங்கம் ஆல்பன் (அ.ம.தி) அடிகளார் குருவாக சிறப்பான வரவேற்பு பெற்றார். 10.04.1975 இல் மறைமாவட்ட அருள்தந்தை பயஸ் இருதயதாஸ் அடிகளார் குருவாகியதும் உயர்வான வரவேற்பு பெற்றார். இப்பொழுது குருக்களாகியுள்ள ம.யேசுரத்தினம், எஸ். இயூஜின் பிரான்சிஸ் ஆகியோர் குருமடம் சென்று தேவ அழைத்தலுக்குச் செவிகொடுத்தனர்.

இயேசுவின் திரு இருதய சொரூபமும், வேதாகமும், வீடு வீடாக எடுத்து சென்று திரு இருதய சபையினர் பக்தியை ஊட்டினர். மக்கள் வீடுகளை அலங்கரித்து, செபித்து விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். ஞாயிற்றுக்கிழமை மாலையில பங்குத்தந்தையும் தொடர்புகொண்டு வீடுகளை ஆசீர்வதிப்பார்.

'தங்கம் செய்யமுடியாததைச் சங்கம் செய்யும்' என்ற முதுமொழிககிணங்க, சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அறகொட்டியான் குழு, றோலர் மீன்பிடிக் குழு, பீடிகொம்பனி போன் றவை சிறப்பாக இயங்கிய சமூக சேவைக் குழுக்களாகும்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நினைவு தினம் கொண்டாடுவதற்கு உதவி செய்வதற்காக செனகப்பு நாட்டுக்கூத்து ஆலய முன்றலில், யா/கன்னியர் மடத்தில், இளவாலை கென்றி அரசர் கல்லூரியிலும் மேடையேற்றப் பட்டு குருநகர் மாணவிகள் புகழப்பட்டார்கள்.

மரியாயின் சேனை. வின்சன் டி போல் சபை, பாடகர் குழாம், பீடப் பரிசாரகா கூட்டம், பங்குச்சபை போன்றவை திறமபட இயங்கி திருச்சபைக்குச் சாட்சிகளாயினர். சந்தியோகுமை யோரின் உதவியை பங்கு மக்கள் என்றுமே நம்பியிருந்தனர். அம்மை என்னும் பயங்கர வியாதியினால் பீடிக்கப்பட்டு குழந்தைகள் பலர் இறந்தனர். மரணங்கள் நின்றபாடில்லை. படை யாளி இரவில் நடமாடும் குதிரைக் காலடிகளின் சத்தம் கேட்கிறது என்றனர சிலர். திருச் சொரூபப் பவனி நிகழவேண்டுமென வேறு சிலர் கேட்டுக் கொண்டனர். பங்குச்சபையைக் கூடடி மூன்று ஒழுங்குகளுக்கு அமைய பவனிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. பட்டாசு வெடிக்கப்படாது. மக்களே திருசொரூபத்தை சுமந்து செல்ல வேண்டும். பவனியின் பொழுது செபமாலை அல்லது கீதங்கள் பாடப்பட்டு தபமுயற்சிபோல இருக்க வேண்டும் என்பன.

இந் நிகழ்வின் முன் 50 குழந்தைகள் இறந்திருந்தாலும் ஊர்வலத்தின் பின் வேறு மரணங்கள் இவ் வியாதியால் இடம் பெறவில்லை. இது சந்தியோகுமையோரின் மேல் மக்கள் காண்பித்த விசுவாசத்தின் காரணமான புதுமையில்லை என்றால் அற்புதம் எதுவாகயி ருக்கலாம் என்று யார் கூறுவர்? எமக்காக பிறர் செபிப்பதினால் எமக்கு பயன் உண்டு. பிறருக்காக நாம் செபிப்பதனால் அவர்கள் பயன் பெறுவர். புனித பவுல் செபித்தார். (எபே 3:14-19, கொலோ 1:9-11)

தங்கத்திலும மேலானது விசுவாசம். 'பொன்னை விட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கை' என்று இங்கு கூறுகின்றார் (1பேதுரு 1:7). 'மன்றாடுகின்றேன்'. 'நான் உமக்குச் செய் யக்கூடியது செபமே' என்று பல முறை பலருக்குச் கூறியிருக்கலாம். பிறருக்காகச் செபிப்பது அன் பின் அறிகுறி (கொலோ 4:12-13). நாமும் புனித ரிடம் எமக்காகவும பிறருக்காகவும் அன்புடன் செபிப்போம். கேட்பது நிறைவுறும்.

எல்லோரும் வளமுடன் வாழ்க! ■

## குருநகர் மேஸ்திரிகள்

புனித பத்திரிசியார் கல்லூரியில் கணித வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் டி. லோறன்ஸ் படிப்பித்துக்கொண்டிருக்கிறார். அவர் வகுப்பில் கேட்ட கேள்வி; "சந்தியோகுமையோர் கோயில் டோமை யார் அமைத்தார்? அக் கோயிலின் முகப்பும், அடைககலமாதா கோயிலையும் யார் அமைத்தார்கள்?"

எல்லாமே குருநகரைச் சேர்ந்த மேஸ்திரிகளே இவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் படித்தார்கள்? நீங்களென்றால் யூனிவசிற்றியில் படித்து பட்டம் பெற வேண்டும். இவர்களின் கட்டடத் திறமையை மேல் நாட்டவர்களே புகழ்ந்தார்கள் சந்தியோகுமையோர் ஆலய முகப்பு சேதமுற்றதால் புதிய முகப்புக்கான படம் கீறப்பட்ட பொழுது அதை இரண்டு மேல்நாட்டவர்களும், மேஸ்திரி கபிரியேல்பிள்ளையும் வரைந்து கொடுத்தார்கள். ஆனால் கபிரியேல் பிள்ளையினுடையதைத்தான் தெரிவு செய்யப்பட்டது. அத்தகைய பெருமைக்குரிய கட்டட வரைபடம் அது.

முகப்புடன் இணைந்துள்ள மணிக்கோபுரங்கள் மூன்று அடுக்குகளை கொண்டது. அதன் இரண்டாம் அடுக்கு தொடங்கும் நேரத்தில் மேஸ்திரி கபிரியேல் பிள்ளை காலமானார். நீண்ட காலத்தின்பின்னர் மேஸ்திரி லியோ அவர்கள் மூன்றாவது அடுக்கில் சிறு மாற்றத்தைச் செய்து அதனைக் கட்டிமுடித்தார்.

ப.பொனவந்தூர்




ஆன்மீகத்தை வளர்ப்பதில் பக்திச் சபைகளின் பங்கு கணிசமானது. அந்தவகையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் தனிப் பங்காக இயங்கத் தொடங்கியதன் பின்னர் அவ்வாலயத்தில் ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும், ஆலயப் பணிகளை முன்னெடுப்பதற்குமென பல பக்திச் சபைகள் உருவாக்கப்பட்டன. அவை தமது பணிகளைச் செவ்வனே செய்துவருகின்றன.

இன்றுவரை சிறப்புடன் விளங்கும் பக்திச் சபைகளின் விபரங்களையும் அவற்றின் பணிகளையும் அந்தந்தச் சபையினர் மூலமாக வெளிக்கொண்டுவருதல் சிறப்பாக இருக்குமென்பதால் அவர்களது அறிக்கைகள் அப்படியே தரப்பட்டுள்ளன.

**திரு இருதயசபை - 13.03.1904**

குருநகர்ப் பங்கில் இயேசுவின் திருஇருதய பக்தியை வளர்க்கவும், இளைஞர்களை சமூக ஆண்மீகப் பண்யில் ஊக்குவிக்கவும், கட்டளைக் குரவராக இருந்த அருள்பணி யோண் அலோசியஸ் அடிகளாரால் 13.03.1904 இல் திருஇருதய சபை ஆரம்பிக்கப்பட்டது. பழமை வாய்ந்த பக்திச் சபையாக இது கருதப்படுகிறது. இச்சபையினர் 1995 இல் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவையும், 2005 இல் 100 ஆண்டு நிறைவு விழாவையும் கொண்டாடினர். இரண்டு விழாக்களிலும் நிறைவு மலர்கள் வெளியிட்டு தமது சேவைகளை வெளிக்கொண்டு வந்திருந்தனர்.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

*ஈழத்திருநாட்டின் வடபகுதியிலே தமிழர்கள் செறிந்து வாழும் யாழ் நகரின் மத்தியிலே மேற்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது குருநகர் கிராமம். இங்கு தூபி வடிவத்திலே பிரமாண்டமான தோற்றத்தோடும், பொலிவோடும் அமைக்கப்பட்டிருக்கும் மாபெரும் ஆலயமே குருநகர் புனித யாகப்பர் ஆலயமாகும். இதை சந்தியோகுமையோர் ஆலயம் எனவும் அழைப்பர். இவ்வாலயம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய அஞ்சாநெஞ்சம்கொண்ட துணிவும், தைரியமும் மிக்க வீர பரம்பரையைச் சேர்ந்த குருகுல மக்களின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்டது. கடவுள் நம்பிக்கையும், இறை வழிபாடும் கொண்ட குருகுல மக்கள் தம் வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு திரைகடலோடியும் தமது முயற்சி யினால் பெருஞ் செல்வத்தைத் தேடினர். தமது தொழில் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இறைவனை வழிபடுவதும், மனைவி, மக்களோடு மகிழ்ச்சியாக இருப்பதும், பாரம்பரிய கலைகளாகிய ஆடல், பாடல், கூத்து, விளையாட்டுக்கள் போன்றவற்றில் நேரத்தை செலவிட்டும் வாழ்ந்து வந்தனர்.*

*கிறிஸ்துவின் போதனைகள், புதுமைகள், மனித மீட்புக்காக இறைவனின் பாடுகள், உயிர்ப்பு ஆகியவற்றால் உந்தப்பட்ட குருகுல கிறிஸ்தவர்கள் ஆலயத்தை பராமரிப்பதோடு திரு*

இருதய பக்தியை வளர்க்க அருட்தந்தை யோன் அலோசியஸ் அடிகளாரின் பெரும் முயற்சியாலும் குருநகர் பெருமக்களின் துணையோடும் திரு இருதய சபையை ஆரம்பித்துச் செயற்பட்டனர். இச்சபையில் குருநகர் பங்கைச் சேர்ந்த குடும்பங்களின் தலைவர்கள் அங்கத்தவர்களாயினர். நிர்வாகத்தை நடத்துபவர்கள் செயல் அங்கத்தவராகவும் ஏனையோர் மகிமை அங்கத்தவர்களாகவும் கணிக்கப்பட்டனர். காலப்போக்கில் குடியேற்ற திட்டங்களாலும், இடப்பெயர்வுகளாலும் மகிமை அங்கத்தவர்கள் செயலற்றவர்களாயினர். அன்று தொடக்கம் இன்று வரை 106 ஆண்டுகளாக பின்வரும் பணிகளை தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது;

- குருநகரில் உள்ள வீடுகளில் திரு இருதய ஸ்தாபகம் செய்தல் வருடா வருடம் அதைப் புதுப்பித்தல்,
- ஆலய வழிபாடுகளிலும் விசேடமாக திருமணித்தியால இரவு/ பகல் ஆராதனைகளிலும் தவறாது கலந்து கொள்ளுதல்,
- ஆலயத்தை துப்புரவு செய்தல், அலங்கரித்தல், கிறிஸ்து பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு நிகழ்வுகளிலும், ஆலயத் திருவிழாக்களிலும் ஏற்ற ஒழுங்குகளையும், பவனிகளுக்கான தேர் ஒழுங்குகளையும் செய்தல் போன்றவை இவர்களது பணியாகும்.

எதிர்காலத்தில் இக் கடமைகளைத் தொடர்ந்து செய்ய இளைஞர்கள் இச்சபையில் இணைந்து செயலாற்ற வேண்டுகின்றோம்.

குருநகர் புனித யாகப்பர் ஆலய 150வது ஆண்டு ஜுபிலி விழா சிறப்பாக நடைபெற திரு இருதய சபையினரின் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

**திருப்பாலத்துவ சபை - 21.01.1912**

குருநகர்ப் பங்கு தனிப்பங்காக இயங்கத் தொடங்கியது முதல் ஆலயப் பரிசாரகராகப் பணிபுரிவதற்கென்ற பிரத்தியேக சபை எதுவும் இருக்கவில்லை. ஆயினும், கல்வியில் ஆர்வமிக்க சில இளைஞர்கள், உதவிப் பங்குத் தந்தை அருள்பணி கை. செபஸ்ரியன் அடிகளாரின் துணையுடன் 01.06.1910 இல் இரவுப் பாடசாலையை ஆரம்பித்தனர். ஆலயத்தில் பிரத்தியேக பீடப் பரிசாரகர் இல்லாத குறை உணரப்பட்டபோது, திரு. *A.R.M.* இராசசிங்கம் அவர்கள் இரவுப் பாடசாலையில் பங்குபற்றி வந்தவர்களில் 12 பேரைத் தெரிவுசெய்து அவர்களைப் பீடப் பரிசாரகர்களாகப் (பீடப்பணியாளர்) பயிற்றுவித்து, அருள்பணி கை. செபஸ்ரியன் அடிகளாரின் உதவியுடன் பீடப் பரிசாரகருக்கான திருப்பாலத்துவ சபையை 21.01.1912 இல் ஆரம்பித்து வைத்தார்.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

21.01.1912 இல் முதலாவது திருநாளை கொண்டாடிய எமது திருப்பாலத்துவ சபையானது அன்றிலிருந்து இன்றுவரை தைமாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் தனது திருவிழாவை கொண்டாடி வருகின்றது. திருப்பாலத்துவ சபையின் பிரதான நோக்கமானது விசுவாசத்தை ஆழப்படுத்துதல், ஆழப்படுத்திய விசுவாசத்தில் வாழுதல், வாழும் விசுவாசத்தை பகிர்ந்து கொள்ளுதல் ஆகும். அதனடிப்படையிலேயே எமது பங்கிலும் சிறுவர்கள் மத்தியிலே விசுவாசத்தை ஆழப்படுத்தி, அவ் விசுவாசததை வாழ்வாக்கி அதனை எம் அயலவருடன் பகிர்ந்து வாழ்ந்து சமுதாயத்தில் ஓர் நற்கிறீஸ்தவனாக வாழ வழிவகுக்கின்றது. இச் சபையானது சிறுவர்கள் மத்தியில் தேவ நற்கருணை, ஒப்புரவு, உறுதிபூசுதல் போன்ற அருட்சாதன வாழ்விற்கான அடிப்படை வழிகாட்டல்களை வழங்கி வருவதுடன் சிறுவர்களின் தனிப்பட்ட ஆளுமைகளையும், திறமைகளையும் வெளிக் கொணரும் விதத்தில் திறம்பட செயற்பட்டு வருகின்றது. 2012வது ஆண்டில் இச் சபையினர் தமது 100வது ஆண்டு நிறைவினை கொண்டாட உள்ளனர் என்பதில் பெருமகிழ்வடைகின்றோம.

புனித யாகப்பர் ஆலயத்தின் 150 வது ஆண்டு ஜுபிலியை கொண்டாடும் இந்த வேளையில் நாமும் மகிழ்ந்து எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பீடப்பணியாளர்கள் - 21.01.1912**

திருப்பாலத்துவ சபை பீடப்பணியாளர்களுக்கென உருவாக்கப்பட்டபோதும் இச்பையில் இளம் பெண்களையும் இணைத்துக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டபோது தனித்தனியாக பிரிந்து சிறுவர்களை மட்டும் கொண்ட பீடப்பணியாளராகச் செயற்பட ஆரம்பித்தனர்.

இறையாட்சியின் பல்வேறுபட்ட பணிகளுக்காக இறைவனின் அழைத்தலில் சிறுவர்களுக்குக் கிடைக்கும் உன்னதமான அழைத்தல் பீடப்பணியாளர்களாகப் பணியாற்றுவதேயாகும். பீடப்பணியாளர்கள் திருப்பலியிலும், திருச்சடங்குகளிலும் மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றார்கள். காரணம், புனிதமான திருச்சடங்குகளை நிறைவேற்றும் குருமாருக்கு உதவியாக பீடத்தின் அருகில் இருப்பவர்கள் இவர்களே. திருப்பலி நிறைவேற்றத்தில் குருவானவருடன் இணைந்தே பணியாற்றுகிறார்கள்.

இவர்களின் பணிகள் பற்றிய அறிக்கை பின் வருமாறு:

திருப்பீடத்தில் இறைபணி செய்வதற்கென அழைப்புபெற்றவர்களே பீடப்பணியாளர். விண்ணகத்தில் இறைவனை எவ்வேளையிலும் புகழ்ந்தேற்றுபவர்களை, அவருக்கு பணிவிடை புரிகின்றவர்களை வானதூதர்கள் என அழைக்கின்றோம். அத்தகைய மேன்மையான பணியில் பங்குகொண்டு திருப்பீடத்தில் உயிருள்ள பிரசன்னமாக எழுந்தருளிவரும் இயேசுவிற்கும், அவரை அருட்சாதனங்கள் வழியாக எமக்குத் தரும் அருட்பணியாளர்களிற்கும் தொண்டு செய்யும் இக்குழுக்கள் உயர்ந்த மதிப்பிற்குரியவர்களே.

அத்தகைய அருட்பணியில் தங்களை அர்ப்பணித்து வாழும் இந்த வானதூதர்களிற்கு ஒப்பான கூட்டத்தினர் எமது பங்கில் சிறு விருட்சமாக (2ஆம் வத்திக்கான் திருச்சங்கம் கூட்டத்துக்கு முன்பே) 1910 ஆம் ஆண்டு பங்குத்தந்தையின் ஏற்பாட்டின் பேரில் தொடங்கி வைக்கப்பட்டது. இரவு நேரப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களில் பொறுக்கி எடுக்கப்பட்ட முதல் 12 பேர் 21.01.1912 இல் அங்கீகரிக்கப்பட்டு திருப்பீட பரிசாரகர்கள் எனும் நாமத்தோடு செயற்படத்தொடங்கினர்

வழிபாடுகள் அனைத்தும் இலத்தின் மொழியிலே நிறைவேற்றப்பட்டபோது இவர்களும் தமக்குபுரியாத இலத்தின் செபங்களை பாடமாக்கி ஒப்புவித்து வழிபாடுகளில் அருட்தந்தையர்களிற்கு துணை நின்றனர் இத்தகைய மேலான அழைப்பை பெற்றுக்கொண்டு இவர்கள் தொடர்ந்துவந்த அருட்தந்தையர்களாலும் அருட்சகோதரிகளாலும் நன்கு பட்டைதீட்டப்பட்டு தகுதியுள்ளோர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு இதில் இணைத்துக்கொள்ளப் படுகின்றனர்.

இறை அழைத்தலுக்கான ஆன்மீக வாழ்வு, அர்ப்பண தியாக உள்ளம் போன்றவற்றை எம் சிறார்கள் மத்தியில் வளர்த்து அவர்களை ஆன்மீகத்தில் மட்டுமன்றி கல்வி, ஒழுக்கம், பண்பாடு போன்ற பண்புகளை இவர்களிற்கு, ஞாயிறு தினந்தோறும் உணர்த்தி, உயரவைக்க இவர்களை பொறுப்பேற்று வழிநடத்துகின்றவர்கள் செயற்படுகின்றார்கள்.

1912ல் 12பேருடன் தொடக்கப்பட்ட பீடப்பணியாளர்கள் குழுமம் 32 சிறார்களை இன்று கொண்டிருக்கின்றது. திறமையாக செயற்பட்டு வருகின்றது. தங்களுக்குரிய பாணியில் சிறு குறும்புகள் செய்தாலும் யாருடைய பாராட்டையும் எதிர்பாராது, பங்கினுடைய செயற்பாடுகள் எல்லாவற்றிலும் அவர்களின் கரங்கள் பட்டிருப்பது யாவரும் அறிந்த உண்மை. இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அத்தோடு இவர்களின் தொடர் உருவாக்கத்தில் இந்த பங்கு கரிசணையை காட்டுவது தேவையான ஒரு விடையமாகும்.

வாழ்க! திருப்பீடப்பணியாளர்கள் வளர்க! இவர்களது இறைசேவை.

**சென். வின்சென் டி போல் சபை ஆண்கள் பந்தி - 08.12.1931**

1929 முதல் 1937 வரை உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய அருட்திரு.ஜே.புறோகான் அடிகளாரின் உதவியுடன், திரு.எல்.எஸ். இராசநாயகம் அவர்களினால் தரும சிந்தையை வளர்க்கவும் பிறர் சிநேகத்தை ஊக்கிவிக்கவும் 08.12.1931 இல் ஆரம்பிக்கப் பட்டதே சென் வின்சென் டி போல் சபையாகும்.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

"சின்னஞ் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றை செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்." (மத்தேயு 25;40)

எமது ஆலய நிர்மானத்தின் 150 வது ஆண்டு நினைவு மலருக்கு பணிக்குறிப்பினையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் நாம் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

1931 ஆம் ஆண்டு மாசில்லா மாதாவின் தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இச் சபையானது ஆரம்ப காலத்தில் இச் சபை விவாக இலாப நிதிச் சங்கம், சிக்கன சேமிப்பு சங்கம், ஆகியவற்றை ஆரம்பித்து நடத்தி வந்ததுடன் திருமணித்தியால பக்தியையும் பங்கில் வளர்த்தார்கள். வறுமையில் வாடுபவர்களையும் இனங்கண்டு உதவி செய்தார்கள். ஆரம்ப காலத்தில் மடுத்திருப்பதிக்குச் சென்று திருவிழாக் காலங்களில் மெழுகுதிரி, செபமாலை, செபப் புத்தகம், போன்றவற்றை விற்று அதன் மூலம் பெற்ற வருவாயில் ஏழைகளுக்கு உதவியதுடன் தமக்கென ஓர் அறையைக் கட்டி அங்கே சமூகப் பணிகளை மேற்கொண்டனர். எம் யுவதிகளுக்கு சிறு கைத்தொழில் செய்ய தமது கட்டடதில் ஒரு பகுதியை கொடுத்து உதவி புரிந்தார்கள்.

தற்போது முன்னெடுக்கப்படும் பணிகளாவன:

- விதவைகள், அநாதைகளுக்கு நிதி உதவி வழங்கல்.
- வீடுகளிலும், வைத்திய சாலைகளிலும்

நோயாளரை தரிசித்து பால்மா வழங்கல்.

- வருடாந்தம் பங்கில் முதல் நன்மை பெறும் வறிய மாணவர்களுக்கு உத வுதல்.
- எமது திருவிழாவை முன்னிட்டு வறிய குடும்பங்களுக்கு பணம், அரிசி, பால்மா, பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.
- மகிமை அங்கத்தவரிடமிருந்து அன்ப ளிப்புகள் பெற்று சபைக்கு உதவுதல்.
- தவக்காலத்தில் பிடி அரிசி, உண்டியல் சேகரிப்புகளைச் செய்து வருதல். போன் றவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த பல வருடங்களாக சபையின் வளர்ச்சியில் அதன் செயற்பாடுகளில் தமது ஒத்துழைப்புக்களை வழங்கிய எமது பங்குத் தந்தையர்கள், மூத்த அங்கத்தினர்கள் அனை வரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

**மரியாயின் சேனை - 1935**

நல்மனமுள்ள பெண்கள் விண்ணக அரசியான பரிசுத்த தேவமாதாவை தங்கள் தாயாராக ஏற்றுக்கொண்டு தங்களால் ஆனமட்டும் சகல புண்ணியங்களையும் அனுசரித்து எல்லோருக்கும் நன்மாதிரி காட்டி தங்கள் ஆன்ம ஈடேற்றத்தை அடையப் பிரயாசைப்படுவதுடன்; பாவிகளும், ஏனையவர்களும் மனந்திருந்தப் பிராத்தித்தல் என மரியாளின் பக்தியை வளர்க்கும் நோக்கில் பல சபைகள் குருநகர் பங்கில் உருவாக்கப்பட்டன. அவைகளாவன:

1935 இல் உதவிப் பங்குத் தந்தை அருள்பணி ஜே.புறோகான் அடிகளினால் மாதர்களுக்கென மாசில்லாக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1937 இல் உதவிப் பங்குத் தந்தை அருள்பணி ஜே.புறேகான் அடிகளாரினால் சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகை பிரசீடியம் என்ற பெயரில் மரியாயின் சேனை ஆரம்பித்து வைக்கப்பட்டது ஆரம்பத்தில் இது ஆண்-பெண் இருபாலாரையும் கொண்டியங்கியது. பின்னர் பெண்கள் பிரசீடியமாக மாறியது.

1949 இல் அருள்பணி லெபோன் அடிகளாரால் புனித திரேசாள் சபை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

1960 இல் அருள்பணி எமில் பொமிக்கோ அடிகளாரால் பரலோகத்தின் வாசல் பிரசீடியம் என்னும் பெயரில் இளைஞர் பிரசீடியம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் இப்பிரசீடியம் செயலிழந்து விட்டது. சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகை பிரசீடியத்தில் அங்கத்தவர் தொகை அதிகரித்ததால் அந்த பிரசீடியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டாவது பிரசீடியம் பரலோகத்தின் வாசல் பிரசீடியம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

08.09.1964 இல் அருள்பணி ஏ. சார்வே அடிகளாரினால் தேவ வரப்பிரசாதத்தின் மாதா பிரசீடியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இடையில் தடைப்பட்டு நின்றபோதும் இந்தச் சேனையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களில் ஒன்பது அங்கத்தவர்கள் துறவற வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

தற்போது குருநகர் பங்கில் சக்தியுடைய வளாயிருக்கிற கன்னிகை, பரலோகத்தின் வாசல், தேவவரபிரசாதத்தின் மாதா என்னும் மூன்று பெண்கள் பிரசீடியங்கள் பணி ஆற்றிக்கொண்டி ருகின்றன. 'என்னை பரிசுத்தப்படுத்துவதுடன் பிறரையும் பரிசுத்தப்படுத்துவேன்.' என்னும் விருதுவாக்குடன், மரியன்னையின் தலைமை யில், தூயஆவியானவரின் துணையுடன் உலகம், சரீரம், பசாசு என்னும் எதிரிகளுடன் போராடு வதே எம் பணியென்பதும், செபமும், சேவையும், எமது ஆயுதங்கள் என்பதும் யாவரும் அறிந்து, எமது பங்கில் நாம் ஆற்றும் முக்கிய பணிக ளாவன:

இல்லங்களை தரிசித்து, நோயாளி களைச் சந்தித்து, அவர்களுக்காகச் செபித்தல், படுக்கை நோயாளருக்கு நற்கருணை, ஒப்புரவு அருட்சாதனம் கொடுக்க உதவுதல். வீடுகளில் நன்றி வழிபாடு, வேண்டுதல் வழிபாடு, மரித்த வர்களுக்காக செபித்தல், மரண வீடுகளில் செப வழிபாடு செய்து ஆலயம் வரை செபத்துடன் ஊர்வலம் போதல், உரிய காலத்தில் அருட்சாத னங்களை பெறாதவர்களுக்கு பங்குத்தந்தையின் உதவியுடன் அவ்வவ் அருட்சாதனங்கள் பெற உதவுதல், இதனால் பல குடும்பங்கள் பலன் அடைந்துள்ளன. செபத்தில் மக்கள் ஆர்வம் கொள்ளும்படியாக வைகாசி, ஐப்பசி மாதங்களில் ஒவ்வொரு வீட்டிலும் திருச் செபமாலை சொல் வது, மாதாவின் திருச் சுருபத்தை ஒவ்வொரு வீடாக எடுத்துச் சென்று செப வழிபாடு செய்வது, பாதுகாவலன், தேவதாயின் குரல் போன்ற கத்தோலிக்க ஏடுகள் விநியோகம் செய்வது, உதவி தேவைப்படுவோருக்கு அந்தந்த நிறுவனங்கள் மூலமும் நல்மனம் படைத்தவர் மூலமும், பங்குத் தந்தையின் மூலமும் உதவிபெற்றுக் கொடுப்பது. சரீர உதவி தேவைப்படுவோருக்கு உதவுவது, முதலிய பணிகளைச் செய்து வருகின்றோம்.

எமது பணிகள் சிறப்புறவும், மரியாயின் சேனை கட்டுக்கோப்புடன் தொடரவும்

முன்னின்றுழைத்த எமது அங்கத்தவர் திருமதி மாகிறேற் எஸ்பீரியருக்கு நன்றிகூறக் கடமைப் பட்டவர்களாக இருக்கின்றோம். எமது பணிக ளால் பலன் அடைந்தோர் பலர். அவர்களுடன் சேர்ந்து நாமும் இறைவனுக்கு நன்றி நவில்கின் றோம். எங்கள் பணிகள் இன்னும் சிறக்கவும், இளைஞர்கள், வளர்ந்தோர், ஆண்கள் பிரசீடி யங்கள், எம் பங்கில் உருவாகவும், எங்களுடன் சேர்ந்து செபிக்கும்படி பங்கு மக்களாகிய உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். நன்றி

**ஆலய அருட்பணிச் சபை - 15.12.1949**

அருள்பணி லெபோன் அடிகளாரால் 15.12.1949 இல், 12 பேரைக்கொண்ட சந்தியோகுமையோர் ஆலயப் பங்குச் சபை உருவாக்கப்பட்டது. பக்திச் சபைகளின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புகளைச் செய்துள்ள இப்பங்குச்சபை பக்தி வெளிப்பாட்டுச் செயற்பாடுகளில் பக்திச்சபைகளுடன் இணைந்தே பணியாற்றியுள்ளது. பங்குச்சபையின் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாக பின் வருன இனங்காணப்படுகின்றன. இவற்றில் சில பக்திச் சபைகளுடன் இணைந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அருட்பணிச் சபை என்று அழைக்கப்படுகின்றது.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

ஆலயங்களில் ஆலய நிர்வாக சபை என்பது கட்டாயம் செயற்பட வேண்டிய ஓர் அமைப்பாகும். 1949 ஆம் ஆண்டளவில் 12 அங்கத்தவர்கள் கொண்ட ஓர் நிர்வாக சபை ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இவர்கள் பங்குத் தந்தையின் வழிகாட்டலுடன் பங்கின் ஆன்மீக வளர்ச்சிக்கும், ஏனைய வளர்ச்சி களுக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்து வருவதே இச்சபையின் பணியாகும்.

இவ்வாறு செயற்படும் சபையானது 2003 ஆம் ஆண்டிற்குப்பின் திருச்சபையின் புதிய மாற்றங்களிற்கு உட்பட்டு யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்விடங்கள், சனத் தொகைக்கு ஏற்ப பதினாறு வலயங்களாக பிரிக்கப்பட்டனர். வலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த தலா ஒரு வரும் தொழில் ரீதியாகவும் ஏனைய பக்திச் சபைகள் சார்பாகவும் அங்கத்தவர்கள் உள்வாங் கப்பட்டு அருட்பணிச்சபை அமைக்கப்பட்டது. இந்நடைமுறையே இன்றும் தொடர்கின்றது. இவர்களது வழமையான செயற்பாடுகளாக பின்வருவன காணப்படுகின்றது.

- ஆலய விழாக்கள், ஆண்டு விழாக்களை திட்டமிட்டு முன்னின்று நடத்துதல்
- ஆலயத்தின் தேவைகள், பராமரிப்பு, புனரமைப்பு, அபிவிருத்தி போன்றவற் றில் கவனம் செலுத்தி நிறைவேற்றுதல்.
- பருவகால நிகழ்வுகளான நத்தார், வருடப்பிறப்பு, தவக்கால வழிபாடு போன்றவற்றை சிறப்புற நடதத துணை புரிதல்.

இவ்வாறு அருட்பணிச்சபையின் பணி கள் காணப்படுகின்றன. 1993ஆம் ஆண்டு நடை பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலால் சிதைகக்ப் பட்ட ஆலயம் மீண்டும் அதே வடிவத்திற்கு மீளமைக்கப்பட்டமை அருட்பணிச்சபையினது சேவையின் மணிமகுடமாகவும் தொடர்ந்து ஆலயக் கூரைக்கு உள் சீற்றடித்தமை, தரையில் மாபிள் பதித்தமை, மண்தரைக்கு கல் பதித்தமை, புதுப்பொலிவு பெற்றிட ஆலயத்திற்கு வர்ணம் பூசியமை போன்றன அருட்பணிச்சபையின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

**சிசிலியா பாடகர் குழாம் 22.11.1966**

1931 வரை திரு. சூசையா என்பவரும், தொடர்ந்து திரு. சந்தியோகு மிக்கேல் என்பவரும் ஹார்மோனியம் இசைக்க, பெயரிடப்படாமல் இயங்கிவந்த ஆலய வழிபாட் டுப் பாடல்களுக்கான பாடகர் குழாமை புனரமைக்கும் நோக்குடன் அருள்பணி பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகளார், தொடர்ச்சியாக பாடல்களைப் பாடிவந்த பாடகர் களையும், புதியவர்களாக சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை மாணவிகளில் குரல்வளமுள்ள சிலரையும், ஹார்மோனியம் பயன்படுத்தக் கூடிய பெண்களையும் இணைத்து தொடர் பயிற்சிகளைக் கொடுத்து இசை வழியாக இறைவனைப் புகழ்ந்து வழிபடுதலை முக்கிய நோக்காகக் கொண்ட சிசிலியா பாடகர் குழாமை 22.11.1966 இல் உருவாக்கினார்.

இக்குழுவினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

புனித சிசிலியம்மாவின் பெயரைச் சூடி பல வருடங்களாக எமது பங்கில் இளையோர் களை இணைத்து பாடகர் குழாமாக நடத்தப் படுகின்றது. தற்போது ஆண்களும் பெண்களு மாக 25 பேர் வரை இயங்குகின்றோம். புனித சிசிலியம்மா தனது இனிமையான குரலால் எவ் வாறு இறைவனைப் பாடி மகிழ்வித்தாரோ அதே போல் நாமும் எமது பங்கில் பாடி இறைவனை மகிழ்வித்து வழிபாடுகளை மெருகூட்டுகின் றோம். எமது பாடகர் குழாமினால் பின்வரும் பணிகள் ஆற்றப்படுகின்றன:

- எமது பங்கிலுள்ள புனித யாகப்பர் ஆலயம் மற்றும் புதுமைமாதா ஆலயம்

ஏனைய சிற்றாலயங்களில் நடைபெறும் வழிபாடுகள் அனைத்திலும் எமது பாடகர் குழாம் பங்குபற்றுதல்.

- ❖ விசேட நிகழ்வுகளான திருநிலைப் படுத்தப்பட்ட புதிய குருக்களின் முதற் பூசை, குருமாரின் ஜுபிலி தினங்கள், திருமண நிகழ்வுகள், மரணச்சடங்குகள் போன்றவற்றிலும் பங்குபற்றுதல்.
- ❖ எமது பங்கில் மட்டுமல்ல புல்லாவெளி, சாட்டி, அரியாலை, கொட்டடி ஆகியவற்றிலுள்ள ஆலய வழிபாடுகளிலும் பங்கு பற்றுதல்.
- ❖ வேறு பங்குகளின் அழைப்பின் பேரில் அங்கு நடைபெறும் திருமணத் திருப் பலியில் பங்குபற்றுதல்.
- ❖ வேறு பங்குகளின் அழைப்பின்பேரில் ஓர்கன் இசைவழங்கச் செல்லுதல்.
- ❖ பங்குகளுக்கிடையிலான பாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளுதல் போன்றவைகளாகும்.

**மறைக்கல்வி குழு - 15.01.1988**

இறைவனின் மறைபொருளையும், கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு பரிமாணங்களையும், ஆன்மீகத்தையும் கற்கும் பாடநெறியே மறைக்கல்வியாகும். இதனை விசுவாசத்தைப் பாதுகாக்கும் திருச்சபையின் கற்பித்தல் பணி என்றும் சொல்லலாம். ஆரம்பத்தில் உபதேசிமார்களால் கற்பித்துவந்த மறைக்கல்வி காலப்போக்கில் இந்தியாவில் கல்விகற்றுத் தேறிய மறையாசிரியர்களால் முன்னெடுக்கப் பட்டது. இவர்கள் குருநகர்ப் பங்கில் 1970 முதல் மாறிமாறிப் பணியாற்றியுள்ளார்கள். பங்குக்குருவுக்கு உதவியாக இருப்பதும், வழிபாடுகளை ஏற்பாடு செய்வதும், பாடசாலையில் சமயபாட விரிவுரைகளை நிகழ்த்துவதும், திருமணம் செய்பவர்களுக்கான வகுப்புகளை நடத்துவதுமே இவர்களின் சேவைகளாக இருந்தன.

அருள்பணி பி.எம்.இம்மனுவல் அடிகளாரின் பணிக்காலத்தில் புனித யாகப்பர் பங்கிலிருந்து அனுப்பப் பட்டு, மறையாசிரியருக்கான மறைக்கல்விக் கற்கை நெறியைக் கற்றுத் தேறியவர்களை இணைத்து 15.01.1988 இல் அறிமுகப்படுத்தப்பட்டதே மறைக்கல்வி குழுவாகும்.

இக்குழுவினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

*மறைக்கல்வி! கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிநாதமாகும். இந்த பாரிய பொறுப்பைத் தமதாக்கி கொண்டவர்கள் மறைக்கல்வி ஆசிரியர்களே! "தொடக்க நிலையில் உள்ள விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பதும், இளவயதினர், முதிய வயதினரான விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி, நிறைவுக்கு கொண்டு செல்வதே இதன் நோக்கம்" என்று திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் கூறுகின்றார்.*

*ஒரு மாணவனில் கிறிஸதுவை உருவாக்குவதே மறைக்கல்வியின் நோக்கமாகும். இதனை அடிப்படையாக கொண்டு எமது பங்கின் கிறிஸ்தவ உருவாக்கலிலே இன்று 150 ஆண்டுகளை கடந்து நிற்கின்றோம். ஆரம்பத்தில் எமது மறைக்கல்வி திருச்சடங்குகளாலும், ஆடம்பர விழாக்களாலும் குறிப்பிட்ட ஒரு சில செபங்களை மனப்பாடம் செய்வதாலும், பத்துக்கட்டளைகள் - திருச்சபையின் கட்டளை போன்றவற்றை மனப்பாடம் செய்வதாலும் ஒரு வித மனநிறைவு கண்டு வந்தது எமது திருச்சபை.*

*2 ஆம் வத்திக்கான் திருச்சங்கத்தின் மறுமலர்ச்சி தொடங்கிய காலகட்டத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவில், மூவிதப்பணிகளில் பங்கேற்கின்றான் என்பதை மனதில் கொண்டு, கிறிஸ்தவ விசுவாசத்தை கட்டி எழுப்புவதில் ஒவ்வொருவருக்கும் பாரிய பொறுப்பு உண்டு என்பதை மனதில் ஏற்று, இன்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் எமது பங்கில் தோற்றம் பெற்ற விசுவாசத்தின் காவலரே எமது மறையாசிரியர்கள். 1972 காலப்பகுதிகளில் எமது மறை மாவட்டத்தில் மறைக்கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் மறைக்கல்வி நடுநிலையம் ஆரம்பிக்கப்பட்டு மறை அறிவு போதிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. அன்று எமது பங்கில் இருந்து 1987 இல் முதல் முதலாக மறையாசிரியர் பயிற்சிக்காக இருவர் அனுப்பப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் மறைக்கல்வி நடுநிலையத்தால் நடத்தப்படும் 3 மாத பயிற்சி நெறிகளில் பங்குகொள்வதற்காக எமது பங்கிலிருந்து நற்செய்தி பணியில் ஆர்வமுள்ள சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு நடுநிலையத்துக்கு அனுப்பி வைப்பதோடு மறைக் கல்வி பணியில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களை பங்கிற்கு வரவழைத்து விசேட பயிற்சிகளும் கொடுக்கப்படுவதுடன் அருள் தந்தையர்களும் முன்நின்று செயற்பட்டு வருகின்றனர்.*

*அத்தோடு எமது பங்கின் பாடசாலை மாணவர்களுக்கான ஞாயிறு தினங்களில் காலை 7 மணிக்கு விசேட திருப்பலியும், அதனை தொடர்ந்து பங்கு மறையாசிரியர்களால் வகுப்பு ரீதியாக மறைக் கல்வி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. அத்துடன் மாணவர்கள் மத்தியில் ஆன்மீகம், கல்வி என்பனவற்றை வளர்க்கும் முகமாக அருட்சாதன ஆயத்த வகுப்புக்கள், மறை அறிவுப்போட்டிகள் கலைநிகழ்*

வுகள், விளையாட்டுக்கள், சுற்றுலாக்கள் என்பன வும் ஆசிரியர்களால் நிகழ்த்தப்படுகின்றன.

இன்று எமது மறைப்பாடசாலையில் 800 இற்கு மேற்பட்ட மாணவர்களும் அவர்களுக்கு வழி காட்டுவதற்காக 35 மறையாசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். ஞாயிறு மறைக்கல்விக் கென ஆயத் தங்களை ஒவ்வொரு சனிக்கிழமையும் மறையாசிரி யர்கள் ஒன்று கூடி ஆயத்தம் செய்வர். அத்தோடு மறைக்கல்வி திருப்பலியின் வழிபாடு மாணவர்களால் ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் காலை 7 மணிக்கு மேற்கொள்ளப்படுவது சிறப்பம்சமாகும்.

கடந்த காலங்களில் எமது மறைக்கல்வி மாணவர்கள் பங்குத்தந்தையின் ஆலோசனைக் கும் ஊக்கவிப்புக்கும் இணங்க மறைக்கோட்ட, மறைமாவட்ட மறை அறிவுப்போட்டிகளிலும் வெற்றியிட்டி வருவது பெருமைக்குரிய விடைய மாகும் ஆயினும், எமது பங்கு மக்களின் விகிதா சாரத்தை ஒப்பிட்டு நோக்கும்போது மறைக்கல்வி மாணவர்களின் தொகை மிகவும் குறைவாகவே காணப்படுவது வருத்தத்தக்குரிய ஒன்றாகும். இதற்கு மாணவர்களில் குற்றம் காண்பதைவிட, அவர்களின் பெற்றோர்கள் ஊக்கவிப்பு இன்மையே காரணம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டிய உண்மை பெற்றோரே மறைக்கல்வி யின் முதல் ஆசிரியர். இதை ஒவ்வொரு குடும்பமும் மனதிலிருத்தி சிந்தித்து வந்தால் எங்கள் குடும் பங்கள் மீண்டும் புதிதாய் இயேசுவில் முளைத் தெழுந்திடும். அதற்கு நாம் அனைவரும் தோள் கொடுப்போம்.

**சென். வின்சென் டி போல் சபை பெண்கள் பந்தி - 27.05.1989**

ஆண்கள் மட்டுமேகொண்டு இயங்கிவந்த சென். வின்சென் டி போல் சபையில் 26.08.1987 முதல் 09.08.1993 வரை பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருள்திரு பி. எம். இம்மனுவேல் அவர்களினால் 27.05. 1989 இல் பெண்களுக்கான பந்தி உருவாக்கப்பட்டது. இப்பந்தி உருவாக்கப்பட்ட காலம் முதல் ஆன்மீக செயற் பாடுகளை முன்னெடுப்பதிலும், சமூக நற்பணிகளைச் செய்வதிலும், தமது நோக்கத்தை நிறைவேற்றும் வழிகளில் கண்ணுங்கருத்துமாக இருந்து செயற்படுவதிலும் ஆண் களைவிட வேகமாகவே இருந்துள்ளார்கள்.

இச்சபையினரின் பணிகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

18 பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது "பிடி அரிசியை கொண்டு ஏழை யின் பசிபோக்கலாம்" என்ற புனிதரின் வாக் கினை ஏற்று கஷ்ட, துன்பங்களை பொறுத்துக் கொண்டு பசியால் வாடும் ஏழைகளுக்கும், வறிய மாணவர்களுக்கும், முதல் நன்மை பெறுகின்ற சிறுவர்களுக்கும் நாம் உதவி புரிந்து வருகின் றோம். இல்லங்களிலும், வைத்தியசாலைகளிலும், முதுமையினாலும், நோயினாலும் வாடுவோரை, கைவிடப்பட்டோரை சந்தித்து ஆறுதல் கூறுவது எமது பணியாகும். மரணத்தருவாயில் இருப்போர் நல்மரணமடைய செபித்தும், துணை இழந்து, நோயினால் வாடுவோருக்கும் சிறு பண உதவியும் செய்து வருகின்றோம். மேலதிக சிகிச்சைக்காக உதவுதல், சுய தொழிலுக்கு ஊக்கம் கொடுத்தல், வீடு புனரமைக்க உதவுதல் போன்றவையும் எமது பணிகளாகும்.

ஆயரின் வேண்டுகோளிற்கு ஏற்ப எம் பங்குத்தந்தை ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளாரின் வழிகாட்டுதலில் எமது சபையின் சகோதரிகளும், பிறர் நலம் விரும்பும் ஏனையோரும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட கூழாமுறிப்புப் பங்கின் ஒரு கிராமத்தை பொறுப்பெடுத்து எம்மை பகிர்ந்து வருகிறோம். பல்வேறுபட்ட நிலைகளில் உள்ளோர் எமது பணத்தேவைகளில் பேருதவி யாக இருந்து வருகின்றனர். அவர்களையும் அன்போடு நினைத்துக் கௌ்கின்றோம்.

எமது கரங்கள் பிறருக்கு உதவி செய்ய முன்வரும் போது நமக்கு உதவியாக இரு கரங்கள் தாமாகவே வரும். இச் சபையின் பணியினைக் கண்ட பலர் தாமும் கொடுத்து வாழப் பழகிக் கொண்டனர். கொடுப்பதில் இன்பம் கண்டனர்.

இறைவனின் அழைப்பின் குரலுக்குச் செவிசாய்த்து, எம் சகோதரிகள் தங்களின் பாரிய குடும்பப் பொறுப்புகள் மத்தியிலும் குடும்பத் தலைவர்களின் ஒத்துழைப்போடு இப் பணிகளை செவ்வனே ஆற்றி வருகின்றனர்.

**இறை இரக்க பக்திசபை - 27.09.1989**

26.08.1987 முதல் 09.08.1993 வரை பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருள்திரு பி. எம். இம்மனுவேல் அவர்களின் பணிக்காலத்தில் பொதுநிலையி னரான நீக்கிலாஸ் பப்பா அவர்களால், பங்குத்தந்தையின் அனுசரணையுடன் புரட்டாதி 1989 இல் இறை இரக்கக் குழு அங்குராப்பணம் செய்யப்பட்டது. இக்குழுவினரின் பக்தி முயற்சிகள் வழிபாட்டுச் சிறப்புகள் காரணமாக இதனை, பங்குத்தந்தை பி.எம். இம்மானுவேல் அடிகளார் பக்திச் சபையாக இணைத்துக் கொண்டார்.

இக்குழுவினரின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை பின்வருமாறு:

எமது பங்கின் இறைஇரக்க வழிபாடுகள் 1989ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இறை இரக்க வழிகாட்டியாகிய நீக்கிலாஸ் பப்பாவின் தலைமையில் ஒன்பது உறுப்பினர்களுடன் ஆரம்பமாகியது. இப் பக்தி வழிபாடானது மாதத்தின் முதல் வெள்ளி ஆரம்பமாகி ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறும். மதியம் 1.30- 3.15 மணிவரை நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகி பின் இறையிரகக வழிபாட்டுடன் முடிவடையும். இறையிரக்க வழிபாட்டுக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாக வளர்ச்சியடைந்து இரண்டு வருடங்களில் 100 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இணைந்துகொண்டார்கள். மக்கள் இடம்பெயர்ந்த காலங்க ளிலும், இடம் பெயராது இருந்த மக்கள் மாதாந்தம் இறையிரக்க வழிபாட்டில் ஈடுபட்டனர். இதன் அங்கமாக, தற்போது அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயத்திலும் இறையிரக்க வழிபாடு நடைபெற்று வருகின்றது.

மேலும் எமது பங்குகளில் பணியாற்றிய பங்குத்தந்தையர்கள் இறையிரக்க வழிபாட்டிற்கு ஆதரவு வழங்கி வந்தனர். அமரத்துவமடைந்த பி.எம். இம்மானுவேல் அடிகள் இறையிரக்க குழுவை பக்திச் சபையாக இணைத்துக் கொண்டார்.

இறையிரக்க திருநாள் காலத்தில் வழிபாட்டுக் குழுவினர் பண்டத் தரிப்பு பத்திமா அன்னை ஆலயம், சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயம், மடுமாதா ஆலயம போன்ற இடங்களுக்குச் சென்று தியானங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போதும் இச்சபையின் வழிகாட்டியாக நீக்கிலாஸ் பப்பாவும் தலைவியாக திருமதி யூஜின் யூலியற் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். ■

# பங்கு பணிமனையிலிருந்து ஒரு குரல்...

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 150 ஆவது யூபிலி ஆண்டை நினைவுகூரும் பங்கு மக்களோடு இணைந்து, ஊர் மக்களை வாழ்த்தி நிற்பதில் நானும் பெருமை கொள்கின்றேன். 39 குடும்பங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது ஆலயம் இன்று பெரும் விருட்சமாக மாறி பல குடும்பங்களாக வளர்ச்சி கண்டிருப்பது அனைவருக்கும் பெருமையானது ஒன்றே.

ரோமானிய கட்டடக்கலையில் அமைக்கப்பட்ட எமது ஆலயம் குருநகர் மக்களின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லுகிறது பல்வேறு இடர்பாடுகள், அரச அட்டூழியங்கள், போரின் தாக்கங்கள், அனைத்தையும் எமது ஆலயம் சந்தித்தபோதும், இடியின் மகனாகிய யாகப்பரின் உறுதியான கட்டுக்கோப்பினால் ஆலயமும் ஆலய மக்களும் உறுதி குலையாது எடுத்துக்காட்டாக திகழ்வது எல்லோரும் போற்றி மகிழ்வதற்குரியது ஒன்றே.

காலத்துக்காலம் பல்வேறு அருட்பணியாளர்களின் தியாகத்தினாலும் அர்ப்பணிப்பினாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது ஆலய வரலாற்றில் பல தொய்வுகள் ஏற்பட்ட போதும், எமது பாதுகாவலரின் வலியகரம் எம்மோடு இருந்தமையினாலும் இன்று வரை எமது வாழ்வில் தளர்ச்சி ஏற்படவில்லை.

பாரிய நீண்ட நெடும் பயணத்தில் பயணித்த எமது மக்களின் விசுவாசப்பயணம் புதுப்பொழிவு பெற்று ஒவ்வொரு குடும்பமும் மீண்டும் புதிதாய் இயேசுவில் முளைத்தெழ விழிப்புடன் செயற்படுவது எம் ஒவ்வொருவர் மேலும் சுமத்தப்பட்ட பாரிய பொறுப்பாகும். "எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டுமேயன்றி வேறோன்றும் அறியேன் பராபரமே".

**ப. கிறிசாந்தி**
(பங்குத்தந்தையின் செயலர்)



இளையோர் பிரசீடியம்

பாடகர் குழாம்






புனித வின்செண் டி போல்
ஆண்கள் பந்தி

சக்தியுடையவளாயிருக்கிற
கன்னிகை பிரசீடியம்





யூபிலி ஆண்டு நிதிக்குழு

யூபிலி ஆண்டு வழிபாட்டுக்குழு





பீடப்பணியாளர்

மறையாசிரியர்





இளையோர் ஒன்றியம்

இறையிரக்கம்





பரலோகத்தின் வாசல் பிரசீடியம்

புனித வின்சென் டி போல்
பெண்கள் பந்தி





திரு இருதய சபை



எமது ஆலயத்தை, திருப்பண்ட அறையை
பேணிக் காத்துவந்த திரு. ஆசீர்வாதம் றோமான்
அவர்களின் மறைவை அடுத்து 1989 ஆம்
ஆண்டு ஆனி மாதம் முதல்
திரு. செபமாலை சிறில் அவர்கள்
அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
ஆலயத்தைத் தமது சொந்த வீடாக நினைத்து
முதுமையிலும், சேவையை இன்பமாக,
இன்றும் சேவையாற்றிக்கொண்டிருக்கின்றார்.
இவரை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

# எ. ஜோய் கவிதைகள்

(பிரான்ஸ்)

## இரண்டாவது உருமாற்றம்

சுமக்க முடியாத சுமைகளுடனும்
என் வினவலை ஒருபோதும்
கேட்க இயலாத செவிடர்களுடனும்
பாலைவனத்தில் துரிதப்படுகிறது
எனக்கான பயணம்.

பாலைவனத்தை சொந்தமாக்கி
அரசனாக முடிசூடும் அவாவில்
தீ உமுமும் உள்ளுயிருடன்
என் இரண்டாவது
உருமாற்றத்திற்கான காத்திருப்பு
ஒட்டகத்தின் முதுகில் நிகழ்கிறது.

எல்லா மதிப்பீடுகளும்
என்னுள் ஒளிரும் போது
இரையெடுக்கும் விலங்கின் வலிமையை
புதிய மதிப்பீடுகள்
பிரகாசிக்கச் செய்கின்றன.

பகலெல்லாம்
ஏற்படுத்தும் அலைச்சல்
இரவின் உறக்கத்துக்கு
என்பதை அறியாத மனம்
புல்வெளிகளைத் தேடி
என் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறது.

பசுவைப்போல் கிடந்தபடி
இரைமீட்கும் ஓவ்வொரு கணங்களிலும்
நாளைய பகலின் வலிகளை
இன்றே துளித்துளியாய்
உள்வாங்கிக்கொள்கிறது உயிர்.

விரைவில் உறங்கிவிடும்
மனிதர்களைப் பார்த்து
கூட்டிலிருந்து ஆவியாகும்
கடவுளை நகைத்தபடி
வர்ணம் தீட்டப்பட்ட
சாத்தான்களைச் சுமக்கிறது புலன்

ஒரு பிரக்ஞையற்ற கணத்தில்
ஒரே பாய்ச்சலில் நிகழும்
அற்புதமான அந்த உருமாற்றத்துக்காய்
காத்திருக்கிறது
என்னிலிருந்து வழியும் நான்

## உங்களிடம் இருந்தால்...

புயலுக்கு ஈடுகொடுக்க முடியாத
எனது சிறிய இறக்கைகள்
அச்சமுறும் ஒவ்வொரு கணங்களும்
என்னை கோழையாக
எழுதிச்செல்ல முயல்கிறது

நீண்டதுயில் கொண்டெழுந்தபின்
பல மரணங்கள் தரும் உயிர்ப்பிச்சை
என் ஜீவ அணுக்கள் மீது
காறி உமிழ்ந்துவிட்டுச் செல்கிறது

நேற்று நீ கொலையுண்டு
நடுறோட்டில் கிடந்தபோது
அறிமுகமற்றவனைப்போல்
நகர்ந்துபோன என் முகத்தில்
இரண்டு கொம்புகளும் கூரிய நகங்களும்
முளைத்தறைந்தது கொலைகாரன் என்று.

அச்சத்தை தணிக்கும்
ஒரு வார்த்தையைத்தானும்
தேடித்தேடி அலைகையில்
சாலையோரம் அடையாளமற்றுக் கிடந்த
கரங்களில் முளைத்த
புல்லாங்குழல் முகாரி இசைததது

புல்லாங்குழலின் துளைகளில் வழியும்
அற்புதமான இசையை இசைத்தபடி
தெருப்பாடகனாய் அலையும்
நானும் எனது பாடல்களும்
பல முறை இறந்துயிர்த்த
கதைகள் ஏராளம்

நாளையப் பனிப்பொழுதில்
என் புல்லாங்குழலே எனக்காக
இரங்கற்பா இசைக்க
என் புதைகுழிமீது பூக்களை தூவாதீர்கள்
அச்சம் தணித்து உரமேற்றும்
ஒரு வார்த்தையையாவது
எழுதி விட்டுச் செல்லுங்கள் உங்களிடம்
இருந்தால்...!

# யூபிலி ஆண்டுக்கான ஆயத்த செயற்திட்டங்கள்

செல்வி சோ. சுமலதா

இற்றைக்கு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பே குருநகர் கிறிஸ்தவ சமுதாயத்தின் அடிப்படை விசுவாச உண்மைகளின் வெளிப்பாடாக தோற்றம் பெற்றதே எமது தூய யாகப்பரின் திருக்கோவில் ஆகும். நூற்றுக்கு நூறு வீதமான கத்தோலிக்க மக்களை கொண்டுள்ள எமது குருநகர் கிராமம் கடற்தொழிலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்றாலும், கிறிஸ்தவ வாழ்வை செயலில் காட்டி ஏனையோருக்கு முன்மாதிரிகையாக இருந்தனர் எம் முன்னோர்கள் என்றால் அது மிகையாகாது.

நூறாண்டு காலமாக காணப்பட்ட முன்னோர்களின் விசுவாசம் காலப்போக்கில் மக்கள் பெருக்கத்தினாலும், கலாசார சீரழிவுகளாலும், கல்வியறிவில் நாட்டம் குன்றியதாலும், விசுவாச வாழ்வில் தொய்வு நிலை ஏற்பட்டது. ஆயினும் அன்றைய மறைப்போதகர்களின் நெறிப்படுத்தல்களாலும், ஊக்குவிப்புக்களாலும், 1961 ஆம் ஆண்டு அனைத்து மக்களும் தளர்வடைந்துபோன தங்களின் விசுவாசத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என்ற உறுதி மொழியோடு நூற்றாண்டு விழாவை கொண்டாடினார்கள். பின் அங்கு நடைபெற்ற அம்சங்களை ஆவணப்படுத்தி அதனை யாழ்ப்பாண சந்தியோகுமையோர் ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவு மலர் என்ற புத்தகமாக வெளியிட்டனர்.

காலப்போக்கில் சமூகம் சீர்கேடுகளிற்குள் உட்பட்டு தத்தளித்தது. இதனால் 1986 ஆம் ஆண்டு ஆலயத்தின் 125வது நிறைவு விழாவை சம்பிரதாயத்திற்காகக் கொண்டாடி மன நிறைவு கண்ட செய்திகளையும் குறிப்பேடு சுட்டிக்காட்டுகின்றது.

இவற்றினை கண்ணோக்கிய எமது யாழ் திருச்சபை கிறிஸ்தவத்தின் ஆணிவேர் குடும்பமே என்பதை இதயத்தில் இருத்தியதுடன் எமது ஆலயம் அடுத்து, தனது 150வது ஆண்டு நிறைவை அர்த்தமுள்ள ஒன்றாக மக்கள் மனதில் பதிய வைக்கவேண்டும் என்று எண்ணி, என் குடும்பம் மீண்டும் புதிதாய் எழுந்திட நாம் முன்வருவோம் என்னும் கருப்பொருளில் கடந்த 25.07.2010 இல் எமது பாதுகாவலர் தூய யாகப்பர் ஆலய திருவிழா தினத்தில் யூபிலி ஆண்டை பிரகடனப்படுத்தினர்.

இந்த முயற்சிக்கு எம் பங்கில் உருவான குருக்கள், துறவிகள் தமது ஒத்துழைப்புக்களை வழங்குவதாக உறுதியளித்தனர். எமது பங்கின் மூத்த பணியாளர் ஒருவர் முன்னோர்களின் ஆழ்ந்த இறைபக்தியை இன்றைய சமூகத்தோடு ஒப்பிடுகையில், அடுத்து வரும் தலைமுறையினரை சொதோம் கொமோறா நாட்டு மக்களின் நிலையோடு ஒப்பிட்டார். ஆண்டவரே! இவர்களை சீர்செய்யவேண்டும் என அங்கலாய்த்தார். அடுத்து வரும் யூபிலி ஆண்டு இப் பங்கில் நடைபெறுமா? என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.




இவற்றிற்கு தீர்வுகாண சமய, சமூக, பொருளாதார கல்வி முன்னேற்றங்களில் விழிப்புணர்வு பெற வேண்டும். விழிப்புணர்வு பெற்று என் 'குடும்பம் மீண்டும் புதிதாய் எழுந்திட' என்னும் கருப்பொருளை பங்கு மக்கள் செயல் வடிவில் காட்டவேண்டும் என்பதற்காக பல

செயற்பாடுகளையும், திட்டங்களையும் வகுத்தனர். அந்த வகையில் யூபிலி ஆண்டுக்கான முன் ஆயத்த செயற்திட்டங்கள் ஆன்மீகம் சார்ந்ததாகவும், சமூகம் சார்ந்ததாகவும், ஆலயம் சார்ந்ததாகவும் வகுக்கப்பட்டது.




## யூபிலி ஆண்டின் முன்மொழிவுகள்

### ஆன்மீகம் சார்ந்தவை

* அமலமரித் தியாகிகள் சபையினுடைய வைகாசி 08 முதல் ஆடி 15 வரை ஆன்மீக எழுப்புதல் திட்டம்.
* செபத்தின் அவசியத்தை பங்கு மக்கள் உணர்தல்.
* இல்லங்களில் குடும்ப செபமாலை சொல்லுதல். இறை வார்த்தை வாசித்தல் மூலம் குடும்பங்களை இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தல்.
* திருப்பலியில் பங்கு கொண்டு நற்கருணையில் உள்ளுணர்வுடன் பங்கு கொள்ளல்.
* மறையுரைகள், வழிபாட்டுச் செயற்பாடுகள், மறைக்கல்வி, திருப்பலி போன்றவற்றில் ஆர்வமுடன் பங்கு கொள்ள இறைமக்கள் முன்வருதல்.

### சமூகம் சார்ந்தவை

* கல்வி, கலாச்சாரம் பற்றி ·கருத்திற் கொள்ளுதல்.
* வன்முறை நிறைந்த மரணக் கலாசாரத்தை விலக்கி வன்முறையற்ற பிறர் நலம் நிறைந்த சமூதாயத்தை உருவாக் குதல்.
* எம் பங்கின் குடும்பங்களை தூய ஆவியில் கட்டியெழுப்பி, பொருளாதாரத்தை முன்னேற்றி எமது பங்கின் சூழலை சீர்படுத்தி புதிய சமூதாய மாக்கல்.
* திருமணம் செய்து ஐந்து வருடங்களான, அனைத்து குடும்பங்களையும் ஒன்றிணைத்து விசேட கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்து கிறிஸ்தவக் குழுமங்களை கட்டியெழுப்புதல்.
* சமூகத்தில் ஒரு முழு மனமாற்றத்தைக் காண, குருமட மாணவர்களால் நெறிப்படுத்தப்படும் வீதி நாடகங்களில் குழுமமாக பங்கு பெறுதல்.

### ஆலயம் சார்ந்தவை

* ஆலயத்தை அழகுற மெருகூட்டல்.
* நற்கருணை சிற்றாலயம் அமைத்தல்.
* பங்குப் பணிமனையை புதிதாய் கட்டியெழுப்புதல்.

இவ்விதமாக பல செயற்பாடுகள் முன்மொழியப்பட்டது. மேலும் யூபிலி ஆண்டின் ஆரம்ப கருத்தமர்வில் பங்குத்தந்தை குறிப்பிடும்போது "நாம் புதிதாய் எழுந்திட வேண்டுமெனில், அது என் குடும்பம் என தொடங்கி ஒவ்வொரு நாளும் மாலை 7.00 மணிக்கு ஆலய மணி அடித்தவுடன் குடும்ப செபமாலை சொல்ல வேண்டும்" எனவும், வெளி ஆடம்பரங்களைத் தவிர்த்து அருட்சாதன கொண்டாட்டங்களிலும், அர்த்தமுள்ள விதத்தில் ஆன்மீகத்தோடு ஈடுபட வேண்டும். எனவும் முன்வைத்தார்.



எனவே ஒவ்வொரு குடும்பமும், கிறிஸ்துவிற்கு சாட்சிய வாழ்வு வாழ்ந்து மீண்டும் புதிதாய் எழுந்திட வேண்டும். முன்னோர்களின் சாட்சிய வாழ்வை 150 வது ஆண்டின் நிறைவில் எம் பங்கு மக்களும் வாழ்ந்து காட்டி, செயல் வடிவம் பெற்று கிறிஸ்துவிற்குள் ஒவ்வொரு குடும்பமும் புதிதாய் எழுந்திட வேண்டும். ■

# குருநகர் மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் இடர்கள்

திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ்

**மி**க நீண்ட -தோர் வரலாற்றைக் கொண்ட பெருமை மிக்க எமது குருநகர் புனித யாகப்பர் பங்கும் ஆலயமும் இன்று நூற்று ஐம்பதாவது ஆண்டு யூபிலியை சிறப்பாகக் கொண்டாடுகையில் இம் மலரில் இக்கட்டுரையை வரைவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

கல்வி பாரம்பரியத்தில் அன்று தொட்டு சிறுகச் சிறுக வளர்ச்சி கண்டு இன்று குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றிருப்பது எஃ அனைவரினதும் கண்கூடு. ஆயினும் இவ்வளர்ச்சி பங்கு முழுவதும் பரவலானது அல்ல, இன்றைய 21ஆம் நூற்றாண்டின் புதிய கல்விப் பிரமாணங்களுக்கமைபாக நோக்குகையில் எமது பங்கின் சில குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரம் குன்றிப்போயிருக்கும் கல்வி வளர்ச்சி பற்றியே அதற்குரிய காரணங்கள் பற்றியே இக் கட்டுரையில் பல விடயங்கள்ஆராயபபடுகின்றன. கருத்துக்கள் வழங்கப்படுகின்றன.

பிள்ளைகளை பாடசாலைக்கோ? பிரத்தியேக கல்வி நிலையங்களுக்கோ? அனுப்பி வைத்துவிட்டால் போதும் என்ற நிலை பெற்றோரிடம் பொதுவாகவே இருக்கின்றது. வீட்டில் அவர்கள் கற்பதற்குரிய சூழலை உருவாக்குவது அவர்களுடனிருந்து ஊக்குவிப்பது, ஆசிரியர்களை நாடி கல்வி நிலை பற்றி அறிவது ஏனைய வசதிகளை வழங்குவது பிள்ளைகளின் கல்வி உளவியல் பற்றி அக்கறை காட்டுவது மிகவும் குறைவு.



மாணவர்களும் தாம படித்து முன்னுக்கு வரவேண்டும் எனத் தாமாகவே உணரும் நிலையில்லை. தம் பெற்றோா அல்லது ஆசிரியர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் கற்கும் நிலையிலேயே அதிகமானோர் தென்படுகின்றனர். கடற்கரை வீதிக்கு வடக்கேயுள்ள நிலைமைகளை விட தெற்கே சன நெரிசல் அதிகமுள்ளது மக்கள் வாழும் இல்லிடங்கள் மிக நெருக்கமாக உள்ளதுடன் வாகன தொடர்பாடல் இரைச்சல் அதிகம் இது மாணவர்கள் ஓரிடத்தில் தனிமையாக, அமைதியாக இருந்து கற்பதற்கு இடையூறாக அமைகின்றது.

சிறுவயதிலேயே அதிகளவில் மாணவர்களிடம் பணப் புழக்கம் உள்ளது. நன்கொடைகளாக, பெற்றார்களிடமிருந்து தேவைக்காகப் பெறும் பண மீதியைச செலுத்தாமல் விடுவதால் கிடைக்கும் பணத்தை தேவையற்ற செலவீனங்களுக்குள்ளாக்குதல். இதனால் கலவிச் செயற்பாடுகளில் நாட்டம் காட்டுவது குன்றவடைகிறது.

முறையற்ற உணவுப் பழக்கம், நண்பர்களோடு சுற்றித்திரிந்து பயனற்ற பொழுதுபோக்குகளில் காலத்தைச் செலவிடுவதால் பாடசாலையிலோ, பிரத்தியேக கல்வி நிலை

யங்களிலோ, கற்பதை திரும்ப மீட்டல் செய்யவோ, கற்கவோ நேரமின்மை.

நாட்டில் முப்பது வருடங்களாக நிலவிய யுத்தத்தின் விளைவுகள் தம் பிள்ளைகள் குறிப்பாக ஆண்கள் 10, 11 வயதையடைந்ததும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியூர்களுக்கோ, வெளிநாடுகளுக்கோ அனுப்புவதால் அவர்களின் இடைநிலைக் கல்வி, உயர் கல்வி பாதிப்படைகின்றது. அல்லது நிறுத்தப்படுகின்றது.

நவீனத் தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனையில் தம் நேரத்தை வீணடித்தல், மனக்கிலேசங்களுக்குள்ளாதல், குறிப்பிட்ட பருவத்திற்கு அப்பாற்பட்ட காட்சிகளைப் பார்ப்பதிலும், செய்திகளை அறிவதிலும் ஈடுபடுவதால் கற்றற் செயற்பாடுகளில் முயற்சி எடுப்பதில்லை. பொருளாதாரக் கஷ்டம் காரணமாக சிறு வயதில் கடற்தொழில் செய்தல், சிறுவயதிலேயே தம் பிள்ளைகளுக்கு வெளிநாட்டு மோகத்தை ஏற்படுத்தும் பெற்றோர் தம் குடும்பங்களின் பொருளாதார நிலையைச் சீர்செய்யும் நோக்கில் வெளிநாட்டிலுள்ள உறவினர்களை நாடி அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி விடுவதால் நாம் ஏன் பரீட்சை எடுத்து சித்தியடைய வேண்டும். வெளிநாட்டுக்குப் போறதுதானே எனக் கல்வியில் கவனம் செலுத்து வதில்லை.

கலாசார சீரழிவுகளுக்குள்ளாகி வரும் மாணவர் சமூகம் பெரியோரை மதிக்காமல், பண்பற்ற வார்த்தைப் பிரயோகங்களால் கல்விச் சமூகத்தில் பெரும் சீர்குலைவுகளை ஏற்படுத்துகின்றனர். இதனால் கற்றலை மேம்படுத்துவதற்குரிய சூழ்நிலைகள் சமுதாயத்தில் இல்லை. நூலகங்கள் சன சமூக நிலையங்களை சரியாகப் பயன்படுத்துவதில்லை.

சிறுவயதுகளில் தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைப்பதில் அக்கறை காட்டும் பெற்றோர் 18,19 வயதுகளில் தம் பிள்ளைகளின் உயர் கல்வியில் அக்கறையற்றவர்களாக செயற்படுகின்றனர். இது முன்னரைவிட தற்போது சற்றுக் குறைவாயுள்ளது. எனினும் இன்றும் நடைமுறையில் உள்ள ஒரு செயற்பாடாகும்.

மேலும் கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் காதல் உணர்வுகளுக்கு அடிமையாவலால் தம் உயர் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. இதற்கு பெருமளவில் நண்பர்களுடைய ஒத்தாசை பெறுகின்றனர். இன்றைய தமிழ் திரைப்படங்கள், குறு நாடகங்களால் கவரப்பட்ட நிலையில் பெரும்பாலும் இத்தகைய செயல்கள் இடம் பெறுகின்றன. அத்துடன் அதிகளவிலான ஆடம்பர வாழ்வு, ஆபாச நாட்டம் கல்விக் கண்களை மறைத்து விடுகின்றது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் கணிசமான அளவில் உண்டு. இக் குடும்பங்களில் பிள்ளைகள் போஷக்குக் குறைவு, கண், செவி மற்றும் புலன்களில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாகவும், உரிய சிகிச்சை பெறாமையும் கல்வியில் பாதிப்புக்களை உருவாக்கியுள்ளன. அத்துடன் உள நலக்குறைவு உடையோர் தகுந்த வழிகாட்டல், ஆலோசனைகளுக்கு உட்படுவதில்லை. உள நலத்துறை சார்ந்த அயலிலுள்ள நிறுவனங்களை நாடி வழிகாட்டல்களைப் பெற்றால் இதற்கான தகுந்த பயனைப் பெறமுடியும்.

சிறு பராயத்திலே மது, சிகரட், போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், வயதுக்கு மூத்தவர்களுடன் நட்புறவை வளர்த்தல் ஆகிய செயல்களும் பிள்ளைகளை கல்வியில் வெறுப்புணர்வை தோற்றுவிக்கின்றன. அதில் பெற்றோரின் செயல்களும் அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றன. உதாரணமாக, பிள்ளைகளிடம் பணம் கொடுத்து இப் பொருட்களை கடையில் வாங்கி வரும்படி கூறுவது பிள்ளைகளுக்கு ஓர் துன்மாதிரியும், அதில் நாட்டத்தை தூண்டுவதும் ஆகும்.

ஆண்களைவிட பெண்களே அதிகம் கல்வியில் நாட்டம் செலுத்துகின்றனர். இதனால் குடும்பங்களில் தாழ்வுச் சிக்கல்கள் ஏற்பட வழிவகுக்கும். கல்வியைவிட விளையாட்டுக்களில் அதிக நாட்டம் காட்டுவதும், அதனால் ஏற்படும் இளைப்பு, களைப்பு கல்வியில் நாட்டத்தைக் குறைக்கிறது.

சில குடும்பங்களில் பெற்றோர் நீண்ட காலம் பிரிந்து வாழ்தல், வெளிநாடுகளில் வாழ்தல், இதனால் பிள்ளைகள் மன உளைச்சலுக்குள்ளாகிக் கல்வியில் நாட்டம் செலுத்துவதில்லை.

அண்மைக் காலத்தில் ஒரு மாணவியைத் தவிர குருநகரில் உள்ள இரண்டு பாடசாலைகளில் எவருமே 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் சித்தி பெறவில்லை. ஆயினும் இப் பிரதேசத்திலுள்ள பல மாணவர்கள் வேறு பாடசாலைகளில் கற்று இத் தேர்வில் சித்திபெற்றுள்ளனர். குருநகர்

பாடசாலைகளிடையே நீண்ட காலம் இக் குறைபாடு நிலவி வருவது இப் பகுதி மாணவரின் கல்விப் பின்னடைவையே சுட்டிக் காட்டுகிறது. ஆயினும் வளர்ந்தோர் கல்வியை பொறுத்தவரை கடந்த ஆண்டு சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளை பெற்றதுடன் சிலர் பல்கலைக்கழகத்தில கல்வி கற்கும் தகைமையையும் பெற்றுள்ளனர். அதே வேளை சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை க.பொ.த சாதாரண பரீட்சையின் பெறுபேறுகள் மந்த நிலையிலே காணப்படுகின்றன.

ஆக மேற்கூறப்பட்ட கருத்துக்கள் ஒன்றும் குறைகாணும் அல்லது குறைகூறும் நோக்குடன் சொல்லப்படவில்லை. பிள்ளைகள் எதிர்கொள்ளும் இக் குறைபாடுகளையும் இடர்பாடுகளையும் பெற்றோர்கள், பெரியோர்கள் கருத்திற்கொண்டு தடைகளைக் களைந்து எமது சிறார்கள் மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி பெற உதவ வேண்டும் என்னும் பரந்த நோக்குடன் சொல்லப்பட்டவையே.

பங்குத் தந்தையவர்களும், குருநகர் பாடசாலைகள் இரண்டினதும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மற்றும் சன சமூக நிலையங்கள், அபிவிருத்திக் கழகங்கள், மாணவர்களின் பல கோணங்களில் உங்கள் பங்களிப்பை செலுத்தும் கடமை எம் பங்கிற்குச் செய்யும் பெரும் பணியாகும்.

புலமைப் பரிசில் திட்டங்கள், இரவு நேர வகுப்புக்கள், வசதி குறைந்த பிள்ளைகளுக்கான உதவித் திட்டங்கள், பெற்றோரிடத்திலான கல்வி விழிப்புணர்வுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் உரையாடல்களை, ஒழுங்குபடுத்தி செயற்படுவது பயனுள்ள செயற்பாடுகளாக அமையும். என்பது எனது தாழ்மையான கருத்தாகும். எதிர் காலத்தில் எமது குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குச் சமூகம் கல்வியில் இமயம்போல் உயர்ந்திட இறையாசீர் வேண்டி நிற்கின்றேன். ■

## உம்மிடத்தில் சரணடைந்தோம் யாகப்பா

உமமிடத்தில் சரணடைந்தோம் யாகப்பா
உள்ளன்போடு எம்குறையை கேளப்பா

விரக்தியின் விளிமபில் நிற்கின்றோம்
விரைந்தெமைக் காத்திட வாருமையா
உரம்பெற்று உரிமைகள் பெற்றிட
உள்ளத்தில் உறுதியைத் தாருமையா

(உம்மிடத்தில்...)

நீறாகிப் போனதெம் மவர்வாழ்வில்
நிஜமதை உணர்த்திட வாருமையா
ஆறாத வடுக்களை சுமக்கின்றோம்
ஆறுதலை எமக்கு அருளுமையா

(உம்மிடத்தில்...)

கதியற்று வாழுகின்ற மக்களானோம்
கலக்கத்தை கலைத்திட வாருமையா
நீதியற்று நிலைமாறும் எம்மவரின்
நிலைமாற வாளேந்தி வாருமையா

(உம்மிடத்தில்...)

தேவவாக்கின் அர்த்தம் நீரன்றோ
தேற்றுத லளிப்பவரும் நீரன்றோ
தேவமைந்தன் வாழ்வுக்கு சாட்சியமே
தேடிவந்தோம் கடைக்கண் பாருமையா

(உம்மிடத்தில்...)

## துணிவான பெண்கள் உருவாக வேண்டும்

யாழ் புனித ஜேம்ஸ் ஆலயத்தின் 150வது அகவை நிறைவையொட்டி இச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ் நகரின் இயற்கை எழில்மிகு கடலோரப் பிரதேசமாம் குருநகர் பதியில், சத்திய திருமறையின் பெரும் அடையாளமாக மிடுக்குடனும், பொலிவுடனும் தரிசனம் தரும் புனித ஜேம்ஸ் ஆலயமும், அதன் அருளாட்சிப் பிரதேசமும் விசுவாசத்திற்கும், பண்பாட்டிற்கும் புகலிடமாகத் திகழ்கின்றது. பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளுக்கு மெருகூட்டும் எம் ஆலய வளர்ச்சியும்; எழுச்சியும் இன்று ஒரு வரலாறாக பரிணமித்துள்ளது.

வரலாற்றுப் பெருமைமிக்க இத் தருணத்தில் எம் சமகாலப் போக்குகள் பற்றிய மீளாய்வும் அவசியமாகின்றது. 150 ஆவது அகவை நிறைவைக் கொண்டாட பௌதீக ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் பெரும் முன்னெடுப்புகள் நிகழ்வதை நிதம் தரிசிக் கின்றேன். ஆன்மீக ரீதியான வழிக்கோல்கள் புத்துணர்வைத் தருகின்றது. ஆயினும் பெருந் தொகையான எம் இளைஞர்கள், யுவதிகள் இறை பயம் அற்று வாழ்வது கிலேசத்தைத் தருகின்றது.

குடும்ப மட்டத்திலான பக்தி முயற்சிகள், பெரியோரின் கண்காணிப்பும், கரிசனையும் முன்னைய காலம்போல் வலுப்பெறுவதன் ஊடாகவே எம் இளைய தலைமுறையினர் வாழ்வு ஊட்டம் பெறும் என நம்புகின்றேன். இக்காலப் பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டிய தேவை ஒன்று உள்ளது. கல்வியின் நோக்கத்தையும் அதன் தார்ப்பரியத்தையும் உணர்ந்து எதிர்கால வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய துணிவான பெண்களை உருவாக்குவதற்கும், கல்விக்காலம் முடிவடைந்ததும் தமக்கென ஒரு தொழிலைத் தேடுவதற்கும் உதவியாக பெற்றோர்கள் இருக்க வேண்டும் என்றும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். எம் பங்கின் தற்போது அமுல்படுத்தப்படும் பக்தி முயற்சிகள், ஆன்மீக வலுவூட்டல் செயற்பாடுகள் என்றும் தொடர ஆசிக்கின்றேன்.

பல வருடங்களாக எம் பாடசாலை புனித ஜேம்ஸ் ஆலய நிழலிலே தஞ்சமடைந்துள்ளது. தொடர்ந்து எம் வளர்ச்சிக்கும், இயக்கத்திற்கும் தோள் கொடுக்கும் பங்குத்தந்தை, அருட்பணிச் சபையினர், பங்குமக்களுக்கும் எம் நன்றியைத் தெரிவிப்பதுடன் யூபிலி வாழ்த்துக்களையும் இத் தருணத்தில் தெரிவிக்கின்றேன். யேசுவின் அன்புக்குரிய புனித ஜேம்ஸ் எம்மையும் இறை உணர்வில் சஞ்சரிக்க பரிந்துரைப்பாராக.

**திருமதி எல். மகேஸ்வரன்**
அதிபர், சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

## பேரழிவினைச் சந்தித்த மக்களின் அபயமாக...

கடந்த நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் குருநகர் பிரதேசத்திலே வாழ்ந்த மக்களின் ஆன்மீக மையமாக புனித யாகப்பரின் திருநாமம் கொண்டு இத் திருத்தலம் நிறுவப்பட்டு இன்றுவரை புகழ்மணம் பரப்பி வருகிறது. மக்களின் ஆன்மீகம் மட்டும் அன்றி கல்வி, கலை, கலாசார சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றது என்பதனை நினைத்துப் பெருமை கொள்ள வைக்கின்றது. சிறப்பாக புனித யாகப்பரின் திருநாமம்கொண்ட ஆண்கள், பெண்களுக்கான பாடசாலைக்கு பங்கு அருட்பணியாளர்கள் ஊடாக இறைவனின் வழிநடத்தல் என்றும் கிடைக்க இவ் ஆலயம் வழிவகுக்கின்றது.

ஆலயத்தின் வரலாற்றினை நோக்கும் போது போர்க்காலத்தில் பேரழிவினைச் சந்தித்த மக்களின் அபயமாக இருந்துவந்ததையும் நினைத்து ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றோம். புனித யாகப்பரின் பரிந்துரையாலும் இறைவனின் திருப்பொழிவினாலும் மீண்டும் புதுப்பொலிவு பெற்று மிளிர்வது மகிழ்வுக்குரியதே. சிறப்பாக இப் பிரதேசத்தில் வாழும் மாணவர்கள் புனித யாகப்பரினூடாக இறை அருளைப் பெற்று தமது கல்வியை உச்சநிலையில் பெறவேண்டும் என விரும்பி நிற்கின்றேன்.

மேலும் பல்லாண்டு காலம் இவ் ஆலய நற்பணி தொடரவும் தொடர்ந்து புகழ் மணம் பாரெங்கும் சிறந்தோங்கிடவும் உளமார வாழ்த்தி இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

**த. ஞானப்பிரகாசம்**
அதிபர், சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.




எமது நாட்டில் உதயமாகிய அசாதாரண சூழலினால் பிறந்த பல்வகைக் காரணிகளால் குருநகர் மக்கள் புலம்பெயர்ந்து இந்தியா, ஐரோப்பா, அவுஸ்ரே லியா, மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு செல்லலாயி னர். இவர்களது புலம்பெயர்வு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னரே ஆரம்பமாகியபோதும் 1980 இற்கு பின்னரே தான் கணிசமான தொகையினர் படிப்படியாக புலம் பெயர்ந்து செல்லலாயினர். அதன் தொடர்ச்சி இன்று வரை நீள்கின்றது.

ஆரம்பத்தில் புலம்பெயர்ந்து சென்றவர்களது பொருளாதார நிலைமை, புகுந்த நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற வாழ்வியல் சூழல், குடும்ப மற்றும் குடும்பம் சார்ந்த உறவுகளின் எதிர்பார்ப்பு, குருநகரிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தொடர்புகள் பேணுவதில் நிலவிய இடர்பாடுகள் மற்றும் தாமதங்கள், நிலையான வருவாயற்ற நிலை, மேலாக நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற தன்மை போன்றவற்றால் சமூகம் சார்ந்த பணிகளில் அவர்களால் தமது கரிசனையைச் செலுத்த முடிய வில்லை

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலம் பெயர்ந்து சென்றவர்களுக்கு கிடைத்த இலகுவான வரவேற்பும், பொருளாதார சுமையற்ற நுழைவு வசதிகளும், இலகுவான தொடர்பாடல் - சந்திப்புகளும், மண்ணின் நிகழ்வுகளும அவர்களை குருநகர் வாழ் மக்கள்மீது கரிசனை கொள்ள வழிவகுத்தது. அதன் பயனாக பல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் குருநகர் மக்கள் தமது உறவுகளான இம்மண்ணில் வாழும் மக்களுக்கு தமது பங்களிப்பை குழுமங்களாக இணைந்து மேற்கொள்ளத் தொடங்கினார்கள். அதன் பயனாக குருநகரில் புலம்பெயர் நாடுகளின் பெயர்க ளைத் தாங்கிய அமைப்புகள் பல உருவாகின. அவற்றி னால் ஆற்றப்படும் பணிகளால் மக்கள் பெரும் பயனை அடைந்துகொண்டிருக்கின்றார்கள். அத்தகைய அமைப் புகளால் ஆற்றப்படும் பணிகள் பற்றி அவர்களால் தரப்பட்ட அறிக்கைகள் பின்வருமாறு:

### கல்வி முன்னேற்றக் கழகம் – பிரான்ஸ்

*கல்வியே கருத்தனம் என்ற விருது வாக்கிற்கமைய குருநகர் மக்களின் கல்வி வளர்ச் சியை ஊக்கப்படுத்தி எதிர்கால சந்ததியினரை கல்வியறிவுள்ள சமுதாயமாக மாற்ற புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் எமது ஊர் இளைஞர்களின் சிந்தனையில் 26.01.1997 அன்று புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருள் திரு.ஆர்.எம்.ஜி. நேசநாயகம் தலைமையில்*



உருவாக்கப்பட்டதே சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகமாகும். இக் கழகத்திற்கு அன்று தொட்டு இன்றுவரை சகல வழிகளிலும் ஆதரவு வழங்கி வருபவர்கள் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்) ஆகும். எமது கழக நிர்வாகிகளின் அர்ப்பணிப்புடன் 1997ஆம் ஆண்டு முதல் இன்று வரை கழகம் செயலாற்றி வருகின்றது.

"குருநகர் வாழ் சமூகத்தில் அக்கறை கொண் டுள்ள பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் குருநகர் இளைஞர்களும், பெரியவர்களும் பழைய மாணவர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி குருநகரில் கல்வித்திட்டங்களுக்கு உதவ முன்வந் துள்ளனர்." 'பாதுகாவலன்' (15.06. 1998) என்றும்,

"போர்க்கால சூழலால் குருநகர் பகுதி மாணவரின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற் காகவே இரவு பாடசாலையை நடத்தப்படு கின்றது. மின்சார வசதியில்லை, பாதுகாப்பு காரணமாக வீடுகள் இன்றி சில குடும்பங்கள் ஒன்றாக இருக்க வேண்டியுள்ளது. இதில் பிள்ளைகள் படிக்க வசதியேற்படாது. எனவே குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் இப் பகுதி பிள்ளைகளுக்கு அளித்து வரும் கல்விச்சேவை ஒரு அரிய சந்தர்ப்பமாகும்." 'தினகரன்' (4.4.1999) என்றும்,

"குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற் றக் கழகம் இப் பகுதியில் கல்வியில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பான பணிகளைச் செய்கின்றது." 'தினக்குரல்' (17.09. 1997) என்றும்,

"சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்ற கழகத் தால் இலவச பின்னூட்டல் வகுப்புகள் ஆர்வமுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது." 'வலம்புரி' (4.4.2011) என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கழகம் நடை முறைப்படுத்தி வரும் செயற்பாடுகளாவன:

1. மாலை நேர வகுப்புகள் நடத்துதல்.

2. வறிய மாணவர்களுக்கு பின்னூட்டல் வகுப்புகளுக்கு உதவுதல்.

3. சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்திற்கும், சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலைக்கும் தொண்டர் ஆசிரியர்கள், விழாக்கள், விளையாட் டுப்போட்டி, ஏனைய கல்வி செயல்பாடுகளுக்கு உதவுதல்

4. குருநகர் சனசமூக நிலையம், றெக்கிள மேசன் சனசமூக நிலையம், மவுண்கார்மேல் சனசமூக நிலையம் ஆகியவற்றிற்கு உதவுதல்.

5. கணினி பயிற்சி வகுப்புகளுக்கும், க.பொ.த. (சா) பரீட்சை எடுக்கும் மாணவர் களுக்கும், பரிசுத்த கார்மேல் மாதா ஒன்றியத் தால் நடத்தப்படும் துரித மீட்டல் பயிற்சிகளுக்கு உதவுதல்.

6. 2002 ஆம் ஆண்டு முதல் 'செவ்வானம்' காலாண்டு சஞ்சிகை வெளியிடல்.

7. கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த (ஓர்கன், வாய்ப் பாட்டு, நடனம்) வகுப்புகளுக்கு உதவுதல்.

8. பரீட்சாத்திரிகளின் நலன் கருதி உடனுதவும் நூல்நிலையம் பணி மனையில் நடத்துதல்.

9. சமூக மறுமலர்ச்சி திட்டங்களுக்கு நிதி உதவியும் ஆதரவும் வழங்கல்.

10. கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதலுடன், மாணவர்களை கௌரவித்தல், பரிசளிப்பு வைபவம் நடாத்துதல்.

மேற்குறிக்கப்பட்ட செயல்பாடுகளுடன் வறியோர்கள், வயோதிபர்களுக்கான அன்பளிப்பு விசேட நிதி உதவியுடன் 1997-20011 வரை மொத்த செலவினம் 2,540,714.27 சதம் ஆகும். தொடர்ந்து நிதி உதவி வழங்கி எமது ஊரின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்து வரும் பழைய மாணவா சங்கம் அங்கத்தவர்களையும் குருநகர் கல்வி முன்னேற்றக் கழக உறுப்பினர்களையும் நன்றியுடன் எதிர்கால சமுதாயம் எண்ணிப் பார்ப்பது அவர்களது கடமையாகும்.

**சி. எம். நெல்சன்**

## குருநகர் சமூக சேவை அமைப்பு – ஜேர்மன்

சமூக மாற்றம் வளர்ச்சி என்பது சமூகத்தில் வாழ்கின்ற மானிடர்களின் கைகளில் தான் உள்ளது. சான்றோர் உள்ள சமூகம் நற்பண்புள்ள சமூகமாக மாற்றமடையும் என்பதால் பல சான்றோர்கள் உருவாக வேண்டும் என்னும் அவாக் கொண்ட ஒரு அமைப்பே குருநகர் சமூக சேவை அமைப்பு- ஜேர்மன். புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் குருநகர் சமூகத்தை சேர்ந்த நல்லெண்ணம் கொண்டோர் உருவாக்கி அதனை பிரதிபலிக்கும் அமைப்பே இதுவாகும்.

அறிவின்பால் சமூகத்தை வளர்ப்போம் என்பது அவ்வமைப்பின் நோக்கத்தை தெளிவாக பிரதிபலிக்கின்றது. எந்தவொரு சமூகமும் தனக்கென தனித்துவமான சில பண்புகளைக் கொண்டு விளங்கும். அதேபோல் குருநகர் சமூக சேவை அமைப்பும் 1994.06.25 தொடக்கப் பட்டது. முதல் இன்று வரை தனித்துவமான பண்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கு கின்றது. என்றால் மிகையாகாது. இவ்வமைப் பினைச் சேர்ந்த எம் மண்ணின் மைந்தர்கள் பனி, குளிர், என்பதனை பொருட்படுத்தாது அல்லும், பகலும் அயராது உழைத்த உழைப்பின் பயனில் சிறு பகுதியை ஒதுக்கி சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் நிதியைச் சேகரித்து சமூகத்தின் கல்வித் தேவைக்கும், பகிர்ந்தளித்தும் கொண்டி ருக்கிறார்கள்.

மேலும் குருநகரில் தமது அமைப்பினை பிரதிபலிக்கும் ஒரு குழுவை உருவாக்கி அக் குழுவின் ஊடாக தமது சேவையை தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். காலத்தின் தேவைக்கேற்ப திட்டங்களை உருவாக்கி சமூகம் பயனடைய பணியாற்றுகிறார்கள். இவ் அமைப்பின் தலை வராக லீ. நிக்சனும், செயலாலராக அ.றொபின்ச னும், பொருளாளராக எஸ். ஆர். ஸ்ரீபனும் விளங்குகின்றனர். மேலும் பல மூத்தோர்களை யும், இளையோர்களையும், கொண்டு இவ் வமைப்பு ஜேர்மனியில் பதிவுசெய்யப்பட்ட ஒரு அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. இவ் வமைப்பின் செயற்திட்டங்களை குருநகரில் முன்னெடுத்து செல்பவர்களாக திருமதி மேரி றீற்றா எஸாா்வே, கே. யோகேஸ்வரன், சா. சாள்ஸ், எஸ். றொனால்ட், எஸ். சுவைனஸ், செல்வி. பி. குயின் அனற் அஞ்சலா, யே. சாள்ஸ் பிறின்ஸ் ஆகியோர் விளங்குகிறார்கள்.

மேலும் குருநகர் சமூக சேவை அமைப் பானது தொடக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பல திட்டங்களை முன்னெடுத்து சென்றுள் ளது. அவற்றினை நோக்கும் பொழுது

1) தொண்டர் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதல்.

2) இரு பாடசாலை க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் நடத்துதல்.

3) தரம் 05 மாணவர்களுக்கான புலமை பரீட்சை வகுப்புக்கள் நடத்துதல்.

4) ஊரிலுள்ள சன சமூக நிலையங்களுக்கு பத்திரிகை வழங்குதல்.

5) விதவைகளுக்கு உதவிப் பணம் வழங்குதல்.

6) க.பொ.த சாதாரணம், க.பொ.த உயர்தரம், தரம் 05 பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல்.

7) நலிவுற்றோருக்கு உதவிப் பணம் வழங்குதல்.

8) பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.


9) வின்சென்டிபோல் சபைக்கு உதவி செய்தல்.

10) க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் நடத்துதல்.

11) சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கான நிதி வழங்குதல்.

12) சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் தரம் 05 மாணவர்களிற்கான மாதிரி வினாத்தாள் பெற உதவி செய்தல்.

13) பாடசாலைகளின் கட்டட புனர் நிர்மாணத்துக்கான உதவிகள் வழங்கல்.



14 2006 இல் ஏ9 பாதை பூட்டப்பட்டபோது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு எமது சமூக மக்கள் பெரும் வறுமையை எதிர் நோக்கியிருந்த வேளை வறுமைப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்கியமை.

15) ஆறு மாத ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல்.

16) சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மெல்லக் கற்போருக்கான வகுப்புக்கள் நடத்துதல்.

இவற்றில் சில திட்டங்கள் இப்போது முன்னெடுக்கப்படவில்லை ஏனென்றால் குருநகரில் பல புலம்பெயர் அமைப்புகளும் பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். ஒரே திட்டங்களையே முன்னெடுத்து செல்கின்றனர். ஒரே திட்டத்தை எல்லா அமைப்புக்களும் மேற்கொண்டால் சேவை பரந்து படாமல் போய்விடும். என்பதால் சில திட்டங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இனி வரும் காலங்களில் சமூகத்திற்கு எவ்வகையான திட்டங்கள் தேவை என்பதை உணர்ந்து பல புதிய திட்டங்களை அமுல் படுத்த முயன்று கொண்டிருக்கின்றார்கள்.

காலங்கள் கழிந்தாலும், மானிடர்கள் மாறினாலும், பின் நோக்காது முன்னோக்கியே சொல்வோம் எம் சமூகம் உயர்ந்திட.

**திருமதி. மேரி நீற்றா**

---

**குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன் – ஒஸ்லோ**

நோர்வே நாட்டில் பேர்கன் - ஒஸ்லோ நகரங்களில் வாழும் எம் உறவுகள் எமது சமுகத்ததின்பால் அக்கறை கொண்டு உதவிக்கரம் நீட்டினர். ஒஸ்லோவில் வாழும் ஐ. ஜோண் எட்வேட் பூக்குஞ்சு என்பவர் தனது நண்பர்களோடும், பேர்கன் நகரில் உள்ளவர்களில் கென்றி றிச்மன் மனுவல் என்பவரை தலைவராகக் கொண்டு அவரோடு இணைந்து நின்றோராகிய அல்பேட் ஜோசேப், அன்ரன் அருள்ஜோதி அந்தோனிப்பிள்ளை, அன்ரன் தேவதாஸ் இராயப்பு, அன்ரனி கியூறின் ஜோசேப், எமிலியானுஸ் பிளேவியன், றெயிமியஸ் பிளேவியன், வின்சஸ்லோஸ் பிளேவியன், சாள்ஸ் செபஸ்ரியாம்பிள்ளை, ஞானதாசன் அலெக்ஸ்சான்டர், தேவதாசன் இராசதுரை, எரிக் ஜோசேப், யூஜின் ஜோசேப், எமில் கபிரியேல், எதிர்மனசிங் யேசுரெட்ணம், ஜோண் செபஸ்ரியன், லெபோன்சியஸ் கொன்ஸ்ரன்ரைன், மணிவண்ணன் ஆனந்தராயர், மகேஸ் சவுந்தரம், மாசல் அல்பேட், நிரோசன் யேசுநாயகம், றொபேட் தயாநந்தன், றாயு நிர்மலன் ஏனெஸ்ற், பென்சர் பிரான்சிஸ் சேவியர், செறின்ரன் அல்பேட், ஸ்ரனிஸ்லோஸ் செபஸ்ரியன், சூரி டானியேல், சுரேன் பிரான்சிஸ், அருண் பிரான்சிஸ், அலெக்ஸ் பிரான்சிஸ், வின்சலோஸ் அருளப்பு, குஞ்சு யோசேப், தேவநாயகம் யோசேப் போன்ற கொடையாளிகள் எமது மக்களின் வாழ்நிலையினை மேம்படுத்த ஒரு நேர்கோட்டில் இணைந்து நின்றனர்.

இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குருநகரில் குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன்- ஒஸ்லோ என்னும் பெயரில் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதில் தலைவர் கி. சிலுவைதாசன், செயலாளர் கி.பி.பேர்மினஸ், பொருளாளர் பே. பிரான்சீஸ் மற்றும் பி. எ. கிறேஷியன், கி. புவனேந்திரன், கு. இராயப்பு, எஸ். அன்ரனிதாஸ், எஸ். ஞானசேகரம், எஸ் கிறிஸ்துராசா, திருமதி யே. சகாயரூபி, திருமதி லீலா கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் பணியாற்றினர். கொடையாளிகளின் கோரிக்கைக்கு அமைய கிராமசேவையாளர்கள் சமூக நலன் விரும்பிகள் ஆகியோரின் உதவியோடு எமது குருநகர் மக்களில் மிகுந்த பரிசீலனையின் பின் 500 குடும்பங்களை தெரிந்தெடுத்து குடும்ப அங்கத்தவர்களின் விகிதாசாரத்தினையும் கணக்கில் எடுத்து 30.12.2006 ஆம் ஆண்டு அன்று குருநகர் சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் வைத்து பகிர்ந்தளித்தோம்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, ஆசிரியர்கள்; திரு. எஸ். எ. பிலிப் றோய், திரு. ரி. பிரசாத், திரு.



எ.ஞானசேகரன். உதவியாளர்கள்; செல்வி. எஸ்.சுமலதா, செல்வி. ஆர்.ஸ்கொட்பிரியா, செல்வி. சி.பாமினி, செல்வி. பி.ஜி.நிரோசா ஆகியோர் பணியாற்றினர்.

மாலை நேர வகுப்புகள் எமது நிர்வாக சபை அங்கத்தவர் ஒருவரின் கண்காணிப்பில் தினமும் நடைபெற்று வந்தமை குறிப்பிடத் தக்கது. 04.02.2009 அன்று இரு பாடசாலை களினதும் மாணவர்கள் 74 பேர் இணைந்து கொண்டனர். 5ஆம் ஆண்டு மாணவர்களின் கற்றலை இலகுவாக்க திரு. கு. இராயப்பு முன்வைத்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு கொடையாளிகளின் பூரண சம்மதத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய முன்னோடி குறிப்புக்கள் என்னும் நூலினை உருவாக்கும் பொறுப்பினை திரு. கு. இராயப்புவிடம் ஒப்படைத்தோம். மிகக் குறுகிய காலத்தில் தொகுப்பினை வெளிக்கொண்டு வந்து உதவினார்.

இதேவேளை, எமது சமூகத்தின் கல்வி சேவை விருத்திக்காக, குருநகரில் பிறந்து, வளர்ந்து இன்று நாவாந்துறையில் கடலுணவு ஏற்றுமதியாளராக விளங்கும் எஸ்.கே.எம்.ஈ. நிறுவனத்தின் நிர்வாகியாகிய திரு. எஸ்.ஜோண் அவர்கள் 25,000 ரூபா வழங்கினார். அதன் பின் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியருக்குரிய வேதனமாக ஒவ்வொரு மாதமும் 8,000 ரூபா தொடர்ந்து வழங்கி வருகின்றார்.

பெண்கள் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கும், குருநகர் ஐக்கிய முன்னனியின் ஒளி விழாவுக்கும் பங்களிப்பைச் செய்துள்ளோம். அத்துடன் வயோதிபர், நோயாளர், கடும் நோயினால் இறந்தவர்களின் மரணச் செலவு கட்டும் உதவியுள்ளோம்.

21.08.2009 இல் முதல் பிரிவு மாணவர் களின் வகுப்புகள் நிறைவு பெற்றது. இரண்டாவது பிரிவினரை ஆரம்பிக்கும் நோக்கத்தோடு 4ஆம் ஆண்டு மாணவர்களுக்கு பரீட்சையினை நடாத்தினோம். 23.11.2009 இல், 71 பிள்ளை களுடன் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

வகுப்புகள் நடைபெற்ற பாலர் பாடசாலை மண்டபம் உறுதிப்பூசுதல் வகுப்புக்கள் நடத்தத் தேவை என்பதால், ஆண்கள் பாடசாலை அதிபரின் அனுமதியோடு பல வசதியீனங்கள் மத்தியில் வகுப்புகளை நடத்தி வந்தோம். ஆவணி மாதத்துடன் இரண்டாம் பிரிவு நிறைவுற்றது, மூன்றாவது பிரிவினை ஆரம்பிக்க இடம் எமக்கு இல்லாததால் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். எமது சமூக மாணவர்களின் அடிமட்டக் கல்வியை நாம் இயன்றளவு உயர்த்தினோம் என்ற திருப்தி எமக்கு.

எமது சமூகத்தின் கல்வியை வளர்த் தெடுக்க என்றும் பேர்கன்-ஒஸ்லோ கொடை யாளிகள் முன்நிற்பார்கள் என்பது உறுதி.

**ஜி. பி. பேர்மினன்**

---

**சமூக சேவை அமைப்பு – கனடா, அமெரிக்கா**

கனடா, அமெரிக்கா சமூகசேவை அமைப்பானது கனடாவிலும், அமெரிக்காவிலும் வாழுகின்ற குருநகர் வாழ் மக்களால் அமைக்கப் பட்டது. இந்த சமூக சேவை அமைப்பானது 1996 ஆம் ஆண்டு அங்கு வாழும் நற்சிந்தனை கொண்ட சில இளைஞர்களாலும், பெரியவர்களாலும் கனடாவில் ரொறன்ரோ நகரில் ஆரம்பிக்கப் பட்டது. இந்த அமைப்பின் நோக்கமானது.

1) கனடாவிலும், அமெரிக்காவிலும் புலம் பெயர்ந்து வாழுகின்ற எம் குருநகர் மக்களின் ஒற்றுமையை வளர்த்தல்.

2) அமைப்பின் நலன்களுக்காக உழைத்தல்.

3) குருநகரில் வாழுகின்ற எமது மக்களின் கல்வி, கலாசார, சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும் உழைத்தல்.

4) வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவி செய்தல் ஆகும்.

அடுத்து குருநகரில் வாழும் எம் மக்களின் நிரந்தர முன்னேற்றம் அவர்களது கல்வி வளர்ச்சியிலே தங்கியுள்ளது என்பது எமது நம்பிக்கையாகும். எனவேதான் எம் மக்களின் கல்வி வளர்ச்சிக்கான எம்மாலான எல்லா உதவிகளையும் செய்வது எம் தலையாய கடமை என ஏற்றுச் செயற்பட முனைந்தோம்.

இந்த அடிப்படையில் எம் எண்ணங்களை செயல் வடிவமாக்கி நிறைவேற்றி பணிபுரிய, 2002 ஆம் ஆண்டு கனடா - அமெரிக்கா சமூக சேவை அமைப்பின் குருநகர் கிளையை ஆரம்பித்தோம். இந்த சமூக சேவை அமைப்பின் ஆரம்பத்தில் உறுப்பினர்களாக அங்கத்தவர் தெரிவாகினர். அதன் பின்னர் சில அங்கத்தவர்கள்



தம் சொந்த தேவை காரணமாக நீக்கப் பெற்றதையடுத்து ஏனைய அங்கத்தவர்கள் சேவையின் அடிப்படையில் பணிபுரிய ஆரம்பித் தனர்.

எமது அமைப்பின் முதல்கட்ட நடவடிக்கையாக எம் இலக்கினை அடையவும், கல்வி வளர்ச்சியடைய சிறுவயதிலேயே கல்விக்கு அத்திவாரம் இடப்படவேண்டும் என்பதை உணர்ந்து, குருநகர் சன சமூக நிலையத்தின் கீழ் இயங்கும் குருநகர் சன சமூக நிலைய முன்பள்ளிக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்தோம்.

2003 ஆம் ஆண்டு தை மாதம் குருநகர் சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் எமது அங்கத்தவர்கள் உரையாடி எமது திட்டங்களை எடுத்துக்கூறினோம். அவர்களும் இத் திட்டத் தினை வரவேற்றதையடுத்து குருநகர் சன சமூக நிலைய அனுசரனையுடன் குருநகர் முன் பள்ளியை வழிநடத்தினோம். இன்றுவரை வழிநடத்திக் கொண்டிருக்கின்றோம். எனவே முன்பள்ளியை வழிநடத்தும் திட்டமாக;

1) மாணவர்களிடம் நிதி அறவிடப்படாமை.

2) மாணவர்களுக்குரிய சீருடையை இலவசமாக வழங்குதல்.

3) முன்பள்ளியில் நடைபெறுகின்ற விளை யாட்டுப்போட்டி, சிறுவர் தினம், ஒளிவிழா, சுற்றுலா போன்ற நிகழ்வுகளுக்கு நிதி வழங்குதல்.

4) வருடா வருடம் முன்பள்ளிக்கு தேவை யான உபகரண செலவுகளுக்கு நிதி வழங்குதல்.

5) முன்பள்ளியின் கட்டடத்திற்கு வர்ணம் பூசுதல்.

6) முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதல்.

இவ் வண்ணமாக முன்பள்ளியின் முக் கிய தேவைகளை உடனடியாக நிறைவேற்றுதல் போன்றவற்றை செய்து முன்பள்ளியின் வளர்ச் சிக்கு இன்றுவரை 9 வருடங்களாக நேசக்கரம் நீட்டி நிற்கின்றோம்.

அத்தோடு முன்பள்ளி வளர்ச்சியடைய வேண்டுமென்பதற்காக மேற்பார்வையும் செய்து வருகின்றோம். இதனடிப்படையில் எமது உதவிகளுக்கு சரியான பலனாக குருநகர் சன சமூக நிலைய முன்பள்ளி வளர்ச்சியினை காண்பது எமக்கு மனநிறைவைத் தந்துள்ளது.

அத்தோடு நின்றுவிடாது 2007ஆம், 2008ஆம் ஆண்டுகளில் நாட்டில் யுத்தம் காரணமாக எமது மக்கள் பல நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்தது. இந் நிலைமையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து (350 குடும்பங்கள்) அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் நிதி வழங்கினோம்.

2007ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற குருநகர் சன சமூக நிலைய முன்பள்ளியின் கண்காட்சியை சிறப்பாக நடாத்த நிதி உதவி வழங்கினோம்.

எனவே நாம் இந்த உதவிகளை சரியான முறையில் திட்டமிட்டபடி செய்வதற்கு கனடா, அமெரிக்காவில் வாழ்கின்ற எமது தலைமைக் கிளையினர் எமது சகோதரர்களிடம் மாதாந்த சந்தாப் பணங்களை சேகரித்து உரிய காலத்தில் அனுப்பி உதவி செய்கின்றனர். எனவே எமது சமூக சேவை அமைப்பானது எப் பணி செய்யினும் அவை யாவும் எம் மக்களின் நன்மைக்கே என்று கூறிக் கொள்கின்றோம்.

அடுத்து காலத்துக்கு, காலம் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் இங்கு வருகை தரும்போதெல்லாம் எம் செயல்பாடுகளில் அக்கறை கொண்டு அவற்றை நேரடியாக பார்வையிடுவதோடு எம்மையும் ஊக்குவிக்கின்றனர். எனவே புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் எமது மக்கள் ஒற்றுமையாக செயல்ப்பட்டால் மட்டுமே எமது மக்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை முன்னெ டுக்க முடியும் என்பதை நாம் நன்றாகவே உணர்ந்திருக்கின்றோம். எனவேதான் கனடாவில் அவர்களை ஒன்றுபடுத்தும் வகையில் பல ஒன்றுகூடல்கள் வருடா வருடம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் வருடா வருடம் கோடை கால ஒன்று கூடல் பூங்கா

ஒன்றிலும், நத்தார் ஒன்றுகூடல் அழகான தொரு மண்டபத்திலும் மிகச் சிறப்பாகவும் மகிழ்ச்சியா கவும் நடத்தப்படுகின்றது. இப்படியான விழாக்களில் வெளிப்படும் ஒற்றுமை எமது அமைப்பு இன்னும் பல்லாண்டு காலம் நீடிக்கும் என்னும் நம்பிக்கையை எமது மனங்களில் விதைக்கின்றது. இந்த நம்பிக்கையே எமது அமைப்பின் பலம், ஒற்றுமை. எம்மிடம் பலம் இருக்கும் வரையில் எமது சேவையும் தொடரும். எனவே நல்லதையே நினைப்போம் நல்லதையே செய்வோம் என்று உறுதியோடு கூறிக்கொள் கின்றோம்.

**திரு. ம. ராஜன்**

---

## புலம் பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம்.

புலம் பெயர் சுவிஸ் வாழ் மக்கள் ஒன்றியம் சுவிஸ்லாந்தில் 1997 இல் 8 அங்கத்தவர்களுடன் ஆரம்பமாகி 2002 இல் 15 உறுப்பினர்கள் இணைக்கப்பட்டு புனரமைப்பட்டது. அதன் போது தலைவர் பி. றெஜிறேமண்ட் (ஜீவா), செயலாளர் வி.பி. டியூக், பொருளாளர் அ.சாள்ஸ் திலீபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ் அமைப்பின் நோக்கமானது வறுமைக்கோட்டில் வாழ்பவர்கள், துணை இழந்தோர், அங்கவீனர்களுக்கு உதவுவதாகும். இதனடிப்படையில் 2002 ஆம் ஆண்டில் 'புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம் - குருநகர்' என்னும் பெயரில் 5 அங்கத்தவர்களுடன் குருநகரில் ஆரம்பமானது. 2002ஆம் ஆண்டு குருநகர் கிளை உறுப்பினர்களாக, பே. யஸ்மலர், அ. மேரி அல்போன்சா, தா. றெமிஜியஸ், மு. டக்கிளஸ் எமில்ராஜ், யே. சுகிர்தா. ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இக்கால கட்டத்தில் சுவிஸிலிருந்து வருகை தந்த திரு. பிராஞ்சிஸ் ஜீவா, திரு. ரொனிக்கட்ஸ் அவர்களும் மேற்கூறிய குழுக்களோடு இணைந்து வறுமைக்கோட்டில் வாழும் துணை இழந்தோரை நேரடியாக சந்தித்து பதிவினை மேற்கொண்ட தோடு உடனடியாகவே வங்கியில் பணமும் போடப்பட்டது. அத்தோடு 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வறுமைக்கோட்டில் வாழும் 250 துணையிழந் தோரைத் தெரிவுசெய்து அவர்கள் அனைவருக் கும் ஐயாயிரம் ரூபாவீதம் வங்கியில் போடப் பட்டது.

அத்துடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 85 குடும்பங்களை தெரிவு செய்து அவர்கள் குடும்பங்களில் உள்ள வயது குறைந்த பிள்ளைகள் உரிய காலத்தில் பயனடையும் வண்ணம் ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபா வீதம் வங்கியில் போடப்பட்டது. இதனால் 85 பிள்ளைகள் பலனைப் பெற்றுள்ளனர். அடுத்து 2003 ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 20 அங்கவீனர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்கள் மாதாந்தம் 500 ரூபா பெறுவதற்கேற்றவாறு ஒவ்வொரு வருடமும் ஆறாயிரம் ரூபா வீதம் இன்றுவரை வங்கியில் போடப்பட்டு அவர்கள் பயனடையும் வண்ணம் நாம் உதவி வருகின் றோம். அத்தோடு மேலும் 30 அங்கவீனரை தெரிவு செய்து அவர்களுக்கு ஐயாயிரம் ரூபா வழங்கி உதவி செய்துள்ளோம்.

மீண்டும் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் 5 அங்கவீனரைத் தெரிவு செய்து இவர்களை யும் மாதம் 500 ரூபா பெறும் திட்டத்தில் இணைத்து உதவி செய்து வருகின்றோம். மேலும் 2010-2011 வரை 2 அங்கத்தவரை இழந்த 23 அங்கவீனருக்கு உதவி செய்து வருகின்றோம்.

அத்தோடு 2006 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் சுவிஸிலிருந்து வருகை தந்த அமைப்பின் தலைவர் ஜீவா அண்ணண் வருகைதந்ததோடு புதிய உறுப்பினர்களையும் இணைத்து நிர்வாகக் கட்டமைப்பு அமைக்கப்பட்டது. அதன் பிரகாரம் தலைவராக திருமதி அன்ரன் மேரி அல்போன்சா, செயலாளராக செல்வன் பிரியானந்தன், பொருளாளராக திருமதி. ஜான்சன் ஆன் யஸ்மலர், நிர்வாக உறுப்பினர்களாக முடியப்பு டக்கிளஸ் எமில்ராஜ், சி. அன்ரனி ரமேஸ், தா. றெமிஜியஸ், ஜி. கமில்ரன், அ. கொன்சன்ரைன், யோ. சுகிர்தா, ம. இம்மானவல், அ.சூரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

2006 ஆம் ஆண்டின் பொருளாதார



நெருக்கடி காரணமாக வறுமைக்கோட்டின் கீழ் 80 குடும்பங்களை தெரிவுசெய்து அவர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கக்கடையில் நிவாரணம் பெற்றுக்கொள்ள நிதி உதவி வழங்கினோம். அது மட்டுமல்லாது வறுமைக்கோட்டில் வாழும் குடும்பங்களுக்கு அங்கத்தவர் அடிப்படையில் நிதியும் வழங்கினோம். 2007 ஆம் ஆண்டிலே எமது அங்கத்தவர் ஒருவரை இழந்தோம். மூவர் சொந்த வேலை காரணமாக விலகிக்கொண்டனர். அத்தோடு ம. சர்மினி என்பவர் எமது அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டு 9 உறுப்பினர்கள் பணி புரிந்து வந்தோம்.

2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனித யாகப்பர் ஆலயம், பரிசுத்த புதுமை மாதா ஆலயம், புனித கார்மேல் மாதா ஆலயம் ஆகிய வற்றிற்கு மலசல கூடம் அமைப்பதற்கு 120,000 ரூபா கொடுத்து உதவினோம். அடுத்து சன சமூக நிலைய முன்பள்ளிக்கு மலசல கூடம் அமைப் பதற்கு 5,000 ரூபா கொடுத்து உதவினோம்.

மேலும் 2007 ஆம் ஆண்டிலே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 15 உயர் வகுப்பு மாணவர்களை தெரிவு செய்து அவர்கள் கல்வி மேம்பாடடைய ஒரு மாணவருக்கு 500 ரூபா வீதம் ஒவ்வோரு மாதம் வழங்கி வந்தோம். அதன் பின் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் 24 பேரை தெரிவு செய்து அவர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 500 ரூபா வீதம் வழங்கி உதவி செய்து வந்தோம். அதாவது ஒரு மாணவர் உயர்தர வகுப்பிற்கு தெரிவாகி பரீட்சை எழுதும் காலம் வரை உதவி செய்து வந்தோம்.

2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடந்து கொண்டிருந்த இரவுப்படிப்பு மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் வழங்குவதற்கு 10,000 ரூபா அன்பளிப்பு கொடுத்து உதவினோம். அடுத்து 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை உள்ள காலப்பகுதியில் வன்னியிலிருந்து வந்த மக்களுக்கு அங்கத்தவர் அடிப்படையில் 500 ரூபாமுதல் 2,000 ரூபா வரை நிதி வழங்கினோம்.

மேலும் 2009 ஆம் ஆண்டில் புதிய அங்கத்தவர் திரு. கிளம்பேட் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார். ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிற்கும் இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர்கள் செயல்ப்பட்டு வந்தனர். அதன் பிரகாரம் ஜே/68 பிரிவிற்கு 2 அங்கத்தவர், ஜே/ 69 பிரிவிற்கு 4 அங்கத்தவர், ஜே/70,71 பிரிவிற்கு 2 அங்கத்தவர்கள், ஜே/72 பிரிவிற்கு 1 அங்கத்தவராக பிரிக்கப்பட்டு செயல்பாடுகள் நடைபெற்று வந்தன.

அத்தோடு எமது அமைப்பானது எமது ஊரில் நடைபெறும் மரண வீடுகளுக்கு சென்று வறுமை என இனம் காணப்பட்டால் அவர் களுக்கு உதவிப்பணமாக 5,000 ரூபா கொடுத்து உதவினோம்.

2011ஆம் ஆண்டில் 6 அங்கவினர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒருவருக்கு 5,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

அடுத்து 2011ஆம் ஆண்டு பங்குனி மாதம் புதிய செயலாளராக திருமதி. அ. சர்மினி தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு சுவிஸ் அமைப்பின் தலைவர் ஜீவா அண்ணன் தலைமையின் கீழ் தெரிவாகியிருந்த 31 அங்கவீனரில் 23 அங்கவீன ருக்கும் 5 திருமணமாகாத, 5 முதியவர்களுக்கும், வறுமைக் கோட்டில் வாழும் சிறுமி ஒருவருக்கும் 5,000 ரூபா வீதம் மொத்தம் 45,000 ரூபா வங்கியில் போடப்பட்டது. மேலும் 22 அங்கவீனர்களுக்கு ஒவ்வொரு மாதம் 500 ரூபா பெறும் திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் 6,000 ரூபா வீதம் 132,000 ரூபா வங்கியில் போடப்பட்டது.

இத்தோடு நின்றுவிடாது அடுத்த செயற் பாடாக இதுவரை பயன்பெறாத துணை இழந்தோர் அனைவரையும் பதிவு செய்து, அவர்களில் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதல்கட்டமாகவும், 40 தொடங்கி 50 வயதிற் குபட்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாகவும் உதவி வழங்கவும், புதிய செயற்பாடாக 60 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், துணை இழந் தோர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சிறிய தொகையினை வழங்கவும், பெற்றோர்கள் துணையின்றி வாழும் பிள்ளைகளுக்கு உதவி செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. எமது அமைப் பானது வறுமைக்கோட்டில் வாழும் எம் மக்களுக்கு உதவி செய்வதில் ஆவலாய் உள்ளது.

எம் தலைமைப்பீடமானது இங்கிருக்கும் குழுக்களுக்கும் ஆலோசனைகளையும் வழங்கு வதோடு எம் மக்களுக்கு சேவையினை செய்வ தற்கு உரிய நேரத்தில் நிதியினையும் திட்டமிட் டபடி வழங்கி வருகின்றது. எனவே இங்கிருக் கின்ற குழுக்களும் ஒற்றுமையுடனும், மகிழ்வுட னும் பணியினை ஆற்றி வருகின்றனர்.

திருமதி. அ. மேரி அல்போன்சா

# நீண்ட வரலாற்றைக்கொண்ட குருநகர் மக்கள்


**- ஜேர்மன் குருநகர் விளையாட்டுக்கழகம்**

**யா**ழ் கடலோரப் பட்டினத்தின் கடலோ டிகளின் பாதுகாவலரான புனித யாகப்பரின் 150 ஆவது ஆண்டு விழா மலருக்கு ஜேர்மன் குருநகர் விளையாட்டுக் கழகம் தனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக்கும் இவ்வேளையில் சில வரலாற்று தரவுகளையும் பதிவுசெய்து கொள்கின்றது.

தொன்மங்களாலும், புனைவுகளாலும், வரலாற்று நிபுணர்களாலும் கட்டியெழுப் பப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதி சமூகத்தில் வரலாற்றிலும், கல்வெட்டுகளிலும், நாணயங்களிலும் குறிப்பிடப்பட்டும் திராவிட பெரும் பண்பாட்டுக்குரியவர்களாவும் தமிழ் தேசியத்தையும், தமிழரசையும், தமிழ் இறையின்மையையும் பாதுகாத்தவர்களாகவும், 13 ஆம், 14 ஆம் நூற்றாண்டில் தமிழர் ஆட்சியை பாதுகாக்க வந்த போர் வீரர்களாகவும், யாழ்ப்பாணத்தைத் தாமே ஆண்டவர்களாகவும், ஐரோப்பிய காலனித் துவத்திற்கு எதிராக குருகுலத்தலைவன் வர்ணகுலத்தான் தலைமையில் ஆயுதப் போராட்டம் நடத்தியவர்களாகவும், முன்னைய கடலோரப் பட்டணத்தின் எல்லைப் பகுதியாகிய வண்ணார் பண்ணை மற்றும் போர்த்துக்கேயரின் இராணுவ முகாமைக் கொண்டிருந்த இன்றைய அடைக்கல மாதா ஆலய வளாகம், நல்லூர் போன்ற இடங்களில் போர்த்துக்கேயருக்கு எதிராக பெருஞ்சமரை நடத்தியவர்களாகவும், போர்த்துக்கேய ருடனான போரில் தோல்வியை தழுவிய பொழுது தமது வாளாலேயே தமது உயிரைத் துறந்து கிரேக்க வீரப்புராணங்களுக்கு ஒப்பான ஒரு வீரயுகத்தை தமிழ் மரபில் தோற்றுவித்த வர்களாகவும், அகுஸ்துஸ் என்ற உரோமப் பேரரசின் காலத்திலேயே உரோம், கிரேக்கம் வரை சென்று வாணிபம் செய்தவர்களாகவும், சோழப்பேரரசின் கடல் கடந்த படையெடுப்புக் களை வழிநடத்தியவர்களாகவும், சோழ - பாண்டிய மன்னரிடத்தில் படைத்துறை சாந்த பெரும் பதவிகள் வகித்தவர்களாகவும், பூம்புகார், கொற்கை போன்ற வணிகப் பட்டினங்களுக்கும், தமிழர் நாகரீகங்களுக்கும் உரிமை பகன்றோர்களாகவும், போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்தபொழுது மேலாதிக்க நிலையிலும் முதன்மை நிலையிலும் இருந்தவர்களாகவும், குருகுலம் என அழைக்கப் பட்டவர்களினதும் அறிவிக்கப்பட்டவர் களினதும் வழித்தோன்றல்களாகிய இவர்கள் பழம்பெரும் இதிகாசமாகிய மகாபார தத்தின் நாயகர்களை, குருகுலத்தவர்களை முன்னோர் களாக கொண்டும் இன்றும் அவர்கள் வாழ்வதாகக் கூறப்படும் வட இந்தியாவின் பழைய டில்லியிலுள்ள குருநகரை தமது கடலோரப் பட்டணத்திற்கு பெயரிட்டுக் கொண்ட, பட்டங்கட்டிகள் என அழைக்கப் பட்ட குருகுல மக்களே முதன்முதலில் யாழ்ப்பாணத்தின் துறைமுகமாகிய அலுபாந்தியில் கிறிஸ்துவின் இறையரசை ஏற்றுக்கொண்ட மக்களாவர்.

வீரமும், விவேகமும் விளைந்த நெய்தல் நிலத்தின் மக்களாகிய இவர்கள் கிறிஸ்து பெருமானின் மனித விடுதலைக் கோட்பாட்டை முன்னெடுத்த போர்வீரன் புனித யாகப்பரின் பெயரால் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பு யாழ். பிரதான வீதியில் ஆலயமமைத்து புனித யாகப்பரையே தமது வாழ்வின் பாதுகாவலராகக் கொண்டு இன்று 150 ஆவது வருடத்தை பூர்த்தி செய்கின்றனர்.

கலப்புகளும், மாறுதல்களும் இல்லாத தனித்த பண்பாட்டுக்கூறுள்ள இனக் குழுவினராக கால ஓட்டத்தை எதிர்கொண்டு வந்தவர்களாகிய குருநகர் மக்கள் ஆன்மீகம் சார்ந்தவர்கள். ஆன்மீகத் திரட்சி கொண்ட இவர்கள் மனித சமூக உயர் விழுமியங்களையும் கொண்டவர்கள். ■



# அழிப்பு



*13.11.1993 சனிக்கிழமை.*

*சில வாரங்களாக மழை பெய்யாத காரணத் தினால் பகலில் வாட்டும் வெயிலும், அதிகாலையில் கொட்டும் பனியும் மக்களுக்குப் பலவகையிலும் துன்பத்தைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது.*

'ஆடியிலே காற்றடித்தால் ஐப்பசியில் மழை பெய்யும்' என்பார்கள். இந்த வருடம் ஆடிமாதம் சோளகக் காற்று சுழன்று அடிக்கவில்லைப்போலும். ஐப்பசி முடிந்தும் மழையையே காணவில்லை.

மழை பெய்யாத காரணத்தினால் பூமி சூடேறி வீசும் வரண்ட அனல் காற்றினாலும், வழமைக்கு மாறான பனியினாலும் பலரும் பலவகை நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

'மனதிலே பயம் வரும்போது தெய்வ பக்தியும் அதிகரிக்கும்' என்று சொல்லுவார்கள். துன்பங்களும் - நோய்களும் தொடர்ந்து விரட்ட ஆலயங்களையும் அவற்றில் குடிகொண்டிருக்கும் தெய்வங்களையும் தேடுவது மனித இயல்பு.

அதன் வெளிப்பாடாய், அதிகாலைப் பனியிலும், குருநகர் புதுமைமாதா ஆலயத்தில் நடைபெற்ற வழமையான திருப்பலியில் மக்கள் நிறைந்திருந்தனர். வாரத்தில் செவ்வாய், சனி நாட்களில் புதுமைமாதா ஆலயத்தில் காலைத் திருப்பலி நடைபெறுவது வழமை.

**குருநகர் புனித யாகப்பர் ஆலயம் 13.11.1993 அன்று விமானக் குண்டுத் தாக்குதல்களால் தகர்க்கப்பட்டது. அந்த நிகழ்வை இன்றையோர் பலர் மறந்த நிலையில் அவர்களுக்கு நினைவூட்டும் முகமாகவும், இதுவரை அறிந்திராதவர்கள் அறிந்துகொள்வதற்கும் ஏதுவாகவும், அந்நிகழ்வைச் சித்தரிக்கும் வகையில் அமைந்த இக்கதை மீள் பிரசுரமாகின்றது. இது 2007 இல் வெளிவந்த கலையார்வனின் 'குருதிக் குளியல்' நூலிலிருந்து எடுக்கப்பட்டது.**

தினம் தினம் பலநூறு பக்தர்கள் சந்தித்துச் செல்லும் 'புதுமைமாதா ஆலயத்'திற்கு நீண்ட வரலாறு உண்டு. 28.10.1621 இல் போர்த்துக்கேயரினால் தமது நாற்சதுரக் கோட்டைக்குள் கட்டப்பட்டு முற்றுப்பெறாத நிலையிலிருந்த 'வெற்றிமாதா' ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 'மாதா' சுரூபம் பல புதுமைகள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்ததாக அறியப்பட்டமையால் 'புதுமை மாதா' எனவும், 'புதுமை மாதா ஆலயம்' எனவும் அந்நாளில் அழைக்கப்பட்டது.

21.06.1658 இல் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி போத்துக்கேய கோட்டையையும், அதனுள் கட்டப்பட்டிருந்த 'புதுமை மாதா' (வெற்றிமாதா) ஆலயத்தையும் தகர்த்தபோது குருவானவர்கள் புதுமை மாதா சுரூபத்தை எடுத்து மறைத்து வைத்தனர். அவர்கள் 'பத்தேவியா' வுக்கு நாடு கடத்தப்பட்ட போது சுரூவத்தையும் தம்முடனே எடுத்துச் சென்று 'கோவை' நகரில் 'புனித பிரான்சீஸ் அசிசியார்' ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்தனர்.

புதுமை மாதாவின் பக்தியில் மூழ்கியிருந்த கிறிஸ்தவர்களின் தொடர்ச்சியான முயற்சியால் கோவையில்

பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மாதா சுரூபத்தை ஒத்த சாயலில், யானைத் தந்தத்தில் சுரூபத்தைச் செதுக்கி, பல பிரயத்தனங்களின் பின்னர், குருநகரில் 28.08.1887 இல் கட்டி முடிக்கப்பட்ட 'புதுமை மாதா ஆலயத்தில்' ஸ்தாபித்து வழிபாட்டைத் தொடர்ந்தனர். யாழ்ப்பாணத்தில் பல புதுமைகளைச் செய்த புதுமை அன்னை, தம்மை என்றும் அழிவிலிருந்து காப்பாற்றுவர் என்ற நம்பிக்கை மக்களுக்கு நிறையவே இருந்தது. அதை உணரும் நாளாக இன்றையநாள் அமையுமென்பதை அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

இருமல், தும்மல், பெருமூச்சுச் சத்தங்களுக்கு மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருந்த திருப்பலி நிறைவு பெற்றதும், கொண்டாட்ட வீடுகளில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளில் ஆரம்பப் பாடலாக கத்தோலிக்க பக்திப் பாடல்கள் போட்டிபோட்டு ஒலிக்கத் தொடங்கின.

அதிகாலை நேரமென்பதால் பக்திப் பாடல்கள் எல்லோர் மனதிற்கும் ஆறுதலைக் கொடுத்தது. ஒலிக்கும் பாடலின் வரிகளைத் தாமும் ஒத்துப் பாடியவாறு ஆலயத்திலிருந்த பக்தர்கள் வெளியேறிக்கொண்டிருந்தனர்.

வாடைக்காற்று மற்றும் பனியின் குளிர்மையில் அயர்ந்து தூங்கிவிட்ட கதிரவன் குருநகரின் சனிக்கிழமை ஆரவாரங்களைப் பார்த்து இரசித்தவாறு மெல்லத் தலைகாட்டலானான்.

பனியை ஊடுருவி எறித்த கதிரவனின் ஒளிக்கதிர்களைத் தம் உடலில் ஏந்தியவாறு அன்றைய தினக் கற்பனைகளுடன், பலர் தமது வீடுகள் நோக்கியும், சிலர் 'புனித யாகப்பர் ஆலயம்' நோக்கியும் சென்றுகொண்டிருந்தனர்.

செவ்வாய், சனி தவிர்ந்த ஏனைய வார நாட்களில் புனித யாகப்பர் ஆலயத்தில் காலைத் திருப்பலி நடைபெற்று முடிந்த பின்னர் அனேகர் அங்கே தரித்து நின்று தனிப்பட்ட வேண்டுதல்களுக்காய் செபம் சொல்லிவிட்டுச் செல்வது வழமை.

புதுமைமாதா ஆலயத்தில் திருப்பலி நடைபெற்றாலுங்கூட அது முடிந்த பின்னர் புனித யாகப்பர் ஆலயம் சென்று அங்கும் செபம் சொல்லிவிட்டுச் செல்வர். இதனைக் குறைந்த தொகையினரே வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.

அவர்கள் சிறு சிறு குழுவினர்களாகப் புனித யாகப்பர் ஆலயம் நோக்கிச் செல்லலாயினர்.

❖❖❖

பூமி பனியின் ஆக்கிரமிப்பிலிருந்து வெகு சீக்கிரமே விடுபட்டதை வெயிலின் அகோரம் உணர்த்தி நின்றது. 'அதிகாலையில் இத்தனை அகோரமா?' என்ற கேள்வி மக்களிடையே எழத்தான் செய்தது.

சனிக்கிழமை பாடசாலை விடுமுறையென்பதால் பிள்ளைகளின் நச்சரிப்புகளுடன் முழுகுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர் பெற்றோர்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக இருப்பதால் அந்நாளை மகிழ்வுடன் வரவேற்கத் தயாராவதுபோல் எல்லோரும் சனிக்கிழமைகளில் தவறாது முழுகுவர். ஞாயிறு அதிகாலை நடைபெறும் திருப்பலிக்குச் செல்வதற்குரிய ஆயத்த நடவடிக்கைக்கான முழுக்கு எனவும் கொள்ளலாம்.

தாரா முட்டை - பழங்கஞ்சி, சிகைக்காய், சம்போ, போன்றவற்றில் எதையாவது தத்தமது விருப்புக்கு ஏற்றவாறு பயன்படுத்தி முழுகுவதற்குத் தயார்படுத்திக்கொண்டு நின்றனர்.

வானிலே சற்றுத் தொலைவில் இரைச்சல்...

இரைச்சல் நெருங்கி வருவதை உணரக் கூடியதாக இருந்தது.

"சுப்பர்சோனிக்..."

சிறுவர்களின் குரல்கள் உரத்து ஒலித்தன.

இரைச்சலின் தன்மையைக்கொண்டு குறித்த ரக விமானமென்பதை ஊகித்தறிவதற்கு சிறுவர் முதல் பெரியவர் வரை தம்மைப் பழக்கப் படுத்திவிட்டார்கள்.

வானிலே சத்தத்தை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு காலைக் கதிரவன், தன் ஒளியினால் 'சுப்பர்சோனிக்' குண்டுவீச்சு விமானம் என்பதை அடையாளம்காட்டி, சிறுவர்களின் ஊகத்தை உண்மையென உறுதிப்படுத்தினான்.

கணிசமான உயரத்தில் பறந்தவாறு குருநகரை வட்டமிட்ட சுப்பர்சோனிக், சூரியனைப் பிடித்திடச் செல்வதுபோல் கிழக்கு நோக்கி வேகமாகச் சென்றது.

விமானத்தின் இரைச்சலினால் வீடுகளிலிருந்தவர்கள் வீதிகளுக்கு வந்துவிட்டார்கள்... சிலர் முழுகத் தயாரான உடையுடனும், சிலர் முழுகிய குறையிலும் வந்துவிட்டார்கள்..

விமானத்திலிருந்து போடப்படும் குண்டுகளை அவை போடப்பட்ட இடங்களிலிருந்து தரையைத் தொடும்வரை நிற்பவர்களால் பார்க்கக் கூடியதாக இருக்கும். அதனால் அது விழக்கூடிய அண்ணளவான இடத்தை விரைவாக ஊகித்து அதற்கேற்றாற்போல் நிலத்தில் குப்புறப் படுத்துத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் வித்தையை அனேகர் அனுபவத்தால் அறிந்திருந்தார்கள். அதற்கென வெற்றுவெளிகள் மற்றும், வீதிகளையே

தேடிச்செல்வர்.

பழக்கப்படுத்திக்கொண்ட வரையறையாக இந்த நடைமுறைதொடர்ந்தபோதும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'சுப்பர்சோனிக்' விமானத்தின் வேகம் அவர்களின் நடைமுறைக்கு ஒத்தனவாக அமையாது என்பதையும் அறிந்திருந்தனர்.

கிழக்கே சென்ற விமானம் அதே வேகத்தில் வட்டமடித்து மேற்கு நோக்கி திரும்பி வந்தது.

வீதிகளில் நின்ற அனைவரின் கண்களும் இமைமூடாது விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

எதையோ தேடுவதுபோல் வட்டமிட்ட விமானம், வானிலே சாகசம் காட்டுவதைப்போலப் புரண்டு நிமிர்ந்தது, உயர்ந்து பதிந்தது.

வேடிக்கையைப் பார்த்தவாறு நின்ற சிறுவர்களின் உதடுகள் பயத்துடன் கூடிய சிரிப்பை வெளிப்படுத்தின. சில சிறுவர்கள் கைகளைத் தட்டியவாறு துள்ளி விழுந்தனர். கைகளை அசைத்துக் காண்பித்தனர். அந்த இடத்தில் பெற்றோரின் அதட்டல்களும் இல்லாமலில்லை.

விமானத்தின் வேகம் திடீரென அதிகரித்துக் காணப்பட, நின்றவர்களின் இதயத் துடிப்பும் அதிகரித்தே காணப்பட்டது. மீண்டும் கிழக்கு நோக்கிச் சென்ற விமானம், உயர எழுவதைப்போல் தெரிந்தது.

"நல்லா உயரப்போறான்.... போடப்போறான் போலிருக்கு.... அந்தா.... அந்தா குத்துறான்.... நல்லாப் பதியிறான்..... திரும்புறான்.... அந்தா போட்டுற்றான்.... குண்டு போட்டுற்றான்...."

பலரது குரல்கள் பின்னிப் பிணைந்து ஓங்கி ஒலித்தன.

பிரதான வீதி – ஓடைக்கரை வீதிச் சந்திக்கு வடகிழக்கால் சற்றுத் தள்ளி, நேரே உயரத்தில் பாரிய இரண்டு குண்டுகள் வீசப்பட்டதைப் போன்ற கிரகிப்பை பலரும் கொண்டிருந்தனர்.

குண்டுகளை வீசிய விமானம் மண்டைதீவை நோக்கிய திசையில் வேகமாகச் சென்று மறைந்ததையும், வீசிய குண்டுகள் இரண்டும் முன் பின்னாக தென்மேற்குத் திசை நோக்கி விரைவாகப் பதிந்து வருவதையும் பார்த்தவர்கள், பயத்தி னால் எழுந்த நடுக்கத்தால் கால்கள் நிலத்தில் பட்டும் படாத வகையில் தடுமாற நின்றார்கள்.

"இங்கேதான் வரும்போல இருக்கு. வாங்க ஓடுவோம்"

குண்டு வந்துகொண்டிருந்த திசையில் நின்ற சிலர் தமக்குள்ளே முடிவெடுத்தவர்களாக பாதுகாப்புத்தேடி ஓடிடலானார்கள்.

பாதை விலகாமல் வந்துகொண்டிருந்த குண்டுகள் இரண்டும் ஆறாம் குறுக்குத்தெருவை ஊடறுத்துத் தாழ்வாகக் கடந்தது.

குண்டுகள் வீசப்பட்ட இடத்தைக் கண்டிராது ஓசையை மட்டும் கேட்டிருந்த சிலர் அப்போதுதான் குண்டுகளின் வரவைக் கண்டார்கள்

மிக அண்மையில் விழப்போவதை உணர்ந்தவர்கள் நின்ற இடங்களிலே நிலத்தில் குப்புறப் படுத்துவிட்டார்கள். இவையெல்லாம் கணநேரங்கள்தான்

"டும்..."

"................."

"டும்..."

செவிப்பறை உடைந்திடும் அளவிற்கு சத்தங்கள்.

வான்நோக்கி எழுந்தது தீப்பிழம்பு.

பூகம்பம்போல் இரு தடவைகள் நிலம் அதிர்ந்தது.

கட்டடங்கள் பல தள்ளாடின.

பல வீடுகளிலிருந்த கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டன.

ஆறாம் குறுக்குத் தெரு – பாங்ஷால் வீதி –



பிரதான வீதி - சின்னக்கடை வீதி போன்றவற்றில் நின்றவர்கள் சிலர், சில மீற்றர் தூரம் தூக்கி யெறியப் பட்டனர்.

நிலத்தில் படுத்துக்கிடந்தவர்களும் புரட்டப் பட்டனர்.

இவற்றினால் பலர் காயமடைந்தனர்.

வெடி மருந்தின் நாற்றம் மூக்கை அரித்தது. சிலர் வாந்தி எடுத்தனர். சிலர் மயங்கிவிட்டனர்.

அதிர்வால் காதுகள் மரத்துவிட்டன. காதுக்குள்ளே மிகுதியான இரைச்சல்.

படுத்துக்கிடந்த பலரைப் பறந்துவந்த மரச் சிராய்கள் தாக்கிக் காயத்தையும் ஏற்படுத்தின.

நாலாம் குறுக்குத்தெரு - கடற்கரை வீதி - ஓடைக்கரை வீதி - பிரதான வீதிகள் வரையுள்ள வீடுகளிலிருந்தவர்கள் சிவப்பு நிறத்திலான புழுதியில் தோய்ந்திருந்தார்கள்.

இவ் வீதிகளுக்கு அப்பாலுள்ள இடங்களில் நின்றவர்களும், இருந்தவர்களும் தூக்கியெறியப்பட்டார்கள். அவர்களில் சிலர் சிவப்புச் செறிந்த புழுதியும் - புகையும் இணைந்து, இரண்டு தென்னை மர உயரத்திற்கு மேலாக எழுந்ததைக் கண்டு பயத்தில் உறைந்து போனார்கள்.

இரும்புத் தகரத்தினாலும் - வார்ப்பினாலுமான சிறிய, சற்றுப் பெரிய, சுருண்ட துண்டுகள் நாலாபுறமும் சிதறிப் பறநதன.

நெருக்கமான வீடுகளென்றபடியால் பெரும்பாலான துண்டுகள் வீட்டுக் கூரைகளையே பதம்பார்த்தன. தென்னை மரங்கள் சிலவும் அவற்றை ஏந்திக்கொண்டன.

இத்துண்டுகள் கிட்டத்தட்ட நானூறு மீற்றர் தூரமுள்ள 'புனித செபஸ்ரியார்' ஆலயத்தின் முன்னால் நின்ற ஒருவரைத் தாக்கி முதுகில் பெரும் வெட்டுக் காயத்தை ஏற்படுத்தியது.

ஐந்நூறு மீற்றர் தூரமுள்ள தண்ணீர்த் தாங்கி வீதியும், புதிய கடற்கரை வீதியும் சந்திக்கும் இடத்தில் நின்று வேடிக்கை பார்த்த ஒருவரைத் தாக்கி தோள்பட்டையைக் கிழித்து படுகாயத்தை ஏற்படுத்தியது.

இதுபோன்று பலர் தாக்கப்பட்டு சிறிய - பெரிய காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

குண்டுவெடிப்பின் அதிர்விலிருந்து இன்னமும் மீளாத சிலர் வீதிகளில் படுத்தவாறே கிடந்தனர். மீண்டவர்கள் எழுந்து ஓடத் தொடங்கினர்.

தமக்கு ஏற்பட்ட காயங்களைக்கூட பொருட்படுத்தாமல், 'எங்கு குண்டுகள் விழுந்தது' என்பதைக்கூட அறிந்திட ஆர்வமில்லாமல் ஓடிக் கொண்டேயிருந்தார்கள்.

இத்தனை ஆரவாரங்களுக்கும் மத்தியில்... குண்டை ஏந்திக்கொண்ட 'புனித யாகப்பர் ஆலயம்' தீச்சுவாலை - புகை - புழுதிகளுக்குள் முற்றாக மூழ்கிக் கிடந்ததைப் பார்த்தவர்கள் சிலரே. அவர்களில் ஒருவரேனும் அங்கே தரித்து நிற்கவில்லை. தம்மைக் காப்பாற்றிக்கொள்ள கடற்கரையை நோக்கியும், குருநகர் விளையாட்டு மைதானம் நோக்கியும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

ஓடியவர்கள் தெரிவித்துச்சென்ற தகவல்களினால் புனித யாகப்பர் ஆலயத்தில் குண்டு விழுந்து வெடித்தமையைப் பலரும் அறியக் கூடியதாக இருந்தும் முன்னைய அனுபவத்தின் வெளிப்பாட்டினால் எழுந்த பயம் காரணமாக 'குண்டு வீச்சுகள் தொடரலாம்' என்றெண்ணி ஆலயத்திற்கு வர அஞ்சி நின்றார்கள்.

❖❖❖

புனித யாகப்பர் ஆலயக் கட்டட உடைவின் பகுதிகள் விழும் சத்தங்கள் இடைக்கிடையே கேட்டுக்கொண்டிருந்தன.

பாலை மரத்தினாலான ஆலயத்தின் கூரைச் சட்டங்கள் சிராய்த் துண்டுகளாகிப் பறந்து சுற்றுப்புறமுள்ள வீதிகளில் மிகுதியாகச் சிதறிக் கிடந்தன.

ஆலயக் கூரையின் பாலைத் தீராந்திகளிலொன்று குருநகர் சனசமூக நிலையம் நோக்கிய திசையில் தூக்கியெறியப்பட்டு 150 மீற்றர் தூரமுள்ள கடற்கரை வீதியில் விழுந்து கிடந்தது. அந்நேரம் எவரும் அங்கு இல்லாமையால் உயிரிழப்பு ஏற்படவில்லை.

ஊரே அடங்கிவிட்டது...

வீதிகளில் எவரும் காணப்படவில்லை. பாதுகாப்புத் தேடி வீடுகளைவிட்டு வெளியேறியவர்கள் வாய்க்கால் மதகுகளின் கீழும், குருநகர் விளையாட்டு மைதானத்திலும் பதற்றத்துடன் நின்றார்கள்.

இடைக்கிடை அவர்களின் பார்வை வானத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. தலையிலே குண்டு விழுந்துவிடுமோ என்ற அச்சம்.

வானத்தைப் பார்த்துப் பார்த்துப் பலரது கண்கள் பூஞ்சை பிடித்து ஒளிமங்கிக் காணப் பட்டன.

வானளாவ எழுந்த புழுதி மற்றும், புகையின் அடர்த்தி மெல்ல மெல்லக் குறைந்துவர புனித யாகப்பர் ஆலயத்தின் தூபிமாடம் வெண்மையாகத் துலங்கத் தொடங்கியது. காலைக் கதிரவனின் ஒளி தூபிமாடத்தின் வெண்மைக்கு மேலும் ஒளியூட்டி, தெளிவூட்டி நின்றது.

குண்டு போடப்படலாமென்ற பயத்தில் நின்றவர்கள் அதனை மறந்து கோபுரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கால் மணி நேரம் கடந்தது...

மேற்கொண்டு குண்டு விழாது என்ற நம்பிக் கைகொண்ட பத்துப்பேர் வரையிலானோர் ஆலயத் திற்கு முன்னாலுள்ள பாங்ஷால் வீதியில் இணைந்து கொண்டனர். குண்டுவெடிப்பால் வான்நோக்கி எழுந்து, அடங்கியிருக்கும் தீச்சுவாலையின் வெப் பம் மற்றும், ஆலய வளவை மூடியவாறு காணப்பட்ட அடர்ந்த புழுதியினால் எவரும் நெருங்க முடியாத வாறு தடுக்கப்பட்டிருந்தார்கள்.

சிறிது நேர தாமதம்...

நின்றவர்கள் பொறுமையிழந்தவர்களாய் புழுதிக்குள் நுழைந்து விட்டார்கள்.

மேலும் சிலர் வீதியில் கூடினர்.

புழுதிக்குள் புகுந்தவர்கள் புதைகுழியைக் கண்டதுபோல் அலறிய சத்தம்கேட்டுப் புதிதாக வந்தவர்களும் நுழைந்தார்கள்.

ஆலயத்திற்கும், பங்குத்தந்தையின் பணி மனைக்கும் இடைப்பட்ட தரையில் புழுதி தோய்ந்த நிலையில் உடல்கள்....

உணர்ச்சி மேலிட ஓடிவந்தவர்களில் சிலர் இவற்றில் சிலவற்றைக் கடந்தும் வந்திருந்தார்கள். அவர்கள் தமது தவறையுணர்ந்து குறுகி நின்றனர்.

'ஆலயத்திற்குக் குண்டு போடமாட்டார் கள்' என்ற எண்ணத்தில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆலயத்தைத் தேடி ஓடிவந்தவர்களே குண்டுவெடிப்பினால் தூக்கியெறியப்பட்டு காயங் களுடனும், மயக்க நிலையிலும் விதைக்கப்பட்டுக் கிடந்தார்கள். அவர்களை குருவானவரின் பணி மனைக்குத் தூக்கி வருவதில் அங்கு நின்றவர்கள் முழுமூச்சாய் ஈடுபட்டனர்.

கணம்கூடத் தாமதியாது ஓடியோடி காரியமாற்றினர்.

அவர்களின் துரித செயற்பாட்டால் இருபது பேர்வரை கண்டெடுக்கப்பட்டார்கள்... வேறு எவரா வது இருக்கலாமென்ற சந்தேகத்தில் ஆலயச் சுற்றாடல் முழுவதும் சல்லடைபோட்டுத் தேடினர்.

அவர்கள் எதிர் பார்ப்பு வீண்போக வில்லை. ஆலயத்தின் மேற்குப்பக்க வெளி விறாந்தையிலும், புல் தரையிலும் ஐவர் காயங்களுடன் கிடந்தனர்.

இதுவரை கண்டெடுக்கப்பட்ட இருபத்தைந்து பேரில், அடையாளம் கண்டு பிடிக்க முடியாதவாறு புழுதி தோய்ந்த நிலை யில் கிடந்தவர்களைத் துடைத்துச் சுத்தம் செய் யும் பணி தீவிரமாக மேற் கொள்ளப் பட்டது.

அதிர்வாலும், அதிர்ச்சியினாலும் அனேகர் சுயநினை விழந்த நிலையிலேயே கிடந்தனர். அவர்களுக்கு முகத் திலே நீர்தெளித்து, தம்மாலியன்ற முதலுதவி களையும் செய்தனர். படுகாயமுற்ற இருவர் சுயநினைவு மீளாத நிலையில் கிடந்தமையால் உடனடியாகவே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

'கனோஜி' என இனங்காணப்பட்ட ஏழு வயதுச் சிறுமியின் உயிர் பிரிந்துவிட்டது. சுயநினை விழந்த நிலையில் கிடந்த அவளின் தாய் நினைவு தெளிந்து எழுந்ததும் மகளைக் கட்டியணைத்துக் கதறியழுத காட்சி நின்றவர்களின் கண்களில் நீரை வரவழைத்தது.

பெரும்பாலும் கண்டெடுக்கப்பட்ட எல் லோரும் காயங்களுடனேயே காணப்பட்டனர். காயத்தின் தாக்கத்தினாலும், தூக்கியெறியப்பட்ட மையால் ஏற்பட்ட உடல் உபாதையினாலும் அவர்கள் பட்ட அவதி நின்றவர்களைக் கலங்கச் செய்தது. சிலர் வேதனை தாங்கமுடியாமல் அழுதவண்ண மிருந்தார்கள்.

அத்தனை பேரும் வைத்தியசாலைக்கு வாகனத்தில் ஏற்றிச் செல்லப் பட்டார்கள்.


வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வர்களில் அருணோதயன் (2மாதம்), நவாஜி (1வயது), வவாஜி (1வயது), நிந்துஷா (2வயது), மேலும் 7 வயது நிரம்பிய மூன்று சிறுவர்களும் இருந்தனர்.

பாங்ஷால் வீதிப் பக்கமுள்ள புனித யாகப் பர் ஆலய வெளிவாசலில் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

ஆலயச் சுற்றாடலில் புழுதி பாதியளவு அடங்கிக் காணப்பட்டபோதும், ஆலயத்தின் கூரை மரங்களும், சீமேந்துக் காறைகளும் விழும் சத்தங் கள் தொடர்ந்து கொண்டிருந்தமை நின்றவர் களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

25.07.1861 இல் அத்தி பாரமிடப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு கம்பீரமாய் எழுந்து நின்ற புனித யாகப்பர் ஆலயம் கண நேரத்தில் கற்குவியலாகக் கிடந்ததை, அடங்கிச் செல்லும் புழுதியின் ஊடா கப் பார்த்தவர்கள் குமுறி னார்கள்... வாய்விட்டுக் கதறினார்கள்... உணர்வு மேலீட்டால் தடுமாறி னார்கள்...

அவர்களின் இதயம் வழமையைவிட வேகமா



கத் துடித்தது. தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆலய வளாகத்தில் நுழைந்தனர்.

கற்குவியலாய்க் கிடக்கும் ஆலயத்தைப் பார்த்துக் கண் கலங்கியவாறு இடிபாடுகளின் துகள்களை கைகளில் ஏந்தியபடி உணர்ச்சியற்று நின்றனர்.

புழுதி வெகுவாக அடங்கியும் வெடி மருந்தின் மணம் தலையைச் சுற்றுவதுபோல் இருந்ததனால் சிலர் மூக்கை மறைத்துக் கட்டிவாறு நிற்க, சிலர் நிற்கமுடியாமல் வெளியேறினர்.

தற்போது மிகக் குறைந்த புழுதிகளே காணப்பட்டமையால் ஆலயத்தின் அழிவுகளும், சுற்றாடலும் தெளிவாகத் தெரிந்தன.

ஆலயத்தின் கிழக்குப்பக்க விறாந்தையில் தொடராக இருந்த பாரிய தூண்களில் எட்டுத் தூண்கள் முற்றாகவே தகர்ந்து, சிதறிக் கற்களும் - காறைகளும் நீண்ட குவியலாகக் கிடந்தன.

ஆலயப் பின்பக்கமிருந்து 7ஆம் 8ஆம் தூண்களுக்கு இடையிலேயே ஒரு குண்டு விழுந்திருக்கவேண்டுமென ஊகிக்கக் கூடியதாக இருந்தது. அதற்கு சமாந்தரமாக இருந்த உட்சுவர் அதாவது கல்லறை ஆண்டவரின் பீடத்தை மருவியிருந்த சுவர் நொருங்கி உட்பக்கம் குவியலாகக் கிடந்தது.

1876 இல் காலியிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கற்களால் அமைக்கப்பட்ட வாசற்படிகளில் ஒன்று பலதுண்டுகளாய்ச் சிதறிக் கிடந்தது.

வைரம் பாய்ந்த ஆலயக் கதவுகள் - சாளரக் கதவுகள் - நிலைகள் பெயர்க்கப்பட்டும், நொருங்கியும், சுற்றுப்புறங்களில் தூக்கியெறியப் பட்டும் கிடந்தன.

வெளி விறாந்தைத் தூண்களையும், உட்பக்கச் சுவரையும் இணைத்திருந்த கூரை மரங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. ஓடுகள் முற்றாக நொருங்கி சிறு துண்டுகளாகப் பரவிக்கிடந்தன.

தேவாலயத்தின் முன்பக்கமாக அமைந்திருந்த மணிக்கோபுரம், அதனோடு சேர்ந்த முன்பக்க சுவர், ஆலயப் பின்பக்கம் அமைந்திருந்த தூபியுடன் இணைந்த பின்பகுதியைத் தவிர ஏனையவை முற்றாக சேதமடைந்திருந்தன. முன்பக்கப் பெரிய வாசற் கதவு, நிலைகள் தூள் தூளாகச் சிதறிக்கிடந்தன.

ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக இருந்த குருமனை, புனித யாகப்பர் மண்டபம், தண்ணீர்த் தாங்கி, திரு இருதய வாசிகசாலை, சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆகியவையும், இரு கடைகளும் சேதமடைந்திருந்தன. சுற்றுப்புறமுள்ள பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தூக்கியெறியப்பட்டு தண்ணீர்த்தாங்கியின் கீழ் மயங்கிக் கிடந்த உதவிப் பங்குத்தந்தை அப்போதுதான் காயத்துடன் எழுந்து வந்தார்.

பங்குத்தந்தையின் பணிமனை மறைப்புச் சுவருக்கு உட்புறமாகத் தண்ணீர்த்தாங்கி இருந்ததனால் எவரும் அவரைக் கவனிக்கவில்லை.

உதவிப் பங்குத்தந்தை கூறியதன் பின்னர்தான் ஆலயத்தில் குண்டுவிழுந்த பகுதிக்குள்ளும் சிலர் இருந்ததை அறியக்கூடியதாக இருந்தது.

'ஆ...'

பலரது குரல்கள் ஒன்றாக ஆச்சரியத்தை வெளிப்படுத்தின...

குண்டு வீழ்ந்த இடமென ஊகித்த பகுதியின் கற்குவியல் ஓரங்களை உற்றுப்பார்த்தனர். அந்தச் சூழலில் மனித எலும்புகளும், சதைகளும், இரத்தச் சிதறல்களும் புழுதி படிந்து கிடந்ததை அப்போதுதான் கண்டனர்.

கண்டவர்கள் தம்மையறியாது வாய்விட்டுக் கதறினர்.

இருபது மீற்றர் தூரமுள்ள பங்குத் தந்தையின் வசிப்பிடச் சுவரிலும் மனித சதைச் சிதறல்கள் ஒட்டிக்கிடந்தன.

உணர்ச்சி மேலீட்டால் அனைவரின் தேகங்களும் நடுங்கின... நிற்பதற்கே கால்கள் கூசின... இருவர் மயங்கி விழுந்தனர்.

அழுகுரல் சத்தம் உயர எழுந்து தொடராக நீண்டது. நின்ற அத்தனை பேருமே அழுதார்கள்.

திருப்பலிக்குச் சென்றவர்களில் திரும்பி வராதவர்களைத் தேடிவந்த உறவினர்களும் கூட்டத்தினரோடு கலந்து நின்றனர். அவர்கள் தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் உரத்து அழுததுடன், கைகளால் தலையில் அடித்து அடித்து வேதனையில் துவண்டனர்.

பார்ப்பவர்களுக்கு இதயத்தைப் பிழிந்தது போல இருந்தது.

வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்ற ஆண்களில் சிலர் உடனடியாகவே செயலில் இறங்கினர்... எவரேனும் உயிரோடு இருப்பார்களென்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு...

மூன்று அடி அகலத்தையும், இருபத்தேழு அடி உயரத்தையும் கொண்ட பருமனான சுவரும், பதினாலு அடி சுற்றளவைக்கொண்ட தூண்களும் - தூணின் மேற்பகுதியில் பத்து அடி உயரமானதும், மூன்றரை அடி அகலமானதுமான மேற்கட்டுகளும் அதன் கூரைகளும் இடிந்து விழுந்து கற்குவியலாகக் கிடக்கும் இடத்தில் சிறு பூச்சிகூட உயிரோடு இருக்காது என்பதையோ, எந்தவொரு பொருளும் முழுமையாகவோ, சேதமில்லாமலோ கிடைக்காது என்பதையோ தெரியாதவர்களல்லர்.

ஆயினும் மனஉந்தலினால் செயலில் இறங்கினர். துரித நடவடிக்கையால் உயிரிழப்பைக் கட்டுப்படுத்தலாம் என்பதை உறுதியாக நம்பினர்.

குறைந்த இடிபாடுகளுடன் காணப்பட்ட ஆலயத்தின் மேற்குப் பக்கத்தால் உள்ளே நுழைந் தனர். மையப் பகுதியின் கூரையில் மறு குண்டு விழுந்து வெடித்துள்ளமையை உள் நுழைந்தவர் களால் ஊகிக்கக்கூடியதாக இருந்தது.

கூரை முற்றாகச் சிதைந்து சிதறிக் கிடந் தது. சூரிய ஒளி தடையின்றி ஆலயத்திற்குள் வியாபித் திருந்தது.

இந்த இரண்டு குண்டுவெடிப்புகளின் தாக் கத்தால் ஆலயத்தின் கூரை, தூண்கள், சுவர்கள் நொருங்கி விழுந்தது மட்டுமல்ல விழாத சுவர்களில் வெடிப்பும், சீமேந்துப் பூச்சுக்கள் உடைந்து விழுந்த நிலையிலும் காணப்பட்டன.


கூரை மரங்களும், ஓடுகளும் பரவலாகச் சிதறியும், குவிந்தும் கிடந்தன...

மேலும் கூரை மரங்களில் சில கீழே விழுவ தற்குத் தயார்நிலையில் தொங்கிக்கொண்டி ருந்தன.

*1883* இல் புயலினால் சேதமடைந்த கூரைக்குப் பதிலாக பாலைச் சட்டங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கூரை மரங்களும், குறுக் குச் சட்டங்களும் முறிந்தும், துண்டாடப்பட்டும் கிடந் தமையைக்கொண்டு குண்டு வெடிப்பின் தாக் கத்தை உணரக்கூடியதாக இருந்தது.

*1876* இல் முல்லைத்தீவுக் காட்டில் அற்புதமான வழிகாட்டலினால் சேகரிக்கப்பட்டு, எடுத்துவரப்பட்ட, தனித்தனி பாலை மரங்களால் செய்யப்பட்டதென ஆலய வரலாறு கூறுகின்ற, 35 அடி உயரத் தையும், ஒன்றரை அடி விட்டத்தையும், சமசீரான உருண்டையையும்கொண்ட உட்புற மரத் தூண்களிலொன்று முறிந்து, பிளந்து கிடந்தது. மூன்று தூண்கள் அடியோடு பெயர்ந்து விழுந்து கிடந்தன.

பரந்து கிடக்கும் சிதறல்களையும், தம் முன் உறங்கிக் கிடக்கக்கூடிய ஆபத்துக்களையும் கடந்து, மீட்புப் பணியை மேற்கொண்ட இளை ஞர்கள் முன்நோக்கிச் சென்றனர்.


இரண்டாவது குண்டு

தினமும் திருப் பலி நடைபெறும் பிரதான பலிபீடம் தகர்ந்து தரை மட்டமாகக் கிடந்தது. பலிபீடத்தின் பின்பக்க மறைப்பின் உயரமான நடுப் பீடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்து அடி உயரமான 'இருதய ஆண்டவர்' சுரூபமும், அதற்குக் கீழே இருந்த நாலு அடி உயர முள்ள சிலுவையிலறைந்த யேசுவின் சுரூபமும் சேதமெதுவுமின்றி காட்சிதந்தன.

பார்த்தவர் மலைத்துப்போய் நின்றனர்.

இருதய ஆண்டவர் சுரூபத்துக்கு இரு பக்கங்களிலும் நிறுத்தப்பட்டிருந்த புனித அருளப்பர் மற்றும் புனித யாகப்பரின் சுரூபங்கள், அவை வைக்கப்பட்டிருந்த பீடங்கள் யாவும் தகர்ந்து இருந்த இடம் தெரியாது சுக்குநூறாகச் சிதறிக்கிடந்தன.

இருபக்கங்களிலும் நாலு அடி வித்தியா சத்தில் வைக்கப்பட்டிருந்த இரு சுரூபங்களும் பீடங்களுடன் நொருங்கிவிழுந்த அதேநேரம், நடுப் பீடத்தில் உயரமாக இருந்த இருதய ஆண்டவர் சுரூபமும், அதற்குக் கீழிருந்த சிலுவையில் அறை யுண்ட யேசுவின் சுரூபமும் துளிகூட சேதமின்றி இருந்தமை பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

அவர்களையும் அறியாத உணர்வுமேலீட் டால் தேகம் சிலிர்த்தது. மனதுக்குள் வேண்டிக் கொண்டார்கள். உணர்வுடன் கரங் குவித்து, சிரம் தாழ்த்தி வணங்கி நின்றனர்.

"ஆ...ஆ...ஆ..."

சிறு குழந்தை யின் அழுகுரல் அவர்களின் கவனத்தை திருப்ப... சுற்றுமுற்றும் பார்த்தனர்... பாலைமரச் சட்டங்கள் ஒன்றின்மேலொன்றாய் விழுந்துகிடந்தன. ஓடுகள் பரவிக்கிடந்தன. குரலுக் குரிய குழந்தையின் சுவடே தெரியவில்லை.

"ஆ... ஆ... ஆ..."

அதே அழுகு ரல்...

குரல் வந்த இலக்கை உற்றுப் பார்த்தவாறு அவ் விடத்தை நோக் கிச் சென்றனர்.

விழுந்து – குவிந்து கிடந்த பாலைமரச் சட் டங்களுக்கும், குறுக்கு வளைக் கும் இடையில் சிறைப்பட்டு கிடந்த குழந்தை கைகளை உயர்த்தி அசைத்தவாறு அழுகையுடன் கிடந்தது.

குழந்தை யேசு கைகளை விரித்தவாறு கிடப்பதைப்போன்ற காட்சி...

தமது கண்களை நம்பமுடியாமல் மூடி மூடித் திறந்தனர். தேகம் சிலிர்க்க, இதயம் வேக மாக அடிக்க ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஆஆ... ஆஆ..."

நின்றவர்களைக் அக் குழந்தை கண்டதாலோ என்னவோ சத்தம் சற்று வித்தியாசமாகவும், உரத் தும் கேட்டது.

மெதுவாக, நிதானமாக குழந்தையை நெருங்கினார்கள். குழந்தைக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் சிலர் பாலைச் சட்டங்களை தம் கைகளால் ஏந்திக்கொள்ள, குறுக்கு வளைகளை வேறு சிலர் தாங்கிக்கொள்ள லாவகமாகக் குழந்தையை வெளியே எடுத்தனர்.

அங்கே நின்றவர்களுக்கு அவர்களை மீறிய சந்தோஷ உணர்வு. கண்களிலிருந்து நீர் வடிந்தது. பெரியதொரு சாதனையைச் செய்த மகிழ்ச்சி...

குழந்தையின் அழுகை நின்று முகத்தில் புன்னகை தோன்றியது. சந்தோஷ மிகுதியால் குழந்தையை மாறிமாறி முத்தமிட்டனர்.

குழந்தையுடன் மகிழ்ந்திருந்தவர்கள், சற்றுத்தள்ளி ஒரு பெண் பாலைச் சட்டங்களுடன் இணைந்தாற்போல் இரத்தத்தில் தோய்ந்து கிடப்பதையும் கண்டனர்.

அடுத்த கணமே அவளை நெருங்கித் தூக்கிப் பார்த்தபோது அவளது உயிர் பிரிந்திருப்பதை உணர்ந்தனர்.

மகிழ்விலும் ஒரு வேதனை...

குழந்தைக்கு அண்மையில் இப் பெண் கிடந்தபடியால் குழந்தையின் தாயாக இருக்கலாமென ஊகித்தார்கள். அப் பெண் வெளியே தூக்கி வரப்பட்டபோது குழுமி நின்றவர்களின் அலறல் காதை அடைத்தது. ஏதுமறியாத அந்தப் பிஞ்சு சிரிப்புடன் கையசைத்தவண்ணமிருந்தது.

அழுதவர்கள் மெய்மறந்து நின்றார்கள்.

கண்டெடுக்கப்பட்ட பெண் 'ஜெயசீலி' என அடையாளம் காணப்பட்டாள். குழந்தையின் பெற்றோர் கூட்டத்தினரிடையே நின்றனர். குழந்தையைக் கண்டதும் தவிப்புடன் ஓடிவந்து, கண்கள் நிறைந்த கண்ணீருடன் குழந்தையைப் பெற்றுக் கொண்டனர்.

குழந்தையின் பெயர் 'சுதா'. வயது ஆறு மாதம். ஜெயசீலியுடன் ஆலயத்திற்கு வந்திருந்தாள். குழந்தையின் நெற்றியில் உரசல் காயம் காணப்பட்டதால் பெற்றோருடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

ஒரு பெண் சடலமாகவும், ஒரு குழந்தை உயிருடனும் மீட்கப்பட்டதனால் கற்குவியலுக்குள் மேலும் யாராவது அகப்பட்டிருக்கலாமென்ற எண்ணம் மீட்புப் பணியாளர்களுக்குத் தோன்றியது. எவரது உத்தரவுக்காகவோ, உதவிக்காகவோ காத்திருக்காமல் குவிந்துகிடந்த கற்களை அகற்றும் பணியில் தீவிரமாக இறங்கினார்கள்.

சிறுவர், வாலிபர், வயோதிபர் என்ற வேறுபாடுகளின்றி இந்தப் பணியில் இணைந்து கொண்டார்கள்.

உடல் வியர்க்க, வெடி மருந்தின் மணம் மூக்கை அரிக்க, கற்களைத் தூக்கும்போது எழும் புழுதியின் தாக்கம் உபாதையைக் கொடுக்க, எவற்றையும் பொருட்படுத்தாமல் கடமையாகக் கருதி வேகமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் விடாமுயற்சியால் ஒரு பகுதிக் கற்குவியலின் உயரம் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கின. ஆனால், அடங்கிக் கிடந்த புழுதி கற்குவியலிலிருந்து மீளவும் உயர உயர எழுந்து இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

குண்டு விழுவதற்குச் சற்றுமுன் வழிபாட்டை முடித்துக்கொண்டு ஆலயத்திலிருந்து சென்ற பெண் மூலம் குண்டுவிழுந்த இடத்தில் இருந்தவர்கள் பற்றிய விபரம் தெரியவந்தது...

ஆலய வெளிப்புறத்தில் குண்டுவிழுந்து வெடித்ததாகக் கருதப்பட்ட இரண்டு தூண்களுக்கு இடையிலான வெளியில் குருவானவரின் சமையற்காரரும், குடிநீர் விநியோகப்பகுதி ஊழியரும் இருந்துள்ளனர்.

தூண்களுக்கு நேரே கல்லாய்க் குவிந்து கிடக்கும் கல்லறை ஆண்டவர் பீடத்திற்கு முன்பாக சிலர் குழுமி இருந்து வழிபட்டுள்ளனர்.

"கொஞ்சம் முந்தி விழுந்திருந்தா ஒரு முப்பது நாப்பது பேர் எம்பிட்டிருப்போம். கனபேர் போயிற்றாங்க. நான் போய் கேற்றால திரும்பேக்க சிலபேர் உள்ள ஓடி வந்தாங்க. நான் விறுவிறென்று அந்தச் சந்திக்குப் போகேக்க குண்டு விழுந்திற்று நானும் றோட்டில விழுந்திற்றன்...."

'சென். ஜேம்ஸ் வீதிச்' சந்தியைக் கையால் காட்டியவாறு மூச்சுவாங்கச் சொல்லிமுடித்தாள். பயம் அவளை ஆட்கொண்டிருந்ததை உணரக் கூடியதாக இருந்தது. தனக்குத் தெரிந்தவரை பீடத்தின் முன்னாலிருந்த ஆட்களின் பெயர் விபரங்களை கூறினாள்.

திருப்பலிக்கு வந்தவர்களில் திரும்பி வராதவர்களைத் தேடிவந்த உறவினர்களும் அப் பெண்ணின் கூறியதை உறுதிப்படுத்தினார்கள். பெண்ணின் கூற்றால் அவர்களைத் தாம் இழந்து விட்ட முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

தாங்கமுடியாத வேதனையுடன் நிலத்தில் குந்தியிருந்தவாறு தலையில் அடித்து, தரையில் அடித்து உரத்து அழத் தொடங்கினார்கள்..

நின்றவர் கண்களில் ஈரம் கசிந்தது...

கல்லாய்க் குவிந்து கிடக்கும் இந்த ஆலயத்தில் காலைத் திருப்பலி இடம்பெறாமையால் 'கல்லறை ஆண்டவரை' வழிபடுவதற்கு வந்தவர்களில் சிலர் மட்டுமே இருந்தார்கள். இங்கு திருப்பலி நடைபெற்றிருப்பின் உயிரிழப்புகள்...!

நினைத்துப் பார்த்தவர்களின் இதயம் உறைந்தது. மனதிற்குள் 'புனித யாகப்பரை' நினைத்துக்கொண்டார்கள்.

பெண் குறிப்பிட்டுக் கூறிய இடத்தை நெருங்கிப் பார்த்தபோது, அங்கே கற்கள் மலையாய்க் குவிந்து கிடந்தன... கல்லறை ஆண்டவர் வழிபாட்டில் இருந்தவர்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது போன்ற தோற்றப்பாட்டை குவிந்து காணப்பட்ட கற்குவியல் தோற்றுவித்தது.

குண்டுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் இம்மக்களுக்குப் புதிதான ஒன்றல்ல..

01.06.1986 இல் குருநகர் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஐஸ்பிளான்ற் வீதியைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட எறிகணையால் தாக்குண்டு, தூக்கியெறியப்பட்டு முள்ளுக்கம்பி வேலியில் சிக்குண்டு உடல் சிதறி மாண்டார்கள்

08.08.1990 இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் அடைக்கலம் புகுந்திருந்த குருநகர் மக்கள் மீது குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. குண்டு போடப்பட்டதைக் கண்டதனால் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள உடனடியாகவே மைதானத்திற்கு ஓடிவந்து குப்புறப் படுத்துவிட்டார்கள். தாமதமாய் ஓடிவந்தவர்களில் ஒருவர் கொல்லப்பட பதினொரு பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் சிலர், உடலூனத்துடன் இன்றும் வாழ்கிறார்கள்.

அவ்வாறே 18.08.1990 இல் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்த குருநகர் மக்கள்மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் ஆறு பேர் கொல்லப்பட்டார்கள். உடலுறுப்புகள் துண்டாடப்பட்டு, உடல் வெட்டிக் கிழிக்கப்பட்டு கிடந்தவர்களை தள்ளுவண்டிலில் கிடத்தி இரத்தம் சிந்தச்சிந்த வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற காட்சி பார்த்தவர்கள் மனதை நொருக்கியது.

இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பலரும் கூட்டத்தோடு கூட்டமாக நின்றார்கள். அவர்கள், அன்று தாம்பட்ட துன்பத்தை மீட்டுப்பார்த்த போது வேதனையின் உச்சத்திற்கே சென்றுவிட்டார்கள். அவர்களை அறியாமலே வெளியேறிய கண்ணீரை சிரமப்பட்டும் கட்டுப்படுத்த அவர்களால் முடியவில்லை.

சூரிய ஒளி திடீரெனக் குறைந்து இருள் கௌவிக்கொண்டது...

இருளைத் தொடர்ந்து மழை வானத்தைப் பிய்த்துக்கொண்டு வருவதுபோல் கொட்டத் தொடங்கியது..

சில நாட்களாக மழையே இல்லாது வெறுப்புடன் இருந்தவர்கள் மழையைக் கண்டதும் அதனை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அதுவும் அண்மைய காலங்களில் கண்டிருக்காத பெரிய மழையாக கொட்டிக்கொண்டே இருந்தமை மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

'குண்டு வெடிப்பினால் வானம் ஓட்டையாகிவிட்டதோ?' என்று நினைத்தவர்களுமுண்டு. மழை காரணமாகப் பார்வையாளர்களாக நின்றவர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள்.

மீட்புப் பணியாளர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் தமது சேவையிலேயே கண்ணாயிருந்தார்கள். அவர்களுக்கு மழை பெய்வது ஓரளவு ஆறுதலாகவும் இருந்தது. புழுதி திரும்பத்திரும்ப எழுவது தடுக்கப்பட்டதுடன் வெடிமருந்தின் சகிக்கமுடியாத மணமும் குறைந்திருந்தது.

கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் வரை பெய்த மழை முற்றாக நின்றதும் இளவெயில் ஆட்கொண்டது. மழையில் முழுகி ஈரம் தோய நின்ற மீட்புப்பணியாளர்கள் சோர்வின்றி உத்வேகத்துடன் இடைவிடாது கற்களை அகற்றிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களது முயற்சியின் பயனாய் ஆலயத்தின் சீமேந்துத் தரை மெல்லத் தலைகாட்டியது. எல்லையைத் தொட்டுவிட்ட சந்தோஷம் அவர்களுக்கு.

தரையில் தேங்கிநின்ற மழைநீர் சிவப்பு நிறமாகக் காணப்பட்டது. அவர்கள் இதயத்தில் ஒரு நெருடல்... ஒருவரையொருவர் பரிவுடன் பார்த்துக் கொண்டனர்.

தயங்கித் தயங்கிக் கற்களை ஒவ்வொன்றாய் எடுத்தனர்.

சில கற்களில் மனிதச் சதைகள் ஒட்டிக் கிடந்தன.

பார்த்ததும் கை, கால்கள் பதறிடத் தவித்தனர். இதயத்தின் வேகமான துடிப்பும், வேதனையும் கண்ணீராக வெளியேறியது.

துவண்டுவிடாமல் தொடர்ந்த அவர்களது முயற்சியில் ஆட்கள் இருந்ததற்கான அடையாளங்கள் மெல்லத் தலைகாட்டின.

சேலையின் பகுதிகள்... துண்டாடப்பட்ட விரல்

> கல்லறை ஆண்டவர் பீடத்தின் மேலே கிடந்த பெரிய - சிறிய கற்கள் அகற்றப்பட்டன. பீடத்தின் நொருங்கிய சீமேந்துக் காறைகளும், சுண்ணாம்புக் காறைகளும் அகற்றப்பட்டன...
>
> எஞ்சியிருப்பது....?
>
> ................
>
> என்ன ஆச்சரியம்!...
>
> கனவா?... நனவா?...

கள்... சதைத் துண்டங் கள்... எலும்புகள், சேத மடைந்த நிலையில் செபப் புத்தகங்கள்... செப மாலை... கைப்பை... என ஒவ்வொன்றாய் அச் சுற்றாடலிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தன....

குமுறிவந்த அழுகையைக் கட்டுப்படுத்தி, மனதைக் கல்லாக்கிக்கொண்டு கண்டெடுத்த பொருட்களை பார்வைக்காக வெளியே கொண்டு வந்தனர்.

அவற்றைக் கண்டதும் பார்வையாளர் களிடையே விம்மல், அழுகுரல்... இடைக்கிடை எழுந்து பரவியது.

இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களது உறவினர்கள் தாம் நிற்கும் இடத்தையும் மறந்து தலையிலும் - மார்பிலும் அடித்துக்கொண்டு அழத் தொடங்கினார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவது நின்றவர்களுக்குப் பெரும் சிரமமாக இருந்தது.

அவர்களின் இரத்த உறவுகள் சதைத் துண்டங்களாக வெளியே வரும்போது எவரால் அமைதி காக்கமுடியும்?

வேதனையைத் தாங்கமுடியாமல் மீட்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சில சிறுவர்கள் தாமாக வெளியேறிக்கொண்டார்கள். அவர்கள் விரக்தி அடைந்தவர்களாகவே காணப்பட்டார்கள்.

கற்களை அகற்ற அகற்ற மனித எச்சங்கள் தொடராக வந்துகொண்டிருந்ததால், ஒரு சவப் பேழை எடுத்துவரப்பட்டு இடிபாடுகளிடையே வைக்கப்பட்டது. கண்டெடுக்கப்பட்ட சதைத் துண் டங்கள் - உடல் எச்சங்களை அதற்குள் போட் டவாறு மீட்புப்பணியைத் தொடர்ந்தனர்.

அகற்றப்பட்ட முதலாவது குவியலில் மனித உடலின் எச்சங்களையும் வேறு பொருட்களையும் தவிர முழுமையான உடல் எதுவும் கிடைக்க வில்லை. முயற்சியை கைவிடாது தொடர்ந்து அருகிலிருந்த மற்றுமொரு குவியலை அகற்றத் தொடங்கினர்.

மீட்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் எவருக்கும் கற்களைத் தூக்கிப் பரிச்சய மில்லை. இதனால் சிலரது கைகள் புண்ணாகியி ருந்தன. அவர்கள் தொடர்ந்து செய்யமுடியாத நிலையிலிருந்தனர். சிலரது கை - கால்களில் கற்கள் உரசியதால், கிழித்ததால், இடறி விழுந்ததால் காயங்களேற்பட்டிருந்தன. இருந்தும் தமது உடல் - உள வேதனைகளை மறந்து கைகளுக்குத் துணி யைச் சுற்றிக்கொண்டு கற்களை அகற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். இவற்றைக் கண்ணுற்ற புதியவர் சிலரும் மீட்பு வேலையில் இணைந்து கொண்டனர்.

எல்லோரினது கடின முயற்சியாலும் குறித்த பகுதியில் குவிந்து கிடந்த கற்கள் அகற்றப் பட்டு இறுதிநிலைக்கு வந்துவிட்டனர்.

சீமேந்துத் தரையோடு மருவிக்கிடந்த கற்கள் இரத்தம் தோய்ந்தவாறும் - சதைத் துண் டங்கள் ஒட்டியவாறும் வெளிவந்து கொண்டிருந்த துடன் அவற்றின் கீழே உடலங்களும் கிடப்பதைக் கண்டனர்.

பணியாளரின் உடல் நடுக்கம் கண்டது...

தகவல் வெளியே பரவியதும் நின்ற அனை வருமே வேதனையைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தார்கள். ஒவ்வொருவரும் தத்தமது உறவு கள் என்ற உணர்விலே காணப்பட்டமையால் கண் களில் கண்ணீர் இல்லாதவர்களைக் காணவே முடிய வில்லை.

உருக்குலைந்த - சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட ஐந்து சடலங்களும், துண்டா டப்பட்டுக் கிடந்த உடலுறுப்புகளும் வெளியே கொண்டுவரப்பட்டன.

அழுகுரல் வானளாவ எழுந்தது...

மழையின் பின் எறித்த அகோர வெயிலி னாலும், உருக்குலைந்த சடலங்களைக் கண்ட வேதனையின் உச்சத்தினாலும், தம்மைக் கட்டுப் படுத்த முடியாத சிலர் மயங்கி விழுந்தனர்.

எடுத்துவரப்பட்ட, ஒரு சிறுமி - இரண்டு ஆண்கள் - இரண்டு பெண்களினது சடலங்களின் துண்டாடப்பட்ட கைகள், கால்களை இனங்கண்டு சேர்த்த பின்னர் உடுத்திருந்த உடைகளைக் கொண்டு அவைகள் அடையாளம் காணப்பட்டன.

சிந்துஷா, அன்ரன், வெண்ணிலா, அக்கி னேஸ் என அடையாளம் கண்டனர். ஒரு ஆணின் சடலம் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்து கிடந்தது.

அடையாளம் கண்டவர்களது உறவினரின் அலறல், அங்கு நின்ற அனைவரையும் கலங்கச் செய்தது.

கல்லறை ஆண்டவர் பீடத்திற்கு முன் னால் ஆட்கள் இருந்ததாக கூறப்பட்ட இடங்களிலி ருந்த கற்குவியல்கள் பெரும்பாலும் அகற்றப்பட்டு, அங்கே கிடந்தவைகளுடன் இதுவரை ஏழுபேரின் உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆண்கள் இருவர் இருந்ததாகக் குறிப்பிடப் பட்ட பகுதி குண்டு விழுந்த இடமென்பதால் பெரிய குழியாக இருந்தது.

குழிக்குள் கற்களும், சுண்ணாம்புக் காறை களும் விழுந்து கிடந்தன. அவற்றை அகற்றத் தொடங்கினர்.

பாதி அகற்றப்பட்ட நிலையில் ஒட்டப்பட்ட சதைத் துகள்களும்... எலும்புச் சிராய்களும்... உறைந்த இரத்தக் கறைகளும் குழிக்குள் ஆங்

காங்கே காணப்பட்டன.

இரத்தத்தைக் கண்டதனால் முன்ரைப் போலவே வேகத்துடன் அகற்றிக்கொண்டிருந்தனர்.

அவர்களது வேகத்தால் குழிக்குள் கிடந்த அனைத்துக் கற்களும் அகற்றப்பட்டும் உடல்களைக் காண முடியவில்லை... குழியின் சுற்றாடல்களிலும் கிடந்த கற்களும் அப்புறப்படுத்தப் பட்டன.

பயனில்லை....

உடல்கள் இங்கே இல்லையென்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

அப்படியானால் 'குருவானவரது சமையற்காரனினதும், குடிநீர் விநியோகப் பகுதி ஊழியனினதும் உடலங்கள் எங்கே?'

"................"

உடலங்களைக் காணாது திகைப்பில் நின்றவர்களுக்குப் புதிதாய் வந்த தகவல் அதிர்ச்சியைக் கொடுத்தது.

'அன்ரன்' என்பவர், தனது மனைவி 'புஸ்பலீலா' கல்லறை ஆண்டவரது பீடத்தின் முன் படியில் இருந்து வழிபட்டதைச் சிலர் கண்டதாகவும் அவளைக் காணவில்லையென்றும் கேட்டு வந்துள்ளார்.

யார் என்ன பதில் சொல்வதென்ற நிலை... இன்னமும் இருப்பது கல்லறை ஆண்டவ ரின் பீடம் மட்டும்தான். தேட வேண்டிய பகுதியும் அதுதான்.

தாமதிப்பதில் பயனில்லையென்பதால் குழியை ஆராய்வதை விடுத்து கல்லறை ஆண்டவரின் பீடத்திலுள்ள கற்களை அகற்றத் தொடங்கினார்கள்.

உடைந்த சுவரின் பகுதிகள் பீடத்தின் மேலாக விழுந்து நொருங்கிச் சிதறி முன்பக்கம் பரவிக் கிடந்ததால் அவற்றை அகற்றுவதில் கடும் சிரமம் இருக்கவில்லை. ஆனால் பீடத்தின் மேல் கிடந்த கற்களை மிகச் சிரமப்பட்டே அகற்ற வேண்டியதாயிருந்தது.

சிறியதும் பெரியதுமாக இறுகிய நிலையிலிருந்த செங்கல் தொகுதிகளை மரக் கட்டைகள்கொண்டு முண்டிபோட்டுப் புரட்டி எடுத்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பலரது இணைந்த முயற்சியால் கற்கள் கணிசமாக அகற்றப்பட்டு விட்டன. கற்குவியல் மிக இறுக்கமாகக் கிடந்ததால் மழைநீர் உட்புகவில்லை. அதனால் மீண்டும் தூசிகள் மேலெழலாயின.

பீடம் உடைந்து தரையில் அமிழ்ந்து கிடந்தது...

பீடத்திற்குக் கீழ் கல்லறை ஆண்டவருக்கு மறைப்பாகப் போடப்பட்ட கண்ணாடி மறைப்பு நொருங்கிக் கிடந்தது. அவை சிலருக்குக் காயத்தையும் ஏற்படுத்தின.

சில கண்ணாடித் துண்டுகளில் இரத்தத் துளிகள் படிந்தும் காணப்பட்டன.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்...

ஏற்கெனவே எடுக்கப்பட்ட உடலங்களின் இரத்தச் சிதறல்களாக இருக்கலாமென்ற எண்ணத்தில் தொடர்ந்து மிகவும் நிதானமாக கற்களை அகற்றிக்கொண்டிருந்தனர்.

கல்லறை ஆண்டவரின் பீடம் அமைந்துள்ள சமாந்தரமான மேல் படிக்கட்டு வரை கற்கள் அகற்றப்பட்டன.

பணியில் ஈடுபட்டவர்களுக்கு எதிர்பார்க்காத அதிர்ச்சி. கைக்குட்டை ஒன்று மடித்தவாறு கிடக்கக் கண்டனர். மிதமிஞ்சிய ஆவலுடன், கைகள் நடுங்க அதனை எடுத்து விரித்துப் பார்த்தபோது உள்ளே முப்பது ரூபா இருந்தது. வாய்விட்டுக் கதறவேண்டும் போலத் தோன்றியது அவர்களுக்கு...

ஒரு பெண் இங்கே இருந்தமையைச் சுட்டும் அடையாளமா இந்தக் கைக்குட்டையும், முப்பது ரூபாவும்...?

ஆவேசத்துடன் கற்களை அகற்றினார்கள்...

எடுக்கப்பட்ட கற்களில் இரத்தம்... சதைத் துண்டங்கள்... எலும்பின் துகள்கள்... கூடவே தலைமயிர் சிதறல்களும் காணப்பட்டன...

அன்ரன் குறிப்பிட்டதன்படி புஸ்பலீலா இங்கே இருந்தமைக்குரிய தடயங்களாகவே அவற்றை நோக்கினர். மேலும் உடல் கிடைக்கலாமென்ற எதிர்பார்ப்பிலும், ஆவலுடனும் தொடர்ந்தனர்...


சவப்பேழை

கல்லறை ஆண்டவரின் பீடத்தின், மேற்படிக்கட்டு மேடையின் விளிம்புவரை கிடந்த கற்கள் அனைத்தும் அகற்றப்பட்டன. இருந்தும், கிடைக்கப்பெற்ற தடயங்களுக்குரிய பெண்ணின் முழுமையான உடல் கண்டுபிடிக்கப்படாமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

குழப்பத்தில் தடுமாறினார்கள்.

உடலங்களைத் தேடி வேறு எங்கும் தோண்டிப் பார்க்க

வேணடிய தேவையிருக்க வில்லை. உறுதிப்படுத்தப்பட்ட இடங்கள் - சந்தேகத் திற்கிடமான இடங்களிலிருந்த கற்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, உன்னிப்பாகத் தேடப்பட்டு முடிந்து விட்டது.

அப்படியானால் பெண்ணின் உடல்...?

எங்கே...? எங்கே...? எங்கே...?'... எதிரொலியாய் எல்லோர் உள்ளத்திலும் எதிரொலித்தது.

"..................."

மௌனமே எஞ்சியது.

பணியாளர்களில் சிலர் களைப்பு மிகுதியால் பீடத்தின் படியில் அமர்ந்துவிட்டனர். சிலர் தொங்கிய முகத்துடன் வெளியேறினர்.

அன்ரன் அவர்களையே வெறித்துப் பார்த்தவாறு நின்றார். மனைவியைப் பற்றிய ஏதாவது பதில் கிடைக்கும் என்ற எண்ணத்தில்.

"கா... கா... கா..."

கோவில் கூரை தகர்ந்துகிடந்ததால் சில காகங்கள் உள்ளே புகுந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சில கட்டாக்காலி நாய்களும் உட்புகுந்து தமக்குள்ளே சண்டை இட்டவாறு ஓடித்திரிந்தன...

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த இரு பணியாளர்கள் அவற்றைக் கலைப்பதற்கென ஓட்டுத் துண்டுகளை எடுத்துக்கொண்டு ஒருவர் நாய்களைத் துரத்திச் செல்ல, மற்றவர் காகங்களை கலைத்திடச் சென்றார்.

இருவரும் தமது இலக்கு நிறைவேறிய திருப்தியில் திரும்பி வந்தனர்.

"அங்கேர் ஏதோ மினுங்குது...!"

ஒருவன் கூறியவாறு சுட்டிக்காட்டிய இடத்தை மற்றவன் கூர்ந்து பார்த்தான். மழை பெய்ததால் புழுதி கழுவப்பட்டு நிலம் தெளிவாகத் தெரிந்தது. அங்கே தேங்கிக்கிடந்த சொற்ப மழை நீருக்குள் மினுமினுப்பு...

என்னவென்று அறியும் நோக்கில் இருவரும் அதனண்டை சென்றனர். ஒருவன் அதனை எடுத்தான்.

"தோடு..."

அவனது குரல் உணர்ச்சி மேலீட்டால் ஓங்கி ஒலித்தது. கையை உயர்த்திக் காட்டினான்.

இளைப்பாறிய பணியாளர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர்.

மழை நீரால் கழுவியும் கழுவப்படாத நிலையில் உறைந்திருந்த இரத்தத்துடன் காதின் சிறு பகுதியும், அதனில் சிவப்பு - வெள்ளை நிறக் கற்களிலாலான தோடும் காணப்பட்டது.

அவர்கள் கைகள் கூசின. வேதனையின் திரட்சி விம்மலாய் வெளியேறியது.

இருவர் அதனை வெளியே கொண்டு சென்று, புஸ்பலீலாவின் கணவனிடம் காண்பித்தார்கள்.

தோட்டைக் கண்டதும் தன்னைக் கட்டுப் படுத்த முடியாமல் குழந்தைபோல் விம்மி விம்மி அழுதார். அருகில் நின்றவர்கள் அவரின் அழுகையைத் தடுக்க விரும்பாமல் மௌனமாய் நின்றார்கள்.

"இது அவையின்ர தோடுதான்... கிட்டடியில தான் வாங்கினவ..."

அழுகையின் மத்தியில் உறுதிபடக் கூறினார்.

கைலேஞ்சியையும் காட்டினார்கள்.

அதையும் உறுதிப்படுத்தி கண்ணீர் மல்க பெற்றுக்கொண்ட அவர், முகத்தைக் கைகளால் மூடியவாறு உரத்து அழத்தொடங்கினார். அவரைப் பொறுத்தவரை அவை மட்டுமே அவரது மனைவியின் அடையாளச் சின்னங்கள்...

மனைவியின் முகத்தை இறுதியிலேனும் பார்க்கமுடியாமல் போய்விட்ட வேதனையை நினைத்தோ என்னவோ அவர் அழுதுகொண்டேயிருந்தார். அவரது சோகத்தை வார்த்தைகளால் வடிக்கமுடியாது. அருகே நின்றவர்கள் உணர்ச்சியற்றவர்களாய் மரத்துப்போய் நின்றார்கள். அவருக்கு ஆறுதல் சொல்வதற்கு எவருக்கும் துணிவு வரவில்லை.

தோடும், கைலேஞ்சியும், முப்பது ரூபாவும் அந்தப் பெண்ணின் எச்சங்களென்றால்...

பெண்ணின் உடல்....?

"..............."

இரு ஆண்களின் உடல்கள்...?

"..............."

கல்லோடு கல்லாக - மண்ணோடு மண்ணாக - புழுதியோடு புழுதியாக இரத்தம், சதை, எலும்புத் துகள்கள் அனைத்தும் கலந்து, உறைந்து விட்டனவா?

காற்றோடு காற்றாகக் கலந்துவிட்டனவா?

மழை நீரோடு நீராகக் கரைந்து விட்டனவா?

கேள்விகள் வார்த்தைகளின்றி முளைவிட்டன...

பங்குத்தந்தையின் வசிப்பிடச் சுவரில் ஒட்டிக்கிடக்கக் காணப்பட்ட சதைத் துகள்கள் ஆண்களுடையவையாகத்தான் இருக்கவேண்டும். குண்டு வெடித்தபோது அவர்கள் இருந்த இடம் அதனை உறுதிப்படுத்துகின்றது.

பெண்ணின் உடல்...?

விடைகிடைக்காத கேள்விகளைத் தமக்

குள்ளே கேட்டவர்களாய், ஏனைய பணியா ளர்கள் தாம் நிற்கும் தரையை உன்னிப்பாய் அவதானித்தனர்.

அவர்களிடையே பரபரப்பு...

தோடு கண்டெடுத்த அந்தச் சுற்றாடலில் சதைத்துண்டங்கள் விதைத்தவாறு காணப்பட்டன.

கால் வைத்து நிற்பதற்கே அஞ்சினர்...

காகம் வட்டமிட்டதன் காரணம், நாய்கள் தமக்குள்ளே சண்டை பிடித்ததன் காரணம் இப் போது தெளிவாகியது.

மனித சதைகளை உண்டு பசியாறவே அவைகள் முயற்சி செய்திருக்கின்றன...

நினைத்தபோது அவர்கள் உதிரம் கொதித் தது.

இந்தச் சதைச் சிதறல்கள் கணவனால் உறுதிப்படுத்தப்பட்ட பெண்ணினுடையதாகத்தான் இருக்கவேண்டும்.

ஜீரணிக்க முடியாத உண்மைகள்... அவர்கள் மூவரும் முகம் தெரியாதவர்களாய் உரு மாறி விட்டார்கள்...

தமது ஜீவனோபாயத் தொழிலுக்காகக் கடலுக்குச் சென்றவர்கள் சீருடைக்காரர்களால் அவ்வப்போது கூட்டாகவும், தனியாகவும் நூறு பேருக்குமேல் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர் களில் பாதிக்கு மேற்பட்டோரது உடலங்கள் கிடைக் கவேயில்லை. அத்தனையும் கடலோடு சங்கமித்து, கடல் மண்ணுக்கு உரமேற்றி விட்டது..

தரையிலும் பத்துக்கு மேற்பட்டோரின் உடல்கள் கிடைக்கவே இல்லை. அவர்கள் தீயோடு சங்கமித்து - சாம்பலாகி மணலோடும், காற்றோடும் கலந்து விட்டார்கள்.

அவ்வாறே இந்த மூவரினது உடல்களும் மண், மழைநீர், காற்று, புழுதியோடு இரண்டறக் கலந்துவிட்டன. மனித சுவாசத்துடன் சங்கமமாகி விட்டன.

நேரம் பத்து மணிக்கு மேலாகிவிட்டது.

வெயில் தனது உச்ச வெப்பத்தை வெளிக் காட்டி நின்றது.

சடலம் எதுவும் இல்லையென்ற முடிவில் கற்கள் அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப் பட்டது.

தமது பணியை ஓரளவேனும் நிறைவேற் றிய மனநிறைவில் தாம் பட்ட துன்பங்களை மறந்து நிற்கும் மீட்புப் பணியாளர்கள்...

இறுதி நேரத்தில்கூட உடலைப் பார்க்க முடியாத அளப்பரிய வேதனையில் கிடைக்கப் பெறாத உடலங்களின் உறவினர்கள்...

சிதைந்த உடல்களை சீர்செய்து பிரேதப் பெட்டிகளிலிட்டு வீடுகளுக்கு கொண்டுசெல்லத் துடிக்கும் அவற்றின் சொந்தங்கள்...

ஆலயத்திற்கு இப்படியொரு அவலநிலை ஏற்பட்டுவிட்டதே என்ற அங்கலாய்ப்பில் ஆலயப் பக்தர்கள்...

இவ்வாறு பல நிலையினரின் சங்கமத்தில் ஆலயப் பகுதி காணப்பட்டது.

'அபயம்தேடும் மக்களின் இறுதித்தெரிவு ஆலயங்கள்' அந்த ஆலயத்தையே அழித்து விட்டானே என்ற ஏக்கத்தில் உளமுருக கண்ணீர் சிந்தியவாறு, திரண்டிருந்த மக்கள் கூட்டம் மௌன மாய்க் கலைந்துசெல்லத் தொடங்கியது...

பிரேதப் பெட்டியில் வைக்கப்பட்ட உடலங் கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணையின் பின்னர் அங்கிருந்து வீடுக ளுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

அடையாளம் காணமுடியாமல் உருக் குலைந்தும், எவராலும் உரிமை கோரப்படாமலும் கிடந்த ஆணின் சடலத்தை என்ன செய்வதென்ற குழப்பத்தில் நின்றனர்.

இதுவரை எவரும் தேடிவராமை சிந்திக்க வைத்தது. வேறு ஊர்களிலிருந்து யாசிக்க வரும் ஆதரவற்ற சிலர் ஆலயத்தின் வெளி விறாந்தையில் தங்குவதுண்டு. அவர்களில் ஒருவராக இருக்கலாம் என்ற முடிவிற்கு வந்தனர்.

சதைத்துண்டுகள் போடப்பட்டிருந்த சவப் பேழையில் உருக்குலைந்த சடலத்தையும் வைத்து வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

பங்குத்தந்தை அருள்பணி நேசநாயகம் அடிகளாரின் அறிவுரையின் பேரில் அன்றைய தினமே பிரேதங்களை அடக்கம் செய்வது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இடர்மிகு சூழல், உருக்குலைந்த உடலங்கள் போன்றவற் றைக் கருத்திற்கொண்டே இத்தகைய முடிவுக்கு வந்தனர். உரிமை கோரப்படாத சடலத்தை மதியம் அடக்கம் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சோகத்தைச் சுமந்தவர்களும், அமைதி யாய்ப் பார்த்துக்கொண்டு நின்றவர்களில் பலரும் கலைந்து சென்றார்கள்...

அதேவேளை புதியவர்களும் வந்துகொண் டேயிருந்தனர். அவர்கள் சோகமயமாகவே காணப் பட்டனர். அவர்கள் மட்டுமல்ல ஊரே உணர்வின்றி ஊனமுற்று, முடங்கிக் கிடந்தமையை உணரக் கூடியதாக இருந்தது.

சோர்வுற்ற நிலையில் பணியாளர்கள் மரநிழலில் சற்று ஓய்வெடுத்துக்கொண்டனர். அவர்களுக்கு சிற்றுண்டியும், தேநீரும் கொண்டு வரப்பட்டது. அவர்களில் எவரும் அவற்றை உண்ணவோ, குடிக்கவோ கூடிய மனநிலையில்

அப்போது இருக்கவில்லை. நீரை மட்டும் பெற்று அருந்திவிட்டு சிறிது நேரத்தின் பின்னர், தம்மைத் திடப்படுத்திக்கொண்டவர்களாய் மீண்டும் மீட்புப் பணிக்குப் புறப்பட்டனர்.

கல்லறை ஆண்டவர் பீடத்தின் மேலே கிடந்த பெரிய – சிறிய கற்கள் அகற்றப்பட்டன. பீடத்தின் நொருங்கிய சீமேந்துக் காறைகளும், சுண்ணாம்புக் காறைகளும் அகற்றப்பட்டன...

எஞ்சியிருப்பது....?

.................

என்ன ஆச்சரியம்!...

கனவா?... நனவா?...

கல்லறை ஆண்டவர் சுரூபம் சேதமின்றித் தெரிந்தது.

எதிர்பார்த்திருந்ததைப்போல் நொருங்காமல், உடையாமல் முழுமையாய்க் கிடந்தமை கண்டு ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிந்தன.

சந்தேகத்தில் மீண்டும் பார்த்தனர்.

பரவசம் அவர்களை முழுமையாக ஆட்கொண்டது. உடல் பதறியது... உள்ளம் படபடத்தது... உணர்வு சிலிர்த்தது... கண்கள் கலங்கியிருந்தன. இது வேதனையிலல்ல ஆனந்தத்தில்...

'எதையுமே முழுமையாக எடுக்க முடியாது' என்ற எண்ணத்தில் இருந்தவர்களுக்கு எதிர்மறையான காட்சியாக அமைந்ததால் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

தளர்ந்த கைகளுடன், நிதானித்து எதையும் செய்யமுடியாத நிலையில் நின்ற அவர்கள், மெல்ல மெல்லச் சுரூபத்தின் மேல் பரவிக்கிடந்த சிறிய காறைகளைப் பக்குவமாய் அப்புறப்படுத்தத் தொடங்கினர்.

காறைகளுடன் இணைந்து கிடந்த சிறிய கற்களும், கண்ணாடித் துண்டுகளும் நிதானமாக அகற்றப்பட்டன.

பாதுகாப்புக் கணணாடி பொருத்தப்பட்டிருந்த முதிரைச் சட்டங்கள் பல துண்டுகளாக உடைந்து கிடந்தன...

இத்தனைக்கும் மத்தியில் சுரூபத்தில் சிறு சேதங்கூட ஏற்படவில்லை...

ஒப்பிட்டுப் பார்த்தவர்கள் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார்கள். சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை. கண்களை மூடி மனதிற்குள் 'ஆண்டவரே' என உருக்கமாய் நினைவு கூர்ந்தார்கள்.

1947 இல் குருநகரைச் சேர்ந்த 'அவுறான் லியோ' என்பவரால் 'மஞ்சவண்ணா' மரத்தில் செதுக்கப்பட்டது இந்தக் கல்லறை ஆண்டவர் சுரூபம். சாதாரண மனிதனின் உயர அளவு களுடன், தலை மற்றும் கை, கால்கள் அசையக் கூடியவாறு பொருத்தப்பட்டு பாடையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த சுரூபத்தின் முகத்தின் உள்ள கருணை, சாந்தம் கல்நெஞ்சக்காரரையும் கலங்கச் செய்யும்.

ஆண்டுதோறும் தவக்காலத்தில் பெரிய வெள்ளியன்று இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இந்த ஆலயத்தின் முன்றலில் காட்சிப் படுத்தப்படுவது வழமை. அதற்கு இந்த சுரூபமே பயன்படுத்தப்படுகின்றது. குறித்த நேரத்தில் 'வியாகுல பிரசங்கத்தி'ல் எட்டாம் பிரசங்கம் வாசிக்கப்படும்போது சிலுவையில் அறையப்பட்டுள்ள இயேசுவின் உடல் ஏறி, இறங்கி, தலை கவிழ்ந்து மரணிக்கும் காட்சி பார்ப்பவர் மனதை உருகவைக்கும்.

சிறப்புமிக்க இந்தச் சுரூபம் எந்தவித சேதமுமின்றி கண்மூடி உறங்குவது போலக் கிடந்தமை புதுமையாகவிருந்தது.

அந்தக் கண்கொள்ளாக் காட்சியை இமை மூடாமல் பார்த்தவாறு நெக்குருகி, உடல் சிலிர்க்க நின்றனர் பணியாளர்கள்.

அவர்களின் உடல் வேதனையெல்லாம் காற்றாய்ப் பறந்துவிட்டது.

புத்துணர்ச்சி... புதுவேகம்...

அற்புதத்தைக் கண்டவர்கள்போல் ஆனந்தத்துடன் காணப்பட்டனர்... ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தனர்.

"இத்தனை கற்கள் மலைபோல் குவிந்து கிடக்கையில் சேதமெதுவுமின்றி சுரூபம் எப்படித் தப்பியது?"

பலரது உணர்வின் வெளிபாடுகள் கேள்வியாக முளைத்தெழுந்தன.

"இது புதுமை என்றுதான் சொல்ல வேணும்..."

சிலரது குரல்கள் தெளிவாகக் கேட்டன. நின்றவர்கள் மனமுருகி வேண்டுதல் செய்தனர்...

குவிந்து நின்றவர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் கல்லறை ஆண்டவர் சுரூபம் பணியாளர்களால் தூக்கிச் செல்லப்பட்டு குருவானவரின் பணிமனையில் வைக்கப்பட்டது.

ஏற்கெனவே பணியாளர் ஒருவரால் எடுத்து வரப்பட்ட 'புனித யாகப்பர்' சுரூபமும் அங்கேதான் வைக்கப்பட்டிருந்தது. புனித யாகப்பர் சுரூபம், ஆலயத்தில் கற்குவியல் கிடந்த இடத்திற்கு மூன்று அடி வித்தியாசத்தில் கண்ணாடிக் கூட்டில் இருந்த போதிலும் நொருங்கி விழுந்த கூரை மரங்கள் மற்றும், ஓடுகளால் சேதமெதுவுமேற்படாது பாதுகாப்பாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.

நடந்துமுடிந்த பெரும் துன்பத்திலும் ஒரு

ஆறுதல்.

பணியாளர்கள் தமது வேலையை நிறுத்திக் கொண்டனர்.

'இவ்வளவு விரைவாக இயந்திரத்தால் கூட செய்திருக்க முடியாத பணியை மக்களின் உறுதியும் உணர்வும் செய்துமுடித்தமையை'ப் பார்த்து, பார்வையாளர்களாக பிறவிடங்களிலிருந்து வந்து நின்ற பலரும் வாயாரப் புகழ்ந்ததுடன் அநுதாபத்தைத் தெரிவித்தும் சென்றனர்.

வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றவர்களும் துயரைச் சுமந்தவர்களாய் அமைதியாகக் கலையத் தொடங்கினர்.

பணியாளர்கள் பணிமனைப் படிகளில் இருந்து சிறிது ஓய்வெடுத்த பின்னர் திட்டமிட்டபடி உரிமை கோரப்படாத சடலத்தை வைத்தியசாலையிலிருந்து எடுத்துவந்து சேமக்காலையில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தனர்.

பழக்கமில்லாத வேலை, தொடர்ந்து செய்ததாலேற்பட்ட களைப்பு மிகுதியினால் உடல் சோர்ந்துநின்ற பணியாளர்கள் தம்மால் இயன்ற சேவையைச் செய்த மனநிறைவில் தமது வீடுகள் நோக்கி சென்றனர்.

❖❖❖

பி.ப. 3.30 மணி. மரணம் நிகழ்ந்த ஒவ்வொரு வீட்டிலும் திரளான மக்கள் கூடியிருந்தனர்...

மாரடிப்புகள், இழவுசொல்லி அழுகைகள், கண்ணீர் வடிப்புகள், இறந்தவர் பற்றிய கணணோட்டங்கள் எனப் பெரும் சோகமயமாய்க் காணப்பட்டன மரணவீடுகள்.

மரண வீட்டிற்கு வருகைதந்திருந்த பெண்கள் வீடு மற்றும், கொட்டகைகளின் உள்ளே இருக்க ஆண்கள் வீதியில் நிரையாகப் போடப் பட்டிருந்த கதிரைகளில் அமர்ந்திருந்தனர். மரண வீட்டுக்கு வந்தவர்களுக்கு வழமைபோல் கொடுக்கப்படும் வெற்றிலை, பீடி - சிகரெற் - சுருட்டு என்பனவற்றை வழங்குவதில் சிறுவர்களிடையே போட்டி நிலவியது.

உடனடிக் கொலைகள்... உடனடி சவ அடக்கங்கள்... மக்களுக்கு அளவிட முடியாத வேதனையைக் கொடுத்திருப்பதை மரணவீட்டிற்கு வந்திருந்தவர்களிலிருந்து உணரக்கூடியதாயிருந்தது.

வேதனையின் வெளிப்பாடாய் நடந்து முடிந்த துன்ப வரலாறுகள் இழவுகளாக அழுகைகளுடன் வெளிவந்துகொண்டிருந்தன. அவற்றைக் கேட்கும் ஒவ்வொரு உள்ளங்களும் துன்பச் சுமையைச் சுமப்பதுபோன்ற உணர்வுகளில் மூழ்கியிருந்தன.

தம்மையறியாது வெளிவரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல தவித்தவர்கள் பலர்.

சாயந்தரம் நாலு மணிக்கு முன்னர் பிரேதம் சேமக்காலைக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தலின் பிரகாரம் அனைத்துக் கருமங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன...

பிரேதத்தை சூழ்ந்து நின்றவர்களின் கதறல்களுக்கும், மாரடிப்புகளுக்கும் மத்தியில் இறுதிச் செபம் வாசிக்கப்பட்டது.

செபம் முடிந்ததும் சவப்பேழை மூடியால் மூடப்பட்டது.

வானிலே இரைச்சல்....

வீதியில் நின்றவர்கள் தடுமாற்றத்துடன் நிமிர்ந்து பார்த்தனர்.

'சுப்பர்சோனிக்' வட்டமிட்டது...

காலையில் நடந்த துன்பியல் நிகழ்வுகளின் படிப்பினைகள் பயத்தை வரவழைக்க நின்றவர்கள் அதிர்ந்து போனார்கள்.

'சுப்பர்சோனிக்' மீண்டும் வட்டமடித்தவாறு வானிலே சுழன்று, புரண்டு சென்றது. என்ன நடக்கப் போகின்றதென்பதை அறியாதவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

வெளிப்பட்ட இரைச்சலிலிருந்து விமானம் குருநகரையே சுற்றிச் சுற்றி வருவதை நின்றவர்களால் ஊகிக்கக்கூடியதாக இருந்தது.

சில நிமிடங்களில்...

"டும்... டும்... டும்..."

வித்தியாசமான பல சத்தங்கள்...

'றொக்கற்' தாக்குதல் சத்தங்கள் என சிலர் இனங்கண்டனர். சத்தங்கள் மிக அண்மையிலேயே கேட்டன....

இவை, 'குருநகரை மட்டுமே குறிவைத்தது போன்ற செயற்பாடுகளே நடைபெறுகின்றன' என்பதை உணர்த்தி நின்றன.

காலையில் குண்டுத்தாக்குதல்..

இப்போது றொக்கற் தாக்குதல்...

பீதிகொண்டவர்களாய்த் தடுமாறினர்.

"நாங்க குற்றமென்ன செய்தனாங்க..."

பலரது உள்ளங்கள் எழுப்பிய வினா...

பதில்...

........

"டும்... டும்..."

மீண்டும் சுற்றாடலில் சத்தங்கள் தொடராகக் கேட்கத் தொடங்கின. மரணவீட்டில் நின்றவர்களில் பாதிப்பேருக்குமேல் காணவில்லை.

பாதுகாப்புத்தேடி தத்தமது வீடுகளுக்கும், மறைவிடங்களுக்கும் ஓடிவிட்டார்கள்.

சில நிமிட வித்தியாசத்தில் மீண்டும் 'சுப்பர் சோனிக்' மிகப் பதிவாக வட்டமிட்டதைக் கண்டதும் நின்ற மீதிப்பேரும் ஓடத்தொடங் கினார்கள்...

மரணவ்டுகள மௌனித்துக்கிடந்தன...

சுற்றாடல்களும், வீதிகளும் ஆளரவமின்றிக் காணப்பட்டன.

மரண வீடுகளில் போடப்பட்டிருந்த தகரக் கொட்டகையின்கீழ் சவப்பேழையில் வைக்கப்பட்டிருந்த சடலங்களைச் சூழ இருந்த மிக நெருங்கிய உறவினர்களைத் தவிர வேறு எவருமேயில்லை. அவர்களையும் பயம் ஆட்கொண்டேயிருந்தது. மிரள மிரளப் பார்த்தவாறு இருந்தார்கள்.

பிறிதொரு சுப்பர்சோனிக் புதிதாகத் தோன்றியது. அதுவும் பதிந்தவாறே வட்டமிட்டது.

உறவினர்களும் உடல் நடுங்கத் தவித்தார்கள்...

'சடலத்தைக் கொண்டுசெல்வதா? விட்டுச்செல்வதா?'

பயத்தின் எல்லையில் நின்று தடுமாறினர்...

.............

அரைமணி நேரம் அமைதி நிலவியது.

உறவினர்களிடையே புதியதொரு தென்பு. அடுத்துச் செய்யவேண்டிய நடவடிக்கைகளில் கவனத்தைத் திருப்பினர்.

பாதுகாப்புத்தேடி ஓடிய ஆண்களில் சிலர் மறைந்திருந்து வருவதைப் போல் மரண வீடுகளைத் தேடி வெருட்சியுடன் வந்தனர்.

நேரம் ஐந்து மணியை நெருங்கிவிட்ட நிலையில் சடலங்களை அடக்கம் செய்வதுபற்றி வந்தவர்களுடன் யோசிக்கலானார்கள்.

அவர்களது துரித முயற்சியின் பயனாக சடலங்களையும் வாகனமொன்றில் ஒன்றாக ஏற்றி சேமக்காலைக்குக் கொண்டுசெல்வதென முடிவெடுக்கப்பட்டது.

ஒரு 'எல்வ்' வானில் ஆறு மரணவீடுகளிலிருந்த பிரேதங்களும் சேகரிக்கப் பட்டன.

நெருங்கிய உறவினர்களில் சிலர் மட்டும் ஈருருளிகளில் பின்தொடர கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை நோக்கி வாகனம் நகர்ந்து சென்றது... ஆயினும், மக்களெல்லாம் மன உளைச்சலிலேயே இருந்தார்கள்.

சவ அடக்கத்தைக்கூட சம்பிரதாய முறைப்படி செய்யவிடாமல் தடுக்கப்பட்ட செயல் அனைவர் மனங்களையும் நோகடித்தது. தாம் இம்மண்ணில் 'தமிழனாய்ப் பிறந்ததை' எண்ணித் தம்மையே நொந்துகொண்டனர். ■

## காவலரே கடைக்கண் பாருமையா

கடலலைகள் கொஞ்சி விளையாடும்
கலைநகராம் எம் குருநகரில்
கலங்கரை விளக்கென கதிர்வீசும்
காவலரே கருணை நாயகரே

இணையற்ற இறையன்பிற்காய்
ஈன்றவரை துறந்தீர்
இளையோராம் எம் வாழ்வில்
ஈடேற்றத்தைத் தாருமையா


கரையூர் வாழ் மக்களின்
கதறல்கள் களையவென
கோயில் கொண்டெழுந்து
காலங்கள் நூற்றைம்பது ஆனதின்று

வேதத்தினை உலகுக்குப் பறைசாற்றி
வேத சாட்சியாய் மரித்தவரே
வெண்புரவி மீதேறி நீஎம்
வேதனைகள் தீருமையா

சிற்றாலயத்தில் சிகரமென அன்று வீற்று
சிறப்புக்களை வாரி வழங்கியவரே
சிதறல்கள் சிதைத்த போதும்
சிந்தையில் இன்றும் நிற்பவரே

கல்வியும் கண்ணியமும் கண்களெனக்
காவலராம் உம் வழியில்
காலந்தோறும் வழிநடக்க
கடைக்கண் பாருமையா கருணை கூருமையா

**செல்வி அ. ஆன்சாளிக்கா** - நோர்வே






# குருநகர் பிரதேச மீன்பிடிக் கைத்தொழிலும், மக்களின் சமூக பொருளாதார நிலைமையும்

– இ. செபஸ்ரியாம்பிள்ளை

**வ**டக்கே பாக்கு நீரிணை, கிழக்கே வங்கக்கடல், தெற்கே இந்து சமுத்திரத்திரம், மேற்கே அராபிக்கடல் என நான்கு புறமும் கடற் பரப்பை எல்லையாகக் கோண்ட இலங்கைத் தீவின் வடபுலத்தே வொட்ஸ்பாங், பீட்றுபாங் (பேதுரு கடலடித்துறை) என்ற இரு மீன்பிடி தளங்கள் அமையப்பெற்ற யாழ். குடா நாட்டின் கடல் நீரேரிப் பகுதியில் அமைந்துள்ளதும், யாழ். குடாநாட்டின் முக்கிய இடமான யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ளதுமான குருநகர் பிர தேசம் யாழ். குடாநாட்டு மீன்பிடிக் கைத்தொழி லில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரி ஆழம் குறைந்த கண்ட மேற்பரப்பாகக் காணப்படு வதால் இப்பகுதியில் அதிகளவு மீன் உற்பத்தி இடம்பெறுகிறது.

மீன்பிடிப் படகுகள் இயந்திரமயமாக்கப் படுமுன் நவீன சாதனத் துறையில் மீன்பிடித் தொழிலை நினைத்துப்பார்க்க முடியாத பழைய தலை முறை மீனவர்கள் கரைவலைத் தொழிலை இயந்திரத்தின் துணையின்றி தமது உடல் வலிமையைக் கொண்டு செய்துவந்தார்கள். இன்று சாதாரண பலம் பொருந்தியவர்க ளெல்லாம் இயந்திரங்களின் உதவியால் இத் தொழில்களை செய்கின்றனர். ஆரம்பத்தில் பாய்படகுகள், வள்ளங்கள், தோணி, கரவலைப் படகுகள் என பலவகையான மரப்படகுகளும், ஏனைய இடங்களில் கட்டு மரங்களும் (மண்டைதீவு) பாவனையில் இருந்தன. மரக் கோல், பாய், சவள் ஆகியன படகுகளை செலுத்துவதற்கு உப பொருட்களாகப் பாவிக்கப் பட்டன. வெயில், மழை, காற்று ஆகிய இயற்கையின் சீற்றங்களை எதிர்த்து நின்று போராடி கடினமான இத்தொழிலை செய்தார்கள். அக்காலத்தில் களைப்பை மறந்து தொழில்செய்ய 'அம்பா' பாடல்களும் பாடப்பட்டன. "கந்தா வாடா கரவலைக்கு - காய்ச்சல் வரும் நான் வரமாட்டேன்" *(Labour Song)* என்ற பாட்டு இதை உணர்த்தி நிற்கின்றது. அம்பா பாட்டுகள் இன்று அபிவிருத்தித் திட்டங்களின் பயனாக அழிந்துவிட்டது.



கத்தோலிக்கர்களாக மாறிய இம்மக்கள் அன்றும் இன்றும் எக்காரியத்தை தொடங்கும் போதும் இறைவனை வழிபடுவது வழக்கம். இவர்கள் கரைவலைத் தொழிலை உருவாக்கி முதன் முறையாக மீன்பிடிக்கு செல்லும்போது தென் கிழக்கு திசையாக 15 மைல் தூரத்திலிருக்கும் 'பாலை தீவு' என்னும் இடத்திற்கு செல்வது வழக்கமாக இருந்து வந்தது. இப் பாலைதீவில் புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று உண்டு. அங்கு மீன்பிடிப்பவர்கள் இத்தீவை புனிதத் தீவாக மதிப்பார்கள். இத் தீவுக்கரையில் பரந்துள்ள வெண்மணற் கரையில் எந்தவொரு அவசரத் தேவையானாலும் ஓடிச் செல்லமாட்டார்கள். ஓடிச் சென்றால் அது விளையாட்டு என்பது இவர்களது கருத்தாகும். தொழில்கள் செய்யும் காலத்தில் இப்புனித அந்தோனியார் ஆலயத்திற்கு செல்பவர்கள் செல்லும்போதும், சென்று திரும்பி வரும்பொழுதும் தரையில் பதித்த காலடி சுவடுகளை கையால் அழித்துக் கொண்டே வருவார்கள். அப்படிச் செய்யாது விட்டால் மீன்கள் பிடிபடாது, வலைகள் கிழிந்து விடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. தற்பொழுது இது நடைமுறையிலில்லை. இதன் காரணமாக கற்கடதீவு, கச்சைதீவு ஆகிய தீவுகளிலுள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாக்களுக்கும் இம்மக்கள் அதிகமாகச் சென்று வருவார்கள்.

பண்டைய மீன்பிடித் தொழில் ஒரு கூட்டுறவு முயற்சியில் இடம் பெற்றது. பல பேரின் கூட்டு முயற்சியாக ஒரு குறிப்பிட்ட பங்குப் பணங்களைப் போட்டு ஒரு தொழிலை உருவாக்கி அதன் வருமானம் அதனதன் பங்குக் காரருக்கே சமமாக பிரிக்கப்பட்டு வந்தது. ஆயினும், பணபலமுள்ள ஒருவன் எவருடைய உதவியுமின்றி தானே தனித்தொழிலை உருவாக்கியபொழுது வசதியற்ற ஏழை மீனவர்கள் இத் தொழிலை கூலிக்கு செய்யத் தொடங்கினார்கள்.




இதன்பிரகாரம் தொழிலின் வருமானம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு பகுதி தொழிலின் உரிமையாளருக்கும், ஒரு பகுதி தொழிலாளர்களுக்கும் பகிரப்பட்டது. புதிதாக பழகும் இளைஞருக்கு 1/2 பங்கும், மேலாப் பாய்ச்சி - மண்டாடி ஆகியோருக்கு ஒரு பங்குக்கு சற்று அதிகமாகவும் இவை பிரிக்கப்படும். தொழில் துறை இல்லாத காலத்தில் தொழிலாளர்களுக்கான இலவச பங்குகளும் கொடுக்கப்படும்.

இவர்கள் கரைவலைத் தொழில் செய்யும் போது பலதொழிலாளர்களை கரையில் இறக்கிவிட்டு 100 அடி நீளமுள்ள தும்பிலான 10, 15 கம்பான் கயிறுகளை, கரையிலிருந்து ஆழ்கடல் நோக்கி படகிலிருந்து கடலில் போட்டுக்கொண்டு செல்வார்கள். இதன் பின்னர் ஈரவலை என்று சொல்லப்படுவதை அக்கயிற்றின் இறுதியில் முடிந்து கடலில் இறக்குவர்கள். இவ்வேளையில் மோவலையில் (மேல்வலைக் கயிற்றில்) புணை (மிதவை, ஒருவித மரவேர்), கீழ்வலையில் (மடவலை) கற்களைப் பெருக்கி (இணைத்து) இருப் பார்கள். இவ்வலையானது தும்புக் கயிற்றினால் செய்யப்பட்டிருக்கும் இதை தொடர்ந்து ஈரவலை, ஈலக்கண்ணி, நடுவணி, மாலக்கண்ணி, மாரிவலை எனப் பெயர்கொண்ட வலைகள் பகுதிகளாக கடலில் விடப்பட்டு மடியை இணைத்து (மடி குறுலோன் நூலினால் உருவாக்கப்பட்டிருக்கும்) இறக்கியபின், வட்டவடிவத்தில் கரையை நோக்கி மாரிவலை, மாலக் கண்ணி, நடுவணி, ஈலக்கண்ணி, ஈரவலை என்ற பகுதிகளை கடலில் இறக்கி கடலில் விடப்பட்ட கம்பான் கயிற்றுடன் கரையை அடைவார்கள். இதன்பின் இரண்டு பக்க வளைவுகளையும் கரையில் நின்றவாறு இழுத்து மடி மூலம் மீனைப் பிடிப்பார்கள்.

கடினமான வேலையை இலகுவாக்குவதற்கு அம்பாப் பாடல்கள் பாடப்பட்டது. இவ்வகை வலையை இழுப்பதற்கு பழங்கயிற்றின் இழைகளை மடித்து இடுப்பில் சுற்றி அதனால் வலையை இறுகக் கோர்த்து நாரியால் இழுப்பர். இதன்போது வலது காலை ஒன்றாகவும், இடது காலை ஒன்றாகவும் வைத்து இழுப்பார்கள். மேலாப்பாய்ச்சி என்பவர் மடியின் தண்ணீர் மேற்பரப்பில் நீந்திக்கொண்டு, மீன்கள் தொகையையும், வலைகள் நேராக - சீராக இழுப்பதையும் கவனித்து சைகை மூலம் தெரியப்படுத்துவார். இயந்திரப் படகுகளில் இவ்வகை வலைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டபின் இருபடகுகளால் தூரத்தில் வலைகளையிட்டு கரைக்குவந்து மீன்களைப் பிடித்தனர். சிவப்பு கூட்டமாக கடலில் வரும்

கெழுறு மீன்களை கரைக்கு வராமல் அவ்விடத்திலே வாரி எடுத்து பிடிக்கும் முறைகள் படிப்படியாக முன்னேற்றம் காணத்தொடங்கியது. இவ்வகைத் தொழில் குருநகரிலிருந்து கேரதீவு, மண்ணித்தலை, ஒரு கரை, பெரியவேலி, இலந்தையடி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இரணை தீவு, பாலைதீவு மண்டை தீவு, புங்குடுதீவு, எழுவைதீவு வரை பரந்த இடங்களில் நடைபெற்றுவந்தது. ஓலை வலை, கரை வலையென இத்தொழில் இடம்பெற்றது. குருநகரின் ஆரம்ப கால அத்தியாவசியமான மீன்பிடியாக இது இருந்தது. இக்காலப் பகுதியிலே வீச்சுவலை, சூழ்லாம்பு மூலம் அத்தாங்கினால் மீன்பிடிக்கும் முறை, சிறகு வலை, பறிக்கூடுவைத்து மீன் பிடித்தல், பாய்ச்சுவலை, கைத் தூண்டில், கொண்டடிவலை, ஒடுகயிற்று தூண்டில் வலை, களங்கட்டிவலை, படுப்புத் தூண்டல், வெட்டுத் தூண்டல், வெளிச்சம் போட்டு பாயும் மீன் பிடித்தல், படிப்படியாக முன்னேற்றமடைந்து வழிச்சல் வலை, சூடை வலை, அறக்கொட்டியான் வலை, முப்புரிவலைத் தொழில்களுடன் சுழியோடி அட்டை, நண்டு பிடிக்கும் முறையும், 1973 காலப்பகுதியில் இழுவலை அறிமுகமாகிய பின் 150 இற்கு மேற் பட்ட 3½ தொன் இயந்திரப் படகுகளும் இத்தொழிலில் ஈடுபடத் தொடங்கின. பேசாலையிலிருந்து கச்சதீவு, பீட்றுபாங் வரை இழுவலை மீன்பிடி பிரசித்தமாகி இருந்தது. ஏனெனில் அப்பகுதி இழுவலைக்கேற்ற மணல் சேற்றுக் கடல் தரைத் தன்மையாக இருந்தது.

## இங்கு பிடிபடும் மீனினங்கள்

**இறால்வகை:**

வெள்ளை இறால், கூனி இறால், பாட்டு இறால், சிங்க இறால், கருவண்டு இறால், செம்மூக்கன் இறால், பச்சை இறால், தாழம் இறால்.

**நண்டுவகை:**

வெள்ளைநண்டு, சுனைநண்டு, நீலக் கால்நண்டு, செம்பாரநண்டு, கடுக்கா நண்டு.

**திருக்கைவகை:**

புலியந்திருக்கை, கருவாத்திருக்கை, ஆடாத்திருக்கை, பூவாத்திருக்கை, மணல்திருக்கை, கொம்புத்திருக்கை, வழுவாடி, செந்திருக்கை (திமிலி).

**பாய்ச்சல் மீன் வகை:**

பாலமீன், கயல்மீன், மணலை, சிறையா, தவ்வல், முரல், நெடுமுரல், கொய்,

**சுறா வகை:**


பால் சுறா, மண்வெட்டி சுறா, குரக்கன் சுறா, உழுவை, வேளா, கருஞ் சுறா, ஆண் சுறா.

**மீன்வகை:**

கட்டா, ஆரியக் கட்டா, இளம் பாரை, கருக்குவாள் பாரை, வால் பாரை, கருங்கணி, கண்ணாடி கோட்டன் பாரை, கொடிவாடல், கள்ளப் பாரை, குமிழியான் பாரை செங்கடா பாரை, அஞ்சிலா, சீலா, ஊளா, அறுக்குளா, கும்புளா, கொடுவா, கீரிமீன், சூடை, சூவாரை, கள்ள மீன், ஓரா, திரளி, கீளி, விளமீன், கலவா, மண்ணா, கிளக்கன், கடல்விரால், பைந்தி, வாவல், செவ்விள மீன், நகரை, மசறி, அயரை, சுங்கான, நெத்தலி, கணவாய், ஓட்டுக் கணவாய் சாக்குக் கணவா, ஊடகம், காரல், கூரல், கெழுறு, கிளாத்தி, வெள் ஓரா, வலியன் ஓரா, கார் ஓரா, திருவன், கடல் முறி, கூரல், செங்கனி, சேரி (அட்டை, சங்கு, சிப்பி).


இங்கு தொழில் நுட்பம் அறிந்த செயல் முறை அனுபவம் பெற்றவர்களாய், நுட்பமான முறையில் காற்று, நீரோட்டம், காலநிலை, வற்று, பெருக்கு ஆகியவற்றை கணித்து மீன்பிடி தொழில் செய்யும் ஆற்றல் மிக்கவர்கள் இருந்தார்கள். யுத்தகாலச் சீரழிவால் எல்லாமே சீரழிந்து விட்டது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் குருநகர் பிரதேசம் அமைந்துள்ளதால் இக் கடல் நீரேரியின் பௌதீக இரசாயனக் காரணிகள் என்பன இப்பிரதேசத்தின் மீன்பிடிக் கைத் தொழிலில் செல்வாக்கை செலுத்துகின்றது. இப்பிரதேசமானது வட அகலாங்கு $9^0$ $40'$ N



இலும், கிழக்கு நெட்டாக்கு $80^0$ 1' E இலும் அமைந்துள்ளது. இப்பிரதேசத்து நிலமானது அடையற் கற்பாறை வகுப்பை சேர்ந்த சுண்ணாம் புக் கற்பாறையால் ஆனது. மயேசின் காலந் தொடக்கம் தென் இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையேயுள்ள சுண்ணாம்புப் பாறைகள் மேலுயர்த்தப்பட்டதாலும், பருவக்காற்று நகர்வு களால் எடுத்து வரப்படுபவை படிய விடப்படு வதனாலும் இப்பகுதி உருவானது எனக் கருதப்படுகின்றது. வடகீழ்ப் பருவப்பெயர்க் காற்று, தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று (சோழகம்) காலத்தில் வருடம் முழுவதும் மீன் பிடிப்புகள் நடைபெறுகிறது.

கடற்கரையை அண்டிய பகுதிகள், மண், கற்கள் என்பன கொட்டப்பட்டு காலப்போக்கில் செயற்கையாக உருவாக்கப்பட்ட குடிமனைகள் அமைக்கப்பட்டுள்ளது. கடற்கரை வரையிலான 500 மீற்றர் வரை இவ்வாறு உருவாக்கப்பட்டு மேவுகாணியாக இவை காணப்பட்டுள்ளது. தற்போது கல்வீடுகளும், பெரும்பாலான குடும் பங்களும் இங்கு வசித்து வருகின்றன. தண்ணீர்த் தாங்கியொன்றும் சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலைக்கு பின்புறமாக 3 ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ளது. பெண்களுக்கான சென் ஜேம்ஸ் பாடசாலை சந்தியோகுமையோர் ஆலயத்தினருகே அமைந்துள்ளது. இப்பிரதேசத் தின் தெற்கு பக்கம் கடலினால் பரந்து காணப்படுகின்றது. தென் மேற்கே மண்டை தீவையும், பக்கத்தில் சிறுத்தீவையும் காணலாம். இங்கிருந்து கடல் ஆழம் கச்சதீவு வரை 10 மீற்றர் ஆக அதிகரித்துச் செல்கின்றது. கடற்கரையி லிருந்து 500 மீற்றர் தூரத்திற்கப்பால் சிறுத்தீவு காணப்படுகிறது. 4 கிலோ மீற்றர் தூரமும், பல்லுருவத் தன்மையும் கொண்டது. இதன் தெற்குப்பகுதி கடல் ஆழமானது. இத்தீவில் லூர்த்துமாதா ஆலயம் உண்டு யுத்தகாலத்திற்கு முன் மக்கள் திருநாள் பூசையில் பங்கு பற்று



வதற்காக அங்கு போய்வருவார்கள். சிப்பிகள் சூழையிடுவதற்கும், வலைகள் உலரவிடுவதற்கும் இத்தீவு பயன்படுத்தப்பட்டது. குருநகரில் இருந்து மண்டைதீவிற்கு சுருக்கமான வழியை அமைப் பதற்கு பொருத்தமாக இத்தீவின் பின் பகுதியை பிரயோசனப்படுத்தலாம். உல்லாசத்துறைக்கு தேவையான கட்டடங்களை அமைத்து உல்லா சப் படகுகளை இவ்விடத்தில் நங்கூரமிடச் செய்யலாம்.

இங்கு இரண்டு இறங்குதுறைகள் காணப் படுகிறன. யாழ்ப்பாண சுங்கவரி திணைக்களத் திற்கு முன்பாக ஒன்றும், ஐந்து மாடி மீனவர் குடியேற்றத்திட்டத்திற்கு முன்பாக ஒன்றும் காணப்படுகிறது. இக்கடற்கரை வீதி, யாழ் பிரதான வீதியுடன் தொடர்புடையதாக உள்ளது. மீன்பிடித் திணைக்களத்தினால் பராமரிக்கப் பட்ட ஐஸ் தொழிற்சாலை முற்றாக சேதமடைந் துள்ளது. இதன் அருகே உள்ள மீன்பிடித் துறைமுகம் மறைந்து போகும் நிலையுள்ளது. கடும் காற்று, சூறாவளி காலங்களில் இத்துறை முகம் மீன்பிடிப் படகுகளை பாதுகாத்திருந்தது. தனியார் எண்ணெய், டீசல் நிலையமும் இங்கு இருந்தது. இரவு பகலாக மீன்களை வெட்டி உப்பிட்டு கருவாடாக்கி பொதி (சிப்பம்) செய்து கொழும்புக்கு அனுப்பிவந்தனர். இவ்விடம் யுத்தத்தால் முகமிழந்து, முகவரி இழந்து காணப்படுகிறது. குருநகர் ஜெற்றியிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கலங்கரை விளக்கு முற்றாக அழிவுற்று அத்திபாரக் கற்களுடன் மோதும் அலைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

இப்பிரதேசத்தின் மேற்குபுறம் போர்த் துக்கேயர், ஒல்லாந்தரால் ஆட்சி செய்யப்பட்ட கோட்டை உள்ளது. கோட்டையிலிருந்து பண்ணைப் பாலம் யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் உள்ள தீவுக்கூட்டங்களை இணைத்து, தென் கிழக்கே மண்டைதீவுக்கும் மேற்கே அல்லைப் பிட்டி ஊடாக வேலணை, ஊர்காவற்துறைக்கு செல்கின்றது. இப்பாதையால் தீவுப்பகுதி மீன்கள் இங்கு கொண்டுவரப்பட்டு, ஐஸ் இட்டுப் பாதுகாக் கப்படுகிறது. இப்பண்ணைப் பாலத்தினூடாகச் சென்று கரவலை, பாய்ச்சுவலை, துண்டில் வலை செய்வோர் ஊர்காவல்துறை, எழுவைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு மேற்கு கரைவரை பனங்கானிமுனைக்கு அப்பாலும் மீன் பிடியில் ஈடுபட்டனர்.

தீவுகளில் ஆழம் குறைந்த பகுதிகளில் சிறிய மூங்கிலால் இழைக்கப்பட்ட கூடுகளில்

நண்டுச் சதைகளைப் போட்டு கடலிவிட்டு, 2000, 3000 தூண்டல்களுக்கு போதுமான உயிர்க் கீளி மீன்களை பிடித்து, பெரிய பனை ஓலையால் செய்த பறியினுள் இட்டு, பாதுகாப்பாக படகில் இணைத்து, கடலில் உரிய இடத்துக்குச் சென்றதும் கீளி மீன்களை உயிருடன் தூண்டலில் இட்டு, கடலில் தொடராக இறக்கி, பாரை, சுறா, கட்டா, இளம்பாரை போன்ற மீன்களை பிடித்து பண்ணைப் பாலத்தினுடாகவே குருநகர் இறங்கு துறைக்கு வந்து மீன்களை சந்தைப் படுத்துவார்கள். இக்காலம் 1985 இற்கு முற்பட்டது. இங்கு காலை சந்தை, மாலை சந்தையென இரு நேரச் சந்தைகள் நடைபெற்றன. 1950 ஆண்டு காலப் பகுதியில் 4000 மெற்றிக் தொன் மீன்பிடி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தது. 1980 - 1983 காலப் பகுதியில் 40,000 மெற்றிக் தொன்னுக்கு மேல் மீன்பிடியிருந்தது. குருநகர் மீன்பிடியே இதில் பெரும் பங்கை வகித்தது எனலாம். ஏனெனில் 1975 இற்குப் பின் இழுவை வலைத்தொழில் அதிகமாக நடை பெற்றது. சந்தைப்படுத்தலில் குருநகர் சின்னக்கடை, யாழ். மீன் சந்தையும், மீன்பிடிக் கூட்டுத்தாபனமும், குருநகர் கிழக்கேயும், மேற்கேயும் அமைந்துள்ள சந்தையும், போக்குவரத்தில் கண்டி வீதி, யாழ்ப்பாணப் புகையிரத நிலையமும் இப்பிரதேசத்திற்கு அண்மையில் இருந்ததால் உடனடியாக மீனுணவு சார்ந்த பொருட்களை கொழும்பு ஏனைய இடங்களுக்கும் அனுப்பக்கூடியதாக இருந்தது.

யுத்தத்தினால் உடைமை இழந்து, ஊரையே இழந்திருந்தவர்களுக்கு யுத்தம் முடிந்த இந்தக் காலங்களில் வாழ்வாதாரத்தை சீராக்கும் போது, இழுவலை போன்ற தொழில் துறைகளை சட்டசார்பாக முடக்கும்போது பல தாக்கங்களுக்கும், பொருளதார தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். அந்நிய நாடுகள் எமது வளத்தை அள்ளிக் கொண்டு போகும்போது அதில் ஒரு சிறு பகுதியைக் கிள்ளிக்கொண்டு வருவது தவறா என்பது புரியவில்லை. சிறுதொழில்கள், கடல் அடித் தரைகள் அழிவுக்கு தடையாயிருப்பது தவறுதான். ஆனால், அதற்கென உரிய இடத்தில் சிறிய இழுவைப் படகுகளை பாவிப்பதற்கு தற்காலிக நிலையை ஏற்படுத்தலாம். சரியான நிலையில் நோக்கினால் ஏனைய நாடுகளுடன் ஒட்டுமொத்தமாக இழுவலை நிறுத்துவதுதான் ஏற்றது. இதுமுடியுமா? அதுவரையில் செயல் முறை சாத்தியமான தீர்வு இம் மீனவ மக்களை பாதிப்புக்கு இட்டுச் செல்லாமல் இருப்பது நல்லது.

யாழ்ப்பாணத்தில் குடிச்செறிவு கூடிய இடமாக குருநகர் விளங்குகின்றது. இப்பிரதேச மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். இங்கு 2 ஆலயங்களும் 6 சிற்றாலயங்களும் அமைந்துள்ளன. சந்தியோகுமையோர் ஆலயம் இம்மக்களின் இதயம் என்று சொல்லலாம். இதன் வரலாறு தனித்தன்மை வாய்ந்தது. இரண்டு பாடசாலைகள், பாலர் பராமரிப்பு விடுதி, விளையாட்டு மைதானம் காணப்படுகின்றன. இங்குள்ளவர்கள் உதைபந்தாட்ட ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தின் முன்னணி விளையாட்டு கழகங்களில் ஒன்றாக பாடுமீன் விளையாட்டுக் கழகம் விளங்குகிறது. அரச, தனியார் துறைகள் சிறு வர்த்தக முயற்சியில் ஈடுபடுவோர் தவிர ஏனையோர் மீன்பிடிக் கைத்தொழிலையே நம்பியுள்ளனர். இவர்களது வருமானம் தளம்பல் நிலை கொண்டதாக காணப்படுகிறது. வாழ்க்கை செலவுக்கு அக்கால வருமானம் போதுமானதாகவிருந்தது. பொருளாதாரச் சுமை காரணமாக இன்றைய வருமானம் வாழ்க்கைச் செலவுக்கு போதாது. இது தவிர இப்பிரதேசத்தில் சந்தை முறைமைகள், மீன் உற்பத்திப் பொருட்களின் விற்பனை, ஏற்றுமதி முதலாளிகளின் சுரண்டல், முகவர் தலையீடு ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன.

மீன்பிடித் தொழிலார்கள் வருமானத்தை செலவு செய்வதுடன் சேமிப்பு பழக்கம் குறைந்தவர்களாகவும் உள்ளனர். இதனால், முதலீடுகளைச் செய்யவோ சேதங்களை ஈடு செய்யவோ பணநெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். 1999 இல் இப்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மீனவர் காப்புறுதித் திட்டத்தில் ஐந்து பேர் மட்டும் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கடற்றொழில் பயிற்சி நிலையம்



2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில், 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. யுத்த அனர்த்தங் களால் முற்றாக சேதமடைந்துள்ளது. ஜெய்க்கா நிறுவனம் (யப்பான்), யாழ். அரசு அதிபர், தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திர நிறுவனம் ஆகியோரின் அனுசரணையுடன், ஜெய்க்கா நிறுவனம் புனர்நிர்மாணம் செய்வ தற்கு முன்வந்துள்ளது. குருநகர் பிரதேசமானது ஒரு பாரம்பரிய மீன்பிடி பிரதேசமாகக் காணப் படுவதால் மீன்பிடி கைத்தொழிலில் இன்றுவரை மீனவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனாலும், ஆரம் பத்தில் பாவிக்கப்பட்டிருந்த மிதவைகள், ஊசிகள், வலைகள், நூல்கள் எல்லாம் இயற்கை யாக உள்ளூர் பொருள்களில் இருந்து பெறப் பட்டது. ஓலைவலைக்கு பாவிக்கப்படும் பனை ஓலைகள் இன்று முற்றுமுழுதாக மாறி ஓலைக்குப் பதில் வெள்ளை நிற பொலித்தின் துண்டுகள் பாவிக்கப்படுகின்றன. கயிற்றுக்கு பதிலாக பழைய வலையைக் கயிறாக்கி பாவிக்கின்றனர். சிறகு வலைகள், ஆழ்கடல் சிறகுவலைகளுக்கு கம்புக்கு பதிலாக கம்பிகளோடு இணைந்த பைப்புகள் பாவிக்கப்படுகிறது. வருமானத்தை அதிகரிப்ப தற்கு வலையில் கூடுகளை அமைத்து கூட்டுவலை (பைக்வலை) கரையோர கடல் முழுவதும் காணப்படுகின்றது.

1980 ஆண்டுகளில் பெறப்பட்ட மீன்பிடி நிலைக்கு நாம் வரவேண்டும் என்றால் 2020 ஆம் ஆண்டுக்கு மேல் செல்லலாம். துரித கெதியில் அபிவிருத்திச் செயல்பாட்டில் சென்றாலே நாம் அந்த இலக்கை அடைய முடியும். தற்போதைய மீன்பிடி நிலை 15,000 - 20,000 மெற்றிக் தொன் மட்டுமே (யாழ். மாவட்டம்) 1980 ஆம் ஆண்டின்படி ஒவ்வொரு ஆண்டும் 2% அதிகரிப் பின்படி நாம் அடைந்திருக்கவேண்டிய இலக்கு (யாழ். மாவட்டம் 2011) 100,000 மெற்றிக் தொன். யாழ் மாவட்டம் தற்போது மீன்பிடியில்



இருக்கும் நிலையில் கடலோரப் பிரச்சினை ஒருபுறம் மீனவர்க்கு நெருக்குதலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதனால் குருநகர் மீனவர் களுக்கு இவை தாக்கத்தை எற்படுத்தியுள்ளது. ஒரு நாளைக்கு 30 இலட்சம் வருமானத்தை இழுவைவலைத் தொழிலில் இழப்பதால் 1500 குடும்பங்களும், உபவருமானத்தைப் பெறும் 1000 இற்கு மேற்பட்டோர் வருமானத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டாக்டர் நச்சினாக்கினியன் (யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர்) 'மீனவர்களின் ஆரோக்கியம் பற்றிய விபரம்' என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; 1980ம் ஆண்டு களின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் இரத்தப் பற்றாக்குறை என்றால் பெரும் பிரச்சினை இருப்பதில்லை. ஒருமுறை மீனவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டுவிட்டு வாகனத்தில் சென்று அங்கு இரத்தம் பெற்றபோது, சேமிக்க இடமில்லாத படியால் மற்றவர்கள் அடுத்தமுறை தரலாம் என்று கூறித் திரும்பிய காலம் அது. இது அவர்களின் போசாக்கின் சிறப்பு நிலையை விளக்குகிறது. அவர்கள் பயப்படுவதில்லை. பயமின்றி ஆழ்கடலுக்கு சென்று எந்த பயங்கர நிலையையும் சமாளித்து, சமாளிக்கமுடியும் என்ற துணிவால் வந்த நம்பிக்கை. இன்று மீனவர்கள் சுனாமிப் பயத்தால் நிலை குலைந்து நிற்கின் றனர். யுத்தகால அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட விடயம் வேறு.

இளைஞர்களும் கடல்சார் நடவடிக்கை யில் இருந்து தனிமைப்பட்டுள்ளனர். இன்றைய தேவை மீள் கட்டுமானங்களும், கரையோர மீன்பிடி தொழில்நுட்ப அபிவிருத்தியும், ஆழ் கடல்மீன்பிடி, கடல்சார் தொழில்நுட்ப பயிற்சி கள், மீன்வளர்ப்பு, கடலுணவு பதப்படுத்தல் ஆகியவற்றில் துரித முன்னேற்ற அபிவிருத்தி யாகும்.

1980 - 1983 காலப் பகுதியிலிருந்த மீன் பிடி உற்பத்தியை 2020 ம் ஆண்டிலாவது துரித அபிவிருத்தியால் அடைய வேண்டியுள்ளது. கரையோரம் பேணல், கரையோர புனர் நிர்மாணம், உல்லாசப் படகுகள், பந்நால் கலங்கள் கடன் அடிப்படையில் பெற்று ஆழ்கடல் வளத்தைப் பெறுதல். இப்பிரதேசங்களில் உள்ள இறங்குதுறைகளை நவீன வசதிகளைக்கொண்டு புனரமைத்தல், படகு திருத்தும் வசதிகளை ஏற்படுத்தல், வெளிச்சவீடு - வள்ளச்சாலைகள்

அமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல், மின்சாரம் - நன்நீர் வசதிகளை ஏற்படுத்தல், கரையோர மீன்பிடியில் மாற்றம் ஏற்படுத்தல், சிறிய மீனின அழிவுகளைத் தவிர்த்தல், கடல் சூழல் மாசடைதலைத் தடுத்தல், குளிர் பதனிடல் தொழிற்சாலை அமைத்தல், குளிரூட்டல் வசதிகள், மீன்களை ரின்னில் அடைத்தல், மீன் உணவு தயாரித்தல், அட்டை - இறால் - நண்டு வளர்த்தல், மீன் வளர்த்தல், பதனிடல் ஆகிய துறைகளை மேம்படுத்தி பொருளாதார அபிவிருத்தியடையலாம்.

இம்மக்கள் சனப்பெருக்கம், இட நெருக்கடி இவைகளில் மீட்சி பெற அல்லைப்பிட்டி, ஒருகரை, மண்ணித்தலை ஆகிய இடங்களில் மக்கள் குடியேறுவதும், அதற்கான திட்டங்களை வகுத்தும், செயற்படக்கூடிய குழுக்களை அமைத்தும், உரிய நிறுவனங்களின் தொடர்புகளை ஏற்படுத்தி திட்டங்களுக்கான பண உதவிகளைப் பெறுவதுடன், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் பரிசோதர், க. கூட்டுறவு சங்கங்கள், சமாசம், சம்மேளனம், கிராமஅலுவலக பிரதேச அலுவலகர், அரசாங்க அதிபர் ஆகியோரின் ஒத்துழைப்புகளுடன் இவற்றை செயல்படுத்துவதற்கு ஆர்வமுள்ள மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இதேவேளை மக்கள் பிரநிதிகள், அமைச்சர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை பெறுவதும் அவசியம்.

இவை வளர்ச்சியின் படியில் நகர்ந்து செல்லும்போது கல்முனை, மண்டைதீவு ஆகிய இடங்கள் துறைமுகச் செயற்பாட்டிற்கான இடங்களாக விரிவடைகின்றது. ஆழ்கடல் படகுகளின் இறங்குதுறையாக அவை வளர்ச்சியடைகின்றது. ஆழ்கடல் மீன்பிடியில் ரியூனா மீன்பிடி, யப்பானிய முறையிலான பெரும்பாட்டு சிறகுவலைகள், செங்குத்து தூண்டில்வலை, சூரை மீன்பிடி ஆகியவற்றை பருத்தித்துறையிருந்து 200 கடல் மைல் தூரம் உள்ள இலங்கை பொருளாதார வலையத்திற்குள் அதற்கான கடல் வளத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய பயிற்சிகளை அளிப்பதற்கும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான நவீன தொழில்நுட்ப பயிற்சிகளையும் வளங்குவதற்காக, அரச அதிபரினதும் ஜெய்க்கா நிறுவனத்தினதும் உதவியுடன் கடற்றொழில் பயிற்சிக் கல்லூரிக்கான இரண்டு மாடிக் கட்டடம் இரண்டாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பயன்கள் இளைஞர், யுவதிகள், மீனவர்களை சென்றடைவதற்கான வழிவகைகளை இப்பயிற்சி நிலையம் மேற்கொள்ளும். மீன் வளர்ப்பு, மீன் பதனிடல் போன்றவற்றில் புதியதோர் தேவை கருதி பயிற்சி அளிப்பதற்கு ஜெய்க்கா நிறுவனம் உதவி செய்துள்ளது. இப்பயிற்சியை பெறுவதற்கு 20.03.2011 இல் அலுவலகர்கள் கொழும்பு சென்று ஒருவாரப் பயிற்சியை முடித்துள்ளனர்.

குருநகர் கடல் பிரதேசங்களின் நீரியல் வளங்கள் சரியான முறையில் முகாமை செய்வதற்கு நீரியல் உயிரியல் வள ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் 1990களில் குருநகர்ப் பகுதியில் பாலைமீன் வளர்ப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்டு வந்தது. ஆனால், அவ்விடத்தில் தற்போது மக்கள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறுத்தீவு தொடராக தென் மேற்குப்பகுதி அல்லைப்பிட்டி வரை பாலமீன் வளர்ப்பு, நண்டு, இறால் வளர்ப்புக்கு உகந்த இடமாகும். அரியாலைப் பகுதி, பூவரசந்தீவை அண்டிய பகுதிகளிலும் இவ் வளர்ப்பை மேற்கொள்ளலாம். கண்டல் தாவரங்கள், உணவு - மருந்தாகும் பாசிவகைகளையும் வளர்க்கமுடியும். போதிய வளங்கள் இருந்தும் நீரில் வளர்ப்புத்துறை விருத்தியடையாமைக்கு மக்களின் அத்துறை சம்பந்தமான அறிவும் ஆர்வமும் இன்மையே காரணம். எனவே, மக்களிடையே ஆர்வம் ஏற்பட நீரியல் வளர்ப்புத் தொடர்பான கல்வி அறிவும், விரிவாக்கல் நடவடிக்கையும் அவசியம். ஒரு பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களை நன்கு திட்டமிட்ட முறையில் முகாமைப்படுத்துவதினூடாக அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தலாம். நீரியல் வளர்ப்பு கைத்தொழில் விருத்தியானது நிபுணர்களின் சேவை மட்டுமல்லாது அரசியல் கொள்கைகள், கொள்கை பகுப்பாளர், முதலீட்டாளர்கள், பொறியியலாளர்கள், குடிமக்கள் போன்ற எல்லாத் தரப்பினரதும் ஒன்றுபட்ட உழைப்பால் உருவாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.



'நீருள்ள இடமெல்லாம் மீன் வளர்' எனும் சீனப் பழமொழிக்கிணங்க, யாழ்குடா நாட்டின் பொருத்தமான எல்லா நீர் நிலைகளை யும் மீன் வளர்ப்புக்குட்படுத்துகின்றபொழுது இன்றுள்ள பல உணவுப் பொருளாதாரப் பிரச்சி னைகளில் இருந்து விடுதலையடையும்.

கல்வியறிவு காரணமாக குருநகர் கடற் றொழிலாளர்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள், முகாமைத்துவ நிர்வாகப் பிச்சனை களை தீர்க்கும் விதத்தில் முகாமைத்துவ நிர்வாகப் பயிற்சிகள் தேவையாக உள்ளன. ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு நவீன உபகரணங்கள், கலங் களை பராமரித்தல் போன்ற பயிற்சிகள் தேவை யாக உள்ளன. ஆழ்கடல் மீன்பிடி தொழில் நுட்ப பயிற்சி, விஞ்ஞான தொழில்நுட்பம், கடல் பாதுகாப்பு, கண்ணாடி நாரிழையிலான படகு திருத்தல் தொழில் நுட்பம், நீந்தல், சுழியோடுதல், கடலில் முதலுதவிப் பயிற்சிகள் போன்றவை அளிக்கப்படவேண்டும். வெளியிணைப்பு, உள்ளி ணைப்பு இயந்திரம் பழுது பார்த்தல், பராமரித்தல் பயிற்சி, ஆழ்கடல் இயந்திர தொழில் நுட்பப் பயிற்சி, மாலுமிப்பயிற்சி, கப்பல் டெக் அலுவல கர் டிப்ளோமா பயிற்சி, மோட்டர்மான் பயிற்சி, கொக்ஸ்வெய்ன் (கலம் செலுத்தல்) பயிற்சி, டிப்ளோமா இயந்திர தொழில்ப் பயிற்சி ஆகிய பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை பிரதம பணிப்பாளர் *(Chairman, National Institute of Fisheries and Nautical Engineering, Colombo)* தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரக் கல்லூரி, கொழும்பு, நடவடிக்கை எடுத் துள்ளார். அதற்குரிய புதியகட்டட வேலைகள் குருநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குருநகரில் அமையும் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரக் கல்லூரியில் பயின்ற இளைஞர்கள், யுவதிகளின் எதிர்கால சுபீட்சத்திற்கு வழியமைக்க வேண்டும். இவர்களுக்கான உதவிகளை (கல்வி பெறுவதற்கான உணவு, கட்டணங்களை) பெற்றுக் கொடுப்பதற்கு உதவும் நிறுவனங்கள், வசதி படைத்தோர் தங்களாலான பங்களிப்பை வழங்கவேண்டும். ஆர்வமுள்ளவர்களை தெரிவு செய்து அதற்கான வசதிகளை வழங்கினால் அவர்களின் முன்னேற்றத்திற்கும் குருநகரின் சிறப் பிற்கும் வழியமைக்கும். அதற்கான முயற்சிகளை இப்பொழுதே எடுப்பது சாலச் சிறந்தது.

அனுபவமுள்ள திறமை வாய்ந்தவர் களின் வாரிசுகளே கடல்துறைகளை விட்டு விலகி நிற்கின்றனர். இத்துறையில் படித்த இளைஞர்கள் ஈடுபடுவதற்கு கடல்சார் கல்வியும், நவீன தொழில் நுட்ப வசதிகளும், கரையோர புனர்நிர்மானமும் அவசியம். இவை துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படல்வேண்டும். அப்போதுதான் புதிய தொழில்நுட்ப முறைகளால் இளைஞர்கள் கவரப்பட்டு கடல்சார் துறையில் கவனம் செலுத்துவார்கள். இவ்விழிப்புணர்வை ஏற்படுத் தாது விட்டால் குருநகர் வாழ் இளைஞர்கள் கடலை வேடிக்கை பார்க்கும் நிலைவரும். கரை யோர சிறு தொழில்துறையுடன் முடங்கிக் கிடக் கும் நிலையும் வரலாம். எனவே, மீன்பிடியில் சாதகமான சட்ட நடவடிக்கைகளும், உடன் கவனத்திலெடுத்து தீர்வுகள் செயல்முறையில் நடைமுறைப்படுத்தும்போது குருநகர் வாழ் மக்களுக்கு விடிவுகாலம் பிறக்கும். ■

## 'வெள்ளோட்டம்' - இறுவட்டு




'இயேசுவில் மீண்டும் எழுவோம்' எனும் ஆன்மீக புதுப்பித்தலின் வெளிப்பாடு புதுவாழ்வே. பழமைகளைக் களைந்து கிறிஸ்துவின் இயல்பினை அணிந்து பெருக் கெடுத்தோடும் அருள் வெள்ளத்திலே எம் புது வாழ்வின் வெள்ளோட்டத்தினை நினைவுகூர்ந்து 'வெள்ளோட்டம்' எனப் பெயர் தாங்கி வருகின்றது, இனிமையான கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய இசை இறுவட்டு. எம் மண்ணின் மைந்தன் இசையமைப்பாளர் சுதர்சனின் இசையிலே, நம் நாட்டு கலைஞர்களினதும், தென்னிந்திய கலைஞர்களி னதும் ஒரு கூட்டு முயற்சியாக இது வெளிவருகின்றது. திருப்பலிப் பாடல்கள், புனித யாகப்பரின் பாடல்கள் எனப் பல இனிய பாடல்கள் தாங்கிவரும் இவ் இறுவட்டு புனித யாகப்பர் பங்கின் வெளியீடாக, ஆலயத்தின் 150 ஆவது ஆண்டின் நிறைவினையொட்டி வெளியிடப்படுகின்றது.

# குருநகர் மக்கள் மனங்களில் அன்னை மரியாள்

செல்வி மி. பிறின்சியா



மரியாளுக்கு மேலான வணக்கம் செலுத்த வேண்டுமென்பது திருச்சபையின் போதனை. மாதாவுக்குரிய வணக்கத்தைச் செலுத்தாமல் இருக்கிறவர்கள் வணக்கம் செலுத்துவதால் கிடைக்கும் அருளை இழக்கிறார்கள். ஏனென்றால்; மாதா நமக்குத் தாயாக இருக்கும்படி இயேசுவால் கொடுக்கப்பட்டிருக்கிறார். யேசு தமது இறுதிவேளையின்போது, தனது தாய் மரியாவை எங்களுக்கும் இவ்வுலகத்திற்கும் தாயாக ஏற்படுத்திச் சென்றார். அன்றிலிருந்து அன்னை மரியாள் அனைத்துலக தாயாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். 'மாதா, யேசுவின் தாய் அல்ல' என்ற விவாதம் தோற்றம் பெற்றபோது அதனை முறியடிக்கும் விதமாக 'எபேசு திருச்சங்கம்', 'மாதா இறைவனின் தாய் என்றும் அவள் அனைத்துலகோரின் தாய்' என்றும் பிரகடனம் செய்தது. இந்தத் தாய்மைப் பேற்றை பெற்றுக்கொண்ட மரியாள். மீண்டும் அழிவை நோக்கியே ஓடுகின்ற ஒவ்வொரு தனி மனித உயிரின் மேலும் தனிப்பட்ட முறையில் அக்கறைகொண்டு எம்மை அரவணைகிறாள். அதன் வெளிப்பாடாக உலகில் ஆறு தடவைகளுக்குமேல் தரிசனம் தந்த மரியா, காட்சி கொடுத்தவர்களிடம் கேட்டுக்கொண்டது செபமும், பரித்தியாகமுமே.

பரி. புதுமை மாதா ஆலய முகப்பு



பாரம்பரியமாகக் கூறப்பட்டுவந்த, நடைபெற்றுவந்த அற்புதங்களால் அன்னையின் புகழ் உலகெங்கும் பரவியது. அன்னையே தம்மை வெளிப்படுத்துவதற்காக பல வழிகளில் மக்களை அரவணைத்திருக்கின்றார், ஆறுதல்படுத்தியிருக்கிறார். இதனால் மாதாவை தாயாக ஏற்றுக்கொண்டனர். இந்த நிலையிலும் சிலர் மரியன்னையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அவர்கள் அவர்மேல் கொண்டுள்ள அவவிசுவாசமே இதற்கான அடிப்படைக் காரணியாகும். மற்றும் தம்மை நிலைப்படுத்த தோற்றம்பெறும் புதிய கத்தோலிக்கமல்லாத சபையினரின் அத்திவாரத்திற்கு அவர்களால் எடுத்துக்கொண்ட வாதமுமாகும். அன்னை பெண்களுள் பேறுபெற்றவளும், அவள் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டவளும், சென்மபாவமில்லாமல் உற்பவித்தவளுமாவாள்.

பரிசுத்த மரியன்னையின் பக்தி எமது பங்காகிய குருநகரில் ஆழமான விசுவாசத்துடன் மேலோங்குகின்றது. போர்த்துக்கேயர் தமது நாற்சதுரக் கோட்டையில் 1625 இல் கட்டப்பட்ட குருசு வடிவிலான 'வெற்றிமாதா' ஆலயம் அன்னையின் புதுமைகளால் பின்னர் 'புதுமைமாதா' ஆலயம் என அழைக்கப்பட்டது. ஒல்லாந்தர்கால கெடுபிடிகளுக்குப் பின்னர் அந்த அன்னையின் நினைவாக 1887 இல், குருநகரில், 'புதுமைமாதா' ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் புனித யாகப்பர் ஆலயப் பங்குடனேயே இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பங்கில் அன்னைக்கென வேளாங்கண்ணி சிற்றாலயம், வியாகுலமாதா சிற்றாலயம், கொலை விலக்கி மாதா சிற்றாலயம், அருள்மாதா சிற்றாலயம் எனப் பல சிற்றாலயங்கள் உள்ளன. புனித யாகப்பர் பங்குடன் இணைக்கப்படாதிருப்பினும் குருநகரில் பரி. கார்மேல் மாதா ஆலயமும் அமைந்துள்ளது. இவ்வாலயங்கள் மாதாவின்மீது குருநகர் மக்கள் கொண்டுள்ள பக்திக்கு எடுத்துக்காட்டாகத்

திகழ்கின்றன. இவ்வாறு பல பெயர்களிலான மாதா ஆலயங்களை உருவாக்கியுள்ள இம்மக்கள் மாதாவின்மீது எத்தகைய பக்தியைக் கொண்டுள்ளார்கள் என்பதனை நோக்குவோம்.

ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பெற்ற அன்னைமீது அன்பு வைத்துள்ளானோ தெரியாது. ஆனால், அவர்கள் அன்னை மரியாள் மீது கொண்டுள்ள அன்பு, பக்தி அளப்பரியது. எமது பங்கில் வாழும் அனைத்துக் குடும்பமும் அன்னை மரியாள், சூசையப்பர், யேசு என்ற சிறிய திருக் குடும்பம் எப்படி வாழ்ந்ததோ அவ்வாறே தாங்களும் ஓர் அன்பினால் பிணைக்கப்பட்ட ஓர் அழகிய சிறிய திருக்குடும்பமாக வாழ முனைகிறார்கள். இதற்காக தந்தையர்கள் தமது பாதுகாவலரான சூசையப்பரிடம் வேண்டுகின்றனர். அன்னையர்கள் தாய் மரியாவிடம் வேண்டுகின்றனர்.

கன்னி மரியாள் தம்மகத்தே பல சிறப்பான பண்புகளை கொண்டிருந்தார். அன்பு, தாழ்ச்சி, பொறுமை, பரிவு, இரக்கம், எனக் கூறிக்கொண்டே போகலாம். பெண்களாக பிறந்த அனைவரும், சிறப்பாக எமது பங்கிலே உள்ள பெண்கள் அனைவரும் அன்னையிடம் வேண்டுவது இப்பண்புகளையேயாகும். அவர்கள் 'நாமும் உம்மைப்போல் வாழவும், உமது அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையை வாழவும் உதவி செய்யும்' என்றே வேண்டுவர். இவ்வாறாக மாதாவின் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாக அவரின் புகழை சிறப்பிக்க, பரப்ப எமது பங்கிலே பல சபைகளை உருவாக்கி மாதாவின் அன்பையும், அவளின் இரக்கத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இதில் மரியாயின்சேனை குறிப்பிடத்தக்கது.

சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகை, பரலோகத்தின்வாசல், தேவவரபிரசாதத்தின் மாதா என்னும் மூன்று பெண்கள் பிரசீடியங்களைக் கொண்டதாக இயங்கும் இச் சபையினர் சிறுவர்கள், இளம்பெண்கள், முதியவர்கள் போன்றோரை இணைத்து எமது பங்கில் மாதாவின் பக்தியையும், அவரின் அன்பையும் பரப்புகின்றனர். மேலும் இதனூடாக பல பணிகளில் ஈடுபடுகின்றனர். மாதாவின் அர்ப்பண வாழ்வை வாழ அனைவருக்கும் அழைப்புவிடும் முகமாக பணிபுரிகின்றனர்.

சபைகளினூடாக அன்னையின் பக்தி பரவும் அதே சமயம் எமது பங்குமக்கள் தாம் அன்னையின்மீது கொண்டுள்ள பக்தியை தனித்துவமாக வெளிப்படுத்துகின்றார்கள். எவ்வாறெனில்; எமது பங்கிலே வருடப் பிறப்பன்று அனைவரும் குடும்பமாக திருப்பலியில் பங்குபற்றுவர். திருப்பலி நிறைவுபெற்ற பின்னர் புதுமைமாதா ஆலயம்சென்று அன்னையைத் தரிசித்து, மெழுகுதிரி கொழுத்தி, வணங்கி அன்றைய தினத்தின் ஆரம்பத்தை முழுமையாக அன்னைக்கு அர்ப்பணித்த பின்னரே வீடு செல்வர். முன்னர் ஒவ்வொரு குடும்பமும் அன்னையின் ஆலயத்தில் 'பட்டாஸ்' கொழுத்தி தமது மகிழ்வைத் தெரிவிப்பது வழமையாகும்.

தினந்தினம் புதுமைமாதா (காணிக்கை மாதா) ஆலயத்தில் அன்னையைத் தரிசிப்பதும், அஞ்சனந்தாழ்விலுள்ள 'கொலை விலக்கி மாதா' வைத் தரிசிப்பதும் இவர்களது மாதா பக்தியை எடுத்தோதுகின்றது. மேலும், இலங்கையின் பல இடங்களிலும் உள்ள அன்னையின் ஆலயங்களைத் தேடி யாத்திரையாகச் சென்று குடும்பமாக பங்குபற்றி அன்னையின் மேலுள்ள பக்தியை வெளிப்படுத்துகின்றார்கள். எவ்வளவு கடினமான தூரப்பயண யாத்திரைகளாக இருப்பினும் அன்னையின் அன்பைப்பெற அன்னையின் இருப்பிடம் தேடிச்சென்று தமது மேலான பக்தியை உறுதிப்படுத்துகின்றனர். இதற்கு உதாரணமாக; வேலணை சாட்டி சிந்தாத்துரை மாதா, வேலணை சின்னமடு மாதா, மன்னார் மருதமடு மாதா, பண்டத்தரிப்பு பற்றிமா மாதா, சில்லாலை கதிரை மாதா ஆலயத்திற்கு செல்லுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் எமது பங்கில் மாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெறுகின்ற காணிக்கை மாதா திருவிழாவிலும், அன்னையின் பெயரால் நடைபெறும் அனைத்து திருவிழாக்களிலும் எமது பங்கு மக்கள் பக்தி உணர்வோடு கலந்து கொள்வர். இதனால் மாதா பக்தியை தாமும் உணர்ந்து, அப்பக்தியை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்துகின்றனர். வியாகுல மாதா திருவிழா வருடந்தோறும் தவக்காலத்தின் ஆறாம் வாரம் நடைபெறுகின்றது. இவ்விழாவில் திரளான மக்கள் பக்திபூர்வமாக பங்கேற்பர். மேலும், அன்னையை மகிமைப்படுத்தும் விதமாக அனைவரும் குடும்ப செபமாலையில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு தமது மனங்களில் நிறைந்த அன்னை மரியாள்மீது கொண்டுள்ள பக்தியின் வெளிப்பாடுகளை நோக்கும்போது குருநகர் மக்கள் மரியன்னையை 'பெற்ற அன்னையின் வாஞ்ஞையோடு அரவணைக்கிறார்கள்' என்பதே உண்மை. ■



திருக்குடும்ப அருட்சகோதரிகள்

ஆலய அருட்பணியிலே கைகொடுக்கும் அருட்சகோதரிகள்

திருச்சிலுவை அருட்சகோதரிகள்



# குருநகர் மக்களின் வாழ்வோடு இணைந்த விழாக்கள்

கி. யோசவ் மென்சன் (ஒஸ்லோ - நோர்வே)

## அறிமுகம்

ஆண்டாண்டு தோறும் பல விழாக்களை எடுப்பது தமிழரின் பாரம்பரிய நிகழ்வாகும். இல்லங்கள் தோறும் விழாக்கள், கோவில்கள் தோறும் விழாக்கள், பல்கலைக்கழகங்கள் முதல் பாடசாலை வரை விழாக்கள், பொது மண்டபங்கள்தோறும் பலதரப்பட்ட விழாக்கள். இவ்விதமாக எங்கும், எதிலும், எதற்கும் விழாக்களை காண்பதிலே தொன்று தொட்டு தமிழருக் குள்ள பேரார்வம் சொல்லுந்தரமன்று.

இப் பேரார்வத்துக்கு சற்றும் சளைக்காத, குறைவில்லா ஆர்வத்துடன் விழாக்கள் எடுப்பது குருநகர் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்ட நிகழ்வாகி தற்போது கலாசாரமாகி விட்ட ஒன்று எனத் துணிந்து கூறிவிடலாம்.

"விழா எனும் தூய தமிழ்ச் சொல் 'விழைவு' எனும் தொழிற் பெயர் அடியைக் கொண்டது. விழைவு என்றால் விருப்பம் என்னும் பொருள்படும். நாம் அனைவரும் ஒன்று கூடி, நமக்குள் சிறப்பாகவோ, பொதுவாகவோ உணர்வுப் பூர்வமாக ஒழுங்கமைத்து விருப்போடு செய்யப்படும் செயல்திறன் யாவும் விழாவாக கணிக்கப்படும்" என, புலவர் வேல்மாறன் அவர்கள் 'பழந்தமிழ் மக்களின் ஆன்மீகம்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

எம் குருநகர் மக்கள் சிறந்த கடலோடிகளும் கடின உழைப்பாளிகளும் ஆவர். கடலோடு போராடி உழைத்த பணத்தை அன்றே கரைத்து விடுவார்கள். நாளைக்கு வேண்டுமே என்ற சிந்தனை அவர்களது மனதில் எழாது. இதற்கு புறம்பாக பணத்தை சேகரித்து வைப்போரும் இல்லாமல் இல்லை.

இவர்கள் அன்றாடம் உழைக்கும் பணம் சாப்பாட்டுச் செலவாகவும், விழாக்களுக்கான ஊக்குவிப்பாகவும், அநாவசிய டாம்பீகச் செலவாகவும் இருக்கும். 'நாளைக்கு படையாளி தருவார்', 'படைத்தவன் கல்லையா சாப்பிடத் தருவான்?' என்ற தெய்வ நம்பிக்கையுடன் கூடிய பதில்கள், கேட்பதற்கு இனிப்பாக இருந்தாலும் நிஜத்தில் கசக்கத்தான் செய்யும்.

1861 ஆம் ஆண்டு 39 குடும்பங்களின் முயற்சியுடன் தொலைநோக்கு சிந்தனையுடன் ஆன்மீக தேவைக்கென சக்திக்கு மீறிய நிலையில் பிரமாண்டமானதொரு ஆலயம் கட்டுவதற்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. இக் குடும்பங்களின் உடல் உழைப்பாலும், பொருள் உதவியாலும், தியாக சிந்தையாலும், புதுமைகள் பல செய்த புனிதருக்கு அதிலும் மேலாக பாதுகாவலருக்கு புதியதொரு கட்டடம். உழைப்பிற்கு அஞ்சாதவர்கள், வலிந்த மரக்கோல் போட்டு கடலை துளாவியவர்கள், உதவிக்கும் பின்னிற்கமாட்டார்கள். இது இவர்களது இரத்தத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட குணமாகும் ஏன் பண்பும் கூட. இப் பண்பின் விழைவாக குருநகர் மக்கள் தம் வாழ்வோடு இணைந்து எடுக்கப்படும் விழாக்களை பற்றியவையாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆலயத் திருவிழாக்கள்

குருநகர் மக்களுடன் ஒண்டறக் கலந்த பண்பின் விழைவுதான் இவர்கள் வாழ்வோடு இணைந்து பிரிக்க முடியாத புனித யாகப்பர்



விழாவாகும். விழா என்றால் சாதாரண விழா வல்ல. கோலாகலமான விழா புனிதரின் திருச் சுரூபம் தேரில் ஏற்றப்பட்டு வெளிவாசலை கடந்து நகர்வலம் வந்து மீண்டும் கோயிலின் உள் வரும்வரை தொடர்ச்சியான பட்டாசு வெடிகள் வானைப் பிளப்பது மாதிரி. வீதியின் இருமருங் கிலும் வலைகளால் சோடனைகள், மின் விளக்கு களின் வர்ணஜாலங்கள், விருந்து சோறென்ன, பால்கஞ்சி என்ன, சிற்றூண்டி உணவு என்ன, குளிர்பான பரிமாறலென்ன, இவற்றிற்காக ஒருநாள் தொழில் பணத்தை அப்படியே வைத்தி ருப்பார்கள். தனிப்பட்ட முறையிலும் செலவழிப் பார்கள். செலவென்பது இரத்தத்தோடு ஒட்டிய குணமல்லவா? கலங்கமாட்டார்கள். காணிக்கை மாதா, கார்மேல் மாதா, வேளாங்கண்ணி மாதா, கொஞ்சேஞ்சி மாதா, புனித அந்தோனியார், சம்பேதுருவார், புனித செபஸ்தியார் போன்றவர் களின் திருவிழாக்களின் போதும் வேற்றுமை பாராட்டாது, தமது சொந்த விழாவாக எண்ணி பங்களிப்பையும் நல்கி விருப்போடு பங்கு கொண்டு விழாவை சிறப்பிப்பார்கள். எதிர்பாராத வகையில் சிறிய பிரச்சனைகள் ஏற்பட்டதையும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இன்பியல், துன்பியலாக இடம்பெறும் பொது விழாக்களான கிறிஸ்து பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு விழாக்களையும் அதற்கேற்ற முறையில் கொண்டாடுவார்கள். அனுசரிப்பார்கள். ஆன் மீகம் சம்பந்தப்பட்ட திருமுழுக்கு, முதல் நன்மை, உறுதிபூசுதல் ஆகியவற்றையும் சிறிய பெரிய தொரு விழாவாகவே கொண்டாடுகிறார்கள்.

இதற்கு அப்பாலும் பிறந்தநாள் விழா, பூப்புனித நீராட்டு விழா, திருமண விழா போன்ற வையும் சிறப்பாகவே கொண்டாடப்படும். இடையே ஒட்டிக்கொண்டதுதான் பொங்கல் விழா, கார்த்திகை விளக்கீட்டு விழா. சில ஆண்டு களுக்கு முன்புதான் எமது மக்கள் பொங்கல் விழாவை கொண்டாட ஆரம்பித்தார்கள். ஒரு காலத்தில் கிறிஸ்தவம் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களை புறந்தள்ளி சமய வரம்புக்குள் மக்களை உள்ளடக்கி அவர்களை இறுக்கமாக வைத்திருந்தார்கள். இவையெல்லாம் படிப்படியாக தளர்ந்து கனவு போல் கலைந்தன. காலப்போக்கில் கிறிஸ்தவத்தின் புதிய கண் ணோட்டம் அவ்வவ் நாட்டின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களுக்கு மதிப்பளித்து அவற்றை உள்வாங்கத் தொடங்கியது. இதன் அறுவடைதான் மறைமுகமாக கொண்டாடிய பொங்கல் விழாவானது இன்று இம் மக்களாலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மேலும் வசதி படைத்தவர்களால் வெள்ளி விழா, பொன் விழா, பவள விழா, நூற் றாண்டு விழாவென தனிப்பட்ட முறையில் நடத்தப்படும் விழாக்களை மக்கள் இணைந்து நடத்துவதாக காண்பித்து திருப்திப்பட்டுக் கொள் வதையும் மறுப்பதற்கில்லை. எமது பங்கை சேர்ந்தவர்கள் இறைபணிக்காக தம்மை அர்ப் பணித்து அருள்பணியாளர்களாகவும், அருள் சகோதரிகளாகவும் திருநிலைப்படுத்தப்படும் போதும் அந் நிகழ்வுகள் ஊர் ஒத்த விழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

இன்று நாம் எடுக்கும் 150 ஆவது ஆண்டு யூபிலி விழாவானது, மக்கள் அனைவரும் ஒன்று கூடி சிறப்பாக உணர்வுப் பூர்வமாக ஒழுங்க மைத்து விருப்போடு விழாவின் கட்டமைப் போடு கொண்டாடுவது தனிச் சிறப்பாகும்.

பாலைவனத்தில் நீரை வெளிக்கொ ணர்ந்து காட்டியதுபோல் குருநகர் பற்றி அழிந்து, மறைந்து, மறைக்கப்பட்டு, மழுங்கடிக்கப்பட்ட நிகழ்வுகளை, சம்பிரதாயங்களை, பாரம்பரிய சடங்குகளை, கலை இலக்கிய ஆக்கங்களை, அவற்றை உருவாக்கியவர்களை வெளிக்கொ ணர்ந்த 'கலையார்வன்' அவர்களின் கடலலைகள் கொஞ்சும் நகர் என்னும் நூலில் மிக விரிவாக விழாக்கள், சடங்குகள், கொண்டாட்டங்கள் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. எனவே அவற்றி லிருந்து தேர்வுசெய்யப்பட்ட பகுதிகளை தருவது பொருத்தப்பாடாக இருக்கும் எனக் கருது கின்றேன்.

## திருமுழுக்கு (ஞானஸ்நானம்)


திருமுழுக்கானது பிறந்த குழந்தையை திருச்சபையின் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளும் சமயச் சடங்காகும். புனித யாகப்பர் ஆலயத்தில் குழந்தை பிறந்த ஒரு வாரத்தால் கொடுக்கப்பட்டுவந்த திருமுழுக்கு, பெற்றோர்களும் பங்குகொள்ளவேண்டும் என்பதற்காக 1970 களிலிருந்து ஒரு மாதத்தின் பின்னரே கொடுக்கப் படுகின்றது. குழந்தைக்கு ஞானஸ்ஞானம் கொடுப் பதற்கு முன்னோடி நடவடிக்கையாக குழந்தைக் குரிய 'தொட்டதாய்', 'தொட்டதகப்பன்' (ஞானத்தாய், ஞானத்தந்தை அல்லது ஞானப் பெற்றோர் எனவும் அழைக்கப்படுவர்.) பெற்றோரால் தீர்மானிக்கப்படு வார்கள். முன்னாளில் ஞானப்பெற்றோர் பெரும் பாலும் உறவினர்களாகவே இருந்துள்ளார்கள். பின்னாளில் நண்பர்கள், அயலவர்கள் என மாற்ற

மடைந்துள்ளது. ஆயினும், உறவினரில் அல்லது நெருங்கிய நண்பர்களில் புதுமணத் தம்பதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நடைமுறை அன்று முதல் வழக்கிலிருக்கிறது. தற்போது வெளிநாடுகளில் வசிப்பவர்களையும் ஞானப்பெற்றோராக இணைத்துக்கொள்வதுண்டு. இதற்கு சில நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.

பெற்றோரால் தீர்மானிக்கப்பட்ட ஞானப் பெற்றோருக்கு அழைப்பு விடுத்தால் அவர்கள் மறுப்பின்றி பொறுப்புடன் ஏற்றுக்கொள்வார்கள். இதில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையில்லை. தற்போது இதனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்றோருக்கும், ஞானப் பெற்றோருக்கும் இடையிலான உறவை 'கும்பா' என்று சொல்வதுண்டு. ஒருவரையொருவர் 'கும்பா' என்று அழைப்பதில் மனநிறைவு அடைவதுண்டு.

ஞானப்பெற்றோர், பெற்றோர்களுக்கு சமமாக மதிக்கப்பட்டார்கள். பிள்ளைகள் அவர்களுடன் மதிப்பும், மரியாதையுடனும் பழகுவார்கள். ஞானக் காரியங்களில் பிள்ளையை வழிநடத்துவதற்கு பெற்றோரைவிட ஞானப்பெற்றோர் கூடிய கவனம்செலுத்துவார்கள். 'தொட்டபிள்ளை'யைப் பெற்ற உணர்வுடனும், அக்கறையுடனும் கவனித்துக்கொள்வார்கள். குறித்த பிள்ளையின் முக்கிய நிகழ்வுகளுக்கு அப்பிள்ளையின் ஞானப்பெற்றோர் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டு கண்டிப்பாக அழைக்கப்படுவார்கள். அவர்களும் முன்னின்று தமது பங்களிப்பினைச் செய்வார்கள். பிள்ளைகள் அடிக்கடி ஞானப்பெற்றோரைச் சந்தித்து வருவது வழமை. தற்போது இவற்றில் மாற்றம் காணப்படுகின்றது. முன்னரைப்போல் இரு குடும்பத்தினரும் உறவுகளைத் தொடராகப் பேணாமை, பிள்ளையை ஞானப்பெற்ரோரிடம் உறவாடத் தூண்டாமை போன்ற காரணிகளாலேயே மாற்றம் ஏற்பட்டுள்ளது.

1995களின் முன்னர், புனித யாகப்பர்



ஆலயத்தில் புதன், சனி ஆகிய தினங்களில் 'ஞானஸ்நானச் சடங்கு' நிறைவேற்றப்பட்டது. இப்போது சனிக்கிழமை என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் வருகின்ற சனிக்கிழமை ஞானப்பெற்றோர் குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டுசெல்வார்கள். குழந்தையின் பெற்றோரும் உடன் செல்வார்கள். ஆண் குழந்தையாக இருந்தால் நீல நிறத்திலும், பெண் குழந்தையாக இருந்தால் றோஸ் நிறத்திலும் உடலை முற்றாக மூடியவாறு ஆடை அணிந்து, அதே நிறத்தில் தொப்பியும், கைகளுக்குக் கையுறையும், கால்களுக்குக் காலுறையும் அணியப்படும் நடைமுறை 2001 இல் வழக்கொழிந்து, தூய்மையையும் - புனிதத்தையும் குறிக்கும் அடையாளமாக வெள்ளை நிறத்திலே உடை அணிவிப்பர். குழந்தை பார்வைக்குப் பொம்மைபோல் அழகாகக் காட்சி தரும். அங்கே குருவானவர் செபம் செய்து ஆசீர் நீரினைக் குழந்தையின் தலையில் ஊற்றுவார். அவ்வாறு ஊற்றிய நீரை தொட்டதாய், தொட்டதகப்பன் துடைத்துக்கொள்வார்கள். (இவ்வாறு தலையைத் தொட்டுத் துடைப்பதால்தான் தொட்டதாய், தொட்டதகப்பன் என்னும் பெயர் வழங்கி வரலாயிற்று. பேச்சு வழக்கில் "யார் தலைதொட்டது" என்று கேட்பதுண்டு.) அப்பொழுதிருந்தே ஞானப்பெற்றோர் என்னும் உரிமை அவர்களுக்குக் கிடைக்கிறது.

ஞானஸ்ஞானம் முடிந்ததும் வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் குழந்தையை ஒப்படைப்பார்கள். அன்றைய தினம் ஒரு விழாவாக இருக்கும். தத்தமது வசதிக்கேற்ப விழாவைச் சிறப்பாக செய்வர். ஞானப்பெற்றோர் அன்று முழுவதும் அங்கே தங்கிநின்று குழந்தையைக் கவனித்து, விருந்துண்டு செல்வார். தத்தமது வசதிக்கேற்ப நகையோ, பணமோ குழந்தைக்குக் கொடுப்பார்கள். ஞானஸ் ஞானம் நடைபெற்ற தினத்திற்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை பனை ஓலையால் பின்னப்பட்ட பல 'கடகங்களி'ல் (அலுமினிய, வெள்ளித் தட்டங்களின் பாவனை பெருகியதும் கடகங்கள் மறைந்துவிட்டன.) பலவகைப் பலகாரங்கள், பழ வகைகள் போன்றவற்றை வைத்து வெள்ளைத் துணியால் மூடி ஏவலாளர்கள் மூலம் ஞானப் பெற்றோருக்குக் கொடுத்தனுப்புவார்கள். இவற்றை வரிசையாகக் கொண்டுசெல்லும் காட்சியைப் பலரும் பார்த்து ரசிப்பர். இப்போது வாகனங்களில் மறைக்கப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றது.

## முதன்நன்மை

முதன்நன்மையானது இயேசுவை உணவாக உண்பதற்கு தகமையைப் பெற்றுக் கொள்ளும்

சமயச் சடங்காகும். குருநகர் பங்கில் ஒன்பது வயதைக் கடந்த ஒருவர் முதன்நன்மை பெறத் தகுதியுடையவராகிறார். புனித யாகப்பர் திரு நாளுக்கு முன்பு வரும் சனிக்கிழமை முதன் நன்மை வழங்கும் சடங்கு நடைபெறும். இத்தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே முதன்நன்மை பெறுகிறவர்களுக்கான மறைக்கல்வி கற்பித்தல் தொடங்கிவிடும். தினமும் நடைபெறுகின்ற மறைக் கல்வி மூலம் முதன்நன்மை பெறும் ஒருவர் அதன் தாற்பரியங்களை அறிந்துகொள்கின்றார். இறை அன்பைப் பெறுவதற்கும், நல்வழியில் நடப்பதற்கும் ஏற்ற செபங்களைக் கற்கிறார். நற்கருணையைப் பெற்றுக்கொள்வதற்குத் தன்னைப் பலவகையிலும் தயார்ப்படுத்துகின்றார். அத்துடன் ஆன்மீக வலுவூட் டலைப் பெறுகின்றார். நிறைவில் பாவ அறிக்கை யிட்டுத் தன்னைத் தூய்மையாக்குகிறார்.

முதன்நன்மை பெறும் சடங்கு குருநகரைப் பொறுத்தவரை பெரும் விழாவாகவே நடைபெறும். ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது பிள்ளையின் சடங்கில் போட்டிபோட்டு செயற்படுவர். போட்டோ, வீடியோ மற்றும், முதன்நன்மை சடங்கு முடிந்த பின்னர் மாற்றப்படும் உடை போன்றவற்றில் கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்கள். முதன்நன்மை பெறும் இருபாலாரும் தூய்மையின் அடையாளமான வெள்ளை நிற ஆடை அணிந்திருப்பர். பெண்கள் தலையில் துப்பட்டியும் (நெற்) அதற்கேற்ற 'முடி'யும் அணிந்திருப்பர். ஆண்கள் காற்சட்டை சேட் அணிந் திருப்பர். வழிபாடு ஆரம்பமாகும் நேரம் அவர்கள் ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப் படுவார்கள். ஆலயத்தினுள் வழிபாட்டு நேரம் பெற்றோரும், ஞானப்பெற்றோரும் கூடவே இருப் பார்கள்.

வழிபாட்டில் நற்கருணைப் பவனிநேரம் முதன்நன்மை வழங்கப்படும். வழிபாட்டின் நிறைவு டன் முதன்நன்மைச் சடங்கும் நிறைவுபெறுகிறது. குருவானவர் சிறுவர்களுக்கு ஆசி வழங்குவார்.



தொடர்ந்து முதன்நன்மை பெற்ற சிறுவர்களின் குடும்பத்தினர்கள், உறவினர்கள் இணைந்து அவர்களை அழைத்துக்கொண்டு வசதிக்கேற்ப, சிறப்பூட்டலுக்கேற்ற வாகனத்திலோ, நடையிலோ செல்வார்கள். வீட்டில் விசேட விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இவ்வாறான கொண்டாட்டங் களும் அவரவர் வசதிக்கேற்பவே அமைந்திருக்கும்.

## மெய்விவாகம் (திருமணம்)

திருமணங்கள் பெற்றோரால் கலந்துபேசி நிச்சயிக்கப்படுகின்றன. ஒருசில காதல் திருமணங் களாகவும் இருக்கும். காதல் திருமணங்கள் பெற் றோர்களின் சம்மதத்துடன் நடைபெறுவதுமுண்டு, சம்மதமில்லாமல் காதலர்கள் சுயமாக திருமணம் செய்துகொள்வதுமுண்டு. இதனை 'ஓடுதல்' என்பர். ஓடிய காதல் திருமணங்கள் பெற்றோரால் புறக் கணிக்கப்படும். சில பெற்றோர் இதனை ஏற்றுக் கொண்டு திருமணத்தை முன்னின்று நடத்தியும் வைப்பார்கள். இவை பெரும்பாலும் ஒருதலைப் பட்சமானதாகவே இருக்கும்.

திருமணத்தை 'மெய்விவாகத் திருச் சடங்கு' என கத்தோலிக்க திருச்சபை ஒரு திருவருட் சாதனமாக அங்கீகரித்திருப்பதனால் ஆலயத்தி லேயே மெய்விவாகம் நிறைவேற்றப்படுகின்றது. இதற்கென ஒழுக்கமுறைகள் இருக்கின்றன. இத னால் முறையான திருமணங்கள் தவிர்ந்த ஏனைய திருமணங் கள் ஆலயத்தில் நிகழ்த்துவதற்கு பற்பல நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. அந் நடை முறைகளால் எழக்கூடிய அவமானம் காரணமாக முறையான திருமணத்தையே அனைவரும் விரும் புவர்.

திருமணத்தின் முதல் நிகழ்வாக, நாள் குறித்து பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குத் தமது உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் சகிதம் சம்பிரதாய ரீதியாக 'கல்யாணம் கேட்டு'ப் போவார்கள். அங்கே சீதனக் கொடுப்பனவுகள் பற்றிப் பேசப்படும். இருபகுதியினதும் பேச்சுக்கள் சுமூகமாக முடிவுற்றதும் சம்மதம் தெரிவிக்கப்பட்டு உணவு பரிமாறப்படும். அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை மூன்று வேளையும் சமைத்த உணவுகளை மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண்வீட்டார் அனுப்பி வைப்பார்கள். தொடர்ந்தும் இருவீட்டாரும் இடைக் கிடையே சிற்றுண்டி வகைகளைப் பரிமாறிக்கொள் வார்கள். அடிக்கடி சந்தித்தும் கொள்வார்கள் இந்தச் செயல்களின்மூலம் இரு குடும்பத்தினர்களின் உறவு மேலும் வலுவுள்ளதாக மாறும். பெண் வீட்டாரின் நிகழ்வுகள் போன்றே மாப்பிள்ளை வீட்டாரின் நிகழ்வுகளும் இருக்கும்.

அடுத்த நிகழ்வு 'வார்த்தைப்பாடு'. வார்த்தைப்பாடு என்பது திருமணம் செய்யப்போகும் ஆணும், பெண்ணும் உத்தியோகபூர்வமாகத் தமது சம்மதத்தை குருவானவர் முன்னிலையில் தெரியப் படுத்துதலாகும். பதிவுத் திருமணமாக பதிவாளர் முன்னிலையில் பதிவுசெய்து கொண்டாலும், வார்த்தைப்பாடு குருவானவரின் குருமனையில் நடைபெறும். குறித்த நாளன்று வார்த்தைப் பாட்டுக்காக இருபகுதியினரும் தனித்தனியாக வந்து குருமனையில் கூடுவார்கள். குருவானவர் மணமக்களிடம் தனித்தனியாக சம்மதத்தைப் பெறுவார். இருவரும் திருமணம் செய்வதற்குத் தமது ஒப்புதலைக் குருவானவருக்குத் தெரியப்படுத்தி பத்திரத்தில் ஒப்பம் இட்டதுடன் வார்த்தைப்பாடு முடிவுறுகின்றது. அன்றைய தினத்தை ஒரு விழாவாக தத்தமது வசதிக்கேற்ப செய்பவர்களுமுண்டு.

திருமணத்தின் முன்னோட்டமாக மணமக்கள் வீடுகளில் 'கன்னிக்கால்' நடும் வழக்கம் இருந்தது. நல்ல நேரம் பார்த்து முள்முருக்கம் தடியைத் தலைவாசலில் நடுவதுண்டு. முள்முருக்கு மரம் இயற்கையின் பாதிப்புகளுக்குள் இலகுவில் சிக்குறாமல் நெடிதுயர்ந்து வளரக்கூடியது என்பதால் அதனை நடுகிறார்கள். முள்முருக்கம் மரத்தில் ஏற்பட்ட நோய் காரணமாக அதன் விருத்தி குன்றிப் போனதால் தற்போது அது நடப்படுவதில்லை. ஆயினும், வேறு கிராமங்களிலிருந்து தொற்றிக் கொண்ட முறையாக கரும்பை, 'ஈயடிச்சான் கொப்பியாக'ப் பயன்படுத்துகிறார்கள். கன்னிக்கால் ஏன் நடப்படுகின்றதென்று அதைச் செய்யும் எத்தனை பேருக்குத் தெரியுமோ தெரியாது.

திருமணமன்று பெண் தூய வெண்மையான சேலை அணிந்திருப்பார். தலையில் வெள்ளை அல்லது வெள்ளி நிற முடி இருக்கும். முடியுடன் 'வேல்' இணைக்கப்பட்டிருக்கும். (வேல் என்பது வெண்மையான, நெருக்கமான வலை (*Net*)). வேல் நீளமானதாக இருக்கும். நிலத்தில் இழுபட்டு வருவதைத் தடுப்பதற்காகத் தோழியர் கைகளில் ஏந்தியவாறு வருவர். பொதுவாகக் கோவிலிற்குள் நிலத்தில் இழுபட்டவாறே வருமாறு செய்வர். முகம் வெள்ளைத் துப்பட்டியால் (*Net*) மூடப்பட்டிருக்கும். தாலி கட்டும் நேரம் முகத்தை மூடியுள்ள துப்பட்டி விலக்கப்பட்டு தாலி கட்டப்படும். பின்னர் துப்பட்டி அகற்றப்படும்.

மணமக்கள் ஆலய வாசலுக்கு வந்ததும் குருவானவர் அவர்களை எதிர்கொண்டு வந்து அவர்களுக்கு ஆசீர் நீர் தெளித்து, பலிபீடம் நோக்கி அழைத்துச் செல்வார். கூடவே உறவினர்களும் பின் தொடருவார்கள். மணமக்களுக்கென பலிபீடத்திற்கு முன்னால் ஒதுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட இருக்கைகளில் அவர்கள் இருக்க, மணமக்களின் பெற்றோர் இரத்த உறவினர்கள் மற்றும், தோழர்கள் மணமக்களைச் சூழ்ந்திருக்க, பாடகர் குழாம் பாடல் இசைக்க திருப்பலி ஆரம்பமாகும். திருப்பலியின் இடையில் குருவானவர், சடங்கின் வெளி அடையாளமாக மணமக்கள் தங்கள் வலது கைகளைச் சேர்த்துப் பிடிக்கும்படி கூறி, அவர்களை மன ஒப்புதல் அளிக்கும்படி கேட்பார். அவர்களும் ஒப்புதல் அளிப்பார்கள்.

இணைந்த கைகளின் மேல் குருவானவர் ஆசீர் நீர் தெளிப்பார். இதனைக் 'கைப்பிடித்தல்' என்பர். கைபிடிக்கப்பட்ட பின்னர் மணமகன் எழுந்து நின்று, குருவானவரால் ஆசிர்வதிக்கப்பட்ட மாங்கல்யத்தை மணமகளுக்கு அணிவிப்பார். இம் மாங்கல்யமானது திருமண உடன்படிக்கையையும், அன்பையும், பிரமாணிக்கத்தையும் குறிக்கும் அடையாளமாகும். மாங்கல்யத்தின் இணைப்பைத் தவாறது பொருத்துவதற்கு மாப்பிள்ளையின் சகோதரி அல்லது தாய் பிரதானமானவராக இருக்க, நெருங்கிய உறவினர் உதவிசெய்வார்கள். அந்த நேரம் சிறு தடங்கல்கூட ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பர். மாங்கல்யமானது தங்கத்தினாலான கொடியில் (தாலிக்கொடி), கத்தோலிக்க மரபிலமைந்த தாலி இணைக்கப்பட்டிருக்கும். மாங்கல்யம் அணியும் நேரம் ஆலயப் பணியாளர் கோவில் மணியைத் தொடர்ச்சியாக அடித்துத் திருமணம் நிறைவேற்றப்படுவதை ஊருக்குத் தெரியப்படுத் துவார். மாங்கல்யம் அணிந்த பின்னர் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாக மோதிரம் அணிவித்துக் கொள்வார்கள். பின்னாளில் மாலை அணிவதும் வழமையாகக் கொள்ளப்பட்டு மணமகன் மணமகளுக்கும், மணமகள் மணமகனுக்கும் மாலை அணிவிப்பார்கள். மெய்விவாகத் திருச் சடங்கு நிறைவேற்றப்பட்டதும் தொடர்ந்து திருப்பலி நடைபெறும்.



திருப்பலி முடிந்ததும் மணமக்கள் குருவானவரிடம் ஆசிபெறுவர். பின்னர் நடைபவனியாக (சிலர் மேளதாள வாத்தியங்களுடன்) அல்லது வாகனங்களில் பெண் வீட்டிற்குச் செல்வார்கள். திருமணத்திற்கு வருகை தருபவர்களுக்கு பந்தலின் வாசலில் சந்தனப் பொட்டிட்டும், பன்னீர் தெளித்தும், தாம்பூலம் கொடுத்தும் வரவேற்பார்கள். வீட்டு வாசலில் தோழன் மாப்பிள்ளையின் காலுக்குப் பால் ஊற்றுவார். மாப்பிள்ளை தன் விரலில் இருக்கும் மோதிரத்தை அவருக்கு அன்பளிப்புச் செய்வார். இந்த நிகழ்வினை 'மதிப்பான வரவேற்பு' என்றும், 'மனங் குளிர்ந்த அன்பளிப்பு' என்றும் கருதக்கூடியதாக இருந்தாலும் குருநகர் மக்களைப் பொறுத்தவரை காரணம் அறியப்படாத நிகழ்வுதான்.

பெண்ணுக்கு இளைய சகோதரன் இருந்தால் அவன் தோழனாகவும், ஆணுக்கு இளைய சகோதரி இருந்தால் அவள் தோழியாகவும் இருப்பது வழமை. அவ்வாறு சகோதரர்கள் இல்லாதுவிடத்து இந்த உறவுமுறையிலான உறவினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தற்போது ஐரோப்பியர்களின் பாணியில் பல தோழன், தோழிகள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

வழமையான நடைமுறையின்படி மணப்பெண் வீட்டிலிருந்து மணமகன், அவர் வீட்டுக்கு கூறை எடுத்துவருவதற்காக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். அங்கு சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கப்படும். பின்னர் மணமகன் வீட்டாரால் மணப்பெண் வீட்டுக்கு ஊர்வலமாக 'கூறைச்சேலை' எடுத்து வரப்பட்டு திருமணத்திற்கு வருகைதந்த அனைவரின தும் ஆசீர்வாதத்துடன் பெண்ணுக்கு கூறைச்சேலை அணியப்படும். மண்டபங்களில் நடைபெறும் திருமண விழாக்களில் இவ்வாறு நடைபெற மாட்டாது. தொடர்ந்து மணப்பெண் வீட்டில் அழைக்கப்பட்ட விருந்தாளிகளுடன் சிறப்பான விழாவாக நடைபெறும்.

மறுநாள் அதிகாலை மணமகனின் தாய் மணமகனை தமது வீட்டிற்கு அழைத்துச்செல்ல வருகைதருவார். இது மணமகளின் தாய் தமது மகளின் கன்னித்தன்மையை நிரூபித்துக் காண்பிக்கும் நிகழ்வாக நடைபெற்றபோதும் தற்போது இது கைவிடப்பட்டுள்ளது. நாலாம் நாள் மணமக்கள் இயல்புக்கேற்ற சிறப்பான முறையில் மாப்பிள்ளை விட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

## முடிவுரை

எமது மக்களால் எடுக்கப்படும் விழாக்கள் அனைத்தும் டாம்பீகமாக, பெரும் செலவாகக் காணப்பட்டாலும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சமும் இருக்கத்தான் செய்கின்றது. விழாக்களின் தன்மையை பொறுத்து அவர்களின் மனோபாவம், நடைமுறைகள் மாற்றத்தைக் காணும். உதாரணமாக; தபசு காலம் தொடங்கி விட்டதென்றால் மக்கள் தொகையில் கணிசமான அளவினர் 40 நாட்கள் ஒரு நேர, இரு நேரச் சாப்பாட்டை ஒறுப்பர். அவர்களது பெரும்பாலான நேரம் ஆன்மீகம் சம்பந்தமானதாகவே செலவழியும். பெரும்பாலான ஆண்கள் தமது குடிப்பழக்கத்தை நிறுத்தி தம்மை அடக்கி நடக்க முற்படுவதையும் மறுப்பதற்கில்லை.

எத்தகைய ஆன்மீக விழா என்றாலும் கோவில் கடமைகள் முடிந்த பின்பே தங்கள் சந்தோஷத்தை கொண்டாடுவார்கள். ஆன்மீகத்துக்கு முன்னுரிமை கொடுத்து நல்ல பாவசங்கீத்தனம் செய்வதும், தேவநற்கருணை உட்கொள்வதும் அவர்களால் கைக்கொள்ளப்படும் சிறந்த நடைமுறையாகும்.

முன்னர் தபசுகாலத்தில் அனேகர் சினிமாப் படங்களை பார்க்கமாட்டார்கள், சினிமாப் பாடல்களை பாடமாட்டார்கள். தற்போது நிலைமை கொஞ்சம் மாறிவிட்டதாகத்தான் தெரிகிறது. குடும்ப சிலுவைப்பாதை செய்வதும், பெரிய சிலுவைப்பாதையில் பங்கு பற்றுவதும், நாளாந்தம் திருப்பலியில் இணைவதும், மச்சம் மாமிசத்தை தவிர்ப்பதும் நல்லதொரு மாற்றமாகும். இந் நாட்களில் இன்பமயமான நிகழ்வுகளை அறவே தவிர்த்துக் கொள்வார்கள். ஏதோ ஒரு சோகம் ஊரை நிரப்பும். உடலும் சிறிது வற்றிப்போகவும் செய்கிறது.

இவர்கள் இறைவன்பால் கொண்டுள்ள பக்தி, விசுவாசம் இவற்றினால்தானே இறைவனும் இவர்களை நிறைவாக ஆசீர்வதிக்கின்றார். இவர்களும் நிறைவாக இறைவனுக்கு விழாவெடுக்கிறார்கள், கொண்டாடுகிறார்கள், குதூகலிக்கிறார்கள், கும்மாளம் அடிக்கிறார்கள். எனவே விழாக்களை வரவேற்போம். ■

**திருக்குடும்ப சபை சகோதரிகளால் 'திரு இருதயப் பாடசாலை' என்ற பெயரில், புனித யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் கட்டப்பட்ட பாடசாலை, 14.04.1783 அன்று ஆயர் கிறிஸ்தோப்பர் பொன்சின் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் நாள் 80 பிள்ளைகள் இணைந்துகொண்டார்கள். 03.10.1909 இல் பங்குத்தந்தை வண. பிதா பி.ஏ. மருசலீன் அடிகளாரின் மேற்பார்வைக்குள் கொண்டுவரப்பட்டபின்னர் சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையாக பெயர் மாற்றம்செய்யப்பட்டது.**

# அன்றைய இன்றைய நினைவுகளில்...

**- ச. யஸ்ரின்**

மனித வாழ்க்கைமுறை எல்லாம் கடவுளால் வகுக்கப்படுவதுதான் தனி ஒரு மனிதனின் விதி. ஒரு இனத்தின் விதி. எல்லாம் வலு நுட்பமாக வகுக்கப்படுகின்றறு. செயல்கள் எல்லாம் தனி ஒரு மனிதனின், முதலில் அவனின் சுதந்திரமான எண்ணத்தினால் நிகழ்ந்தபின்தான் வெளியே நிகழ்கின்றது. கோயில் கட்டும் காலத்தில் இங்கு வர்த்தகம் மட்டும் செய்து கொண்டிருந்தார்கள். வர்த்தகப் பொருட்கள் (முத்து ஆபரணங்கள்), அழகுச் சிலைகள், சாறிகள். அவர்கள் வர்த்தகப் கப்பல்களை திமிலர், முக்குவர், ஓட்டினார்கள். இத்தகைய குருகுலம் அவர்களின் சத்திரியர் தொழில் மாறியதால் அவர்கள் படை நடத்த உபயோகப்பட்ட கப்பல்கள் எல்லாம் வணிகத்திற்கும் பயன்பட்டன. அவர்களின் உபயோகத்திற்காக மீன் வேற்றுச் சாதியினரால் பிடித்துக் கொடுக்கப்பட்டது. ஆனால், எல்லாமே மாறியது. வணிகமும் அரசியல் வளர்ச்சியால் நாடுகளுக்கிடையே பிரயாணம் செய்யும் முறைகளும் தடைப்பட்டன. சில மேல் நாட்டுக் குருமாரால் கரவலை முறைகள் வேறு மீன்பிடி முறைகள் காட்டிக் கொடுக்கப்பட்டதால் அவர்களின் கஷ்ட நிலை அவர்களை கடலில் கால் வைக்க வைத்தது.


அன்றைய நாட்களின் வெள்ளைக்கார குருவானவர்கள் லேபோன், பொம்மிக்கோ ஆகியவர்கள் ஆலயத்தை நிர்வாகம் செய்வதில் நல்ல பொறுப்புக்களை சுமந்தார்கள். எமது ஊரில் மரணப்படை ஒன்று இருந்தது. அவர்கள் குழுவாக தைப்பொங்கல் தினத்தன்று சன சமூக முன்றலில் பொங்க ஆரம்பித்தனர். அதை அறிந்த குருவானவர் தடியுடன் வருகைதந்து பொங்கல் பானையை உடைத்தார். எல்லோரும் சிதறி ஒடிவிட்டார்கள். இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. தைப்பொங்கலை ஒரு மதத்தின் திருநாளாக அல்லாமல் தமிழர் திருநாளாக ஏற்றுக்கொண்டு வீடுகளிலும், ஆலயத்தில் பலர் இணைந்தும் பொங்கி வருகின்றனர். இவர்களுக்கு பின்னதாக எமது புனித யாகப்பர் ஆலயத்தில் புதிய குருவாக மைக்கல்சாமி அடிகளார் வருகை தருகின்றார்.

15.03.1961 இல் பொம்மிக்கோ சுவாமியின் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆலயம் பூட்டப்பட்டது. 15.7.1961 இல் சார்வே சுவாமி ஆலயத்தை பொறுப்பேற்றார். புதிய குருவானவரின் பணிகள் தொடங்க ஆரம்பித்தன. கோயிலின் முன்புற மேற்கு பக்கமாக ஒரு மரக்காலை. அதனை அகற்ற வேண்டுமென்று அவரால் காலைக்கு பொறுப்பாளியிடம் பல முறை கூறப்பட்டது. சொல்லிச் செய்தார் சிறியோர் என்ற அர்த்தத்தில் அவரின் மரக்காலை அங்கிருந்து அகற்றப்பட்டது. இவ்விடம் தற்போது வியாகுல அன்னையின் வேண்டுதலிற்குரிய இடமாக அமைந்துள்ளது. குருவானவரின் முயற்சி இங்கு வீண் போகவில்லை

அது கண்டு இவரின் உள்ளம் பூரிப்பு அடைந்தது. இவரினால் எங்கள் பங்கில் தவக்கால மகா ஞானஒடுக்கம் நடைபெற்றது. ஊரின் வீதிகளூடாக நடைபெற்ற சிலுவைப்பாதையில் அவரே சிலுவையைத் தோளில் தூக்கி வைத்து நடந்தமை, அன்று கல்வாரியில் எமது ஆண்டவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றதையே எம் மக்களின் மனங்களில் நினைவூட்டியது.

அன்று 2ஆம் கட்ட மணிக்கூட்டு கோபுர வேலை அவர் காலத்திலேயே செய்யப்பட்டது. 1967 அக் காலப்பகுதியில் ஆலயப் பராமரிப்பிற்காக நான் இருந்தபோது பிரதான வீதியில் தற்போது உள்ள சிறைச்சாலைக்கு கிழக்கே புளியம் மரத்தடியில் ஒரு வாள் கண்டெடுத்தேன். இது எமது புனிதருடையது என எனக்குள் எண்ணிக் கொண்டு ஆலயம் சென்று பார்த்தபோது குதிரையில் இருந்த யாகப்பரின் கையில் எதையும் காணவில்லை. அவரின் கையிலே வாளைப் பொருத்தினேன். இதன் கருத்தையே நம் முன்னோர்கள் புனிதர் குதிரையில் இரவு வேளைகளில் உலாவி வருவதாக நம்பிக்கையுடன் சொல்லுவார்கள்.

வெள்ளைக்கார குருவானவரின் வருகைக்கு பின்பதாக புதிய குருவாக அருள்பணி



பெனற் கொன்சன்ரைன் அடிகளார். எமது பங்கிற்கு பணியாற்ற வருகை தருகின்றார். 'துணிவுடன் தொடர்ந்து செல்' என்பதே இவரின் குறிக்கோளாகும். எமது ஆலயத்தை திருத்தம்செய்யும் வேலையை முதலில் தொடங்கினார். முதற்கட்டமாக ஆலய உட்புறங்களுக்கு மைப்பூச்சு வேலைகளை ஆரம்பித்தார். முந்திய காலங்களில் புனிதரின் திருவுருவத்தை ஒரு பாடையில் வைத்து பீடப்பரிசாரகர்கள் ஊர்வலமாக தூக்கி செல்வதே வளமையாக இருந்தது. இவரின் வருகைக்கு பின்பதாக புதிய மாற்றம். திருவிழா அன்று சோடனைத் தேரில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பாதையினூடாக பவனி வருவது என்றுமே இல்லாத கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

கிறிஸ்து உயிர்ப்புவிழா, புனிதராம் எமது பாதுகாவலரின் பெருவிழா, கிறிஸ்து பிறப்பு தினம், இவைகளுக்காக நுவரெலியாவிலிருந்து வரவளைக்கப்பட்ட பூக்களால் பீடத்தை அலங்கரிப்பதில் இவருக்கு ஒரு தனி ஆர்வம்.

பங்குத் தந்தைக்கு உதவியாக வெள்ளைக்கார தோமஸ் அடிகள் துணை நின்றவர் ஆவார். இவருக்கு பின்னர் எந்தவொரு வெள்ளைக்கார குருவும் சேவைக்கு அழைக்கப்படவில்லை.

எமது பீடத்தின் மேல் இருக்கும் திரு இருதயநாதரையும் அவர் பக்கத்திலிருந்த யாகப்பரையும், அருளப்பரையும் அகற்றிவிட்டு திருச்சிலுவையில் ஆண்டவர் தொங்கிய காட்சியை அமைக்க வேண்டும் என்று திட்டம் வகுத்தபோது எமது ஊரின் பெரியவர்களின் தலையீட்டின் காரணமாக அம் முயற்சி கைவிடப்பட்டது.

எமது இளம் பெண்களின் நலம் கருதி பீடித் தொழிற்சாலை ஒன்றையும் நடத்தி வந்துள்ளார். எமது ஆலயத்தில் புனித யூதாததேயுவின் நவ நாட்களை ஒவ்வொரு வெள்ளி தோறும் மக்கள் வழிபட ஏற்பாடுசெய்தார்.

1968ஆம் ஆண்டு நத்தார் நள்ளிரவு திருப்பலி முடியும் தருணத்தில் ஆலய முன்றலில் காவல் துறையினரின் ஜீப் வண்டி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது கண்டு எமது இளஞர்கள் வெளியில் எடுத்து செல்லுமாறு கேட்டுக்கொண்டபோது வாய்த் தகராறு சண்டையாக மாறியது. அதில் காவல் துறையினர் இளைஞர்களுக்கு அடித்தும் கோயில் தளபாடங்களை உடைத்தும் இரத்தக் காயங்களை ஏற்படுத்துவதற்கு காரணியாய் இருந்தனர்.


இதில் பாதிக்கப்பட்டவர்களில் பங்குத் தந்தையும் ஒருவர் ஆவார் இது விடையமாக அப்போதைய ஆயரும், குருக்களுமாக சேர்ந்து இப் பிரச்சனையை சமாதானமாக தீர்த்து வைத்தனர். இக் குருவானவரின் வருகைக்கு பின்பதாக எமது ஆலயத்தில் புதிய குருவாக மரியசேவியர் அவர்கள் நியமனம் பெறுகின்றார். இவர் வந்தபோது எம் ஊரின் இளைஞர்களை ஒன்றாகக்கூட்டி குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி என்ற ஸ்தாபகத்தை தொடக்கி வைத்தார். பணிகள் தீவிரமாக தொடர்ந்து கொண்டே இருந்தன. அதன் பயனாக கலை அரங்கம் ஒன்று கட்டப்பட்டது. அதன் வெளிப்புறத்தின் மேலே 'உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம்' என்ற வாசகம் பதிக்கப்பட்டது. நாடக அரங்கியல், நடன நாட்டியங்கள், நாடகங்கள், நாட்டுக் கூத்துகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மரியசேவியர் அவர்களின் நெறிப்படுத்தலிலும் இசை அமைப்பாளர் யேசுதாசன் அவர்களினாலும் வெளிப்படுத்தப்பட்ட பாடல்கள் என்றும் கேட்க இனிமையாக அமைந்துள்ளமை குறிப்பிட்டது.

இவருக்கு பின்பதாக பயஸ் அடிகளார் ஆலயப் பொறுப்பை ஏற்று வழி நடத்தி செல்கிறார். இவர்கள் காலத்தில் தவக்கால சிந்தனையாக படகில் சிலுவைப்பாதையினை பக்தியுடன் நடத்தி திரு இருதய சபையினரோடு ஒன்று இணைந்து செயற்பட்டுள்ளார்.

1972 இல் உயிர்த்த யேசுவின் காலை ஞாயிறு திருப்பலி ஆயத்தங்களுடன் ஆரம்பமாக, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம். இந் நிகழ்வை நேரடி ஒலிபரப்பாக்கியது.

1974 ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் சுரூபம் யாழ் மறைமாவட்டத்திற்கு எடுத்து



வரப்பட்டபோது எமது ஆலயமும் அன்னையை வரவேற்று வேண்டுதல்களாலும் ஜெபங்களாலும் மக்கள் பூரிப்படைய அன்னையை வாழ்த்தி 'மரு தமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே' என்று பாடி அன்னையை வழி அனுப்பிவைத்தோம்.

1974 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் பேதி என்ற கொள்ளை நோய் எமது ஊர் எங்கும் பரவத் தொடங்கியது. சாவுக்கு மேல் சாவு. பெற்றவள் நெஞ்சம் தாங்குமா? எமது ஊர் மரண ஓலங்கள் அழுகையும் கூக்குரலுமாய் தொடர்ந்தது. வேத னைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி.

'நம்பினார் கெடுவதில்லை' என்பது எம் இறைவன் வாக்கு. நல்லார்களுக்கும் ஏழையவர் களுக்கும் ஆண்டவரே காப்பு. 'வாழ்வு தரும் உணவு நானே' என்றவரின் சீடனாம் வெண் குதிரை மீதேறி வெற்றி கொண்ட வீரராய் நோய்க்கு மருந்தாக அவரை நம் ஊரில் வீதிகளில் ஊர்வலமாய் எடுத்து சென்று 'வந்தெம்மை பாருமையா அருள் தந்தெம்மை காருமையா' என்று பாடிக்கொண்டே சென்றார்கள். இவை எல்லாம் முடிந்து மறு நாள் உதயம் ஆயிற்று எங்கும் அமைதி அழுகைச் சத்தங்கள் ஓய்ந்து விட் டன. துன்ப இருள் அகன்று வாழ்வின் புத்தொளி பிறந்தது மக்கள் மனதில் பூங்காற்று வீசியது.

அன்றிலிருந்து இன்று வரை இது போன்று நிகழ்வுகள் நடந்ததாக இல்லை. இது புனிதரின் மகிமையை எடுத்துக் காட்டுகின்றது. 1979 ஆம் ஆண்டு அன்று எமது பங்குத்தந்தையாக இருந்த சார்வே அடிகளார் பிரான்ஸ் நாட்டி லிருந்து வருகை தந்து ஆயர் இல்லம் சென்று சேவைக்காக பங்குத்தளம் ஒன்று தரும்படி கேட்டபோது அன்றைய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை மறுத்துவிடவே அவர் விடைபெற்று தாயகமான பிரான்ஸ் நாட்டிற்கு சென்று அங்கு 03.02.1987 இல் இறைவனடி சேர்ந்தார்.

தொழிலுக்காக 31 பேர் கொண்ட குழு ஒன்று 10.06.1986 ஆம் ஆண்டு படகில் அதிகாலை புறப்பட்டு சென்றவர்கள் வீடு திரும்பி வரவே இல்லை. அங்கு என்ன நடந்தது. கொடூரக் கொலைக் கும்பல் ஒன்று அவர்களை துப்பாக் கியால் சுட்டு, கூரிய ஆயுதங்களால் வெட்டியும், கொன்று குவித்த இடம் மண்டைதீவு தென்கரை ஓரப்பகுதி ஆகும். இன்னொருவர் வேதனை இவர்களுக்கு வேடிக்கை. இவை எல்லாம் செய்து விட்டு இக் கொலைகாரரும் மர்மமாக மறைந் தனர். இவர்களின் நினைவாக எம் மண்ணில் மெழுகுதிரி போன்ற வடிவமைப்பில் தூபி ஒன்று கட்டப்பட்டது.

பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி நேசநாயகம் அடிகளாரின் காலத்தில் 13.11.1993 இல் எமது ஆலயம் விமானக் குண்டுத் தாக்குத லால் பலத்த சேதங்களுக்கு உள்ளானது. இத் தாக்குதலில் சிக்குண்டு ஒன்பது பேர் துடிதுடித்து மரணம் அடைந்தனர்.

ஆலயத்தின் பீடத்தில் மேல் திரு இருதய நாதரின் பக்கமாக இருந்த இரு சீடர்களும் தூக்கி எறியப்பட்டனர். பின்வரும் காலங்களில் திறமை வாய்ந்த கட்டிட நிபுணர்களால் முன் இருந்த வாறே ஆலயம் திருத்தி அமைக்கப்பட்டது.

அருள்பணி சகாயநாயகம் அடிகளார் பங்குத்தந்தையாக வந்தபோது மகாஞான ஒடுக் கம் ஒன்று நடத்தப்பட்டது. அதற்காக பிற மாவட்டங்களில் இருந்து குருக்கள் அழைக்கப் பட்டனர். ஊர் எங்கும் இருந்த மதுபானக் கடை கள் பூட்டப்பட்டன. ஆலயத்தின் உட்புறத்தில் அரைவட்டமாகவும், தட்டையாகவும் மின்விளக் குகளுடன் கூடிய சீற்றுகள் அடிக்கப்பட்டன. இதுவே அவரின் முக்கிய செயற்பாடாக இருந்தது.

ஆலயத்தின் 150 ஆவது யூபிலி ஆண் டென 25.07.2010 - 25.07.2011, எமது பங்குத் தந்தை அருள்பணி றோ. நேசராஜா அடிகளாரால் பகிரங் கமாக ஆலய மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. 25.07.2010 மாலை புனித யாகப்பர் சுரூப ஊர்வலம் முடிவுற்றதும். யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அவர்களால் யூபிலி ஆண்டுக்கான கொடி ஏற்றிவைக்கப்பட்டதுடன் விழாவை உணர்த்தும் 'பனர்' திரைநீக்கம் செய்யப்பட்டது

எமது ஆலய மக்களை இரவு குடும்ப செபமாலையையும், யூபிலி ஆண்டிற்கான செபத் தையும், ஆலய வேலைகளையும் திறம்பட முடிக்க அழைப்பு விடுத்துள்ளார். இதற்கு பங்கு மக்களும் புலம்பெயர்ந்த ஆலய மக்களும் தங்களால் இயன்ற பண உதவிகளை வழங்கி வருகின்றனர். வருடா வருடம் ஆடி மாதம் 16 ஆம் திகதி கொடி ஏற்றத்துடன் தொடங்கும் நவ நாட்கள் நிறைவில் 25 ஆம் திகதி புனிதரின் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

150 ஆவது யூபிலி ஆண்டின் விழா நாயகனை தேரில் வெண் புரவி மீது ஏறி வெற்றி கொண்ட வீரனாக பவனி வர அவரை நாமும் வருக வருக என்று எமது உள்ளத்தால் வாழ்த்தி வரவேற்போம். ■

# 25 ஆண்டுகள் முன்னோக்கி...

## குருநகர் மக்களின் குருதியை உறையவைத்த கணங்கள்




குருநகர், காலை இருந்த கலகலப்பிற்கு எதிர்மாறான நிலை...

சனசமூகநிலையத்தை சூழ இருந்த பரந்த வெளிகள், வீதிகளில் கண்ணீரும் கம்பலையுமாய் பல்லாயிரம் மக்கள்...

பெண்கள் குழுக்களாக இணைந்து அணைத்தவாறு கதறி அழுதார்கள்... தம்மைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் இரண்டு கைகளினால் மார்பிலும், வயிற்றிலும் மாறிமாறி அடித்துக் கொண்டார்கள்... சிலர் தரையிலும், தலையிலும் ஓங்கியோங்கி அடித்து இழவுகளாய் குரல்கொடுத்தபடி, அடக்கமுடியாத தமது உணர்வுகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள்...

காற்று ஏந்திய கதறி அழுதவர் குரல்கள் அந்தச் சுற்றாடல் பூராகவும் எதிரொலித்தது...

மௌனமாய் அழுது வேதனையை உள்ளடக்க முனைந்த சிலர் அடக்க முடியாமல் மயங்கி விழுந்தார்கள்...

கதறியழுதது உயிரிழந்தவர்களின் உறவுகள் மட்டுமல்ல..

அறிவிழந்து விழுந்தது அன்புக்குரியவர் மட்டுமல்ல...

குவிந்து நின்றது குருநகர் மக்கள் மட்டுமல்ல...

அங்கு நின்ற அனைவருமே தத்தமது உறவுகளாகத் தவித்தார்கள்.

உணர்ச்சி மேலிட அதிர்ச்சியுடன் துவண்டுபோய் உறைந்து நின்றார்கள்.

ஏன்? எதற்கு?

10.06.1986 அன்று அதிகாலை, பதினாறு வயது சிறுவர் முதல் எழுபது வயது வயோதிபர் வரை உழைக்கவேண்டுமென்ற உறுதியுடன்தான் கடலன்னையின் மடிதேடிச் சென்றார்கள்... ஆனால், மண்டைதீவு முனையில் நடந்தது என்ன?...

வேட்டையாடப்பட்டார்கள்...

உயிரற்ற - சிதைக்கப்பட்ட உடலங்களாய் மாற்றப்பட்டார்கள்...

# 10.06.1986
# -
# 10.06.2011

## குருநகரே திரண்டு குமுறி அழுத துயர நாள்

இதனால்...

பூவிழந்து, பொட்டிழந்து, புண்பட்ட
நெஞ்சினளாய் தாலி அறுக்கப்பட்ட
பெண்கள் எத்தனை...

தள்ளாத வயதிலும் குடும்பம் காக்கப்
புத்துணர்வுடன் புறப்பட்ட தந்தையர்களை
இழந்த பிள்ளைகள் எத்தனை...

தாலிகட்டி ஓராண்டு நிறைவைக்கூட எட்டாது
ஓரங்கட்டப்பட்ட இளம் மடந்தையர் எத்தனை...

வாழவைப்பான் தன்பிள்ளையென மனதைக்
கல்லாக்கித் தொழிலுக்கு அனுப்பிவைத்துக்
காத்திருந்த அன்னையர் எத்தனை...

ஒரே வீட்டில் பலரை இழந்து
நிர்க்கதியாகிவிட்ட குடும்பங்கள்
எத்தனை... எத்தனையோ

அத்தனை பேரின் கண்ணீரும் செந்நீராக
மாறிவிட்டது...

இதயங்கள் அக்கினிக் குழம்பாக
ஆகிவிட்டது...

வாழ்விலே இருள் சூழ்ந்துகொண்டது...


எதிர்காலமோ கேள்விக்குறியாகிவிட்டது...

"கடலை உழுது பயனைப் பெறத் துடிப்புடன்
சென்றவர்களை துப்பாக்கிகள் துவம்சம்
செய்தது ஏன்?"

"வாழ்வை வளமாக்கத் துடிப்புடன்
சென்றவர்களை துண்டம் துண்டமாக்கியது
ஏன்?"

"துப்பாக்கியுடனா சென்றார்கள்...?
இல்லையே, அப்பாவிகளை அங்கமங்கமாய்ச்
சிதைத்தது ஏன்?"

பார்த்துக்கொண்டு நின்றவர்களின் உள்ளத்தில்
பல கேள்விகள் முளைத்து எழுந்தது.
தமக்குத்தாமே கேட்டுக்கொண்டார்கள்...
தமது அருகில் நின்றவர்களிடமும்
கேட்டுப்பார்த்தார்கள்... பதிலில்லை... என்றுமே
பதில் கிடைக்கப்போவதில்லை என்பதை
அவர்களில் பலர் அறியாமலில்லை. ■



1995 இல் அழிக்கப்பட்டு
மீளக் கட்டப்பட்ட நினைவுச்சின்னம்


கலையார்வனின் 'குருதிக் குளியல்' நூலிலிருந்து...

*பிரான்சில் நடைபெற்ற 'முற்றத்து வாசம்' நிகழ்வில் புனித யாகப்பர் ஆலய 150 வது யூபிலி ஆண்டுக்கான கவிதைப்போட்டியில் முதலிடம் பெற்றது.*

# மூப்பொன் விழா சிறப்புற வேண்டும்

செல்வி கி. சிந்துஜா - பிரான்ஸ்

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்றில்
அடிக்கல் இடப்பட்டு மிடுக்குடன் எழுந்தது
ஆண்டவர் யேசுவின் வேத சாட்சி
இடியின் மைந்தன் தூய யாகப்பர் ஆலயம்
முப்பத்து மூன்று குடிமக்கள் முழு மூச்சுடன்
மூப்பர் சந்தியோவின் ஒப்பற்ற கைவண்ணத்தில்
உரோமக்கலை வடிவையொட்டி குருநகரில்
ஆரோகணித்தது எம் காவலன் யாகப்பர் ஆலயம்.
கலையழகும், பார்ப்பவர் வியக்கும் கட்டிடக்கலையும்
நிலைக்குத்தாய் நிமிர்ந்து மிளிரும் தூபி மாடமும்,
அலைகடலை ஆளும் நெஞ்சத்தினரின்
மலை நிகர் நம்பிக்கையின் விந்தை ஆலயம்.
கண்கள் பல கண்ட அற்புதக் காட்சிகள்.
விண்முட்டும் தேக்குமரத் தூண்கள் ஓரிடத்தில் கிடைத்த சாட்சி
மண்ணிணுள் புதைந்தவன் உயிருடன் மீண்டெழுந்த ஒரு சாட்சி
கூரைமேல் இருந்து கீழே விழுந்தும்
காயங்கள் எதுவுமின்றி எழுந்தவன் ஒரு சாட்சி
நள்ளிரவில் கண்கவர் ஒளியில் மணிகள் ஒலிக்க
நற்கருணை வழிபாடு செய்யும் அதிசயம் ஒரு சாட்சி
அற்புதங்கள் பல கண்ட அன்பனின் ஆலயம்
பற்பல துன்பியல் நிகழ்வையும் கண்டது
யுத்தக் கொடுமைகள் ஆலயங்களையும் விடவில்லை
சத்தமின்றி திடீரென வானின்று வீசிடும் குண்டுகள்
புத்தரின் புதல்வர்களின் புண்ணிய கைங்கரியம்
கத்தரின் சீடன் ஆலயத்தையும் சிதைத்தது.
ஒன்பது உயிர்கள் உடல் சிதறி வீழ்ந்தனர்
மாண்புறு ஆலயம் மண்மேடாய் ஆனது
காண்புறு மாந்தர் கண்கள் கலங்கினர்
கலங்கவில்லை எம் மக்கள் கண நேர மௌனம்
கலங்கரை விளக்காய் புனிதர் துணைநிற்க
புலம்பெயர் உறவுகள் உவந்தளிக்க
புனலென எழுந்தது பொலிவுறு ஆலயம்– இன்று
மூன்று ஐம்பது ஆண்டு பொன்விழா– எமை
முன்னின்று காக்கும் புனிதரின் விழா
முத்தான சொத்தளித்து வித்தான முன்னோர்க்கு
முத்தாரம் சூட்டி மகிழ்ந்திடும் விழா
துன்பங்கள் இழப்புக்கள் இத்தனையும் சுமந்து
மீண்டும் புதிதாய் எழுந்திட ஈசன் எமக்களித்த விழா
வேண்டும் வரம் தந்து இவ்விழா சிறக்க
தேசமெங்கும் அன்பு அமைதி தழைக்க
யேசுவின் வரம் தந்து காரும் யாகப்பரே!
நின்மூப் பொன்விழா சிறப்புற நிறைவுற துணைவாரும் சந்தியோவே!



மறைமாவட்ட ரீதியிலே
முதலிடங்களைப் பெற்றுக்கொண்ட
எம் பங்கு மாணவிகள்










'ஆயர் விழா'
எம் பங்குப் பிள்ளைகளின்
நடன வரவேற்பு



# குருநகரும் இளையோரும்


ப. பிரியானந்தன்

கலை, கலாசார, கல்வி, பண்பாடு, சமயம் போன்ற விழுமியங்களை தன்னகத்தே கொண்டது எம் குருநகர். குருநகரில் மட்டுமன்றி இலங்கைத்தீவு முழுவதிலுமே எமது கலைஞர்கள் தம்முடைய திறமைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அத்துடன் விளையாட்டு வீரர்கள் தேசிய அணிகளில் பங்குபற்றியும் வெளிநாடுகளுக்குச் சென்றும் எம்முடைய ஊரின் ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பண்பாடு என்பது எம் மக்களோடு பிறந்து கடலோடு வாழ்வது. பண்பாட்டை சொல்லில் வடிக்க முடியாது. எம் சமூகத்தில் வாழ்ந்து பார்த்தால் தான் புரியும். சமயம் சார்ந்த செயற்பாடுகளில் எம் பங்கின் ஆன்மீக செயற்பாடுகளும் அதன் செயல் வடிவங்களும் இதற்கு சான்று பகரும். கல்வியை பொறுத்தவரையில் பல கற்றுத்தேர்ந்த சான்றோர்களைக் கொண்டது எம் ஊர். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாநகர முதல்வர், யாழ் ப.நோ.கூ. சங்கத்தலைவர், யாழ் கூட்டுறவு சமாசத் தலைவர், பாடசாலை அதிபர்கள், விருதுகள் பெற்ற எழுத்தாளர்கள், பிரசித்தி பெற்ற வைத்தியர்கள், போன்ற இன்னும் பலரை கல்விமான்களாக பிரசவித்தது எம் குருநகர்.

கடலலைகள் கொஞ்சும் நகரின் எதிர்கால தூண்களாய் இருக்க வேண்டிய எம் இளைய சமூகம் இன்று தம்மிடையே எப்படிப்பட்ட கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் அது கவலையுடன் கூடிய கேள்விக்குறியான விடயமாகவே இருக்கின்றது. இன்றைய இளைஞர்கள் ஏறத்தாழ 1980களில் பிறந்தவர்களே. யுத்தமேகம் கருக் கட்டிய காலம் வன்முறை கலாசாரம் உற்பவித்த தலைமுறையே இன்றைய இளையோர். யுத்த மேகம் பிரசவித்த குழந்தைகளே இன்றைய கால இளையோர். தாயின் கருவில் இருக்கும்போதே வன்முறை கலாசாரம் விதைக்கப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்ததனால்தான் என்னவோ எம் இளையோர் இன்றும் தடம்புரண்டு வாழ்கின்றனர். நெறி பெயர்ந்து போகின் றனர்.

## சினிமா மோகம்

இன்றைய தொலைக்காட்சி மோகம் என்பது தென்னிந்திய சினிமாப்படங்கள் மட்டுமன்றி தொடர் நாடகங்கள், நேரடி விளையாட்டு ஒளிபரப்புக்கள் வரை நீண்டு கொண்டே செல்கின்றது. சினிமாப் படங்கள், தொடர் நாடகங்கள், எதைக் காட்டி நிற்கின்றன? புனிதமான காதலையா, காமத்தை தூண்டும் காதலையா?, காட்டுகின்றது? குணத்தில் தோன்றும் சாதியை காட்டுகின்றதா? குலத்தில் தோன்றும் சாதியை காட்டுகின்றதா? நிஜவாழ்வில் நடப்பவைகளை விட்டு விட்டு நம்பமுடியாத காட்சிப்படுத்தல் மூலம் எதைக் காட்ட விளைகின்றது? தேசப்பக்தி என்று கூறிக்கொண்டு தேசத் துரோகிகளை



ஆதரிக்கும் அல்லது முதன்மைப்படுத்தும் கதா பாத்திரங்கள் எதைக் காட்டுகின்றன.

உலகக்கிண்ண மென்பந்தாட்ட போட்டியை நேரடி ஒளிபரப்பின் மூலம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வீடுகளிலும் ஏற்படும் பிரச்சனைகளுக்கு அளவே கிடையாது. வீரர்கள் அடிக்கும் சதங்கள் பெறப்படும் விக்கெட்டுக்கள் ஒவ்வொன்றும் அவர்களுடைய வாழ்க்கையில் ஏறுமுகங்களே. அவற்றைப் பார்த்து விட்டு நாம் பெறப்போகும் பெறுமானங்கள் எம் வாழ்வின் எதிர்காலத்தையே பூச்சியமாக்கிவிடும்.

வரலாற்றில் மிகவும் முக்கியமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் இளைய தலைமுறை என்றுமில்லாதவாறு தென்னிந்திய சினிமா என்னும் மாயைக்குள் வீழ்ந்து மீள முடியாதவாறு கட்டுண்டு கிடக்கின்றது. யதார்த்தமான நிகழ்வுகளை புறந்தள்ளிவிட்டு மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட அல்லது மனித விழுமியங்களை மழுங்கடிக்கக் கூடிய பல திரிவு பட்ட காட்சிகளை நாம் பார்க்கக் கூடியதாக வைத்துள்ளது. இவற்றினால் எம் இளைய தலைமுறை மட்டுமன்றி எம்மை வழிநடத்தவேண்டிய பெற்றோர்களே தம் அன்றாட காரியங்களை விட்டுவிட்டு தொடர் நாடகங்களில் தம்மை முழ்கடித்துக் கொண்டிருக்கின்றார்கள். தொடர் நாடக நேரங்களில் தங்களுடைய பிள்ளைகளை ரியூசன் அனுப்பும் பெற்றோர்களின் புத்திசாலித் தனம் மிகவும் வேதனையான விடயமாகும்.

## மது மோகம்

ஏ-9 பாதை திறந்தவுடன் மதுபான வகைகள் மலிவாகவும், தென்னிந்திய கலைஞர்களின் வருகை இலகுவாகவும் எம் அண்டை வந்து நிற்கின்றன. மது பாவனையின் ஆதிக்கம் ஒட்டு மொத்த சமூக சீர்கேட்டின் அடித்தளமாக இருக்கின்றது. பாரம்பரியம் மிக்க எம்முடைய



கலாசாரத்தின், பண் பாட்டின் அடித்தளத்தை ஆட்டம் காண வைத்துள்ளது என்றால் மிகை யாகாது.

'குடி' மக்களாக மாறிவரும் எம் சமூகம் குடும்ப வாழ்வில் அது ஏற்படுத்தும் தாக்கங்களை ஏற்றுக்கொள்ள, உணர மறுக்கின்றார்கள். கௌரவம் பார்த்து குடிப்பவர்கள் என்ற புதிய சித்தாந்தத்தை எம்முள் பலர் விதைக்கின்றார்கள். தந்தையர்களின் குடிப்பழக்கம், வெளிநாட்டு உறவினர்களின் வருகையின்போது ஏற்படும் குடிப்பழக்கம், அண்ணண், தம்பி, மச்சான் போன்ற உறவினர் சகிதம்குடிக்கும் வெளிநாட்டு கலாசாரம் எம்முடைய சமூகத்தை மிகவும் இலகுவாக பற்றிக் கொண்டுள்ளது. பாடசாலைக் கல்வியை முடிப்பதற்கு முன் பல மாணவர்கள் குடிப் பழக்கத்தை கற்று முடித்துள்ளார்கள்.

ஒரு காலகட்டத்தில் மரண பயம் மக்களை ஆட்கொண்டிருந்த சமயம், உளவியல் ரீதியான பாதிப்புக்கு சமூகங்கள் முகம் கொடுத்த காலத்தில் மக்களின் மனங்களில் இருந்த காயங்களை ஆற்றும் முகமாக வைத்தியர்கள், உளவியல் ஆய்வாளர்கள் மக்களிடையே கலை நிகழ்வுகள், களியாட்டங்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களுடைய மனநிலையில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ண முடியும் எனக் கருதி இசை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினார்கள். ஆனால் இன்று நடக்கும் இசைநிகழ்ச்சிகள் எதைக் காண்பிக்கின்றன. கலை, கலாசாரத்தில் உலக வரலாற்றிலேயே காத்திரமாக பங்குவகித்த தமிழ் சமூகம் கலாசார சீர்கேட்டின் ஒட்டுமொத்த வடிவமாய் காட்சியளிக்கின்றது. இளையோரின் ஆழ் மனதில் எத்தகைய மாற்றத்தை உண்டுபண்ணியுள்ளது.என்றால் அந்நிகழ்ச்சிகளின் முடிவில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் சான்றாய் அமைகின்றது.

## தலைமைத்துவப் பண்பு

இன்று எழுதப்படும் சொற்கள் நாளை உச்சரிக்கப்படும் வசனங்கள் எதிர்கால தலைவர்கள் என்று சொல்லப்படும் நம் இளையோரின் இன்றைய நிலை என்ன? அவர்கள் தங்களிடையே எந்த வகையில் தலைமைத்துவத்தை வளர்த்திருக்கின்றார்கள் அல்லது வளம்படுத்தியிருக்கின்றார்கள். ரியூசன் சென்ரர், விளையாட்டுத் திடல், ஓய்வு நேரங்கள், தெருவோரங்கள், ஆலய வளாகங்கள் அவற்றில் நின்று கொண்டு, அரசியல், சினிமா, விளையாட்டு, கலை பற்றி தமக்கிடையே கதைப்பவர்கள் சமூகம் சார்ந்த அமைப்புகள், கழகங்கள், சங்கங்கள் சமயச் சபைகள்

இவற்றில் தங்களை ஈடுபடுத்தி தங்களுடைய வாதங்களை தெளிவுபடுத்தி தம்முடைய தலைமைத்துவ பண்புகளை எத்தனை இளைஞர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்?

எம் ஊரினை பொறுத்த வரையில் அமைப்புகளில், நிர்வாகங்களில் இளையோரின் பங்களிப்பு 2 வீதமாகவே இருக்கின்றது. அதிலும் பக்திச் சபைகள் தவிர்த்து ஏனைய அமைப்புகளில் பெண்களின் பங்களிப்புகள் பூச்சியமாகவே இருக்கின்றது. இன்று எம் ஊரின் பல முன்னனி அமைப்புகள் மறைந்து விட்டன. சில செயலற்று உறங்கிக் கிடக்கின்றன. இன்னும் சில பெயரளவில் இயங்குகின்றன. இன்றைய இந்த நிலையானது எதிர்காலத்தில் எம் இளையோரின் தலைமை தாங்கும் சக்தியை முற்றாகவே அழித்து விடும். இவற்றிற்கான காரணம் என்ன என்பதை பார்ப்போமானால்

1) இளையோர் தலைமை தாங்க முன் வராமை
2) இளையோருக்கான சந்தர்ப்பத்தை கொடுக்காமை
3) நீண்ட காலமாக ஒரு சிலரே நிர்வாகங்களில் தொடர்ந்து இருக்கின்றமை
4) ஒருவர் பல நிர்வாகங்களில் இருக்கின்ற மோகம்
5) துறைசார்ந்த நிபுணத்துவம் இல்லாமை
6) பணம் படைத்தவர்களின் நிர்வாக ஆதிக்க மேலாண்மை.
7) சமூகங்களின் ஒத்துழைப்பு போதாமை.



## வன்முறை கலாசாரம்

கொட்டும் மழைக்கும் வாட்டும் வெயிலுக்கும் இடிமின்னலுடன் வீசும் காற்றுக்கும் நடுவில் இயற்கையுடன் எதிர் நீச்சல் அடிப்பவர்கள் குருநகர் இளைஞர்கள். ஆனால், செயற்கை எம்மை வஞ்சித்து தாலாட்டி 1980களின் பின்னர் பிரசவித்த இளையோர் வன்முறையின் வடிவமாய் காட்சி அளிக்கின்றார்கள். கருவில் உதயமாகும் பொழுதே யுத்த மேகம் சூழ்ந்து கொண்டது. கருவில் சிசுவாக வளரும்போது வன்முறை எம்மை முத்தமிட்டது. பூமியை முத்தமிடும் பொழுது வன்முறைக் கலாசாரம் தாண்டவமாடியது. இயற்கை அன்று கொடையாக கொடுத்தது. இன்று வாரத்திற்கு ஒரு சண்டை, வீதிக்கொரு சண்டை. திருவிழாக்களில் ஆரம்ப மாகும் சண்டை திருவிழாக்கள் முடிந்தும் ஓய்வதில்லை. இவையெல்லாம் எதைக் காட்டி நிற்கின்றன? எம் சமூகத்தின் எதிர்கால சொத்துக்கள் சிதைந்து சின்னாபின்னமாய் போய்க்கொண்டு இருப்பதையே நிதர்சனமாக காட்டிநிற்கின்றன.

"வாளெடுத்தவன் வாளால் மடிவான்" என்று இறைவாக்கு உணர்த்துகின்றதை செவிமடுக்காது, இந்த இளைய சமூகம் தெருவோரங்களில் தடிகள் பொல்லுகளுடன் ஒரு கூட்டமும், தலைக்கு விதம் விதமான வர்ணங்களும் காதுகளுக்கு தோடுகளுமாக இன்னொரு கூட்டமுமாய் அலைந்து திரிகின்றார்கள். ஆண்கள்தான் இப்படியென்றால் பெண்களும் வன்முறைக்கு தூபம் போடுகின்றார்கள். நேரத்திற்கு நேரம் ஒரு கைத்தொலைபேசி, அங்கங்கள் தெரிய ஆடைகள், அடிக்கடி ரியூசன் சென்ரர்கள், சினிமா தியேட்டர்கள், இவர்கள் செயல்களை அல்லது சொற்களை கேட்டு நியாயப்படுத்துதல். காதலர், சகோதரன் பின்பு வன்முறை.

எம் இளையோர் மட்டில் வன்முறைக் கலாசாரம் விழுதுவிட்ட ஆலமரமாய் பெருவிருட்சமாய் வியாபித்து வளர்ந்துள்ளது. சந்திக்குச் சந்தி குழுக்களாக இணைந்து இவற்றில் ஈடுபடுகிறார்கள் இவற்றை சமூகத்திலுள்ளோர் திருத்துவதற்கு முயற்சி செய்கிறார்களோ இல்லையோ பல வழிகளிலும் வன்முறைக் கலாசாரத்தை வளர்க்க மறைமுகமாக பலர் பாடுபடுகிறார்கள். என்பது கசப்பான உண்மை. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்தான்.

## ஆன்மீகம்

திருச்சபையின் கட்டளைப்படி ஞாயிறு

திருப்பலிகூட இன்று எம் இளையோருக்கு நெல் லிக்கனியாக உள்ளது என்றால் மிகையாகாது அருட்பணிச்சபை, பக்தி சபைகள் இவற்றில் இளையோரின் பங்கு மிகவும் குறைவாகவே இருக்கின்றது எனலாம். 1800 பேருக்கு மேற்பட்ட இளையோரைக்கொண்ட எம் சமூகத்தில் குருநகர் இளையோர் ஒன்றியத்தில் எத்தனை அங்கத்த வர்கள் இருக்கின்றார்கள். திருவிழாக் காலங்களில் காணப்படும் இளையோரை அதன் பின்பு காணக் கிடைப்பதில்லை. ஆன்மீகத்தில் மட்டும் அவர் களுக்கு இருக்கும் ஆர்வம் நாட்டம் திருவருட் சாதனங்களைப் பெற்றுக்கொள்வதிலேயே தங்கி யுள்ளது. திருவருட் சாதனங்களை பெற்றுக் கொள்ள வருபவர்களில் 90 வீதமானோர் பின்பு தொலைந்து விடுகின்றனர்.

யாத்திரைத் தலங்கள், ஆலயத் திரு விழாக்கள் இன்றைய இளையோர் மட்டில் ஆன்மீகத்தை வளர்க்கின்றதோ இல்லையோ, அர்த்தமற்ற மாயையான ஆடம்பரமான வாழ்வில் தங்களை வெளிக்காட்டிக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்துவிடுகின்றது.

## மாற்றுச் சமய நுழைவு

கரையோர கிறிஸ்தவ குடும்பங்கள் பல இன்று பிரிவினைச் சகோதரர்களின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக மாறி வாழுகின்றனர். அல் லது பிரிவினைச் சபைகளுக்கு மாறியிருக்கின் றனர். இன்று எம்மில் இருந்து பிரிந்த சகோதரர்கள் தங்களுடைய சபையின்பால் பற்றுடையவர் களாகவும், பக்தியுடையவர்களாகவும் உள்ளனர். குறிப்பாக இப் பிரிவினர் சபைகளில் இளை யோரின் பங்களிப்பானது. காத்திரமானதாய் உள்ளது. விவிலிய அறிவு அவர்களுடைய வார்த் தைகளில் புலப்புடுகிறது. ஆனால் எம்முடைய இளையோர்கள் இதற்கு எதிரான பண்புகளையே கொண்டுள்ளனர்.



எம் ஊரைச் சுற்றி பள்ளிவாசல், இந்து ஆலயங்கள், சாய்பாபா வழிபாட்டுத்தலம் வீதிக் கொன்று என்ற வகையில் மாற்றுச் சபையினரின் சிற்றாலயங்கள் என்று வேற்று மதங்களின் ஆக்கிர மிப்பு எம்மை சூழ்ந்துள்ளது. பாரம்பரியமாகவே கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கு முன்மாதிரி கையாக திகழும் எம் ஊர் அதன் பண்புகளை, அடிச்சுவடுகளை இழந்து வருவதற்கான சகுனங் கள் எம்முன் தெரிகின்றன. மேலும் இளையோ ரின் விசுவாச வாழ்வு என்பது சூரியனை தொட் டுப் பார்க்கும் ஒரு நிகழ்வாகவே இருக்கின்றது.

இளையோரின் இந்த நிலையை மாற்று வதற்கு தாய்த்திருச்சபை, இளையோர் ஆணைக் குழுக்கள், பங்குத்தந்தையர்கள், இளையோர் மன்றங்களில் அர்ப்பணமான செயற்பாட்டின் மூலமே மாற்றத்தை உண்டு பண்ண முடியும். அருட்தந்தை ஜெயசீலன் அடிகளாரால் ஒவ் வொரு வியாழன் தோறும் புனித வளனார் ஆச்சிரமத்தில் பி.ப 5 மணிதொடக்கம் இளையோ ருக்கான வழிபாடு நடைபெற்றது. அப்பொழுது அங்கே பிரசன்னமாகும் இளையோரின் எண் ணிக்கை சொல்லிலடங்காது. இளையோரைப் பங்குச் செயற்பாட்டிலும் ஆன்மீக உருவாக்குத லிலும் உள்வாங்கக் கீழ்வரும் செயற்பாடுகள் முன்மொழியக்கூடியன:

1) அருட்தந்தையர்கள் இளையோருடன் நெருக்கமான உறவைப் பேணுதல்.
2) யாத்திரை ஸ்தலங்களில் சுற்றுலாக்கள் மேற்கொள்ளல்.
3) இளையோர் ஆன்மீக ஆற்றுகைகளை மேற்கொள்ளத்தூண்டுதல்
4) இளையோர் தேவைகருதி போட்டி களை உருவாக்கி அவர்களை ஒன்றி ணைத்தல்.
5) பக்தி சபைகள் அல்லது இளையோரை வேலைத்திட்டங்களுக்கு உள்வாங்குதல்.

## பொருளாதாரம்

3000 குடும்பங்களுக்கு மேல் கடற் தொழில் சாராத ஏனைய தொழில்களையே செய்கின்றனர். அண்மைக்கால ஆய்வுகளில் 2000 குடும்பங்களே மீனவ குடும்பங்களாக இருக்கின் றனர்.(ஜே/63, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72) 1980இல் மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களை தவிர 1000 குடும்பங்களுக்கு மேல் அதன் உப தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அதாவது நண்டு, இறால் கொம்பனி, பனிக்கட்டி தொழிற் சாலை, கருவாடு பதனிடும் தொழிற்சாலை, 6

இற்கு மேற்பட்ட சிறிய இறால் கொம்பனிகள், அட்டை அவித்தல் போன்றனவாகும். இவற்றில் இன்று இரண்டு மட்டுமே இயங்குகின்றன.

எம்முடைய சமூகத்தில் பலர் இன்று தங்களுடைய பாரம்பரிய கடற்தொழிலிருந்து விலகி மேசன் வேலை, தச்சு வேலை, வர்த்தகம், அரச தனியார் துறைகளில் ஈடுபடுவதன் முலம் எங்களுடைய சமூகத்தின் தொழில்துறை படிமுறையான மாற்றத்தை உள்வாங்கியுள்ளது. காலத்தின் தேவை கருதியும் நவீனத்துவ தேவையை உணர்த்தும் தொழில் வளம் மாற்றப்படுவதும் காலத்தின் கட்டாயமாகும். எமது சமூகத்தின் இளம் பெண்கள் நாவாந்துறை நண்டுக் கொம்பனி, ஆரிய குளம், நாவலர், தட்டாத்தெரு அப்பளக் கொம்பனி, மிதிவெடி அகற்றும் வேலை, பெரியகடை, புடைவைக் கடை, மிக்சர் கொம்பனி போன்றவற்றில் ஆயிரக்கணக்கான பெண்கள் தொழில் புரிகின்றனர்.

தங்களுடைய எதிர்கால வாழ்வை சுகமாக அனுபவிப்பதற்கு அல்லது தங்களுடைய பெற்றோர் சகோதர சகோதரிகள் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே அவர்கள் இத் தொழில்களில் ஈடுபடுகின்றார்கள்.

ஆனால், ஆணாதிக்கமும், பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளும், புறக்கணிப்பும், பராபட்சமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணத்தினாலேதான் தன்கையே தனக்குதவி என்று தொழிலுக்கு செல்லும் பெண்கள் பாரிய அவலத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். சிலபேர் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலை இடைநிறுத்துகின்றார்கள். எதிர்மறையான கருத்துக்களால் சில பெண்கள் தற்கொலை முயற்சிக்குக்கூட எத்தனித்திருக்கிறார்கள். அது போன்று படித்துவிட்டு இருக்கும்



பெண்கள்கூட இன்று எம் பெரியோரின் அர்த்தமற்ற பேச்சுக்களால் எம் சமூகத்திற்கு வெளியே சென்று வேலைசெய்ய அஞ்சுகிறார்கள். எங்களுடைய சமூகத்தை பொறுத்த வரையில் ஆண்களைவிட பெண்களின் கல்வி அறிவு வீதமே அதிகமாகும். ஆனால் அரச தனி யார் துறைகளில் ஆசிரியத் தொழில் தவிர்த்து ஏனைய தொழில்களில் ஒரு சிலரையே காணக் கூடியதாக இருக்கின்றது.

க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியவுடன் பல்கலைக்கழகத்திற்கு செல்லாமல் வெளிநாடு சென்றோர் எத்தனைபேர்? இடையில் விலத்தியோர் எத்தனைபேர்? ஆண்களைப் பொறுத்த மட்டில் படித்து விட்டு கடற்தொழில் செய்பவர்களே எமது சமூகத்தில் அதிகமாக காணப்படுகின்றனர். இதற்கு ஒருபடி மேலே போய் இளையோர் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற நாளாந்தம் செல்வோர் எத்தனை பேர்? இன்றைய சூழ்நிலையில் உலக நாடுகள் அனைத்திலும் ஓர் அசாத்தியமான, ஸ்திரமற்ற அரசியல் நிலவரம் காணப்படுகின்றதென்பதை நாம் அனைவரும் அறிவோம். இதன் காரணமாக கோடிக்கணக்கானோர். வேலைவாய்ப்பினை இழந்திருப்பதையும் பல்தேசிய கம்பனிகள், இதர வியாபார ஸ்தாபனங்கள் வேலையாட்களை படிப்படியாக குறைத்துக்கொண்டு வருவதையும் நாளாந்த பத்திரிகைகள் வாயிலாக அறிந்துள்ளோம். அபிவிருத்தி அடைந்த நாடுகளே இந்நிலையை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்ற வேளை வளர்முக நாடான இலங்கை எம்மாத்திரம்.

இவற்றின் மத்தியில் கடல் வளத்தையே நம்பி வாழ்ந்த நாம் இன்று கடல்வளமும் எம்மை கைவிட்ட நிலையில் எதிர்காலத்திலே இளையோரின் நிலை என்ன? எம்முடைய சமூகத்தை சுற்றி கடற்தொழில் சார்ந்த துறைகள் மட்டுமன்றி ஆர்.வி.ஜி பீடிக்கொம்பனி, அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலை போன்ற சில தொழிற்சாலைகளும் எம்மை சூழ இருந்தன. இவற்றின் மூலமும் ஆயிரக்கனக்கானவர்கள் தொழில்வாய்ப்பை பெற்றனர். ஆனால் இவை கூட இன்று இல்லை.

தற்சமயம் எம்முடைய சமூகத்தில் புலம் பெயர் அமைப்புகள் பல இயங்குகின்றன. (பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ், கனடா, அமெரிக்கா, நோர்வே, ஒஸ்லோ) இவை ஒவ்வொன்றும் தனித்தனி கொள்கைகளுடன் இயங்குகின்றன. ஒவ்வொரு அமைப்பும் தங்களுக்கென்று திட்டங்

களை வகுத்து கொண்டு அவற்றை செயற்படுத்தி வருகின்றனர். ஆனால் இவையாவும் சேர்ந்து ஒரு பொது அமைப்பாக மாறி செயற்படும் போது அதன் மூலம் எம்முடைய சமூகத்தின் எதிர்காலத்தையே பயனுள்ளதாக மாற்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. தொழிற்பயிற்சி கல்லூரிகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றை நிறுவி எம் சமூகத்தில் படித்த வேலை இல்லாத இளையோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்க தொழில்நுட்ப அறிவுகளை வளர்க்க அமைப்புகள் முன்வர வேண்டும். அது மட்டுமன்றி அப்பளம், மிக்சர் கம்பனிகளை எம்முடைய சமூகத்திலே உருவாக்குவதன் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுடன் அவர்கள் வெளியே சென்று வரும்போது ஏற்படும் பிரச்சினைகளிலும் இருந்து விடுபட முடியும்.

உள்ளூராட்சி சபையையோ அல்லது கூட்டுறவுத்துறைகளுக்குரிய அதன் நிர்வாக சபை உறுப்பினர்களை நிர்ணயிக்ககூடிய சனத்தொகை விகிதாசாரத்தை கொண்டது எம் சமூகம். ஒரு அமைப்பு ரீதியாக இவர்களை நாம் தெரிவு செய்யும்பொழுது அந்த அமைப்பினூடாகவே பல வேலைவாய்ப்புகளை இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். சமூகத்திலுள்ள ஏனைய அமைப்புகளும் எதிர்காலத் தேவையை உணர்ந்து தொழில் வளங்களை உருவாக்குவதற்கு ஏதுவான காரணிகளை கண்டறிந்து அவற்றை உடனுக்குடன் செய்து முடிப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## கல்விநிலை

இன்றைய உலகு கோளமயமாக்கல் என்ற உலக ஒழுங்குகளுக்கு உட்பட்டு வருகின்ற சூழலில் கல்வியானது அதன் பண்பிலும், அளவிலும் மாற்றங்களுக்கு உட்பட்டு பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது இன்று உலகளவில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு இசைவான தொழில் திறன்களையும், நவீன தொழில் நுட்பத்தையும், அறிவுப்பரப்பையும், மற்றும் பொருளாதார மேம்பாட்டையும் உள்ளடக்கிய திறன்மிக்க கல்வி ஒழுங்கமைப்பின் அவசியப்பாடு கல்வியுலகில் உணரப்படுகின்றது.

எங்களுடைய சமூகத்தின் கல்வியின் இன்றைய நிலை, எதிர்கால நிலை உலகமயமாக்கலின் கல்வி நிலைக்குள் எந்த வடிவம் பெறுகின்றது. என்று சிந்தித்து பார்ப்போமாகில் ஒப்பீட்டளவில்கூட நாம் நெருங்க முடியாதுள்ளது. அதாவது இன்றைக்கு படித்து பட்டம் பெற்றவர்கள்கூட படித்தவர்கள், கல்விமான்கள் என்ற வரையறைக்குள்ளிருந்து விடுபடுகின்ற நிலையே காணப்படுகின்றது. எமது ஊரின் மையப்பகுதியில் சென் ஜேம்ஸ் ஆண்கள், பெண்கள் பாடசாலைகளும் சமூகத்தை அண்டி சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை, சென்றோக், புனித பத்திரிசியார், புனித சாள்ஸ், பரியோவான் கல்லூரி, ஓ.எல்.ஆர், வேம்படி, மத்திய கல்லூரி என்பனவும் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் கல்விக்கு என்று சிறப்பான ஒரு இடத்தைக் கொண்ட பல பாடசாலைகள் எம்மைச் சுழவுள்ளன. தனியார் கல்விநிறுவனங்கள், உயர்தொழில் நுட்பக் கல்லூரி, முறைசாராக் கல்விக் கூடங்கள் எனக் கல்விக்கூடங்கள் எம்மை சூழ்ந்து நிற்கின்றன.

தரவுகளின்படி புலமைப் பரீட்சை, க.பொ.த (சா, உயர்தர) பரீட்சை, போன்றவற்றில் சித்தியெய்தியோர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. ஆனால் கல்வி கற்கும் மாணவர்ளினதும் எமது சமூகத்தின் சனத்தொகைக்கும் இடையில் விகிதாசார அளவில் பாரிய வீழ்ச்சியை கொண்டுள்ளது என்பதே உண்மை. சனத்தொகை விகிதத்திற்கேற்ப கற்றோருக்கான எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. 25 வருடங்களுக்கு முன் எம் சமூகத்தில் பொருளாதார பிரச்சனை, கல்விகற்ற பெற்றோர் பிரச்சனைகளிலிருந்தது என்பது உண்மை. இன்று பொருளாதார பிரச்சனை என்பது 98 வீதம் இல்லையென்றே சொல்லலாம் காரணம் கா.பொ.த சாதாரண தரம், உயர்தரம் வரை கற்கின்ற மாணவர்களுக்கு குருநகர் வாழ் புலம்பெயர் அமைப்புகளின் பங்களிப்பும், இதைவிட புலமைப் பரீட்சை பிள்ளைகளுக்கு நோர்வே அமைப்பின் வழிகாட்டல் கருத்தரங்கும் கல்வி முன்னேற்ற கழகங்களின் நாளாந்த வகுப்புகள் புனித கார்மேல் மாதா இளையோர் ஒன்றியத்தின்



க.பொ.த விஷேட முன்னோடி வகுப்புகளும் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

தனிமனிதனுக்கும் அவன் சார்ந்த சமூகத்திற்கும் நிலையான அழியாத முலதனம் கல்வியே ஆகும். அக் கல்வி அறிவு இல்லையேல் இளைய தலைமுறையினருக்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க முடியாமல் போய்விடும். எதிர்காலத்தில் ஒரு படிப்பறிவற்ற சமூகத்தை விட்டுச் சென்ற ஒரு குற்ற உணர்வே மிஞ்சும்.

இன்றைய சமூகத்தின் வாழ்வு பணம் என்னும் மாயைக்குள் கட்டுண்டு கிடக்கின்றது. பணத்தின் மூலம் எல்லாவற்றையும் வாங்க கூடிய சக்தி பரவலாக காணப்படுகின்றது. இதன் காரணத்தினாலேயே இன்றைய மாணவர்கள் கல்வியை இடை நிறுத்திவிட்டு பணம் என்னும் பேயை பெருக்க முனைகின்றனர். இதனால் கல்விச் செல்வம் பணச் செல்வத்திற்கு அடிமையாகி அதன் பண்பினை இழந்து நிற்கின்றது. அப்படியிருந்தும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களது கடின உழைப்பாலும் கடமையுணர்வாலும் மாணவர்களது கல்வித்தரம் ஓரளவு தக்க வைக்கப்படுகின்றது. இந்த இடத்தில் நின்று கொண்டு மேல் எழாவிட்டாலும் கீழ் இறங்காமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கடலிலே தமது பெற்றோரை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் சகோதரர், உறவுகளை நண்பர்களை இழந்ததினால் அவர்களின் பாரம்பரியமான மனோபாவம் ஒரு மாற்றத்தை எதிர்கொண்டவேளையில் சமூகத்தின் மத்தியில் அதாவது கல்வியில் ஈடுபாடு காட்ட வழியேற்பட்டது. அத்துடன் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பால் புலம் பெயர் உறவுகளின் கல்விக்கான உதவி மாணவர்களின் கல்விக்கு மேலும் ஒரு ஊக்குவிப்பாக அமைந்துள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை பெண்களின் கல்விக்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கச் செய்தது. (உ+ம்) சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் 2001 ஒவ்வொரு வருடமும் 2 இற்கு மேற்பட்டோர் பல்கலைக்கழகத்திலும் 5 மாணவர்களுக்கு மேல் நுண்கலைப் பீடங்களுக்கும் தெரிவாகுவதற்கும் தகுதி பெற்றுள்ளனர். கல்வியில் ஆண்களை விட பெண்களே முன்னிலையில் இருக்கிறார்கள் என்பதே உண்மை. ஏற்கனவே கூறியது போன்று எண்ணிக்கையில் மட்டுமே மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே விகிதாசாரத்தில் ஏற்படும் மாற்றமே சமூகத்தை இனங்காண வழி சமைக்கும். கல்விக்கான இருப்பென்பது இன்று இளையோர் மட்டில் கேள்விக்கான விடயமாகி விட்டது. இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் அறிவார்ந்த, ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள்தான் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கு வழியமைக்க வேண்டும்.

இன்றைய இளையோர் எதிர்நோக்கும் ஒட்டுமொத்த பிரச்சனைகளுக்கும் இலகுவான முறையில் அதாவது அவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு கற்றலுக்கு முதன்மை கொடுப்பதே சாலச் சிறந்தது. எதிர்காலத்தில் கணணி யுகத்தில் கற்றலின் மூலமே உலகியல் வாழ்விற்கு முகம் கொடுக்க கூடியதாக இருக்கும். கல்விசார் கட்டமைப்பில் பின்னோக்கிய நிலையினை சந்திக்கின்ற இளையோர் எதிர்காலத்தில் தமது புலத்தின் இருப்பை பகுத்தறிவுள்ள சமூகமாக மாற்ற பெற்றோர் பெரியோர் எந்த வடிவில் உதவ முடியும். என்று சற்று ஆராய்வோம்.

## பாடசாலையில் கல்விச் செயற்பாடு

பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் பாடசாலையில் பிள்ளை என்ன செய்கின்றது. பாடசாலையின் பின் ரியூசனில் எதைப் படிக்கின்றது என்பதை அவதானிப்பதில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும். தாங்கள் 6-9 மணிவரை நாடகம் பார்ப்பதற்காக இரவுப் பாடசாலைக்கு பிள்ளையை அனுப்பும் பெற்றோர். தமது கொள்கையை மாற்ற வேண்டும். தேவையற்ற நண்பர்கள் அவசியமற்ற கையடக்க தொலைபேசி பாவனைகளை பெற்றோர் கட்டுப்படுத்த வேண்டும். விடுமுறை நாட்களில் சுற்றுலா, யாத்திரை செல்லும் பெற்றோர் பாடசாலை நாட்களில் பிரயாணங்களை முற்றாக தவிர்க்க வேண்டும். பிள்ளைகளின் தேவை விருப்பம் அறிந்து பெற்றோர் தாங்கள் மாறவேண்டும். பிள்ளைகளுக்கு கற்பிக்கும் அசிரியருடன் பெற்றோர்களின் நெருங்கிய தொடர்பானது பிள்ளைகளின் கல்வியறிவில் மட்டுமன்றி கட்டுப்பாட்டையும் கடமையுணர்வையும் வலுவாக்கும். பிள்ளைகளின் பழக்கவழக்கங்களில் பெற்றோரின் பங்கு ஆழமானதாக அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும். ஏனோதானோ என்ற போக்கு மாறவேண்டும்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் இணை நிறுவனமான யுனெஸ்கோ வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. "புத்தாயிரம் ஆண்டின் ஆசிரியருக்கு தமது மாணவர்களிடையே காணப்படும் அடிப்படை நிபுணத்துவங்கள், மனப்பாங்கு படைப்பாற்றல் திறன்

மாற்றம், அல்லது புதுமைகாணல் என்பவற்றின் சிறப்பம்சங்கள் பல்துறைப்புலமை மாறும் நிலைக்கேற்ப அமைதல். கொள்கையை அறிந்து கொள்ளல், விமரிசைப்பாங்கு பிரச்சனைகளை இணங்காணல் மற்றும் தீர்ப்புத் திறமை என்பன பற்றிய ஆற்றல் இருக்க வேண்டும்." ஒரு பிள்ளை யின் மீது பெற்றோருக்கு இருக்கும் அதே அக் கறை ஆசானுக்கு இருக்க வேண்டும். வாங்கும் சம்பளத்திற்கு வேலை பார்க்காமல் பிள்ளைகள் வாழ வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

கடமை என்று சொல்லி தட்டிக்கழிக் காமல் சேவை என்று நினைத்து செயல்பட வேண் டும். பிள்ளையின் நிலையை துல்லியமாக இனங் கண்டு அதற்கேற்ற வகையில் தயார்படுத்த வேண் டும். தனியார் கல்வி நிறுவனங்கள் தனிப் பட்ட கற்பித்தல் போன்றவற்றில் வினைத் திறனுடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலை யிலும் அதிக வினைத்திறனுடன் கற்பிக்க முன்வர வேண்டும். அதிபர் பகுதித் தலைவர்கள், ஆசிரியர் கள் மட்டில் அதிக கவனம் செலுத்துவது மாண வர்களின் கற்றலுக்கு பேருதவியாக இருக்கும்.

இவ்வூரின் கல்வி வளர்ச்சி சென் ஜேம்ஸ் ஆண், பெண் பாடசாலைகளின் வளர்ச்சியிலே தங்கியுள்ளது. இப் பிள்ளைகளில் கல்வியின் வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பது என்பது இயலாத காரியமல்ல. முன்னணி அமைப்புகள், கழகங்கள், சங்கங்கள், புலம்பெயர் அமைப்புகள், அருட் பணிச் சபையினர், தனிப்பட்ட நலன் விரும்பிகள் அனைவருடைய ஒத்துழைப்பு இன்றைய கல்வி வளர்ச்சிக்கு ஏதுவானதாக இருக்கின்றது. மேலும் அதை முன்னேற்ற திட்டமிட்டு செயற்படுத்தலே நல்லது. பாடசாலையில் பிள்ளைகளின் வரவை உறுதிப்படுத்தல் பாடசாலைக்கு சீருடை அணிந்து வருவதனை உறுதிப்படுத்தல், விஷேட திறமை யுடைய ஆசிரியர்களை இனங்கண்டு கல்வித் திணைக்களத்தின் ஊடாகவோ அல்லது தனிப்ப ட்ட ரீதியிலோ அவர்களை உள்வாங்கல். மேலும் கல்வியினை மேம்படுத்த முன்மொழியக்கூடிய சில செயற்பாடுகள்:

1) ஆண்கள் பாடசாலையில் ஒரு துறவியை கடமையற்ற பங்குத் தந்தையுடன் இணைந்து முயற்சி செய்தல்.
2) பிள்ளைகளைத் தண்டிக்கும் ஆசிரியர் மீது நியாயம் கேட்கும் பெற்றோர் மட் டில் அதிக கவனம் செலுத்துதல்.
3) முறைசாரா கல்விக் கூடங்களை உரு வாக்கி கற்றல்களை ஊக்குவித்தல்.
4) கல்வியை இடைநிறுத்தும் மாணவர் களை இணங்கண்டு அவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5) பல்கலைக்கழக அனுமதி பெற்றும் பல் கலைக்கழகம் செல்லாது இருக்கும் மாண வர்கள் தேவையறிந்து உதவுதல்.
6) முன்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சிகளை ஒழுங்கமைத்து முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறியை மேற்கொள்ள ஆவன செய்தல்.
7) அதிபர், ஆசிரியர் மட்டத்தில் இருக்கும் அதிகார துஷ்பிரயோகங்களை கண்ட றிந்து கல்வித் திணைக்களத்தினூடாக அவற்றை நிவர்த்தி செய்தல்.
8) சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையை பொருத்தமான இடத்திற்கு மாற்றுதல்.
9) பாடசாலை சுற்றுப்புற சூழலை அமை திப்பிரதேசமாக மாற்ற விரைந்து நட வடிக்கை எடுத்தல்.
10) பாடசாலையை நவீனப்படுத்தி கற்றலுக் குரிய அமைவிடமாக மாற்றிய மைத்தல்.
11) வீண் பொழுது போக்குகளை நிராகரித்து பிரயோசனமான செயற்பாடுகளை முன் னெடுக்க நவீன உள்ளக, வெளியக பொழுதுபோக்கு மையங்களை உரு வாக்குதல்.

1973 தமிழ் மாணவர்களின் உயர் கல்வி யிலே கைவைத்த அரசு திறமை அடிப்படையை நிராகரித்து இனத்துவ அடிப்படையில் பல்கலைக் கழக நுழைவை ஏற்படுத்தி மொழி மூலமான தரப்படுத்தலை மேற்கொண்டது. இதன் ஒரு வடிவமாகவே போராட்டம் தோற்றம் பெற்றது. பாடசாலைக்கான வள ஒதுக்கீடுகள், வழங்கல் களில் காட்டப்படுகின்ற பாரபட்சங்கள் மாணவர் களின் இயல்பான கற்றலுக்கும் ஆசிரியர்களின் வாண்மையான கற்பித்தலுக்கும் தடைக் கற்களாக காணப்படுகின்றது.

தற்போது இருக்கும் அமைதியான சூழ லில் கல்வி அமைச்சானது இனம்சார் பாரபட்சங் களை களைந்து கீழ்மட்ட பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக் கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். யுத்தம் காரணமாக சேதமுற்ற பாடசாலைகளை புனரமைக்கவும் இடைவிலகிய மாணவர்கள் கல்வியை தொடரவும் ஆவன செய்யவேண்டும்.

## முடிவுரை

ஒரு சமூகத்தின் எதிர்காலம் அந்த

இளைய சமூகத்தின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. தனியொரு மனிதன் இவன் கற்ற கல்வியை கொண்டு கணிக்கப்படுவதுபோலவே ஒரு சமூகமும் தன்னகத்தே கொண்டுள்ள கல்வி மான்களின் தொகையைகொண்டே கணிக்கப் படுகிறது. கல்விமான்களைக்கொண்ட ஒரு சமூக மாகவும் எதிர்கால தூண்களாகவும் இருக்க வேண்டிய இளையோரின் கல்வியானது மாண்டு போகாமல் மீண்டும் உயிர்பெற வேண்டியது கட்டாயமாகும். காலத்தின் தேவை உணர்ந்து பிள்ளைகள், பெற்றோர், பெரியோர் நலன் விரும் பிகள் கல்வியின் பால் ஈடு கொண்டு இனிவரும் சமூதாயங்களாவது கல்விமான்களை கொண்ட ஒரு சமூகமாக மாற ஆக்கப்பூர்வமான நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டும். ஒரு இனத்தை அழிப்பதற்கு ஆயுதம் தேவையல்ல அதன் கலாசா ரத்தை அழித்தாலே போதும். இதனையும் புரிந்து கொள்ள ஞானம் வேண்டும்.

இன்று இளையோர்கள் எதிர்நோக்கு கின்ற பிரச்சனைகள், இளையோர் எதிர்நோக்க வேண்டிய பிரச்சனைகள் இளையோர் எதிர் காலம் மட்டில் அக்கறை கொள்ளவேண்டியோர் அறிய வேண்டிய பிரச்சனைகள் பற்றி பார்த் தோம். இவற்றில் பல பிரச்சனைகள் தீர்க்க கூடியதாகவே இருக்கின்றது. ஆயினும் சில பிரச்சனைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப் படுபவையாக அமைகின்றன. சிந்திக்கின்ற ஆற் றல்களை மழுங்கடிக்க கூடியதாகவும் கலாசா ரத்தை சிதைவுறச் செய்யக் கூடிய நிகழ்வுகளை இலாபகரமாக ஒழுங்கமைத்து நடைமுறைப் படுத்துவதையும் நாம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இயலுமானவரை சிந்தனை வளங்கள் சிதைவுற்று போகவும், இயற்கை வளங் கள் அழிவுற்று போகவும் இலைமறை காயான நிகழ்வுகள் திட்டமிட்டு அரங்கேறுவது யாவரும் அறிந்ததே. வரட்டு கௌரவம் பார்க்கும் பெரி யோரும், பணம் படைத்த முதலைகளும், மேலும் இப் பிரச்சனைகளுக்கு தூபம் போடுகின்றனர். இவர்கள் வழங்குகின்ற ஒவ்வொரு ஒத்துழைப்பும் அவர்களுடைய கௌரவத்தையும் பரம்பரைப் பணத்தினையும் பரம்பரை பரம்பரையாக பறை சாற்றுவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

எது எவ்வாறாயினும் எம்முடைய எதிர் கால சந்ததி ஒரு தனித்துவமான வாழ்க்கையை வாழ்வதற்கு இன்றைய இளையோரின் பங்க ளிப்பு காத்திரமானதாக அமையவேண்டும். அப் படி நிகழவேண்டுமாயின் ஆன்மீகம் மட்டில் இளையோரின் நாட்டம் அதிகரிக்க வேண்டும். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. எனவே கடவுளின்பால் நம்பிக்கை வைத்து எம்முடைய இளையோரை அர்ப்பணிப்பதன் மூலமே எதிர் காலம் பயனுள்ளதாக அமையும். “கணினியின் சக்தியால் கடவுளை நெருங்க முடியாது”. என்ற பாப்பரசரின் செய்திக்கமைய இறைவனுடன் இணையும் பட்சத்திலேயே எம்முடைய எதிர்கால சந்ததி ஆரோக்கியம் உள்ளதாக அமையும். ■



## புதுமைகள் கண்டோம்

புதுமைகள் கண்டோமே யாகப்பரே
பதிகொண்ட குருநகர் மண்ணினில்

சரணம்

நள்ளிரவில் பிரகாசமான ஒளியில்
நிறைவேறிய திருப்பலி கண்டோம்
வெளித்தெரிந்த விரலின் அடையாளங்கண்டு
புதையுண்டவர் மீட்டிடக் கண்டோம்
(புதுமைகள்...)

பூட்டியகதவு திறந்து மூடிடுமொலி
பூசை மணிகளும் கேட்டோம்
அடிக்கடி குதிரையின் குளம்பொலி
அடித்திடும் சவுக்கொலி கேட்டோம்
(புதுமைகள்...)

கொள்ளைநோய் கண்டவேளை வீதியில்
குதிரையில் செல்வதைக் கண்டோம்
உள்ளகக் கூரையிலிருந்து வீழ்ந்தவன்
உயிருடன் எழுந்ததைக் கண்டோம்
(புதுமைகள்...)

விமானக் குண்டுத் தாக்குதலால்
வீழ்ந்த சுவர்கற் குவியலுக்குள்
சிக்குண்ட கல்லறை ஆண்டவர்
சேதமற்று இருந்ததைக் கண்டோம்
(புதுமைகள்...)

# குருநகரின் பொருளாதார வளர்ச்சி – ஒரு நோக்கு



கொ. ஜெகன் (ஜெகசுதர்)

### அறிமுகம்

அழகிய இலங்கைத் தீவின் அழகிய நகரமாகிய யாழ் மண்ணின் புகழ்பூத்த கரையோரக் கிராமங்களில் ஒன்று குருநகர் கிராமம் ஆகும். இது குருகுல மக்களின் பூர்வீகம், அவர்களது செழிமைமிக்க வரலாறு, சிறப்பான வாழ்வியல் விழுமியங்கள், போரும் – அரசியலும் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு இசைவாக அவர்கள் மேற்கொண்ட பொருளாதார முயற்சிகள், ஆட்கொண்ட சிறப்புகள், காற்றை, சீறிப்பாயும் கடலலையை தகர்த்தெறிந்து செல்பவர்கள் குருநகர் மக்கள். மனதாலும், உடலாலும், ஆன்ம பலத்தாலும் தம்மை வெல்ல எவரும்மில்லை என்ற இறுமாப்போடு வாழும் இம் மக்கள் தமது பொருளாதாரத்திலும் சளைத்தவர்கள் அல்லர்.

பொருளாதாரம் என்பது நாட்டின் அறியப்பட்ட பொருளாதார அமைப்பையோ அல்லது இதர நிலப்பகுதியையோ கொண்டுள்ளது. அப்பகுதியின் சமூக ரீதியாக உற்பத்தியில், பரிமாற்றத்தில், விநியோகத்தில் மற்றும் பொருட்கள், சேவைகளின் நுகர்வில் பங்கேற்கும் பொருளாதாரக் காரணிகளையும் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பொருளாதாரம் என்பது அதன் தொழில் பரிணாமம், வரலாறு, மற்றும் சமூக அமைப்பில் அடங்கியுள்ள ஒரு வழிமுறையின் இறுதி விளைவுகளையும், அதேபோல் அதன் இயற்கை வளக்கொடை மற்றும் சூழல் ஆகியவற்றையும் முக்கிய காரணிகளாக உள்ளடக்கியுள்ளது. இத்தகைய காரணிகள் ஒரு பொருளாதாரம் செயல்படும் இடத்தில் சூழல், உள்ளடக்கம் மற்றும் பொருளாதார நிலைகள் மற்றும் அளவீடுகள் ஆகியவற்றை கொடுக்கின்றன. முற்றும் வணிக செயல்முறை அறிவியல், மற்றும் நிதி வரை விரிந்துள்ளன. அனைத்து தொழில்கள், வேலைகள், பொருளாதாரத்திற்கு பங்களிக் கின்றன. இக் கிராமத்தின் இதயமாக கருதப்படும் பொருளாதாரத்தை நோக்குவோமா யின் அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. இக்கிராமத்தின் வளர்ச்சியில் பொருளாதாரம்
2. பொருளாதாரத்தை ஊக்குவிக்க உதவிய காரணிகள்
3. இன்றைய பொருளாதார வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இங்கு 90% மான மக்கள் கடற்தொழிலை தமது பூர்வீகத் தொழிலாக கொண்டுள்ளனர். இக் கிராமத்தில் கடல் என்பது பாரிய வளமாக இம் மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதனால் பலர் இத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். மற்றும் 5% மான மக்கள் பிற தொழில்களை கொண்டுள்ளனர். இவர்கள் இத் தொழிலை தனித்தனியாகவும், கூட்டாகவும் செய்து வந்தனர். இவர்கள் தமது அறிவினை கொண்டும், பலத்தைக் கொண்டும் பல தொழில் வடிவங்களை உருவாக்கிச சிறுசிறு தொழில்களாக மேற்கொண்டு தமது வருமானத்தை

பெருக்குவதோடு தொழில் வளங்களையும் பெருக்கிவந்தனர். மீன்பிடித் தொழிலைக்கொண்டு குழுமங்கள் பிரிக்கப்பட்டாலும் 75 அடி நீளமான தோணிகளைக்கொண்டு மீன்பிடி அல்லாத தொழில்களையும் செய்து

இவர்களின் தொழில்களை பொறுத்த மட்டில் ஒவ்வொரு தொழிலும் பல நுணுக்கங்களைக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. சிறு கடலையே தமது உழைப்பின் உறைவிடமாகக் கொண்டு சிறுதொழில்களான கரவலை, தூண்டில், கைத்தூண்டில், பாச்சுவலை, கொண்டோடி வலை போன்ற தொழில்களை தமது வருமானத்திற்கு ஏற்ற வகையில் தொழில் துறைகளில் வளர்ச்சி கண்டனர். இக்காலகட்டத்தில் வறுமையும் மேலேங்கிக்காணப்பட்டது. ஆனாலும் அன்றாட வாழ்வியலோடு இவர்களின் வாழ்வு ஓடிக்கொண்டிருந்தது. இக் காலகட்டத்தில் குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது.

## குருநகர் கிராமத்தின் வளர்ச்சியில் பொருளாதாரம்

அன்றைய காலகட்டங்களில் ஒரு கூட்டுக்குடும்ப வாழ்கையை பலர் நடத்திவந்துள்ளனர். இதன்

நிறைவாக காணப்பட்டது. இதன் இன்னுமோர் வளர்ச்சிப்படியாக 1950 இல் பக்கிரி சின்னத்துரை அவர்களால் முதன் முதலாக சிறிய தோணிக்கு உள்ளிணை இயந்திரம் பொருத்தப்பட்டது. 1955 இல் தோணியின் அமைப்பிலிருந்து மாறுபட்ட அமைப்பைக் கொண்ட படகு ஸ்ரனிஸ்லோஸ் அவர்களால் முதன் முதல் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக சில பழைய தொழில்களுக்கும், புதிய தொழில்களுக்கும் இயந்திரப்படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு தோணி, வள்ளம், படகு என்பன பயன்படுத்தப்பட்டன.

கிளம்பின. 1977 இல் அருள்பணி F.J. ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாரின் முயற்சியால் பல றோளர் தொழில்கள் உருவாகியபோது, அதனால் அதிக வருமானம் பெறப்பட்டபோது எதிர்ப்புகள் கைவிடப்பட்டன. இதற்கு குருநகர் கடற்தொழில் அபிவிருத்தி சங்கத்தின் பங்கு கனிசமானது.

தொழிற் பயிற்சிகளை வெளிநாட்டு நிறுவனங்கள் இலவசமாக வழங்கியது. இதனுடாக எமது பல இளைஞர்கள் தொழிற் பயிற்சியினையும் பெற்றனர், புதிய அமைப்பிலான படகு, இயந்திர அமைப்பு நவீனத்துவமான தொழில் அமைப்பு நவீன தொழில்களால் பெறப்பட்ட அதீத வருமானம் அனைவரையும் பெரிதும் ஈர்த்தது.

இக் காலகட்டத்திலும் சிறு தொழில் முயற்சிகள் கைவிடப்படவில்லை. இம் மக்கள் தனியே கடற் தொழிலை மட்டும் நம்பியிருக்கவில்லை காலத்திற்கு ஏற்ப பல தொழில் முயற்சிகளில் குறிப்பாக

இறக்குதல், ஏற்றுதல் என பல தொழில்களை அறியவும் அதனுடாக சுயமாக தொழில் செய்யவும் பழகிக்கொண்டனர். இதனுடாக குருநகரில் வேலை இல்லாப் பிரச்சனை ஒரளவு குறைக்கப்பட்டது. அதனுடாக பல புதிய புதிய வடிவமைப்புடன் ஓலை குடிசைகளாக இருந்த வீடுகள் கல் வீடுகளாக மாற்றப்பட்டன.

## பொருளாதாரத்தை ஊக்குவிக்க உதவிய காரணிகள்

ஆரம்ப காலங்களில் பெண்கள் வேலைக்கு செல்வது குறைவாக காணப்பட்டது. பின்னைய காலங்களில் தாமே கடற்கரைக்கு சென்று மீன் வியாபாரத்திலும், தமது உறவுகளுக்கு உதவுவதுமாக இயங்கு நிலையில் காணப்பட்டனர். பின்னர் பலசரக்கு கடைகளை நடத்துதல், துணிவியாபாரம், சீட்டு பிடித்தல், தையல், சுய தொழில் போன்ற தொழில் துறைகளில் முன்னேறினர். அது மட்டுமல்லாது கடலுணவு சேகரிக்கும் நிறுவனங்களுக்கு சென்று கடலுணவுகளை தரம்பிரித்தல் போன்ற தொழில்களில் நிபுணத்துவம் பெற்று விளங்குவதோடு பாரிய வருமானங்களையும் பெற்றனர். இவர்கள் சம்மாட்டி,



குத்தகைக்காரர்கள், தொழிலாளி என வகை பிரிக்கப்படிருந்தது. இதில் சம்மாட்டி என்பவர் தொழில் உபகரணங்களிலிருந்து பணம் வரை உரிமை உள்ளவராய் இருப்பார். குத்தகைக்காரர் மீன்களை விலை கூறி விற்போனாய் இருப்பார், தொழிலாளி தொழில் உபகரணங்களுடன் கடலில் சென்று மீன்பிடிப்போனாய் வலம் வருவார்.

சில சடங்குகளூடாகவும் தமது வருமானத்தை இம் மக்கள் பெருக்கி வந்துள்ளனர் இதில் குறிப்பாக 'அற்றோம்'. இது ஒருவருக்கொருவர் உதவுவதை, பகிர்தலை அடிப்படையாகக் கொண்ட ஒரு சம்பிரதாய நிகழ்வாகும். ஆரம்பத்தில் இதை ஒரு 'பணச்சடங்கு' என்பர். இதற்கு இடப்படும் பணமாணது ஒரு வட்டியில்லாக் கடனாகும். இந் நிகழ்வினை தொடர்ச்சியாக ஒருவர் மாறி ஒருவர் நடத்துவார்கள். இதில் வரும் வருமானத்தை பல தொழில் முதலீடுகளுக்கு இடுவர். இச் சடங்கு இன்றும் நடைமுறையில் உள்ளது. அடுத்து சீட்டு போடுதல் இது மறைமுகமாக நடைபெறும் வட்டியுடனான பணச்சடங்காகும். இச் சடங்கினில் இணைபவர் மாதம் மாதம் வட்டிப்பணம் கட்ட வேண்டும். இறுதியில் அருக்கு பேசப்பட்ட தொகை வழங்கப்படும். பொருட்களுக்கான சீட்டு, உடைகளுக்கான சீட்டு என பல தரத்தில் இதை நடைமுறைப் படுத்துகின்றார்கள் இதனால் பலர் வருமானத்தையும் ஈட்டியுள்ளனர்.

20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட யுத்தம், இயற்கை அனர்த்தம் காரணமாக தத்தமது வசதிற்கேற்றவாறு பல இடங்களுக்கு சிதறுண்டு குடியேறி வாழத்தொடங்கின. இதன் காலகட்டத்திலே புலம் பெயர்ந்து பல நாடுகளுக்கும் எம் மக்கள் குடியேறி வாழத் தொடங்கினர் இதனுடாக இக் காலகட்டத்தில் பொருளாதாரம் குருநகரில் பாரிய வீழ்ச்சி கண்டது. இதனால் இக் கிராமத்தில் வறுமை மேலோங்கிக்காணப்பட்டது. குடிசனப் பெருக்கம், உத்தியோக வசதி, பண படைத்தமை, கௌரவம் பார்த்தல், விலகி வாழ்வதில் உள்ள விருப்பம் போன்ற காரணிகளால் இம் மக்களிடத்தில் பொருளாதாரம் சற்று ஆட்டம் கண்டது.

### இன்றைய பொருளாதார வளர்ச்சி

குருநகரின் இன்றைய பொருளாதார வளர்ச்சியை நோக்குவோமாயின், இன்று பல குடும்பங்கள் தனித்து படகுகளை கொள்வனவு செய்து, சுயமாக இயங்குவதை காணமுடிகின்றது. யுத்த முடிவின் பின்னர் நைலோன், றோளர் போன்ற ஆழ் கடல் தொழில் புரிவதற்கான அனுமதி கொடுக்கப்பட்ட பின்னர் குருநகர் மக்களின் வாழ்வியலில் மீண்டும் ஒரு பொற்காலம் தோன்றியது என்றே குறிப்பிடலாம். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இக் காலகட்டத்தில்தான் மீன்வளம் அதிகமாகவும் காணப்பட்டது. இதில் ஏ9 வீதி திறப்பின் ஒரு திருப்பமாக மீன்கள் பதனிடப்பட்டும், மீன்கள் குளிரூட்ப்பட்டும் இராணுவ அனுமதியோடு கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ் ஏற்றுமதிகள் இன்றும் நடைபெறுகின்றது. இதற்கு முக்கிய பங்காற்றியதில் யாழ். மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

கடலில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீன்களை பதனிடுவதற்கு குருநகரில், பிரதான வீதி பனிக்கட்டி உற்பத்தி நிலையம், யாழ் மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன பனிக்கட்டி உற்பத்தி நிலையம், குருநகர் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாக மீன்களை பாதுகாத்தல், பதனிடல், மறுநாள் விற்றல் என்பன இலகுவாக்கப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக மீன்பிடி உபகரணங்களை தாமே தமது ஊருக்கு உருவாக்கி வழங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு முதன் முதலாக 'இலங்கை - நோர்வே' அபிவிருத்தி திட்டத்தின்கீழ் குருநகர் வலைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்றின்று உழைத்தவர் திரு. அன்ரனி வின்சலோஸ் இராசேந்திரம். இத் தொழிற்சாலை ஊடாக பல கடற்தொழிலுக்கான வலைகளை இலகுவாகக் கொள்வனவுசெய்ய முடிந்தது. இதனால் பல அனுகூலங்களை அவர்களால் அடைய முடிந்தது. இன்றும் இயங்கும் இத் தொழிற்சாலை அரசியல் காரணங்களால் பெயர் மாற்றப்பட்டு 'வடகடல் வலைத் தொழிற்சாலை'யாக உருமாற்றப் பட்டுள்ளது. மேலும் ஒரு வலைத்தொழிற்சாலை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினரால் நடத்தப்படுகின்றது. 'வடகடல் வலை உற்பத்தி நிலையம்'. எனப் பெயரிடப்பட்டுள்ள இந் நிலையமானது குருநகர் மக்களும், எனைய கடற்தொழில் சமூகமும் பயன் பெறும் நோக்கோடு இங்கு அமைக்கப் பட்டுள்ளது. இனை இங்கு அமைப்பதற்கு அரும்பாடுபட்டவர் அருத்தந்தை ஜெயசேகரம் ஆவர். இதனுடாக இன்று எம் ஊரின் பலர் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**1. குருநகர் கிராம சேவகர் பிரிவு உட்பட்ட சனத்தொகை அடர்த்தி விபரம்**

| கி. சே. பிரிவு | அடர்த்தி | நிலஅளவை (*Sq.Km*) | சாராசரி (*Sq.Km*) | |
|---|---|---|---|---|
| J/68 றெக்ளமேசன் கிழக்கு | 4681 | 0.200 | 23405.00 | |
| J/69 றெக்ளமேசன் தெற்கு | 4108 | 0.177 | 23209.04 | |
| J/70 குருநகர் கிழக்கு | 2187 | 0.166 | 13174.70 | |
| J/71 குருநகர் தெற்கு | 1739 | 0.104 | 16721.15 | |
| J/72 சின்னக்கடை | 1002 | 0.127 | 7889.76 | |

**2. குருநகர் கிராம சேவகர் பிரிவு உட்பட்ட சனத்தொகை 2006 -2010**

| கிராம சேவகர் பிரிவு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | |
|---|---|---|---|---|---|---|
| J/68 றெக்ளமேசன் கிழக்கு | 4530 | 3739 | 3899 | 4681 | 5200 | |
| J/69 றெக்ளமேசன் தெற்கு | 4984 | 4108 | 3608 | 4108 | 4300 | |
| J/70 குருநகர் கிழக்கு | 2357 | 2125 | 2428 | 2187 | 3100 | |
| J/71 குருநகர் தெற்கு | 2092 | 1841 | 1844 | 1739 | 1900 | |
| J/72 சின்னக்கடை | 1126 | 854 | 1163 | 1002 | 1020 | |

**3. குருநகர் கிராம சேவகர் பிரிவு உட்பட்ட வரவு -2010**

| கிராம சேவகர் பிரிவு | வருமானம் <2500 | வருமானம் 2500-5000 | வருமானம் 5000> | |
|---|---|---|---|---|
| J/68 றெக்ளமேசன் கிழக்கு | 1200 | 70 | 75 | |
| J/69 றெக்ளமேசன் தெற்கு | 1000 | 52 | 48 | |
| J/70 குருநகர் கிழக்கு | 710 | 513 | 300 | |
| J/71 குருநகர் தெற்கு | 375 | 80 | 175 | |
| J/72 சின்னக்கடை | 275 | 25 | 43 | |

**4. குருநகர் கிராம சேவகர் பிரிவு உட்பட்டோரின் கல்வித்தகமை -2009**

| கிராம சேவகர் பிரிவு | G.C.E O/L | | G.C.E A/L | | பட்டதாரிகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | MBBS | | B.Sc (Scienc) | | B.Sc (Maths) | | B.A | | B.Com & B.B.A | | Dip & others | |
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| J/68 றெக்ளமேசன் கிழக்கு | 6 | 8 | 5 | 6 | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| J/69 றெக்ளமேசன் தெற்கு | 144 | 155 | 75 | 80 | - | - | 1 | 1 | 2 | 1 | 6 | 8 | 2 | 2 | 4 | 3 |
| J/70 குருநகர் கிழக்கு | 60 | 85 | 50 | 75 | - | - | - | - | 1 | 2 | 5 | 7 | 3 | 1 | 5 | 10 |
| J/71 குருநகர் தெற்கு | 305 | 302 | 212 | 180 | 2 | - | 3 | 2 | 1 | - | 12 | 9 | 6 | 5 | 5 | 7 |
| J/72 சின்னக்கடை | 25 | 40 | 6 | 15 | 1 | - | 1 | - | - | - | 2 | 3 | 1 | - | - | - |
| தொகை | 540 | 590 | 348 | 356 | 3 | | 5 | 3 | 4 | 3 | 25 | 27 | 12 | 8 | 14 | 20 |

**5. மீன், கருவாடு உற்பத்தி 2001 - 2010**

| ஆண்டு | மீன் உற்பத்தி Kg | கருவாடு உற்ப்பத்தி Kg |
|---|---|---|
| *2001* | *459376* | # |
| *2002* | *181631* | *11496* |
| *2003* | *2922467* | *108680* |
| *2004* | *2942322* | *50150* |
| *2005* | *4097808* | *49500* |
| *2006* | *2568770* | *209300* |
| *2007* | *552500* | * |
| *2008* | *374030* | *17780* |
| *2009* | *3331864* | *78363* |
| *2010* | *6098720* | *309300* |

**6. மீன்பிடி உபகரணங்கள் -2011**

| | |
|---|---|
| பைபர் போட்டுகள் | - 125 |
| பைபர் கிளாஸ் போட்டுகள் (இயந்திரம்) | - 373 |
| பைபர் கிளாஸ் போட்டுகள் | - 30 |
| வள்ளம் (இயந்திரம்) | - 255 |
| வள்ளம் | - 314 |

**7. குருநகர் கிராம பிரிவுக்கு உற்பட்ட வாகனங்களின் விபரம் - 2010 (அண்ணளவாக)**

| கி. சே. பிரிவு | கார் | முச்சக்கர வண்டி | மோட்டார் சைக்கிள் | சைக்கிள் | மினி பஸ் | லோறி | இருசக்கர ரைக்டரர் |
|---|---|---|---|---|---|---|---|
| J/68 றெக்ளமேசன் கிழக்கு | 1 | 10 | 135 | 755 | | | |
| J/69 றெக்ளமேசன் தெற்கு | 4 | 6 | 240 | 762 | | | |
| J/70 குருநகர் கிழக்கு | 4 | 10 | 75 | 720 | | 5 | |
| J/71 குருநகர் தெற்கு | 3 | 3 | 65 | 385 | 1 | | |
| J/72 சின்னக்கடை | 2 | 3 | 15 | 154 | | | 1 |

*21 ஆம் நூற்றாண்டிலே ஜீவனோபாயத் தொழிலான கடற் தொழிலை மட்டும் நம்பாது கல்வியில் பாரிய முன்னேற்றம் காட்டி பலர் அரச உத்தியோகத்தில் இணைக்கப்பட்டனர். அரச சார்ப்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என குருநகர் வரலாறு காணாதா பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டது. குறிப்பாக புலம் பெயர்ந்த மக்கள் எமது பொருளாதார வளர்ச்சியின் இன்னுமொர் படியினர் ஆவர். இவர் அங்கு இருந்து கொண்டே பல தொழில் வாய்ப்புகளுக்கு நிதி உதவி அளித்து வருகின்றனர். பல இலவச தொழிற் கற்கை நெறிகளையும், கல்விக்கழகங்களையும் நடத்தி எமது பொருளாதாரத்திற்கு வித்திடுகின்றனர்.*

*இன்றைய காலகட்டத்தை பொறுத்தமட்டில் குருநகரின் பொருளாதாரம் ஏற்றத்தாழ்வு நிலையை அடைந்துள்ளது. காரணம் பல ஆழ்கடல் தொழில்கள் மறிக்கப்பட்டுள்ளன. பல பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடுக்கின்றனர், எமது ஊருக்குள் வேறு தொழிலாளர்களின் வருகை குறிப்பாக கடற்தொழில், கட்டடத் தொழில், தச்சுத்தொழில். இப்படியான தொழில்களின் வருகையால பல குடும்பங்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைகின்றது. அன்றே உழைத்து அன்றே தமது சீவியத்தை போக்குபவர்கள் பலர் காணப்படுகின்றனர். அந்தவகையிலே இப்படியான வருகைகள் ஒரு சவாலாக காணப்படுகின்றது. அடுத்து கடலில் மீன் வளங்கள் அரிதாகக் காணப்படுவதாலும் இப்படியான சவால் நிறைந்த காலம் நீண்டு செல்லுமானால் குருநகர் மக்களின் பொருளாதாரம் இனிவரும் காலங்களில் கேள்விக்குறியாகவே காணப்படும்.* ■




1989 ஆம் ஆண்டு அருள்தந்தை பி.எம். இம்மானுவேல் அவர்களால் குருநகர் யாகப்பர் ஆலய இளைஞர் மன்றமும், குருநகர் யாகப்பர் ஆலய மகளிர் மன்றமும் உருவாக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு அருட்தந்தை எம்.வி.இ.ரவிச்சந்திரன் அவர்களால் குருநகர் இளைஞர் மன்றம் என்ற பெயரிலிருந்து 'குருநகர் யோசவ்வாஸ் இளைஞர் மன்றம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இம்மன்றமும், மகளிர் மன்றமும் இணைந்து குருநகர் மண்ணின் கலை, கல்வி, கலாசாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு கோணங்கள் தமது அளப்பரிய சேவைகளை எம் மண்ணுக்கு வழங்கியிருந்தன.

இம் மன்றங்கள் தமது சேவைகளை பல்வேறு கோணங்களில் முன்னெடுத்து வந்தவேளை யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு ரீதியாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதற்காக இளைஞர்களும், யுவதிகளும் ஒன்று சேர்ந்து போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்காக இரு பாலாரையும் சேர்த்து இளையோர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. இது ஆணைக்குழு ரீதியில் நடாத்தப்பட்ட பல போட்டிகளில் பங்கெடுத்து பல்வேறு இடங்களை தட்டிச் சென்றதுடன் இப்போதும் பல இடங்களைத் தட்டி செல்கின்றது. யாழ். மறைமாவட்ட ரீதியிலே அதன் வளர்ச்சி மேலோங்கியும் காணப்படுகின்றது. இதன் மூலம் யாழ். மறைமாவட்ட ரீதியிலே முன்னிலை வகித்த எமது பங்கின் இளையோர் ஒன்றியம் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை இலங்கையின் கரையோர பகுதிகளையுந் தாக்கிய வேளை எமது ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக உணவுப்பொதிகள், உடைகள், போன்றவற்றை சேகரித்து உதவியதுடன் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் தம்மால் இயன்ற பணிகளை மேற்கொண்டார்கள். அத்தோடு 2006ஆம் ஆண்டளவில் மக்கள் குண்டு வீச்சுக்கு அஞ்சி எமது ஆலயத்தில் தஞ்சம் அடைந்த வேளையில் மேலும் அவர்கள் பொருளாதார ரீதியாக முடக்கப்பட்டிருந்த வேளையிலும் எமது ஒன்றியம் மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்காக ஆலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த மக்களுக்கு காலை உணவுகளை வழங்க ஏற்பாடு செய்ததுடன் குறைந்த விலையிலே அரிசியைக் கொள்வனவு செய்து அதனை மக்களுக்கு வழங்கியது. அத்தோடு 2008ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்து வன்னி பெருநில பரப்பிலே மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்த வேளை எமது ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் இணைந்து வலயரீதியாக விதியோரங்களில் மெழுகுதிரிகளை ஏந்தி பிராத்தனைகளில் ஈடுபட்டனர். அத்தோடு 2008 ஆம் ஆண்டு தவக்கால நிகழ்வுகளின் ஓர் அங்கமாக எமது ஊரில் இளையோரை இணைத்து மூன்று நாள் தவக்கால தியானத்தை பண்டத்தரிப்பு இறைதியான இல்லத்திலே ஏற்பாடு செய்திருந்தது. இதன் மூலம் பல இளைஞர்கள் ஆன்மீக விழிப்புணர்வு பெற்றிருந்தனர் என்பது அவர்களோடு கலந்துரையாடியபோது அவதானிக்க கூடியதாக இருந்தது.

அத்தோடு எமது ஒன்றியமானது திருவிழா நாட்களில் ஆலய துப்பரவு அலங்கரிப்பு வேலையில் ஈடுபடுவதுடன் ஆலயத்தினை மின் விளக்குகளால் அலங்கரித்து மென்மேலும் அழகூட்டியது. தற்போது எமது ஒன்றியமானது ஆலயத்தின் மெழுகுவர்த்திக் கடையை பொறுப்பெடுத்து நடாத்துவதுடன் திருமண நாட்களலே ஆலய அலங்கரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது. மேலும் எமது ஒன்றியம் உயிர்காக்கும் உன்னத பணியான இரத்ததான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதுடன் இரத்ததானத்தின் அவசியத்தையும் உணர்த்தி வருகின்றது.

அத்துடன் எமது மன்றம் பல போட்டிகளை நடத்திவருவதுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கி வருகின்றது. மேலும், எமது சமூகத்தின் வளர்ச்சியிலே எமது ஊரின் ஒவ்வொரு இளைஞனினதும் யுவதியினதும் பங்கு மிகவும் ஆரோக்கியமானதாகவும் அமைய வேண்டும். எனவே நல்லதோர் சமூதாயத்தை கட்டி எழுப்ப 'இன்றைய இளையோர் நாளைய சமூகத் தலைவர்கள்' என்பதற்கிணங்க ஊரில் உள்ள ஒவ்வொரு இளையோரையும் எம்மோடு கைகோர்க்க அழைக்கின்றது.

கிறிஸ்துவில் இளையவனே எழுந்து சுடர்விடு
இறையரசு கட்டுமானத்தில்
சாதனைகள் படைத்திடு.

செயலாளர் ■

# மரணவீடுகளில் பாடப்பட்ட ஒப்பாரி இலக்கியம்

# அன்னை அழுங்கல் ஒப்பாரி

குருநகர் மக்களின் மரணவீடுகளில், பல ஒப்பாரி இலக்கியங்கள் பாடப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் பண்டுதொட்டு பாடப்பட்ட ஒப்பாரியாக 'அன்னை அழுங்கல் ஒப்பாரி' காணப்படுகின்றது. தற்போது ஒப்பாரி பாடும் முறை குருநகரில் இல்லாதொழிந்துள்ள போதிலும், அழிவுற்றுப்போகும் நிலையிலுள்ள பண்டைய ஒப்பாரி இலக்கியங்களை அழியாது காக்க வெளிக்கொண்டுவரும் பணியாகவும், இன்றையோர் பண்டைய இலக்கியத்தை படித்தறிந்துகொள்ளும் நோக்கமாகவும் இம் மீள்பிரசுரம் அமைகிறது.

இவ் இலக்கியத்தை 'அந்திரேஸ்பிள்ளை' அவர்கள் ஆக்கியுள்ளார். மீள்பதிப்பாக 16.12.1938 இல் வெளிவந்துள்ளது.

### காப்பு வெண்பா

தந்தை மடியொருவித் தாரணியி லேமனுவாய்
வந்து திரஞ்சிந்தியொரு வன்மரத்தில் - நிந்தையுறத்
துஞ்சியெமை மீட்டபர தூயவரு ணுதனிணைக்
கஞ்சமலர்ச் செஞ்சரணே காப்பு.

### வேறு வெண்பா

மாதா மடியிலரு மாமகனை நீள்சிலுவை
மீதா லிறக்கியவர் மெல்லவைத்தார் - மாதாவுஞ்
சோகமுஞ் சற்றேதெளிந்தாள் சோதியுருவான திரு
ஆகமதைக் கண்டேங்கி னாள்!

கட்டியரவணைத்தாள் கன்னமதை முத்தமிட்டாள்
பட்டதெல்லாஞ் சொல்லிப் பரதவித்தாள் - மட்ட
டங்காக் கண்ணீர் சொரிந்தழுதாள் காயமெலாந்
தான்றடவி அண்ணாந் தபயமிட்டாள் ஆ!

இப்பாலா யொப்பரிய என்மகனே! என்றலறி
ஒப்பாரி சொன்னவித மோதுவமேல்-இப்பாரில்
ஆருருகா ராரிளகா ரார்கலுழா ராருளரோ
ஆருலகி வீரமிலார் ஆ!

பாரவரே வாரும் பனிவரையின் மீதுதுய
ராரனையின் பேரழுங்க லரற்றிடவே-காரணனும்
மாகடின வாதையொடு வல்லுயிரைத் தான் விடுக்க
ஆகடியஞ் செய்தனரே ஆ!

நீதற் குலகிலிந்த நிட்டூரஞ் செய்தவரை
ஆதனென்றும் யூதரென்று மாக்காதே-மாதத்
துவரவரென் றெண்ணாவன் தோஷம் புரிந்த
தவரன்று நாமென் றறி.

காயாதி யாவுங் கணத்தளித்த கத்தனுடை
நேயா நிமல திருச்சுதனே-தீயாரும்
பூவி லுமக்கிந்தப் புன்கோட்டி செய்ததுவோ
பாவிநான் செய்த பவம்.

### ஒப்பாரி

சீர்வயங்கு மென்புதல்வா - உந்நத
தேவாதி தேவமைந்தா சேணொருவி வந்தமைந்தா
ஏவாளின் சந்ததிக்காய் -மகனே
ஈண்டுபிணைப் பட்டனையோ 1

கார்வயங்குஞ் செங்கதிரே - என்னுடை
கான்முளையே தான்முதலே காரணத யாபரனே



வான்புதவர் தான்றிறக்கப்-பாரினில்
வந்தனையோ வென்மகனே 2

ஞாலமுத லாகியிப்போ - தொரு
நாலாயிரம் வருடம் நானிலத்தார் காத்திருந்த
சீலாவித் துன்புற நீ - ஏவை
செய்வினையை யோடிகொடிதே! 3

மாலருளான் றன்சுதனே - என்னுடை
மாசில்லா நாயகமே மாணிக்கவை டூரியமே
ஆசெல்லாந் தீர்த்துயிரை - மீட்டிங்
காட்கொளவோ வந்துதித்தாய் 4

ஈறாதி யற்றபரா - அன்று நீ
இப்புவியி லற்புதமா யென்னுதரத் தேயுதிக்கச்
செப்பரிய தூதனுப்பி - எதற்கு நீ
செய்திசொல்லு வித்தனையோ 5

பேறான வென்மகனே - நானுனைப்
பெத்திலேக மாநகரிற் பெற்றெடுத்தென் னங்கையிலே
வைத்தமுத மீந்தணைத்துன் - திவ்விய
மாட்சியடைந் திட்டேனே 6

தன்னிகரில் லாமகனே - நானுன்னைச்
சலமோனி னாலயத்திற் றாவிக்கா ணிக்கைசெய்யச்
சிமியோ னுரைத்தசொல்லு - என்னுடை
சிந்தைதனில் வந்ததுவே 7

என்னிதயம் புண்ணாச்சே - முன்னுனை
ஏரோதன் கொல்லமன மெத்தனித்த போதிலொரு
காரா ரிரவிலுனைக் - கொண்டு
காதவழி சென்றேனே 8

கூனந்த வான்சுடரே - என்னுடை
கோணாக் குலக்கொடியே கோமகனே முத்தினமாய்க்
காணாது தேடியுனைக் - கோவிலிற்
கண்டுகளி கூர்ந்தேனே 9

ஆனந்தஞ்சேர் என்மகனே - இன்புட
னாங்குமுப்ப தாண்டுமட்டு மஞ்சுகம்போ லேவளர்த்துத்
தீங்குவர வொட்டாமல் - நானுனைச்
சேமமுடன் காத்தேனே 10

சோகமுற்றா யோகமகனே - முந்தையர்
சொன்மீறி யுண்டகனித் தோஷமறி வந்தவுனைப்
புன்கோட்டி செய்யவவர் - மகனே நீ
போந்தமனங் கொண்ட தென்னோ 11

ஆகமத்தி னுட்பொருளே - நேற்று நீ
ஆதரையோர்க் காய்மரிக்க ஆவல்கொண்டங் கென்னி
டத்தில்
ஓதியனு வாதங்கேட்க - வந்தநல்
லோவியமே சீவியமே 12

அண்டர்தொழு மம்பதனே - உன்னுட
னாங்கசன முண்டவரு ளானவொரு சீடனின்று
பாங்குசதி மானஞ்செய்வா - னென்று
பன்னினையோ முன்னவனே 13

கண்டுகளிப் பதெப்போ - முப்பது
காசுக்கு னைமதித்துக் காட்டிக் கொடுத்திடயூ
தாசுக்கி தயமொரு - வன்கற்
றானிகரோ வென்மகனே 14

ஓவியர்க்கெட் டாவடிவே - யூதாஸ்
ஓடியொ ருநொடியி லுள்விழுந்து விள்ளவிடந்
தேடியயூதர் குழாம் - ஆங்கதி
சீக்கிரத்திற் சேர்ந்ததுவே 15

பூவியக்கு மேகபரா - சிற்சிலர்
பொல்லெடுப்பார் கல்லெடுப்பார் போந்தக யிறுகசை
வில்லெடுப்பா ரல்லினிடை - யவரவர்
வீடெல்லா மார்ப்பரிப்பே 16

கூராயு தந்தொடுப்பார் - சிற்சிலர்
குற்றுகிறி சீட்டிவெடிக் குண்டுகுழற் கைத்துவக்குப்
பற்றியெரி தீபமெல்லாம் - அவரவர்
பாங்குடன்கைப் பற்றினரோ 17

ஓராயி ரங்கதிரோய்! - நேற்று நீ
ஒலிவமரச் சாரலிலோ ருத்தியானத் துட்புகுந்து
மலியுமிடர் தன்னையுள்ளி - மகனே நீ
வாட்டமுற்று வீழ்ந்தனையோ 18

தூண்டாம ணிவிளக்கே - என்னுடை
சொல்லின்சு வைப்பொருளே சோதிமய வாதவனே
தொல்லுலகோர் தம்பவத்தால் - அங்கு நீ
சோர்வடைந்து வீழ்ந்தாயோ 19

மீண்டாள்ப ராபரமே - ஆங்குறு
வெண்புளின மீதரிய மேனிதுயர் பட்டமுந்த
விண்ணமரன் வந்துனது - செந்நீர்
வேர்வைதுடைத் தாற்றினனோ 20

பாலூட்டி நான் வளர்த்த - வானுறு
பண்ணவர்க்குக் கிட்டரிய பாக்கியமே வீக்கொளியே
விண்ணிருந்து மண்ணிடைநீ - வந்தது
வேதனைக்கா ளாவதற்கோ 21

காலாட்கள் சேனையல்லோ - யூதசு
கட்டிய காரன்போலே கன்னெஞ்ச ரானவர்க்கு
முட்டியென் பின்னேவாரும் - நான்போய்
முடுகிமுத்தஞ் செய்வனென்றான் 22

கங்குலினன் னோன்விரைந்து - தன்னிரு
கைகுவித்துத் தெண்டனிட்டுன் கன்னமதில் முத்தமிட்டுத்
துய்யவனே வாழ்கவென்று - கபடகன்

சொல்லமனந் தாங்கினையோ 23

செங்கமலச் செம்பதனே – ஆங்கவர்
சிங்கம்போ லுன்னிற்பாய்ந்து சிக்கெனக்கை கால்கள் கட்டித்
தங்கமய வங்கமெலாம் – பாதகர்
தழும்பெழவாங் கடித்தாரோ 24

ஏராக்கு றைகூறி – ஐயோ!
எட்டியிழுப் பார்சிலரே ஏறிமிதிப் பார்சிலரே
தட்டிநகைப்பார் சிலரே – உலகிற்
றாயொரத்தி தாங்குவளோ 25

தீராத்து யர்க்கிடைமே – ஆண்டொளிர்
சீனா மலையில் நின்று செஞ்சுடரே வஞ்சகர்கொண்டு
ஆனாஸ்கைப் பாசனுடை – மகனே
அரண்மனையிற் சேர்த்தாரோ 26

கூடத்தே வைத்தடைத்தோ – உன்னுடை
கோதுசிகைக் கூந்தலெலாங் கோலியிழுத் தோலமிட்டு
வாதுமொழி சொல்லியுனை – ஆங்கவர்
வைதனரோ துய்யவனே 27

தேடத்தான் கிட்டாத – என்னுடை
செல்லத் திருமகனே தெய்வீக பூரணனே
அல்லற்ப டுத்தியையோ – உனையவ
ராகடியஞ் செய்தாரோ 28

கட்டுரைக்கக் கூடாதே – உன்னுடை
கண்ணிரண்டு மேலுகிலாற் கட்டியொட்டி நின்றுகுட்டி
நண்ணி நளினமுடன் – நின்றவர்
நட்டணைசெய் திட்டாரோ 29

கட்டழகே என்மகனே– உன்னுடை
கன்னத் தறைந்துதைத்துக் காறியுமிழ்ந் தேயுனது
சொர்னத் திருமுகத்தை – ஆங்கவர்
சோரிமய மாக்கினரோ 30

இராசாவே வாழ்கவென்பார் – நீயோ
எங்களையீ டேற்றவந்த வேகபர நாதன்நல்ல
மங்களமுண் டாகவென்று – ஆங்குனை
வாழ்த்தி நகைத்திட்டாரோ 31

இராநாலு சாமமுமாய் – என்னுடை
இன்சொற் றிருமகனே இம்பரும்பர்க் கோர்முதலே
இன்னற் படுத்தியங்கு – உனையவ
ரிக்கோல மாக்கினரோ 32

காலையாம் போதினிலே – மகனே
கட்டிய கட்டுடனே கைப்பாசா னாசன் வீட்டாற்
பெட்புடன் நட்டணையாய் – ஆங்கவர்
பிலாத்தரணை நோக்கினரோ 33

வேலைத்தி ரையடிபோல் – துர்ச்சனர்
விண்மண் ணதிரவந்து வேககோபங் கொதிக்கக்
கண்க வெரிநிகர்ப்ப – நின்றக்
காட்சிநவம் பாத்தாரோ 34

உலாத்துநடை யாய்நடத்தி – ஆங்குனை
ஊர்வலங்கொண் டேகியதி ஊக்கவுல் லாசசனர்
பார்பாரென நெளிப்பாயத் – தத்தம்
பற்கடிக் கலாயினரோ 35

பிலாத்து தலைவாசலிலே – என்னுடை
பேரழகே யூதர்குழாம் போராலியாய் ஆளரசே!
பாரதனி லாருமுண்டோ – இவன்போற்
பாதகன்பா ரென்றாரோ 36

தண்ணளியில்லாச் சனர்கள் – அன்றிறை
சாலோமோன் கட்டிவைத்த சன்னிதியைத் தானிடித்தோ
காலமா முத்தினத்துள் – மறுபடி
கட்டுவனோ வென்றாரோ 37

திண்புயச்சே சாரிறைக்கு – நன்கு
சேர்திறையைத் தான்மறுத்துத் தேவன்றா னென்றுரைக்கும்
ஊர்க்கலக வேற்றரசைக் – கொண்டிதோ
உன்சமுகம் வந்தோமென்றார் 38

நீதித்த லந்தனிலே –ஆங்கவர்
நின்றுன்னிற் குற்றமேற்றி நிச்சயமித் துர்ச்சனனைக்
கொன்றன்றி யுண்ணோமென்று – வெகுவாய்க்
கோரிக்கை கொண்டனரோ 39

ஓதிக்கு ரவையிட்டார் – யூதர்கள்
உன்னிற்சொல் குற்றமெல்லா மோர்ந்துபிலாத் துள்ளமதில்
என்னகுற்ற முண்டிவனில் – அறிகில
னென்றயர்வு கொண்டானே 40

நேரினர் தஞ்சபையில் – பிலாத்திறை
நீரோதுங் குற்றமொன்றும் நேரிசையா காததினால்
ஏரோத னண்டையிலே – உனைக்கொண்
டேகுமென வோதினனே 41

ஏரோதன் கண்டவுடன் – என்னுடை
ஏ தமில் லானேஉன்னை ஏலவே கேள்வியுற்றுக்
காதலுடனுன்னிடத்தில் – அற்புத
காரியங்கள் கேட்டானோ 42

சாந்தமாய் நிற்கையிலே –ஆங்குனைச்
சன்னைக்கிட மாக்கியொரு தவளத்து கிலையிட்டு
மன்னன்பி லாத்தனிடம் – உனையவன்
மறுபடியும் விட்டானே 43

ஏந்தலே யென்னுயிரே – பிலாத்துனை
எப்படியும் விட்டுவிட வெண்ணமுற்ற போதிலுந்தான்
தப்பவழி யற்றவனாய் – நின்றதி
சஞ்சலத்துள் ளாயினனே 44

மாதவமே என்மகனே – ஆண்டமர்

மட்டல்லாத் துட்டர்கொண்ட வன்பகைசற் றூறுமாறு
கட்டிய டிக்கவுன்னை - அவர்க்கவன்
கையளித்து விட்டானோ 45

காதகர்சந் தோஷமுற்றே - உன்னுடை
கைகாலி முத்தமுந்தக் கற்றூணிற் கட்டியுன்தன்
மெய்யினாற் குருதிசிந்த - ஆங்கவர்
வீறாய டித்தனரோ 46

வேதனைக்குள் ளானாயோ - உன்னுடை
மேதகும்புந் தாதையொத்த மேனித்து கிலுரிந்து
காதக யூதரையோ! - உன்மேற்
கசைவத்தாங் கடித்தாரோ 47

சாதனைக்கா ளானாயே - நீயுஞ்
சாடித்த கமையுற்றுத் தாங்கொணா வாதையுற்று
வாடியுன் மூச்சுமற்று - மகனே நீ
மண்ணோக்கி வீழ்ந்தனையோ 48

பெற்றெடுத்த பேறிதுவோ - ஐயோ!
பெருகிப் பரந்தவெள்ளம் பிய்த்தெறிந்த துங்கவங்கம்
குருதிக் குளத்திலிட்டே - உனையவர்
குளிப்பாட்டி விட்டாரோ 49

சற்றுமி ரக்கமில்லார் - ஆ! உனைத்
தாவியிட னெழுப்பிச் சாருந்துகில் மேலணிந்து
சேவகர்கை தொட்டிமுத்து - உம்மேற்
சேட்டைபண்ண லாயினரோ 50

நாவுண்டோ நாயகமே - உனையவர்
நாற்காலி மீதிருத்தி நையாண்டி பண்ணியொரு
கோற்பாணி தன்னிலிட்டு - ஆங்கவர்
கோரணிக்கஞ் செய்தாரோ 51

மூவுலக ராசாவே - சுவர்முனை
முள்ளின் முடிபுனைந்து மூதரசே வாழ்கவென்று
விள்ளிச் சிரத்தமுத்தி - உனக்கவர்
வேடமிட்டுக் கொண்டாரோ 52

எண்ணஉளம் நோகின்றதே - யூதர்கள்
என்னென்ன செய்திடினு மீனமன மாறிலதாய்
மன்னன் சமுகமுனைக் - கொண்டவர்
வந்தனரோ சுந்தரனே 53

கண்வளரு கின்றாயோ - பிலாத்துனைக்
கண்டானே கண்டவுடன் கைகால் பதறிநவ
முண்டோ வெனக்குழைந்து - தன்னகத்
துள்வருத்தங் கொண்டானே 54

இச்சதிசெய் வாருளரோ - வெள்ளிய
வென்புவடி வாயிருந்த என்மகனே உன்னையந்த
மன்னன்கள் நெஞ்சர்முன்னே - விட்டிவன்
மானிடனோ பாருமென்றான் 55

வச்சிரம்போ லுச்சிதனே - உன்னையவர்
வன்சிலுவை மீதறைந்து வாதித் தொழிவதன்றி
இந்நகரில் வைப்பதில்லை - என்றவ
ரேகமாய்க் கோரினரோ 56

கோடாக் குளிர்முகனே - யூதர்கள்
கொண்டவெண்ண மாற்றரிது கோரிக்கையோ மாபெரிது
கண்டவண்ணல் கைகழுவிப் - பாதக
கன்மமிது செய்யுமென்றான் 57

வாடா நறுமலரே - பிலாத்திறை
வல்லுயிரைக் கொல்லுபழி மன்னனென்னி லில்லை
யென்று
கொல்லக் குறிப்பெழுதி -ஆ! உனைக்
கொடியர்கையி லிட்டானோ 58

மற்புயஞ்சேர் துர்ச்சனர்கள் - அதை
வாங்கினார் வாங்கிமிக வாசித்தா னந்தமுற்றுத்
தீங்குளா ரார்ப்பிக்க - ஆங்கவர்
தீர்ப்பைப்பறை சாற்றினரோ 59

வெற்பி லெழுஞ்சுடரே - கானிடை
வெய்யபசி யாற்றிரியும் வேங்கைமுகத் தேபடர்ந்த
செய்யமறிக் குட்டியென - ஐயோ!
தீயர்கையிற் பட்டனையோ 60

பறைசாற்ற லாயினரோ - ஆங்கவர்
பச்சை மரந்தறித்துப் பாடுவெட்டிக் கோடுதட்டி
அச்ச முறுஞ்சிலுவை - ஒன்றினை
ஆக்கினரோ வென்மகனே 61

முறைகேடு செய்தாரோ - சிலுவையும்
மூவைந்தடி நீளமுற மூட்டித் தமருமிட்டு
மூவிரண்டு பேர்சுமந்து - உன்றன்
முன்னர்கொண்டு வந்தாரோ 62

என்னா வருஞ்சுவையே -ஆங்கவர்
ஏய்த்துப் பறிக்கவந்த ஈனமதி கேடாவின்று
வாய்த்த சிலுவையிது - கிட்டிநீ
வந்துபிடி யென்றாரோ 63

அன்னாட்பெய் மன்னாவே - மானிட
ராவிக் கருள் சுரக்கு மையனே வெய்யருன்னைத்
தாவிப் புயத்தில்வைக்க - ஐயோ!
தீள்ளாடி வீழ்ந்தனையோ 64

மாட்சிப்பிர தாபகோலா - ஆங்கு
வல்ல மரத்துடனே மண்ணோ டமுந்தவெய்யர்
பல்லுடன் பன்னெருமி - வெகுவாய்ப்
பங்கப்படுத்தினரோ 65

மோட்சப்பிர காசரூபா -க யிற்றொடு
முன்னிருவர் நின்றிமுக்க மொய்த்ததிர ளக்கபக்கம்

பின்னிருவர் நின்றதட்டிக் - கொண்டுனைப்
பெருந்தெருவா லேகினரோ 66

கருதரிய சாகரமே - பாதகர்
கள்ளன் கயவனிவன் காசினிக்கே ராதபொய்யன்
குள்ள னிவனையின்று - சிலுவையில்
கொல்வமென்று கூவினரோ 67

எரிசைநகர் வீதியிலே - சற்சனர்
எட்டிநின்று பார்ப்பவரும் மேங்கிநின்று பார்ப்பவரும்
உட்கசிவு கொண்டவரும் - வந்தங்
கொருபாலிற் சேர்ந்தனரோ 68

ஐயையோ! வென்பாரே - ஊரி
லாதரவா யுள்ளசெவி டானகுரு டீமர்புகழ்
மாதவனோ வென்றுபலர் - வந்து
மறுபாலிற் சேர்ந்தனரோ 69

செய்யதிருச் சேகரமே - பிலாத்திறை
சிலுவையிலே கொல்லவுனைத் தீர்வையிட்ட செய்தி
யெல்லாம்
நலமுறுமுன் சீடனெற்குத் - துயரொடு
நாடிவந்து சொன்னானே 70

தேரோடும் வீதியெல்லாம் - நானுனைத்
தேடித் திரிகையிலே தேசத்தார் கண்டுனது
பாடும் பரதவிப்பும் - எற்கவர்
பாங்குடனே சொன்னாரே 71

ஆரோ டுசாவுவெனோ - ஆங்கொரு
ஆயிழையா ளுன்முகத்தி லானதுகில் கொண்டெடுத்த
வாயதிருச் சாயல்தனை - எற்கவ
ளண்டிவந்து காட்டினனே 72

கலைவுகண்ட மானானேன் - முகக்குறி
கண்டு கதறியுனைக் கண்டுதுயர் தீர்ப்பேனென்று
கொண்டகுழா மூடறுத்து - உன்னுடை
கொலமெல்லாங் கண்டேனே 73

குலைநழுவுங் காயானேன் - மகனேநீ
கூனிக் குறாவியுடல் கோலமற்றுச் சாயலற்று
ஊனிரத்த மற்றவுன்றன் - திவ்விய
உருவமதைக் கண்டேனே 74

ஆதுலர்க்கோ ராதரவே - அன்புட
னன்றுனையோர் வாகனத்தி லாடம்பர மாயிருத்தி
ஒன்றுபட விச்சனரே - களிப்புட
னோசன்னா! வென்றாரே 75

ஓதரிய மாதவமே - ஈங்கு நீ
ஊரில் நவம்புரிந்து ஓயாப்பிர சங்கஞ்செய்து
பாரிற் புகழ்பரக்க - உனையொரு
பரமகுரு வென்றாரே 76

வானமுகில் வாகனனே - ஆங்குனை
வாடாவா வென்றிழுக்க வண்டர்கசை கொண்டடிக்கப்
போடாபோ வென்றதட்ட - ஆங்கொரு
பொறிகிடங்கில் வீழ்ந்தாயோ 77

ஆனபரி பாலகனே - ஐயோ!
ஆலையின்வாய்ப் பட்டகழி யானகரும் பானதுபோற்
றாலகவாய்ப் பட்டவுனை - ஊரில்
தாங்கமனுத் தானிலையோ 78

இருளி லொளிருமுனைப் - பாதகர்
ஈட்டிப் பிடங்குகொண்டு என்மகனே யுன்னையெழுப்
பாட்டிச் சிலுவைதனைக் - கையாற்
பற்றிடென்றா ரோமகனே 79

கருணைபொழி வான்முகிலே - உனையவர்
கல்வாரி மேட்டுவழி கற்பிளவோ டேற்றவழி
எல்லார்க்குஞ் சொல்லரிய - மற்றோ
ரிடர்வழிகொண் டேகினரோ 80

கமலமலர்ச் சீகரனே - எவர்க்குங்
கால்வழுங்காக் கல்லினிடை காலிடறி வீழமரம்
மேல்விழுந்து நையவுடல் - ஆங்கவர்
வேடிக்கை பார்த்தாரோ 81

விமலபரி பூரணனே - ஆங்கு னீ
மேனோக்கி வன்நடையாயர் மெல்லமெல்ல வேநடக்க
வானோக்கு மாமலையின் - உந்நத
வன்சிகரந் தோற்றினதோ 82

கோரமதி கோரமையோ! - உன்னுடை
கோட்டக் குறியறிந்து கூடச் சுமக்கவொரு
சேட்டக் கொழும்புயனை - ஆங்கவர்
தேடிவிட்டா ரோமகனே 83

ஓரமில்லா நீதிபரா - ஆங்குறு
உச்சமலை மேட்டிலொரு உந்நதக்கோ டானதிலே
அச்சிலுவை யோடுசென்று - மகனே
ஆயாசங் கொண்டனையோ 84

தேடுந் திரவியமே - ஆங்கவர்
செய்த பெருஞ்சிலுவை சேர்த்துவைத்த வன்சிலுவை
யையமெள்ளத் தானிறக்கி - மகனேய்ப்
பாரின்மேல் வைத்தனரோ 85

பீடை பெரிதாச்சே - நான்முன்
பின்னி யிழைத்தணிந்த பேறான செந்துகிலை
உன்னி லிருந்துரிந்து - உன்னுடை
உருமாற்றி விட்டாரோ 86

தமியளுயி ருக்குயிரே - உனையவர்
தாவிப் பிடித்திழுத்துச் சார்சிலுவை மேல்விழுத்தி
ஆவி யுடல்வருந்தக் - காரிருப்

பாணிகரந் தைத்தாரோ 87

கமழுமகில் மா்சமெய்யா – மற்றொரு
கையிற் கயிறுகட்டிக் கண்டகரு நின்றிழுத்து
ஐயமுறுந் தவ்விலிட்டுக் – கூர்முனை
யாணியறைந் திட்டாரோ 88

ஓம்பிவளர்த் திட்டேனே – உன்னுடை
உள்ளங்கா லூடுருவ வொன்றின்மே லொன்றுவைத்துக்
கொள்ளுமுனையாணியொன்றை – ஐயோ!
கூரமுந்த வேற்றினரோ 89

தேம்பியழு தாறுவேனோ – என்னுடை
செல்வக் களஞ்சியமே தேடரிய பாக்கியமே
சொல்லத் துயரெழுமே – நானும்
சோரவிட்டாற் றியெழுமே 90

ஆகடியம் ஆ! மகனே – காதகர்
ஆழக் குழிபறித்து அட்டதிக் கெல்லாமறிய
நீளச் சிலுவையுடன் – உனையவர்
நிறுத்தியுரம் போட்டாரே 91

ஆகுலமே லிட்டதையோ! – என்னுடை
அரிய திருமகனே அன்பான கண்மணியே
குருசைக் குழியிலிட்டு – உன்மெய்
குலுங்கவுரம் போட்டாரே 92

மின்னி மறைந்ததென்னோ – மகனே
வீங்கி யுடல்வெதும்பி விம்மநரம் பானதெல்லாம்
வாங்கி வலித்திழுக்கக் – கொடிய
வாதைநீ தாங்கினையோ 93

வன்னமணி மாமகுடா – மகனே
மண்ணுலகோர் நன்னயமே மன்னவனே உன்னையவர்
நண்ணுமிரு சோரருக்கு – இடையில்
நடுநிறுத்தி விட்டாரோ 94

நிறைந்தொழுகுஞ் செம்புனலே – மகனே
நீதா சனச்சிலுவை நின்றுவிழி மேனோக்கி
காதா ரெழுவசனம் – நீயோ
கட்டுரைத்தா யென்மகனே 95

குறைதவிர்க்கும் பூரணனே – என்னுடை
கோதுறா மாமகனே கோமகனே வாய்திறந்து
ஓதுமெழு வாக்கியங்கள் – என்னுளத்
தூடுருவும் வாளாச்சே 96

ஆதிமதுர வாசகனே – நின்று நீ
ஆதி பிதாவேயிவர் அறியாமற் செய்ததாலிப்
போதிவர்மேற் கோபமற்றுச் – செய்பிழை
பொறுத்தருளு மென்றாயே 97

மதலைமொழி கேட்பதெப்போ – உன்னுடை
வலப்புயத்துக் கள்வனை நீ வாகாய் முகம்நோக்கி
நிலத்தை விட்டென் கூடவின்று – நீயும்
நித்தியஞ்சே ரென்றாயே 98

என்னியதயத் தெய்தனையோ – என்னை நீ
ஸ்திரியே யென்றழைத்து ஈதோவுன் மைந்தனென்று
கஸ்தியிலோர் தேற்றரவு – எதற்கு நீ
காட்டமனங் கொண்டதென்னோ 99

பன்னருங்கா ருண்ணியனே – ஐயோ
பகரும் பிரபையொளிர் பாலா வுனையிழந்து
மகனாய்ச் சுவானியைநான் – பூவில்
வைத்திருக்கப் பெற்றேனோ 100

சோதிமுகம் வாடினதோ – நீயதி
சோகமுற்று நோவுமுற்றுத் தொய்வெழுந்து நாவுலர்ந்து
தாகமுற்றே னென்றிதனை – ஈங்குநீ
சாற்றினையோ வென்மகனே 101

ஆதியம லேசுதனே – உலகி
லாகு மடியவர்க்கிங் நானபுனல் தந்தவனீ
தாகித்தே னென்றுசொன் – உன்னுடை
தன்மையென்ன வென்மகனே 102

மாந்துளிர்போல் மேனியனே – ஈங்கொரு
வசத்திருந்த வன்கொடியர் வந்துஜித நீரிதென்று
கசப்புநீர்க் காடிதனை – உவர்நீர்க்
காளான்கொண் டூட்டினரோ 103

ஆந்துணையொன் றிங்கிலேயே – நீயும்
ஐய விழித்துரைத்தென் னாதிபரா விங்கெனைநீர்
கைநெகிழ்ந்த தேனெனவே – மகனே
கழறினையோ செல்லரசே 104

பரிபுர ணப்பொருளே – உலகிற்
படிந்ததிரு வாகமத்திற் பன்னிவைத்த யாவுமின்று
முடிந்ததே முற்றுமென்று – ஈங்குனீ
மொழிந்தனையோ கண்மணியே 105

எரியிலோ நெய்யைவிட்டாய் – ஐயோ!
இத்தாலத் தென்னைவிட்டங் கேகமனங் கொண்டுநீயும்
கத்தாவென் னாத்துமத்தை – இப்போ
கையேரு மென்றாயோ 106

கதறியழு தாறுவேனோ – உன்னுடை
கண்கள் குறாவிமுகம் காய்ந்துவிக்கி நாவிழுந்து
திண்பல் லலகுகிட்டி – ஆ!உன்
சீருயிரை விட்டாயோ 107

பதறுதென் னங்கமெல்லம் – மகனே
பானு முகங்கருகப் பருவதங்கள் பாறநில
மன ததிரவையோ! – உன்றிரு
வாருயிரை விட்டாயோ 108

மூதுயிர்க்கு மாயிறந்தாய் - செவ்விய
முருக்கம்பூ போலுதடும் மூக்கழகும் வாக்கழகும்
பெருத்த புயத்தழகும் - உன்னுடை
பேரழகுங் காண்பதெப்போ 109

கொந்தார் மலர்த்தருவே விண்ணெழு
சுசுகதிர் ஞாயிறுபோல் குன்றொன்றில் நின்றுபிர
காசித் தொளிர் சுரந்த - திவ்விய
காயமிது வோமகனே 110

சிந்தா குலப்பெருக்கே - மகனே
தெண்டிரை சூழிப்புவியிற் சீராட்டி யேவளர்த்துக்
கண்டுகளித்தவிந்தத் - திவ்விய
காயமிது வோமகனே 111

அறவோர்க் குயிர்நிலையே - அன்றுநீ
ஐந்தப்பங் கையிற்கொண்டங் கான வையாயிரர்க்குப்
பந்தி யமர்த்தியீந்த - உன்னுடை
பணியிது வோமகனே 112

பிறழா மொழிநாவா - உலகிற்
பெருங்கிருபை பெய்முகிலே பேதமில்லா வென்மகனே
கருங்கடல்மேல் முன்நடந்த - உன்னுடை
காலிதுவோ என்மகனே 113

பாதாம் புயம்போற்றி - உலகிற்
பற்றோடிவ்வொப் பாரிதனைப் பாடியவன் வாழி! பிதா
நற்சுதனிஸ் பிரீத்துசாந்து - திவ்விய
நாமமென்றும் வாழியவே! 114

ஆதார நின்மலனே - நீயும்
அன்றிருந்த தன்மையபோ லங்குமிங்கு மெங்கு மொன்றாய்
இன்றுமென்றும் நித்தியமாயச் -சுவாமி
எப்போழுதும் வாழி! - ஆமென். 115

## வேண்டுதல் - பரணி

முடியரசர் மரபுதித்த வும்பர் கோனே
மூவாளி லொன்றான மோட்சவாழ்வே
படியதனி லடியர்புரி பவத்தாற்பாடு
பட்டுயிரை விட்டவுனை யெண்ணிநாளும்
குடிகளவு கொலைகோப வன்மமாதி
குறைபுரியோம் முறைகடவோ மென்றுமுன்றன்
அடிபரவுங் குடியாவோ மிடிமைதீர்த்துன்
அரியதிருக் கருணைபுரி அமலநாதா.

மன்னுலகிற் புன்மையுற வந்தேயுற்ற
வாதைதுயர் பீடைமர ணாதியூதர்
பின்னியணி சென்னியுன்முண் முடியோடாங்கு
பிணித்தபெருங் கயிறுடன்வார் கசைகோல்சாட்டை
பன்னருங்கற் றூணாணி சிலுவையீட்டி
பாதகர் விலாவினைந்து காயமோடுன்
அன்னைபடுந் துயரனைத்தும் பார்த்தேயின்று
அரியதிருக் கருணைபுரி அமலநாதா. ■

## வந்தெமைப் பாரும் ஐயா

பல்லவி

வந்தெமைப் பாரும் ஐயா - அருள்
தந்தெமைக் காரும் ஐயா - யாகப்பரே
வந்தெமைப் பாரும் ஐயா - ஐயா


அனுபல்லவி

சிந்தை குளிர்ந்திட மைந்தர் - எமக்குயர் (2)
விந்தை வளர்ந்துன(து) அன்பு மிளிர்ந்திட (2)

சரணம்

வாழ்வு மலர்ந்திட வாரி அணைத்திடு
தாழ்வு நலிந்திடத் தாவித் தடுத்திடு (2)
வானம் பொழிந்திட ஞானம் அளித்திடு (2)
கானம் முளங்கிட மானம் வழங்கிடு
(வந்தெமை...)

வாழும் குருநகர் பாடித் தொழுதிட
ஆழும் திருநகர் தேடிக்குழுமிட
பாழும் பவநகர் வாடிக் கருகிட
தாளும் தவநகர் கூடிப் பெருகிட
(வந்தெமை...)


Jaffna, Sri Lanka
St James Church